# அப்பா பிதாவே!

## இயேசுவோடு ஜெப ஊழியத்தில் ...



சகரியாஸ் டேனி போமம்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# அப்பா திரவே!

# அப்பா பிதாவே!

## பாகம் 1

## இயேசுவோடு
## ஜெப ஊழியத்தில்

சகரியாஸ் டேனி ஃபோமம்

நன்நூல் இலக்கிய சேவை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010, தமிழ்நாடு, இந்தியா.

WITH CHRIST IN THE SCHOOL
AND MINISTRY OF PRAYING

BY

ZACHARIAS TANEE FOMUM

FIRST INDIAN EDITION, JULY 1995

*All Rights Reserved*

Published in India by

GOODBOOK LITERATURE SERVICE
Madras 600 010.

Originally Published by

VANTAGE PRESS, NEWYORK,

Copy Right© 1992

By ZACHARIAS TANEE FOMUM

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ❖ | அறிமுகம் | iv |
| ❖ | முன்னுரை | vi |
| 1. | ஜெபம் ஓர் அறிமுகம் | 1 |
| 2. | ஜெபமின்மை | 5 |
| 3. | பனிரெண்டு வயதில் | 7 |
| 4. | ஜெபவீடு | 12 |
| 5. | தலையாய பதினெட்டு ஆண்டுகள் | 16 |
| 6. | திருமுழுக்கும் மன்றாட்டும் | 24 |
| 7. | ஆண்டவரே வானத்தைத் திறந்தருளும் | 30 |
| 8. | தேவனோடு தனிமையிலே | 39 |
| 9. | தடுமாற்றமின்மை | 52 |
| 10. | முழு இரவு ஜெபம் | 63 |
| 11. | தனிமையும் ஜெபமும் | 70 |
| 12. | ஜெபமும் மறுருபமடைதலும் | 76 |
| 13. | நன்றி செலுத்துதலும் தொழுகையும் | 88 |
| 14. | நற்செய்திப்பணியும் போராட்டமும் | 96 |
| 15. | மன்றாட்டில் நான்கு நாட்கள் | 106 |
| 16. | எப்போதும் செவிமடுக்கின்ற பிதா | 112 |
| 17. | இயேசுவின் கண்ணீர் ஜெபம் | 118 |
| 18. | கெத்சமனே மன்றாட்டு | 123 |
| 19. | சிலுவையிலிருந்து செய்த ஜெபம் | 127 |
| 20. | மாட்சியின் அரியணையிலிருந்து மன்றாட்டு | 131 |
| 21. | வானத்தை திறந்தருளும் எங்கள் ஆண்டவரே! | 136 |
| 22. | இறுதி வரிகள் | 139 |

# அறிமுகம்

1993-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இப்புத்தகத்தின் ஆங்கில மூலத்தை சகோதரர் ஒருவர் என்னிடம் தந்துவிட்டு இது ஒரு ஏட்டுச் சுரக்காய் அல்ல; ஒருவரது அனுபவப் பள்ளியில் விளைந்த முத்துக்களே இந்நூலில் வித்துக்களாய் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். அன்று இரவே அந்நூலை ஆசையோடு படித்தேன். அது என் நெஞ்சை தொடுவதாக மட்டுமல்ல ஈர்ப்பதாகவே இருந்தது. புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அத்தனையும் எல்லோருக்கும் ஏற்புடையதாக ஒருவேளை இல்லாமல் இருக்கலாம் ஆனால் ஜெபத்தைப்பற்றி ஒரு மகோ உன்னதமான நூல் என்பதை யாராலும் மறுக்கமுடியாது!

இயேசுவானவர் கற்றுத்தரும் இந்த ஜெபமென்னும் மணிமண்டபத்தில் நுழையும் எந்த ஒரு நபரும் மாற்றம் ஏதுமின்றி அப்படியே வெளிவர முடியாது என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை!

ஜெப வாழ்வில் இயேசுவைப்போல மாறவிரும்பும் அனைவருக்கும் இந்த நூல் ஒரு கட்டாயப் பாடமாக்கப்படவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். குறிப்பாக ஊழியருக்கு இது ஒரு இன்றியமையாத கைநூல்.

இந்தியரின் மீட்புக்காக, திருச்சபையின் மலர்ச்சிக்காக, சமுதாயத்தின் விழிப்புக்காக, ஊழியர்களின் உத்தமத்துக்காக, நம்மை ஆளுகின்றவர்களின் உண்மைக்காக ஜெபிக்க விரும்பும் அனைவரும் இந்த நூலை கற்றறிந்திருப்பார்களானால் அவர்களை விண்ணப்பத்தின் ஆவி பற்றிப்பிடிக்கும் என்று துணிவோடு கூறுவேன்!

ஜெப வாழ்க்கையில் கோபுர வளர்ச்சி காணவிரும்பும் அனைவருக்கும் முழு இரவு ஜெபங்கள், மன்றாட்டு ஜெபங்கள், உபவாச ஜெபங்கள் இவைகளில் வாஞ்சையோடு தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் எல்லோருக்கும் இந்த நூல் மிகுந்த ஊக்கம் அளிக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன்!

பேராசிரியர் சகரியாஸ் டேனி ஃபோமம் அவர்களின் நூல்களை வெளியிடுவதற்கான அனுமதியை கேட்டபோது இந்தியாவில் ஆங்கிலத்திலும், இதர மொழிகளில் மொழி பெயர்த்தும் வழங்குவதற்கான அனுமதியை

பேருவகையுடன் மனமுவந்து அளித்தார்கள். அவர்களுக்கு இந்திய திருச்சபை மக்களின் சார்பில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வாசகரின் வாங்குந்திறனை மனதில் கொண்டு இந்நூலை இரண்டு பாகமாக வெளியிட முடிவு செய்யப்பட்டதன்பேரில் அதன் முன்ருசியாக இந்த முதல் பாகம் உங்கள் கரங்களை வந்து எட்டியுள்ளது.

இந்நூலை மொழிமாற்றம் செய்வதில் உதவிய **சகோ. தியாரு, சகோ. டி.கே.டேவிட்** ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**'இயேசுவோடு ஜெபமென்னும் பள்ளியிலே'** என்ற தலைப்பில் இந்நூலின் இரண்டாவது பாகம் இதைத் தொடர்ந்து வெளியிடப்படவுள்ளது.

திருச்சபைக்கும், ஏனைய இயக்கங்களுக்கும் அனுகூலமாக அதன் வலதுகரமாக நின்று செயலாற்றும் நன்நூல் இலக்கிய சேவையின் முதல் நூலாக இந்தப் புத்தகம் வெளிவந்துள்ளது. இந்த இலக்கிய ஊழியம் கிறிஸ்தவ இலக்கிய உலகில் ஒரு பொன் குத்துவிளக்காக சபைகளுக்கும் ஏனய ஊழியங்களுக்கும் அனுகூலமாக நின்று நிலவ வாழ்த்துக்கள்!

அன்புடன்,

**கிங்ஸ்லி அருணோதயக்குமார்.**

**ஜூலை 25, 1995**

சென்னை

இது நன்நூல் இலக்கிய சேவையின் முதல் வெளியீடு. இவ்இலக்கியப்பணியின் வளர்ச்சிக்காகவும் வெற்றிக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் நல் ஆலோசனைகளை, எதிர்பார்ப்புகளை எமக்கு எழுதுங்கள்.

# முன்னுரை

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து அதிகமாக ஜெபித்தார் என்பதை அறிவேன். எனினும் லூக்கா நற்செய்திநூலை தியானித்தபோது ஆண்டவர் இயேசுவின் ஜெபவாழ்வு என்னை பிரமிக்கச்செய்தது. அவர் வாழ்வு முழுவதுமே ஜெபத்தால் நிறைந்திருந்தது. அவர் பிதாவின் சன்னிதியில் எப்போதும் வாழ்ந்திருந்தார். எப்போதாவதுதான் தன் ஜெப நிலையிலிருந்து அவர் வெளியே வந்தார். அதுவும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே வந்தார். ஒவ்வொருமுறை வெளிவரும்போதும் ஜெப சிந்தையோடு பணிமுடித்து மீண்டும் ஜெபவாழ்வுக்கே திரும்பினார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஜெபவாழ்வினுடைய தரம், அளவு ஆகியவற்றின்மூலம் நான் மிகவும் அசைக்கப்பட்டிருக்கின்றேன். எல்லாம் ஜெபத்தில்தான் இருக்கிறது என்பதை ஆண்டவர் நன்கறிந்திருந்தார்.

ஆண்டவர் ஜெபத்தின் உயரிய மதிப்பை அறிந்திருந்தார். அவர் எவ்வளவு அதிகமாக ஜெபித்தார் என்பதில் அது வெளிப்பட்டது. ஆண்டவர் எவ்வாறு ஜெபித்தார் என்பதையும் அதன் வல்லமையையும் உணர்ந்த சாத்தான் அதைக் காணக்கூடாதபடி திருச்சபையின் கண்களை இறுக இன்று கட்டி வைத்திருக்கின்றான்.

எனவே நம் கண்களைத் திறக்க கடவுளிடம் வேண்டுவோம். ஜெபதின் நன்மையைச் சுட்டிக்காட்ட மன்றாடுவோம். நாம் நம்மையே ஜெபத்தில் ஊற்றிவிட நமக்குக் கற்றுத்தர வேண்டுமென்று தேவனிடம் கெஞ்சுவோம். தூக்க நேரத்தை மன்றாட்டின் நேரமாகவும், விரையமாகக்கூடிய எல்லா நேரத்தையும் ஜெப நேரமாகவும் மாற்றிவிட நமக்கு கற்றுத்தருமாறு அவரிடம் வேண்டுதல் செய்வோம். தெளிவான முறையில் ஜெபிப்பதற்குக் கற்பிக்க வேண்டிநிற்போம்.

இந்நூலின் பெரும்பகுதிகள் கேமரூனிலுள்ள யாண்டே நகர இல்லத்திருச்சபையின் தலைவர்களுக்கென்று செய்தியாகக் கொடுக்கப்பட்டது. எனினும் அது நூல்வடிவம் பெறும் என்று நான் கருதினேனில்லை. ஆண்டவரோ அருள் கூட்டினார்.

ஜெபம் பற்றிக்கூறும் இந்நூல் ஒரு புதினமன்று. பொழுதுபோக்காக இதனை வாசிக்கக் கூடாது. சிறிது சிறிதாக வாசிக்க வேண்டும். என் படுக்கையினருகிலோ அல்லது பயணத்தின்போதோ ஜெபம் பற்றிய நல்ல நூல் ஒன்றை வைத்திருப்பேன். சிறிது சிறிதாக அதனைப் படிப்பேன். இ.எம்.பவுண்ட்ஸ்(E.M.Bounds)என்பவர் ஜெபம் பற்றி எழுதிய நூலினை வாசிக்கும்போது ஜெபம் செய்யத் தூண்டப்பட்டேன். அது உங்களுக்கும் பயனுடையதாக இருக்கும்.

ஆண்டவர் ஜெபிக்கும் திருப்பணியில் இருந்தார். தம் சீடருக்கும் ஜெபிக்கக் கற்பித்தார். ஆண்டவர் கற்பித்த வண்ணமே நீங்களும் நானும் செய்யும்போது நாம் ஆசிர்வாதம் பெறுவோம். அனைத்திற்கும் மேலாக ஆண்டவரின் திருநாமம் மாட்சிமை அடையும். ஆமென்!

1989, ஜூலை பதினொன்று.

அன்புடன்

யாண்டே, கெமரூன்

**சகரியாஸ் டேனி ஃபோமம்**

நன்நூல் இலக்கியசேவையின் வாசகர் வட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பினால் மேல்விபரங்களுக்கு எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். GBLS C/O 87 பராக்கா சாலை.

# 1. ஜெபம் - ஓர் அறிமுகம்

ஜெபமே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையாகவும், அவருடைய வாழ்வின் மிக முக்கிய அம்சமாகவும் விளங்கியது என்பதை சுவிசேஷ புத்தகங்களிலே காண்கிறோம். எந்த ஒரு செயலையும் நடப்பிப்பதற்கு முன்பும் ஜெபித்தார்; அதை நடப்பிக்கும்போதும் ஜெபித்தார்; மேலும் தாம் நடப்பித்திருந்த செயல்களுக்காகவும் ஜெபித்தார். அனைத்து செயல்களின் தொடக்கமும் முடிவும் ஜெபத்திலேயே அமைந்திருந்தன. தம் பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இயேசு வாழ்ந்தார். பிதாவின் விருப்பத்தை ஜெபத்தின் மூலமாகவே அறிந்து, ஜெபத்தின் வாயிலாகவே செயல்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு தம் பன்னிரெண்டாவது வயதில் தேவாலயத்திற்குச் சென்றபோது ஏற்கெனவே அவர் ஜெபிக்கும் அருட்கலையில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். எப்படி ஜெபிப்பது என்பதை அவர் தாமாகத் தெரிந்து கொள்ளவில்லை. மாறாக, ஜெபிக்கும் முறைமையை அவர் கற்றுக்கொண்டார். தம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமான, தான் கட்டாயமாகச் செய்யவேண்டிய பணியை எவ்விதம் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதிலேயே முதல் பன்னிரெண்டு ஆண்டுகளை அவர் செலவிட்டார். தம் பிதாவின் மூலமாகவே தாம் ஜெபிப்பதற்குக் கற்றுக்கொண்டார். ஜெபிக்கக் கற்றுக்கொள்வதற்கும், அதில் வேகமான முன்னேற்றத்தை அடைவதற்கும் அவர் தம்மைத்தாமே முழுமையாக ஒப்புவித்திருந்தார்.

அப்படியே கடவுள் நடத்துகின்ற ஜெபப்பள்ளியில் சீடர்கள் தங்களைப் பதிவு செய்துக்கொண்டு, பல ஆண்டுகளை அங்கு கழிப்பதன் பயனாக ஆண்டவரிடமிருந்து ஜெபிக்கும் விதிமுறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு. மேலும் விவேகமுள்ள சீடர்கள் தங்களை ஜெபப்பள்ளியில் சேர்ப்பித்துக்கொண்டு, அங்கு ஜெபிப்பதற்குக் கடவுளால் போதிக்கப்பட்டிருக்கும் பரிசுத்தவான்களிடமிருந்து ஜெபிக்கும் முறையைக் கற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள். அந்தப் பரிசுத்தவான்கள் கடவுளுடைய ஜெபப்பள்ளியில் பெற்றுக்கொண்டதை, மனிதனுடைய ஜெபப்பள்ளியில் பெற்றுக்கொண்டதோடு சேர்த்துக் கொள்வதின்மூலம் மிக வேகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இன்றைய காலக்கட்டத்தில் உள்ள பிரச்சனை என்னவென்றால், கடவுளுடைய ஜெபப்பள்ளியில் சேர்ந்து தங்களைத் தத்தம் செய்வதில் பலர் ஆர்வக்குறைவு உடையவர்ராக இருக்கின்றார்கள் என்பது வேதனைக்குரியது. அத்தோடு கடவுளின் விருப்பத்திற்கு இசைய வாழும்

மனிதர்களைக் கொண்ட ஜெபப்பள்ளிகளும் இன்றைக்கு அரிதாகவே உள்ளன.

கடவுளோடு ஐக்கியப்படுவதே ஜெபத்தின் அடிப்படை சாரம்சமாகும். விசுவாசியினுடைய ஆவியே, ஜெப வாழ்க்கையின் தொடக்க நிலையாகும். அங்குதான் பரிசுத்த ஆவியானவர் வாசம்செய்து, பிதாவினிடமிருந்து ஒன்றைப்பெற்று அதனை விசுவாசியினிடம் தருகின்றார். விசுவாசியினுடைய ஆவியே, பரிசுத்தாவியானவரோடு தொடர்பு கொள்ளவதற்கும் ஐக்கியப்படுவதற்கும் இடமாக இருக்கிறபடியால்; பரிசுத்த ஆவியானவர் மூலமாக அன்றி, ஆண்டவரோடு ஐக்கியப்படுவதற்கு விசுவாசிக்கு வேறு வழி கிடையாது என்பதால் விசுவாசி ஆண்டவரின் சித்தத்தை ஜெபத்தின் மூலமாக அறிந்து, அதற்காகக் கடவுளிடத்தில் வேண்டுதல் செய்வதற்குரிய இடம் விசுவாசியினுடைய ஆவியே என்று நாம் சொல்ல முடியும்.

ஜெப ஊழியத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் விசுவாசி தன் வாழ்வில் காணப்படும் அனைத்துப் பாவங்களையும் ஆண்டவரிடம் அறிக்கையிட்டு அதைவிட்டு நீங்கி விடுதலையாக வேண்டும். காரணம், ஆவியில் தூய்மையுள்ளவராக இருத்தல் மிக அவசியமானதாகும். கவனமிக்கவராக இருப்பதன் மூலம் ஆவியில் தூய்மையை நிலைப்படுத்தி, அதன் விளைவாக பின்தொடரும் நிகழ்ச்சியாக தன் வாழ்வில் தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்ற எந்தப் பாவத்தையும் அறிக்கை செய்து. அதற்குப்பின் தேவ ஒத்தாசையோடு முயற்சித்து, கடின உழைப்புடன் தூய வாழ்க்கைக்குள் செல்ல வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் பத்து மணிநேரம் ஜெபித்து, இரண்டுமணி நேரம் போதிக்கின்ற போதகர், தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும், தன் போதகத்தைக் கேட்கின்றவர்களின் வாழ்விலும் மகத்தான காரியங்கள் நடைபெறுவதைக் காண்பார். அவர் கடவுளால் அதிகமதிகமாக நிரப்பப்பட்டவராக மாறுவார். செய்தியைக் கேட்பதற்கு ஆர்வமற்றிருப் பவர்கள் ஆர்வத்துடன் கேட்க ஆரம்பிப்பார்கள்; கீழ்ப்படியாதவர்கள் கீழ்ப்படியத் தொடங்குவார்கள்; உலகப் பிரகாரமான சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடப்பவர்கள் அவைகளை அற்பமென்று எண்ணுவார்கள்; அவிசுவாசிகளாயிருப்போர் கடவுளுடைய வார்த்தைகளைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு மெய்யாகவே மீட்கப்படுவார்கள். ஆண்டவர் இயேசு செய்ததைப் போன்ற ஓர் ஊழியத்தை அங்கே அனைவருமே காண்பார்கள். கடவுள் நாமம் அங்கே மாட்சிமைப்படும்.

அப்படியே தம்முடைய எல்லாவற்றிற்காகவும் தான் ஜெபத்தின்மூலம் தேவனையே சார்ந்திருப்பதாக நற்செய்தியாளனாக அனுப்பப்பட்ட பவுல் கருதினார். ஜெபத்தினால் மற்றவர்கள் தாங்கப்படு கிறார்கள் என்பதாகவும்,

மற்றவர்களுடைய ஜெபத்தினாலேயே தாம் தாங்கப்படுவதாகவும் பவுல் அப்போஸ்தலன் கருதினார். எனவே ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும் அவசியத்தை பவுல் வலியுறுத்தினார். இப்படி இணைந்த மன்றாட்டுஜெபம் திருப்பணியில் பெரிய அறுவடையைத் தந்தது.

இப்படி பலமுறை தேவனுக்கு ஜெபத்தின்மூலம் தெரியப்படுத்தாமல் செய்யப்படும் எல்லா காரியங்களும் உண்மையில் மாம்சத்தின் செயலாகும். அது நீடித்திருப்பதில்லை. ஜெபிக்கும் கிறிஸ்துவின் நியாயாசனத்திலிருந்து அதற்குரிய பலனைக் அது கொண்டுவர மாட்டாது. கடவுளுக்காக சிறப்பான பணியைச் செய்ய விரும்பும் யாவரும் ஜெபிக்க தெளிவான அணுகுமுறைகளை வரையறுத்துக்கொண்டு, ஒரு செயலைச் செய்வதற்கு முன்னரே ஜெபிக்கத் தொடங்கவேண்டும். இன்றிலிருந்து பத்தாண்டு களுக்குப்பின் செயல்படுத்தப்பட இருக்கின்ற திட்டங்கள் இன்றே ஜெபத்தில் முழுவதுமாய் பதியமிடபட்டிருக்க வேண்டும். தனியாக ஜெபிப்பது போதுமானதல்ல. ஜெப பங்காளர்கள் நியமிக்கப்பட்டு ஜெபிக்கும் திருப்பணியில் அவர்கள் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப்பெற்று, தண்ணீரில் இருந்து கரையேறின உடன் தேவனோடு தீவிரமான ஜெப ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொண்டார். வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. அவருடைய ஜெபம் வானத்தைக் கிழித்தது. தேவ ஆவியை புறாவைப்போல் அவர்மேல் இறங்கப்பண்ணும் அளவுக்கு வல்லமை மிக்க ஒன்றாக இருந்தது.

ஆம்! ஜெபத்தில் வீழ்ச்சி அடையாமல் நின்று ஆண்டவரோடு சீராக ஒருமனப்படாத எந்த மனிதனும், ஆண்டவருடைய வாக்குத்தத்தம் தன்னுடைய தனி வாழ்வில் அல்லது தன்னுடைய திருச்சபையின் கூட்டுவாழ்வில் நிறைவேற்றப்படுமென்று எதிர்பார்ப்பது தவறான எதிர்பார்ப்பாகும். அப்படியே கடந்த காலத்தில் ஜெபம் செய்திருப்பதால்; தற்போது ஓய்வெடுத்துக் கொண்டு, ஆண்டவரின் நிகழ்கால இயக்கத்தில் முழுப்பயனையும் அனுபவிக்கலாம் என்று ஒருவன் எண்ணினாலும் அது தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்வதாகும்.

ஆண்டவரின் வாக்குத்தத்தம் என்பது கருவுற்றிருக்கும் நிலையைப் போன்றதாகும். ஆரோக்கியமான குழந்தை கருவுற ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை தொடர்ந்து குழந்தையின் முறையான வளர்ச்சிக்கும், நோயில் இருந்தும் குறை பிரசவத்துக்கு விலக்கிப் பாதுகாக்கப்படுவதற்கும் தொடர்ந்து ஜெபம் தேவைப்படுகிறது. கருப்பையில் ஒன்பது மாதங்கள் ஆரோக்கியமாக வளர்ந்திருக்கும் குழந்தைகூட, பிரசவ நேரத்தில் இறந்து போவதுண்டு. அத்தகைய இறப்பு பேரிழப்பாகும். எனவே,

அதிகப்படியான அக்கறையும் சாமர்த்தியமான வைத்திய முறைகளும் பிரசவ நோத்தில் தேவைப்படுகின்றன. அதற்கும் ஜெபம் அவசியம். ஆண்டவர் இயேசு இவையனைத்தையும் அறிந்திருந்தார். ஆகையினால் தான் அவர் யோர்தானை விட்டு வெளியே வந்து தேவ ஆவி தம்மீது இறங்கு மட்டும், தம் பிதா பேசும் வரையிலும் இடைவிடாத ஜெபத்தில் அவர் தம்மைத்தாமே ஈடுபடுத்திக்கொண்டார். நாமும் அவ்வண்ணமே விசுவாசத்தின் பலன் காணப்படும்வரை ஜெபத்தில் முனைந்திருக்க வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் ஜெபம் வானத்தைக் கிழித்து தேவ ஆவியை அவர் மீது இறங்கச் செய்தது. கடவுள் பரிசுத்த ஆவியை அனுப்புவதற்கு ஆயத்தமாயிருந்தார். ஆனால் முத்திரை போடப்பட்ட வானத்தோடு அவர் எப்படி கீழிறங்க முடிந்தது? இயேசுவினுடைய ஜெபங்கள் மேலேறிய போது, அவை தடைகளை உடைத்தெறிந்தன; அப்போது தேவ ஆவி கீழிறங்கி அவர்மேல் வந்தார். திறக்கப்பட்ட வானத்திலிருந்து கீழிறங்கிய பரிசுத்த ஆவியானவரிடமிருந்து இயேசு கிறிஸ்து பெலனடைந்தார்.

வானத்தைத் திறக்கச்செய்து, ஆண்டவரின் வல்லமையைத் தன்மேல் இறங்கிவரப் பண்ணுவதற்கு தனிப்பட்ட ஒரு விசுவாசியினால் கூடும். நீங்களும் நானும் அதைச் செய்வதற்கென்றே அழைக்கப்பட்டிருக்கின்றோம். காரணம், வானத்தை திறக்கச்செய்து, ஆண்டவரின் வல்லமையை இறங்கிவரப்பண்ணி, தனக்கும் தேவசபைக்கும் எதிராகப் படையெடுக்கின்ற சாத்தானின் சக்திகளை சூன்யமாக்க தனிப்பட்ட விசுவாசியினால் ஆகும்.

ஜெபத்தின் வாயிலாக, தனிப்பட்ட விசுவாசியினால் வானத்தைத் திறக்கச்செய்ய முடியும். ஆண்டவரின் வல்லமை இறங்கிவந்து அவருடைய சபையையும் குடும்பத்தையும் நகரத்தையும் தேசத்தையும் கண்டத்தையும் ஆசிர்வதிக்கக்கூடும். வானம் திறக்கப்படுமாயின் ஒருவர் மீதோ அல்லது அனைவரின்மீதோ கரைபுரண்டோடுகின்ற ஆசீர்வாதங்களுக்கு எல்லையேயில்லை. இந்த வகையில் பார்க்கும்போது, ஒரு தனிப்பட்ட விசுவாசி சாத்தானுடைய அரசின்மீது எல்லையற்ற வல்லமையையும், அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியும்.

வானத்தைத் திறப்பதன்மூலம் அத்தகைய வல்லமையான ஊழியத்தை தனிப்பட்டவர்கள் செய்ய முடிந்தாலும், சபைச் செயற்பாடுகளின் மூலமாகவே தம்முடைய முழுச்சித்தம் நிறைவேற்றப்படும் என்பதே ஆண்டவரின் முடிவான நோக்கமாகும். நாம் தனிப்பட்டவர்களாயினும் குழுவாயினும் கடமையை நிறைவேற்ற எழுவோம்! ஆண்டவரைத் துதிப்போம்!

## 2. ஜெபமின்மை

- ☆ ஜெபமின்மை என்பது ஆண்டவரோடு கூட்டுறவு கொள்வதற்கு, பதிலாக மனிதனோடு உறவு கொள்வதாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது முக்கியமானதைப் புறக்கணித்து முக்கியமல்லாதவற்றை முக்கியப்படுத்துவதாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது ஆண்டவரைக் காட்டிலும் மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும். அதாவது, ஆண்டவரின் இடத்தை மனிதனுக்குக் கொடுப்பதன் விளைவே ஜெபமின்மை
- ☆ மனித பலத்தை பெரிதாக எண்ணி அவன் தன் சுயபலத்தினால் ஆண்டவரை அறிந்து கொள்ளவும், அவருக்கு சேவை செய்யவும் கூடும் என்ற எண்ணத்தின் விளைவே ஜெபமின்மை
- ☆ ஜெபமின்மை என்பது ஜெபிப்பதற்குப் பதிலாக ஜெபத்தைப் பற்றிச் சிந்திப்பது, ஜெபத்தைப் பற்றி பேசுவது, ஜெபத்தைப்பற்றி போதிப்பது, ஜெபத்தைக் குறித்துக் கற்பிப்பது, ஜெபத்தைக் குறித்து எழுதுவது.
- ☆ ஜெபமின்மை என்பது நான் சரியாக ஜெப ஊழியத்தை நிறைவேற்றவில்லையே என்று பாவஅறிக்கை செய்துவிட்டு, அதன்பின்னும் ஒன்றும் செய்யாமலிருப்பது.
- ☆ ஜெபமின்மை என்பது ஒன்றை தேவனிடத்தில் கேட்பதற்குப் பதிலாக வெறுமனே ஆசைப்படுவதாகும்.
- ☆ ஜெபிப்பதற்குப் பதிலாக ஜெபிக்க திட்டம் வகுத்துக்கொண்டிருப்பது ஜெபமின்மையாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது கால அட்டவணையில் ஜெபிப்பதற்கான நேரத்தை ஒதுக்கிவிட்டு, அதைப் பின்பற்றாமல் இருப்பதாகும்.
- ☆ ஆண்டவரிடம் நம் தேவைகளைச் சொல்வதற்குப் பதிலாக, அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்று நம்புவது ஜெபமின்மையாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது ஜெபிப்பதற்குப் பதிலாக ஜெப ஊழியத்தை கற்றுத் தேர்ந்தபின் ஜெபிப்பேன் என்று திட்டமிடுவதாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது எந்த ஒரு காரியத்தையும் செயல்படுத்தும் முன் ஜெபத்தை முதல் நிகழ்ச்சியாக வைப்பதற்குப் பதிலாக, அதனை கடைசி நிகழ்ச்சியாக தள்ளுவதாகும்.
- ☆ ஜெபமின்மை என்பது, ஒருநாளின் வேலைகளை முடித்து, இரவில் சாப்பிட்டுவிட்டு, ஜெபிப்பதற்கு படுக்கைக்குப் பக்கத்தில் முழங்காற்படியிடுவதாகும். உண்மையில் அது ஜெபிப்பதற்காக

அல்ல: தூங்குவதற்காகவே!

☆ ஜெபமின்மை என்பது ஜெபக்கூட்டத்தில் வாய்திறவாமல் மௌனம் சாதிப்பது.

☆ "ஜெபக்கூட்டங்களில் என்னை மற்றவர்கள் ஜெபிக்க விடுவதில்லை. என்னுடைய எண்ணங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி அவைகளை ஆண்டவரிடம் ஜெபிப்பதற்கு நான் விரும்புவதற்குமுன் வேறு யாராவது ஒருவர் ஜெபித்து விடுகிறார். நானோ ஒதுக்கப்பட்டுவிடுகின்றேன்" என்று பலர் மற்றவர்கள்மீது குற்றம் கூறுகிறார்கள். அதுவும் ஜெபமின்மையாகும்.

☆ முறைப்படி, நேர்த்தியாக ஜெபிக்கத் தேர்ச்சிபெறும் வரையிலும் ஜெபிக்கப்போவதில்லை என்று பலர் தீர்மானிக்கிறார்கள். அதுவும் ஜெபமின்மையாகும்.

☆ பெருவாரியான விசுவாசிகள் ஜெபநேரத்தில் பேசுவதற்காக பெருமூச்சு விடுகின்றனர். ஆனால் அவர்களுக்குள் நிறைந்திருக்கும் புத்திசாலித்தனமான எண்ணங்களை ஜெபநேரத்திற்குப் பின்னர் மகிழ்ச்சியுடன் பரிமாறிக்கொள்வார்கள். அதுவும் ஒருவகையில் ஜெபமின்மைதான்.

☆ ஜெபிக்கும்போது தூங்குவதில், ஜெபமின்மை அடிக்கடி வெளிப்படுத்தப்படுகின்றது. ஜெபிக்கும்போது ஒருமனமற்ற சிந்தனைக் குலைவுகளில், ஜெபமின்மை பலமுறை வெளிப்படுத்தப்படுகின்றது.

☆ ஜெபிக்க ஏவுதலோ, உள்ளான உந்துதலோ குறைவுபடும்போது ஜெபமின்மை வெளிப்படுகின்றது. அப்படியே ஜெபிக்கும்போது ஏற்படும் தைரியக்குறைவில் ஜெபமின்மை வெளிப்படுகின்றது.

☆ ஜெபமின்மையும் விசுவாசமின்மையும் எப்போதும் கைகோர்த்தே செல்கின்றன. அவ்விதமே ஜெபமின்மையும் பாவமும் உடன் பங்காளர்கள்.

☆ ஜெபமின்மையும், உலகாயுதமும் அதாவது உலக நாட்டமும் பிரிக்க முடியாதாவை. அவ்வாறே ஜெபமின்மையும் நோக்கமின்மையும் இரட்டைப் பிறவிகள்.

☆ ஜெபத்தின் முக்கியத்துவத்தை சாத்தான் நன்கறிவான். எனவேதான் சபையின் 99.9% மக்களை "ஜெபமின்மை" என்னும் நோயினால் அவன் பாதிப்படையச் செய்திருக்கின்றான்.

☆ மொத்தத்தில் ஜெபமின்மை மிகமோசமான, கொடிய பாவம். எனவே ஜெபமின்மையை ஓர் முடிவுக்குக் கொண்டுவர ஆண்டவர் அழைத்திருக்கின்றார். நீங்களும் அதனை ஓர் முடிவுக்குக் கொண்டுவாருங்கள்.

## 3. பன்னிரெண்டு வயதில்

"அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரெண்டு வயதானபோது, அவர்கள் அந்த பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய், பண்டிகை நாட்கள் முடிந்து, திரும்பி வருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது. அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒருநாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும், அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். மூன்று நாளைக்குப்பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள். தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்: நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார். தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்" (லூக்கா 2:41-51)

ஆண்டவர் இயேசுவும் அவருடைய பெற்றோரும் ஆண்டுதோறும் சென்று தங்கள் மதச்சடங்காச்சாரங்களை நிறைவேற்றி மகிழ்ச்சியுடன் திரும்பக் கூடிய இடங்களாயிருந்தன என்றாலும், ஆண்டவர் இயேசுவுக்கு எருசலேமும், தேவாலயமும் வேறுபட்டவை. அவர் அங்கே தாமதித்து, தன் பிதாவின் சித்தம் நிறைவேறுதலைக் கண்டார். பண்டிகைக்குப்பின் அவருடைய பெற்றோர் ஊருக்குத் திரும்பிச் செல்லும்போது அவரைக் காணவில்லை. பின்னர் அவர்கள் தேவாலயத்தில் போதகர்கள் நடுவே இயேசுவைக் கண்டபோது, அவர் அங்கு பேசிக்கொண்டிருந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

தம் பெற்றோர் தம்மைத்தேடி வந்ததைக் குறித்து அவரும்கூட ஆச்சரியப்படவே செய்தார். தம் பெற்றோரோடு திரும்பிச் செல்லாமல், தேவாலயத்தில் அவர் தங்கியிருக்க வேண்டியதிருந்ததால் பெற்றோரை

விட்டு தாம் அங்குத் தங்கியிருந்தது அவரைப் பொறுத்தவரையில் சரியானதே. அவர் எங்கே இருந்திருக்க வேண்டுமோ அங்கேதான் இருந்தார் என்பதை அவருடைய பெற்றோர் புரிந்துகொள்ளவில்லை. எனவேதான் "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்றார்.

தேவாலயம் அவருடைய பிதாவின் வீடு. தம் பிதாவினுடைய வீட்டில் தங்கியிருக்க வேண்டியது இயேசுவுக்கு மிக அவசியமாயிருந்தது. ஏற்கெனவே, தம்முடைய பன்னிரெண்டாம் வயதில், தம் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவைகளில் ஒன்றான பிதாவின் சமூகத்தில் செலவிடும் ஜெப ஊழியத்துக்கு தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்திருந்தார்.

" நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும். **(பிரசங்கித்தாக வேண்டும்)** இதற்காகவே அனுப்பப்பட்டேன்" (லூக்கா 4:43).

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும்...உயர்த்தப்பட வேண்டும்" **(உயர்த்தப்பட்டாக வேண்டும்)** (யோவான் 3:14)

"பகற்காலமிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்"**(செய்தாக வேண்டும்)** (யோவான் 9:4).

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்" **(கொண்டுவந்தாக வேண்டும்).** அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவான் 10:16).

"மேலும் மனுஷகுமாரன் பலபாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்"**(தள்ளப்பட்டாக வேண்டும் கொல்லப்பட்டாக வேண்டும்-உயிர்த்தெழுந்தாக வேண்டும்)** (லூக்கா 9:22).

மேற்குறிப்பிட்டிருப்பவைகள் ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையில் தம்மால் தவிர்க்க முடியாதவைகள் என்று அவர் குறிப்பிட்டவைகளே. இவ்விதம் அவர் நிர்ப்பந்தங்களுக்கும், கட்டாயங்களுக்கும் உட்பட்ட மனிதராக இருந்தார். தாம் எதைச் செய்ய வேண்டியவராயிருந்தாரோ அதைச் செய்வதற்கு மட்டுமே அவருக்கு நேரமிருந்தது. "தவிர்க்க முடியாதவைகளில்" மிகமிக முக்கியமான ஒன்று அவருடைய

பன்னிரெண்டாவது வயதில் அவரை முற்றிலுமாக ஆட்கொண்டது அதுவே முதன்மையானதாகவும் மிக முக்கியமானதாகவும் இருந்தது. ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையில் அனைத்துப்பிற "தவிர்க்க முடியாதவைகளும்" அந்த முதன்மை முக்கியத்தையே சார்ந்திருந்தன.

## பன்னிரெண்டு வயதில் ஜெபவீட்டில்

தம்முடைய பிதாவினுடைய வீட்டில் தாம் தங்கியிருக்க வேண்டுமென்பது தமக்குக் கட்டாயமானது என்று ஆண்டவர் இயேசு கூறினார்.

"நான் இருக்க வேண்டிய இடம் ஒன்று உண்டு. அது என் பிதாவின் வீடு. நான் செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டென்றால் நான் ஜெபித்துக் கொண்டிருப்பதே. என்னுடைய வாழ்க்கையில் நான் தவிர்க்க முடியாதவைகளில் முதன்மையானது ஜெபம். நான் அதை தாண்டிச் செல்லக்கூடாது.

இவ்விதம் இயேசுவின் பேச்சிலும், சிந்தனையிலும், செயலிலும் ஜெபம் முதன்மைபெற்று விளங்கியது. அதன்மூலம் ஜெபத்தில் அவருக்கிருந்த அர்ப்பணிப்பின் ஆழத்தையும், அதனைப் பற்றிய அவரது சுயமதிப்பீட்டையும் நாம் காணமுடிகிறது. ஆகவே அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மையமாக, உயிர்நாடியாக ஜெபம் இருந்தது. அவருடைய சீடர்களாயிருக்கின்ற நாம் ஜெபிப்பதிலும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்று ஆண்டவர் இயேசு எதிர்பார்க்கின்றார்.

ஒரு இயல்பான விசுவாசியின் வாழ்க்கையில் கீழே கொடுக்கப்பட்டிருப்பவை உண்மையானதாக இருக்கக் கூடும் என்றும் அவர் எதிர்பார்க்கின்றார்.

- ☆ ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் சில "தவிர்க்க முடியாதவைகள்" இருக்கும். அந்த "தவிர்க்க முடியாதவை"களில் "தவிர்க்க முடியாத"தாக அதாவது மிக முக்கியமானதாக ஜெபம் இருக்கும்.
- ☆ எப்பொழுதும் அவன் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய ஒரு செயல் ஜெபமாக இருக்கும்.
- ☆ அவன் அடிக்கடி செல்கின்ற இடம் ஜெபிக்கின்ற இடமாக இருக்கும்.
- ☆ அவன் தனக்குள்ள நேரத்தை ஜெபிப்பதற்காகவே பிரதானமாக செலவிடுவான்.

ஜெபவீட்டில் ஆண்டவர் இயேசு இருந்தார். அங்கே அவர் ஜெபித்தார். ஜெபமே அவருடைய வாழ்க்கையாக இருந்தது. அனைத்து செயல்களையும் ஜெபத்தில் தொடங்கி ஜெபத்தில் முடித்தார். தம்

செயல்களைச் செய்வதற்கு முன் ஜெபித்தார்; அவைகளைச் செய்யும்போது ஜெபித்தார்; தாம் செய்தவைகளுக்காக ஜெபித்தார். பிதாவின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்கென்றே அவர் வாழ்ந்தார். பிதாவின் விருப்பத்தை ஜெபத்தின் மூலமாகவே பெற்று, நிறைவேற்றினார்.

நாம் அனைவரும் ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்த்து அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். நாம் தேவனோடு சதா சஞ்சரிக்க, ஐக்கியம் கொள்ள நம் வீட்டில் ஒரு ஜெப அறை இருக்க வேண்டும். அங்கிருந்து நாம் எப்போதெல்லாம் வெளியே செல்கிறோமோ அப்போதெல்லாம் அன்பின் பிதாவினால் கொடுக்கப்பட்ட பணியை செய்து முடிக்கவே செல்ல வேண்டும். எனினும், செயலை முடித்தவுடன் தாமதமின்றித் நம்ஜெப நிலைக்குத் திரும்பிவிட வேண்டும். இம்முறையில்தான் ஒரு விசுவாசி இடைவிடாமல் ஜெபித்து கடவுளின் விருப்பத்தை தன் வாழ்வில் நிறைவேற்றக்கூடும்.

ஒவ்வொரு சீடனும் ஆண்டவரது ஜெபப்பள்ளியில் தன்னை இணைத்துக்கொண்டு ஜெபிக்கின்ற கலையைக் கற்றுக்கொள்வதன்மூலம் ஜெப ஊழியத்தில் வளர்ச்சி அடைய முடியும். ஆனால் இன்றோ அப்படிப்பட்ட ஜெபப்பள்ளிகள் குறைவாகவும், ஜெபிக்கும் மனிதர்கள் அரிதாகவும் உள்ளனர். அப்படியே ஜெபிக்கும் மனிதர்கள் இருந்தாலும் ஆண்டவர் மீதான அன்பு கொண்டோர் மிகச்சிலரே.

அந்தச் சிலரில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். ஆண்டவருடைய ஜெபப்பள்ளியில் உங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி அவரிடம் கேளுங்கள். அவர் உங்களை சேர்த்துக் கொள்வார். ஜெபிப்பதற்கான கால அட்டவணையை பிரத்தியேகமாக தயார் செய்யுங்கள். பல ஆண்டுகளாக நீங்கள் விசுவாசியாக இருந்தாலும், இப்பொது முதல் வகுப்பிலிருந்து ஆரம்பியுங்கள். ஜெபத்தில் ஆண்டவரோடு நேரத்தைச் செலவிடுவதிலும் ஜெபத்தின் தரத்திலும் நீங்கள் வளருவீர்கள். ஜெபத்தின் அளவு வளரும்போது உங்கள் ஜெபத்தின் தரமும் வளரும் என்று நான் நம்புகின்றேன்.

| வகுப்பு | ஜெபத்தில் செலவிடும் நேரம் |
|---|---|
| ஒன்று | 30 நிமிடங்கள் |
| இரண்டு | ஒரு மணி நேரம் |
| மூன்று | ஒன்றரை மணி நேரம் |
| நான்கு | இரண்டு மணி நேரம் |
| ஐந்து | இரண்டரை மணி நேரம் |
| ஆறு | மூன்று மணி நேரம் |
| ஏழு | மூன்றரை மணிநேரம் |
| எட்டு | நான்கு மணிநேரம் |

ஜெபத்தில் இவ்விதம் உங்கள் நேரத்தை நீங்கள் செலவிடும்போது ஆண்டவரோடு உறவு கொள்வீர்கள். அவருடைய மெல்லிய சப்தத்தைக் கேட்டு இன்புற்று அவரிடத்தில் பேசுவீர்கள். அவரது பிரசன்னத்தில் இலயித்து உங்களை மறந்து ஆண்டவரோடு முழுமையாக ஐக்கியப்படுவீர்கள். ஓரிரு மணிநேரம் எப்பொழுதாவது சில மணிநேரங்கள் என்றிராமல் சீராக ஜெபிக்க கற்றுக்கொள்வீர்கள்.

கீழ்க்காணும் திட்டக்குறிப்பின்படி சிறுக சிறுக நீங்கள் உங்கள் ஜெப வாழ்க்கையில் சீரான வளர்ச்சியடைய முடியும்.

| மாதம் | ஓரமர்வில் ஜெபத்தில் செலவிடும் நேரம் |
|---|---|
| 1-2 | 5 நிமிடங்கள் |
| 3-4 | 10 நிமிடங்கள் |
| 5-6 | 15 நிமிடங்கள் |
| 7-8 | 20 நிமிடங்கள் |
| 9-10 | 25 நிமிடங்கள் |
| 11-12 | 30 நிமிடங்கள் |

ஆண்டவரோடு நெருங்கிய உறவு கொள்வதே ஜெபத்தின் முக்கிய சாராம்சம் என்பதை நீங்கள் மனதில் கொள்ளவேண்டும். ஐந்து நிமிடம் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்வதற்கு, ஆயத்தமாக முப்பது நிமிடங்களை நீங்கள் ஆண்டவருக்கு முன்பாக செலவழிக்க வேண்டியதிருக்கும். நீங்கள் முன்னேற்றமடையும்போது, ஆண்டவரோடு ஐக்கியப்படுவதற்கு ஆயத்தமாக மிகக்குறைவான நேரமே உங்களுக்குத் தேவை என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். ஏனெனில், நீங்கள் ஆண்டவருக்குள் வளரும்போது சோர்வின்றி அதிக நேரம் ஜெபிக்கத் தொடங்குவீர்கள். எனவே, ஜெபத்திற்கான உங்கள் விசேஷ நேரங்கள், தொடர்ந்து ஜெபிக்கின்ற வாழ்வின் ஒரு தொடர்ச்சியாக மட்டுமே இருக்கும். அந்த நிலையில், ஆண்டவரோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்குத் தனியே ஒரு நேரத்தை செலவு செய்ய வேண்டிய தேவையில்லாமல் போய்விடும்.

# 4. ஜெபவீடு

"இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும், கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போகவிடாமல்; என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச்சொல்லி உபதேசித்தார்" (மாற்கு 11:15-17).

இந்தச் சம்பவத்தை திருமறை வாயிலாக அறிகின்றோம். இது அவருடைய ஊழியத்தின் கடைசியில் நிகழ்ந்தது. தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலும் அதனையொத்த செயலை அவர் செய்தார்.

"பின்பு யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப்போய், தேவாலயத்திலே ஆடுகள், மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்" (யோவான் 2:13-16) என்று வேதம் கூறுகிறது.

ஆலயத்திற்குள் நடைபெற்றுக்கொண்டிருந்த மதரீதியான வியாபாரங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தி, ஆண்டவர் தேவாலயத்தைத் தூய்மைப்படுத்தினார். பலி செலுத்துவதற்குத் தேவையான எருது, கிடா, புறாக்கள் ஆகியவற்றைக்கூட விற்பனை செய்வதற்கு அவர் அனுமதிக்கவில்லை. ஜெபவீடாகிய தம் பிதாவின் வீடு ஜெபத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படக் கூடியது என்பதை அவர் அறிந்திருந்தார். தம்முடைய பிதாவின் வீட்டை தூய்மைப்படுத்துவது தமக்கு மிக முக்கியமான கடமையாக இருந்தபடியால், தம் ஊழியத்தின் ஆரம்பத்திலும், இறுதியிலுமாக இரண்டுமுறை அப்படித் தூய்மைப்படுத்தும் செயலை ஆண்டவர் செய்தார். அதற்காகவே அவர் சவுக்கை உபயோகப்படுத்தினார். இந்த உலகில் அவர் வாழ்ந்த வாழ்க்கை முழுவதிலும் ஒரே ஒருமுறை மாத்திரம் அம்முறையைக் கையாண்டார்.

விசுவாசியின் ஆவியே அவனுடைய ஜெபவீடு. "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை

மகிமைப்படுத்துவார்"(யோவான் 16:14) என்று ஆண்டவர் இயேசு சொல்வதுபோல, தூய ஆவியானவர் விசுவாசியின் உள்ளத்தில் உறைந்து வாசம்செய்து தந்தையிடமிருந்து பெறுகின்ற ஒன்றை விசுவாசிக்கு அருள்கின்றார். பரிசுத்த ஆவியானவர் பிதாவின் சித்தத்தை எடுத்து அதனை விசுவாசியின் ஆவிக்கு வெளிப்படுத்தி, விசுவாசியின் ஆவியில் உள்ளதை எடுத்து அதனை பிதாவினிடம் கொடுக்கின்றார்.




விசுவாசியினுடைய ஆவியே பரிசுத்த ஆவியானவரோடு தொடர்பு கொள்வதற்கும், ஐக்கியப்படுவதற்கும் உரிய இடமாக இருக்கிறபடியால், மேலும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அன்றி, ஆண்டவரோடு ஐக்கியப்படுவதற்கு விசுவாசிக்கு வேறுவழி கிடையாது என்பதால், விசுவாசி ஆண்டவரின் சித்தத்தை ஜெபத்தின் மூலமாக அறிந்து அதற்காக கடவுளிடத்தில் வேண்டுதல் செய்வதற்குரிய இடம் விசுவாசியினுடைய ஆவியே என்று நாம் சொல்ல முடியும்.

விசுவாசியின் ஆவி தூய்மையானதாகவும், அர்ப்பணம் செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். விசுவாசியின் வாழ்விலிருக்கும் எந்த பாவமும், அந்த விசுவாசியின் ஜெப வாழ்க்கையை உக்கிரமாக தடைசெய்யும். வேண்டுமென்று செய்யப்படுகின்ற களவு, ஒழுக்கமின்மை, விரும்பியதை அபகரிக்கும் தன்மை போன்ற பாவங்களுக்கு மட்டுமன்றி "இருதயத்தின் பாவங்களுக்கும்" இது பொருந்தும். வெளியரங்கமான செய்கையாக இல்லாவிட்டாலும்

இருதயத்தில் இரகசியமாக நிகழ்கின்ற பாவங்களும் ஒருவருடைய ஜெபவாழ்க்கையை நிச்சயமாகத் தடைசெய்யும்; அல்லது ஜெபத்தின் வல்லமையினைக் குறைந்துபோகப் பண்ணும். அத்தகைய இருதயத்தின் பாவங்களில் உதாரணத்துக்கு இதோ சில:

- ☆ பெருமை
- ☆ ஆணவம்
- ☆ உலக நேசம்
- ☆ உலகப் பொருளாசை
- ☆ தற்பிரியம்
- ☆ தற்பெருமை
- ☆ தன்னையே நியாயப்படுத்துதல்
- ☆ தற்பாதுகாப்பு
- ☆ தற்புகழ்ச்சி
- ☆ குறைகூறும் ஆவி
- ☆ மற்றவர்களை நியாயந்தீர்க்கும் ஆவி
- ☆ மற்றவர்களைக் குற்றவாளியாக தீர்க்கும் ஆவி
- ☆ எல்லாவித மாயம்புரிதல்
- ☆ சகல விதமான பொய்யான பேச்சு
- ☆ வஞ்சகம்
- ☆ பேராசை
- ☆ பகைமை
- ☆ பொறாமை
- ☆ தூய்மையற்ற சிந்தனைகள்
- ☆ தீய எண்ணங்கள்
- ☆ இதைப்போன்ற பிற பாவங்கள்

ஜெப ஊழியத்தில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் மேற்கூறிய பாவங்களிலிருந்து விடுபட்டாக வேண்டும். அவர்கள் ஆவியில் தூய்மையுடையவராக இருத்தல் வேண்டும். தங்கள் பாவங்கள் அனைத்தையும் விட்டு விலகி, தாங்கள் செய்த பாவங்களை அறிக்கை செய்து இவ்வித பாவங்கள் இல்லாத புனிதமான வாழ்க்கைக்குள் செல்ல முழுமனதோடு முயல வேண்டும்.

அவ்வண்ணம் பாவங்களை அறிக்கை செய்து, பாவங்களிலிருந்து விடுபட்ட விசுவாசி தூய்மையளிக்கும் ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கும்போதே, பாவமில்லாத காரியங்களாயிருப்பினும் பரிசுத்தமான வாழ்க்கை ஓட்டத்திற்குச் சிறிதும் பயன்படாத காரியங்களில் சற்றேனும் பங்கு கொள்ளாமலிருத்தல் வேண்டும். அவர்கள், தங்கள் மனநிலையைத் தூண்டி உணர்ச்சிவசப்படச் செய்கின்ற உலக காரியங்களுக்குத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டார்கள். அவைகள் நியாயமான காரியங்களாக இருந்தாலும் நிதானித்து யோசனை பண்ணி, உலக காரியங்களிலிருந்து கர்த்தருக்காகத் தங்களைப் பிரித்தெடுத்துக் கொண்டு, உலகியல்

சிந்தனைகளிலிருந்தும், உலகாயுத செயல்களிலிருந்தும் தங்கள் ஆவியைப் பாதுகாத்துக்கொள்வார்கள்.

நோக்கம், சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைப்பற்றி விசுவாசி இவ்விதம் கேட்க வேண்டும்.

- ☆ என் ஆவி கர்த்தருடைய குரலைக் கேட்கக் கூடாதபடி எந்த ஒரு காரியமும் தடை செய்கிறதா?
- ☆ என் ஆவியின் அமைதியை அது கெடுத்துவிடுமா?
- ☆ ஆண்டவரின் சந்நிதியில் இளைப்பாறும் நிலையிலிருந்து என் ஆவியை அது அசைத்துவிடுமா?

இந்த கேள்விகளுக்கான விடைகளின் மூலம், உலகத்தின் தீய காரியங்களிலிருந்து தன் ஆவியை தூய்மை கெடாமல் காத்துக்கொள்ள, அதனைச் சுற்றிலும் தடுப்புச் சுவரினை விசுவாசி கட்டிக்கொள்ள வேண்டும். "இருதயத்தில் சுத்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" என்றார் ஆண்டவர். "இருதயத்தில் சுத்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பதனால் அவரோடு மனம் ஒன்றி ஊக்கத்துடன் அவர்கள் ஜெபிப்பார்கள்" என்று நாம் சேர்த்துக் கொள்வோம்.

உங்கள் ஜெப வீடாகிய உங்கள் ஆவியை தூய்மையானதாகவும், தேவனுக்கென்று முற்றிலுமாய் அர்ப்பணம் செய்யப்பட்டதாகவும் காத்துக்கொள்ளுங்கள். அதுவே உங்கள் இலட்சியமாக இருக்கட்டும். ஆமென்!

# 5. தலையாய பதினெட்டு ஆண்டுகள்

ஆண்டவர் இயேசுவின் ஊழியத்தைக் கீழ்க்காணும் வகையில் கூறலாம்.




பன்னிரெண்டு ஆண்டு காலகட்டத்தில் அவர் ஜெபிக்கக் கற்றுக்கொண்டார். தமது பன்னிரெண்டாம் வயதில் அவர் தேவாலயத்திற்குச் சென்றபோது, அங்கு போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் பேசுகிறதைக் கேட்டதோடு, அவர்களிடம் கேள்விகளும் கேட்டார். "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்து பிரமித்தார்கள்" (லூக்கா 2:47) என்று திருமறை கூறுகின்றது.

அதன்பின்னர் ஆண்டவர் தம் ஊழியத்தை மிகச்சிறப்பாக ஆரம்பிக்க முடிந்தது. வெகு சீக்கிரமாக ஊழியத்தைத் தொடங்கினால் அதிகமான நேரத்தை அதில் உபயோகப்படுத்த முடியும் என்று அவர் தீர்மானித்திருக்கக் கூடும். ஆயினும் அவர் ஏன் மேலும் பதினெட்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதிருந்தது?அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், கடவுளுக்கு முன்பாக தம் ஊழியத்திற்காக அவர் முழுவதும் ஜெபிக்க வேண்டியதிருந்தது. தமது ஊழியத்தை மனிதர்களுக்கு முன்னிலையில் எடுத்துச் செல்லுவதற்கு முன்பு கடவுள் முன்னிலையில் அதைப்பற்றி அதிகம் ஜெபிக்க வேண்டியவராய் இருந்தார். தம்முடைய திருப்பணியின் காலகட்டத்தில் என்ன நிகழுமென்பதற்கு அதற்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அடிப்படையாக அமைந்தன. அவருடைய ஜெபக்கூடத்தில் பெற்ற அனுபவம், தீய ஆற்றலோடு எதிர்த்துப் போராடும் போராட்டத்தில் அவருக்கு வலுவூட்டியது. எனவே தம்முடைய திருப்பணியை மனிதருக்கு முன்பாகவும் தீய ஆற்றலுக்கு எதிராகவும் தொடங்குவதற்கு முன் அதை ஐந்து மடங்கு அதிகமாக கடவுள் முன்

ஜெபத்தில் வைத்தார். தாம் பதினெட்டு ஆண்டுகள் கடவுள்முன் வைத்ததுபோதும் என்றுணர்ந்து, மூன்றரை ஆண்டுகள் வெளிப்படையான திருப்பணி செய்தார்.

ஆகவேதான் ஆண்டவர் தம் மூன்றரை ஆண்டு ஊழியத்திற்குப் பதினெட்டு ஆண்டுகளை ஜெபிக்க செலவிட்டார். ஒவ்வொரு ஆண்டும் அவர் செய்ய வேண்டியதிருந்த வெளிப்படையான ஊழியத்திற்கு, ஐந்து ஆண்டுகள் அவர் ஜெபித்தார்.

ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மனிதர் மீதும், பிசாசு, அசுத்த ஆவி ஆகியவற்றின்மீதும் அவர் செய்தபடியே அதிகாரம் செலுத்த விரும்புகிற எவருக்கும் கீழே கூறப்பட்டிருப்பவை மிகமுக்கியமான மூன் தேவைகளாகும்.

- ☆ ஒவ்வொரு மணிநேர ஊழியத்திற்காக ஐந்து மணிநேர ஜெபம்.
- ☆ ஒவ்வொரு நாளின் ஊழியத்திற்காக ஐந்து நாட்கள் ஜெபம்.
- ☆ ஒவ்வொரு ஆண்டின் ஊழியத்திற்காக ஐந்து ஆண்டுகள் ஜெபம்.

கடவுளோடு பூரண ஐக்கியம் கொண்டிருந்தவரும், எப்போதும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தவரும் வானத்திலும் பூமியின் மீதும் சகல அதிகாரமும் வல்லமையும் உடையவரான ஆண்டவர் இயேசுவுக்கே, தம் ஊழியத்திற்காக பல ஆண்டுகள் தீவிரமாக ஜெபிக்க வேண்டிய தேவை இருந்ததெனில், நம்மில் ஜெபத்தை இரண்டாந்தர இடத்திற்குத் தள்ளியவர்கள் வெட்கப்படவே வேண்டியதிருக்கும்.

"மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:12-14) என்று வாக்கருளினார் இயேசு.

தம்மை விசுவாசிக்கிறவன் தாம் செய்த செயல்களையும், அவற்றிற்கு மேலானவைகளையும் செய்வான் என்பது ஆண்டவரின் வாக்குத்தத்தம் அவரை விசுவாசித்து அவருடைய நாமத்தில் எதைக் கேட்டாலும் அது அருளப்படும் என்ற நிபந்தனையில் ஆண்டவரின் வாக்குத்தத்தம் அமைந்திருக்கின்றது. ஆண்டவரின் சொந்த வாழ்க்கையில் தெள்ளத்தெளிவாகக் காண்பிக்கப்பட்டபடியே, கேட்பதும் பெறப்படுவதும், தரத்திலும் அளவிலும் வெளிப்படையாகத் தெளிவாகும்.

எனவே, ஒவ்வொரு ஆண்டின் ஊழியத்திற்காகவும் ஐந்து ஆண்டுகள் ஜெபிக்கும் விசுவாசி ஆண்டவர் செய்த செயல்களைத் தானும் செய்வான் என்று தீர்மானிக்கக் கூடாதோ?

ஆண்டவரைக் காட்டிலும் அதிகமாக ஓராண்டு ஊழியத்திற்கு பத்தாண்டுகள் ஜெபிக்கின்ற விசுவாசி ஆண்டவர் செய்ததைக் காட்டிலும் பெரிய காரியங்களைச் செய்வான் என்றும் சொல்லக்கூடாதோ?

ஆண்டவர் ஜெபித்ததைவிட குறைவாக ஜெபிக்கின்றவன், அவர் செய்த கிரியைகளை தானும் செய்ய முடியும் என்று நம்புவது சரியானதா?

சராசரி போதகரோ அல்லது ஊழியரோ ஒருநாளைக்குக் குறைந்தபட்சம் ஒருமணிநேரம் ஜெபிக்கும் அடிப்படை அனுபவத்தை அறியார்கள் என்பது உண்மை இல்லையா?

பல ஆலயங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் இரண்டு மணிநேர ஆராதனை நடத்துகின்றன. வாரத்தின் பிற நாட்களில் மற்ற செயற்பாடுகளுக்கான கூட்டம் நடைபெறுகின்றது பொதுவாக. ஆலயத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனைக்கோ அல்லது போதனா ஊழியத்திற்கோ இரண்டுமனி நேரம் உள்ளது. ஆனால் ஆண்டவரின் திருச்சந்நிதியில் அந்த நிகழ்ச்சிகளுக்கான நேரத்தை ஆயத்தப்படுத்துவதற்கும் அந்த நேரத்தில் தடையைக் கொண்டுவர முனையும் சாத்தானின் நோக்கத்தை முறியடிப்பதற்கும் பத்துமணி நேர ஜெபம் தேவைப்படுகின்றது. இன்று எத்தனை சபைகளில் அந்த ஜெப ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதுதான் கேள்வி. அவைகளில் ஒன்றையாகிலும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களா! அத்தகைய சபை ஒன்றை நீங்கள் கண்டுபிடிப்பீர்களாயின் அது செழிப்பாக வளர்ந்து விருத்தியடைந்து கொண்டிருக்கும் சபையாகவே இருக்கும். ஜெபிப்பதில் ஆண்டவரின் மாதிரியைப் பின்பற்றாத கடவுளின் பிள்ளைகள், 'நடக்கும்' என்று ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிய பெரிய காரியங்களைக் காண்பதில்லை.

பத்துமணி நேரம் ஆண்டவரின் பாதத்தில் தரித்திருந்து ஜெபம்பண்ணி, ஞாயிற்றுக் கிழமையிலோ அல்லது வேறு எந்த ஒரு நாளிலோ பிரசங்கிக்கிற போதகர், தன் ஊழியத்தில் மிகப்பெரிய காரியங்கள் நிகழ்வதைக் காண்பார். செவிமடுத்துக் கேட்பதில் ஆர்வமற்றவர்கள், ஆர்வத்துடன் கேட்கத் தொடங்குவார்கள்; கீழ்ப்படியும் குணமற்றவர்கள் கீழ்ப்படிய ஆரம்பிப்பார்கள்; உலகின் மீது இச்சை கொண்டவர்கள், உலகம் சுவையற்றது என்று கண்டு கொள்வார்கள்; விசுவாசமற்றவர்கள் ஆண்டவரின் நற்செய்தியை இருதயத்தில் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து, இரட்சிப்பைப் பெறுவார்கள். ஆண்டவர் இயேசு செய்ததைப் போன்ற ஊழியம் மறுபடியும் கண்கூடாகக் காணப்படும். கர்த்தர் மகிமைப்படுவார்.

இந்த வகையில் உற்றுநோக்கும்போது, கர்த்தர் தமது பிள்ளைகள் மூலம் மிகப்பெரிய செயல்களை செய்யக்கூடும் என்பது தெளிவாகின்றது. அவரால் அரிய காரியங்களைச் செய்ய முடியாது என்பதோ அல்லது அவைகளைச் செய்வதற்கு அவர் விரும்பவில்லை என்பதோ அல்ல பிரச்சினை. தம்முடைய பிள்ளைகள் செய்யும் ஜெபங்களின் விகிதப்படி தாம் செயல்படும் நியதியினை அவர் தமக்குள்தாமே கொண்டுள்ளார் என்பதுதான் பிரச்சினை. அவருடைய பிள்ளைகள் மிகக்குறைவாகவே ஜெபிக்கிறார்கள். எனவே அவரும் மிகக்குறைந்த அளவிலேயே செயல்பட முடிகின்றது. அவர்கள் அதிகமாக ஜெபித்திருப்பார்களாயின், அவர்கள் மத்தியில் வல்லமையும் மகாபெரியதுமான செயல்கள் நடந்தேற அவரும் தம்மைத் தந்திருப்பார்.

யாரேனும் ஒருவர் தனித்திருப்பது பற்றி மனச்சோர்வுற்று இருப்பாராயின், இழந்து போனவர்களுக்காக பத்து மணி நேரம் ஜெபித்து இரண்டு மணிநேரம் அவர்களுக்கு சாட்சி பகர்ந்து வாழவேண்டும் என்கிறோம். இப்படி இருக்கும்போது, அவருடைய வாழ்விலும் திருப்பணியிலும் கடவுளின் ஆற்றல் செயல்படுவதையும், பலர் மனந்திரும்பி ஆண்டவருக்குள் நிலைத்திருப்பதையும் காணலாம்.

"... பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்" (அப் 12:5) என்று வேதத்தில் பார்க்கின்றோம். அவர்களின் ஊக்கமான ஜெபம் கேட்கப்பட்டது. ஆண்டவர் அங்கே பெரிய அற்புதத்தைச் செய்தார். ஒரு தேவதூதன் பேதுருவினிடத்தில் அனுப்பப்பட்டான். அந்த தேவதூதன் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுவித்தான். அன்று சபையார் ஜெபித்திருக்கவில்லையென்றால் நிலைமை வேறுவிதமாக மாறியிருந்திருக்கும். உண்மையில் அந்த சபையார் ஊக்கத்தோடு மாத்திரமின்றி இடைவிடாமலும் ஜெபித்தாகள். பேதுரு கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் போடப்பட்ட நேரத்திலிருந்து, விடுவிக்கப்படும்வரை அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

## நீண்டகால ஜெபம்

மூன்றரை ஆண்டுகாலம் மட்டும் செய்யப்பட்ட ஊழியத்திற்காக, பதினெட்டு ஆண்டுகள் ஆண்டவர் ஜெபித்தார் என்று பார்த்தோம். அந்த அளவிற்கு அதிகமான ஆண்டுகளை அவர் ஜெபத்தில் செலவிட்டதற்கான தேவை என்ன? அவர் இரவுகளை ஜெபத்தில் கழித்ததோடு, மூன்றரை ஆண்டு காலத்தில் தாம் நிறைவேற்றியதை ஒன்றுபடுத்துவதற்கு 1500 ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஜெபித்துக்கொண்டிருக்கிறார். கடவுள் செயல்படுவதற்கு முன்பே அவ்வளவு நீண்ட காலத்தை ஜெபத்தில் ஏன் செலவிட வேண்டும்!

ஒரே ஒருமுறை கேட்கப்படுவதினால் ஒரு காரியத்தை ஆண்டவர் ஏன் கலபமாக நிறைவேற்றித் தருவதில்லை என்பதற்கான உண்மை எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிவதெல்லாம், அவருடைய விருப்பமே செய்யப்பட வேண்டும் என்பதோடு மட்டுமன்றி, அதுவே அவரிடம் ஜெபமாக ஏறெடுக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகின்றார். அதிக அளவில் தொடர்ந்து ஜெபிக்கப்பட வேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டவராகவும், அதனை வற்புறுத்துகிறவராகவும் அவர் இருக்கிறார். ஆண்டவரின் சமூகத்திற்கு முன்பாக இடைவிடாமல் ஊக்கத்தோடு ஏறெடுக்கப்படுகின்ற ஜெபமே காரியங்களை வாய்க்கப்பண்ணும். அதுவரையில் காத்திருக்கவும் ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார் என்று தெரிகிறது. தாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு ஜெபம் ஏறெடுக்கப்பட்ட பின்னரே அவர் செயலாற்றக்கூடும். ஆயிரம் முறை ஜெபிக்க வேண்டிய ஒருவர் ஒருமுறை ஜெபிப்பதும், பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டிய ஒருவர் ஒருமாதம் மட்டுமே ஜெபிப்பதும் எந்த பலனையும் கொண்டுவரமாட்டாது. அவர்கள் தங்கள் ஜெபங்களுக்கான பதிலைப் பெற்றுக்கொள்வதில்லை. அவர்கள் மிக அழகாக ஜெபித்தை ஆரம்பிக்கலாம். ஆனால் தேவையான காலம் மட்டும் ஜெபிக்கவில்லையென்றால் அவர்கள் எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ளக்கூடாத நிலைக்குள்ளாவார்கள். கடவுள் அவ்வாறே நியமித்திருக்கின்றார்.

## குழு ஜெபம்

இந்தப் புத்தகம் எழுதி முடிக்கப்படுவதற்கு 200-லிருந்து 250 மணிநேரத்தை எடுத்துக் கொள்ளும். ஏற்கெனவே பல ஆண்டுகளாக செய்திகளின் மூலம் சிந்தித்திருக்கின்றேன். அவைகளை என் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் நடைமுறையில் சம்பந்தப்படுத்தவும் முயன்றிருக்கின்றேன். நான் நேர்மையுடன் இருக்க விரும்பினால், இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு முன் இதற்காக 250ஷ்5=1,250 மணி நேரத்தை நான் ஜெபத்தில் செலவிட வேண்டும். இந்நூல் எழுதப்படுவதற்கு முன் நாளொன்றிற்கு ஐந்து மணிநேரம் நான் ஜெபிப்பேனாயின், 250 நாட்கள் அதற்காகும். அப்படியானால் அந்தப் புத்தகம் பல ஆண்டுகளாக எழுதி முடிக்கப்படப்போவதில்லை என்றே பொருள்படும். எனவே, "ஜெபிக்கும் ஆசிரியர்கள்"(Praying Authors) என்று நான் அழைக்கின்ற என் ஜெப பங்காளர்களோடு எம் சுமையைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதிருந்தது. எனக்கு உள்ளாக கருத்து நீரோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான நேரத்தை ஜெபிப்பதில் செலவிட்டபின் நான் எழுதக்கூடும். உள்ளான கருத்து நீரோட்டம் சுருங்கும் போது மாத்திரமே மீண்டும் ஜெபிக்கச் செல்வேன் என்பதே அதன்பொருள். ஒவ்வொரு ஜெப பங்காளர்களும் குறிப்பிட்ட

சில மணிநேரம் ஜெபிப்பதற்குத் தங்களை அர்ப்பணித்து அந்த நேரத்தில் இந்த புத்தகத்திற்காக ஜெபித்தார்கள். அதனாலேயே, இதற்காக ஜெபத்தில் செலவிடப்பட்ட 1,250 மணி நேரத்திலாவது இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.

என்னுடைய ஊழியத்தின் பிற காரியங்களிலும் இதே முறையை நான் கையாண்டேன். உதாரணமாக, நான் சில நாடுகளுக்குச் செல்ல இருக்கின்றேன். ஆண்டவரின் அருட்செய்தியை அறிவிப்பதற்கும், இரசாயண ஆய்வை (Chemical Research) மேற்கொள்வதற்கும் ஏழு நாடுகளுக்குச் செல்வேன். நாற்பது நாட்கள் நான் வெளிநாடுகளில் இருப்பேன். அங்கே நான் எப்போது ஊழியம் செய்வேன், எப்போது செய்ய மாட்டேன் என்பது எனக்குத் தெரியாது.

எனவே அந்த நாற்பது நாட்களின் ஒவ்வொரு மணி நேரத்தையும் ஊழிய நேரமாகவே கொள்ள நான் தீர்மானித்திருக்கின்றேன். அதன்படி ஒவ்வொரு மணிநேர ஊழியத்திற்காகவும் 5 மணிநேரம் ஜெபிப்பதற்கு 480 x 5=2,400 மணிநேர ஜெபம் எனக்குத்தேவை. இது தொடர்பாக நான் என் ஜெப பங்காளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அவர்கள் தங்களால் ஜெபிக்கக்கூடிய நேரத்தை எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தேவையான ஜெபநேரங்கள் கிடைக்க வேண்டும் என்பதே கடவுளிடத்தில் என் ஜெபம். தேவையான அளவிற்கு ஜெபநேரம் கிடைக்கவில்லையென்றால், உத்தரவு இல்லாத பயணமாகவே அது இருக்கும். போதுமான அளவிற்கு ஜெபமின்றி எந்தக் காரியத்தைத் தொடங்குவதைப் பார்க்கிலும், தேவைக்குக் குறைவான பயணத்தோடு எந்தத்திட்டத்தையோ அல்லது பயணத்தையோ தொடங்குவது எளிது என்று நான் இப்போது எண்ணுகிறேன்.

ஒருமணிநேர ஊழியத்திற்காக ஐந்து மணிநேரம் ஜெபிப்பதை இப்போதுதான் நான் கடைபிடித்து வருகின்றேன் என்பதை நான் சொல்லியாக வேண்டும். கடந்த காலத்தில் அம்முறையை நான் கைக்கொண்டிருப்பேனாகில், காரியங்கள் வேறுவிதமாக இருந்திருக்கும்; நல்ல பலனை நான் பெற்றிருந்திருக்கக் கூடும்.

இதற்குப்பின்னால் இருக்கும் நியாயம் என்னவெனில், சிலவற்றைத் தாம் செய்வதற்குமுன் ஆண்டவர் தம் பிள்ளைகளிடமிருந்து அதற்குத் தேவையான ஜெபத்தை எதிர்நோக்குகின்றார் என்பதாகும். தனிநபரின் ஜெபமோ அல்லது குழுவின் ஜெபமோ போதுமான அளவிற்கு ஏறெடுக்கப்பட்டால் மட்டுமே ஆண்டவர் செயல்படுவார்.

தனக்காக ஜெபிக்கும்படி பரிசுத்தவான்களோடு அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் வேண்டுவதற்கு இதுவே காரணமாக இருக்கவேண்டும். உதாரணமாக, பவுலடியார் கொலோசெயருக்கு இவ்விதமாக எழுதுகிறார்.

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில்

விழித்திருங்கள். கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்" (கொலோ 4:2-4).

எபேசியருக்குப் பவுலடியார் இப்படி எழுதுகின்றார்:

"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப் பற்றிப் பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கும்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்" (எபேசியர் 6:18-20).

அவர்களின் ஒன்றிணைந்த ஜெபம் மிகுந்த பயனுள்ளதாயும், அபரிமிதமான ஊழியமாகவும் இருந்தது. இதே வகையான திருப்பணி, அவரைப் போன்றே ஒப்படைப்புள்ள ஜெபத்துடன் கூடிய, அதே எண்ணிக்கையில் ஜெபிக்கின்ற விசுவாசிகளைக்கொண்ட அதே கால அளவில் உள்ளதாக இருக்கும்போது இப்போதும் அது அவர்செய்த ஊழியத்தைப் போன்றே அமையும்.

## ஜெபத்திற்கான அர்ப்பணிப்பு

ஊழியங்களுக்கான உடன் பங்காளிகள் நிதி பங்காளர்களைத் தேடுகின்ற ஏராளமான மக்கள் உண்டு. அந்த உடன் பங்காளிகள் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒரு தொகையை கொடுப்பதற்குத் தங்களை அர்ப்பணிக்க எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். எனினும், சிலர் குறிப்பிட்ட கால அளவுகளில் ஊழியங்களுக்காக ஜெபிப்பதற்குத் தங்களை அர்ப்பணிக்கின்ற மக்களைத் தேடுகின்றனர். ஜெபிக்கும்படி அவர்களைக் கேட்கின்றனர். ஜெபப் பங்காளர்களைப் பெற்ற பின்னர்,ஜெபத்திற்குரிய பொறுப்புக்களைத் தொகுத்து, அதன் அடிப்படையில் தன் ஊழியத்தின் பலத்திற்கான சிலவற்றை அறிய வேண்டும். பெறக்கூடிய ஜெபத்தின் அளவின்படி எதிர்கால ஊழியத்தைத் திட்டமிட வேண்டும். தேவையான ஜெபப்பொறுப்புகள் குறைவுபடுமானால், பணம் கிடைக்கக் கூடியதாக இருந்தாலும் அந்தப் பக்கமாக திசை திரும்புவதற்கு மறுத்துவிட வேண்டும். கிடைக்கக்கூடிய நிதியை விடவும், கிடைக்கப் பெறுகின்ற ஜெபப் பங்காளர்களும், ஜெபத்தின் அளவுமே ஊழியப்பாதையில் மேற்கொண்டு செல்வதற்குரிய ஆண்டவரின் அனுமதியைக் குறிப்பதாகும்.

ஒரு செல்வந்தர் மிகத் தாராளமாக ஒருமாதம் அல்லது ஓராண்டுக்குத் தேவையான பணத்துக்கான செக் கொடுத்து உதவலாம். ஆனால் ஒருமாதத்திற்குத் தேவையான ஒருமணி நேர ஜெப உதவியை ஒரு நிமிடத்தில் செய்யக்கூடிய மனிதர் எங்கும் இல்லை.

## இது உங்களுக்கு என்ன சொல்கிறது?

இது இரண்டு காரியங்களைச் சொல்கிறது: முதலாவதாக, எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன்பு முதலாவது தகுந்த அளவு ஜெபிக்காமல் செய்யப்படும்-காரியங்கள் மாம்சத்தின் செயலாகும். அது நிலை நிற்கமாட்டாது. ஜெபிக்கும் கிறிஸ்துவின் நியாயாசனத்திலிருந்து அதனால் தக்க பலனை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. அப்படியானால் அந்த வேலை உடனே நிறுத்தப்பட வேண்டும். ஏனென்றால் தேவன் விரும்பும் விதத்திலேயே எந்த ஒரு செயலும் நடைபெறவேண்டும். அது ஜெபத்துக்குப்பின்னரே செயல் என்ற வழிமுறையாகும்.

இரண்டாவதாக, கடவுளின் திருப்பணியை ஆர்வத்துடன் செய்ய விரும்பும் யாவரும் ஜெபம் பற்றிய தெளிந்த நிலைகளைக்கொண்டு, ஒருசெயலைச் செய்வதற்கு முன்னரே ஜெபிக்கத் தொடங்க வேண்டும். இன்றிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர் செயல்படுத்தப் பட இருக்கின்ற திட்டங்கள் இன்றே ஜெபத்தில் முழுவதுமாய் ஒப்படைக்கப்பட வேண்டும். தனியாக ஜெபிப்பது போதுமானதல்ல. ஜெப பங்காளர்கள் நியமிக்கப்பட்டு ஜெபிக்கும் திருப்பணியில் அவர்கள் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் குறிப்பிட்ட சிலமணிநேரம் ஜெபிப்பதற்கென்று அவர்களை அர்ப்பணித்துவிட வேண்டும். அது வெறும் வார்த்தையளவில் அல்லாமல் செயல்படுத்தப்படுகிறதா என்பது சோதித்தறியப்பட வேண்டும். போதுமான அளவிற்கு ஜெபம் ஆண்டவரிடத்தில் சேர்க்கப்படவில்லையென்றால், எந்த செயல்திட்டமும் தொடங்குவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது. இந்த முறை சார்ந்த திட்டம் மிக்க கண்டிப்புடன் கடைபிடிக்கப்படுமாயின்-ஜெப ஒழுங்கு இருக்குமாயின் கடவுளின் மனிதனுடைய வாழ்க்கையிலும், கடவுளுக்காக அவன் செய்யும் திருப்பணியிலும் ஒரு புதுநாள் மலரும்.

இறுதியாக, போதகராகவோ, ஆசிரியராகவோ, ஊழியராகவோ, ஞாயிறுபள்ளி ஆசிரியராகவோ நீங்கள் செய்யும் இரண்டு மணிநேர ஊழியத்திற்காக பத்துமணி நேரம் ஜெபிக்கும்படியாக உங்கள் ஜெப நேரத்திட்டத்தை நீங்கள் வகுத்துக்கொள்ளுங்கள். ஜெபத்திற்கான தகுந்த கிரயம் செலுத்தப்படாத எந்த வேலையானாலும் அதற்கான அழைப்பை நீங்கள் துணிந்து மறுத்துவிடுங்கள். ஆமென்.

# 6. திருமுழுக்கும் மன்றாட்டும்

ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது' (லூக்கா 3:21-22).

இயேசு தம் ஊழியத்தை மக்களிடையே தொடங்கும் முன்பாக பதினெட்டு ஆண்டுகளை ஜெபத்தில் செலவிட்டார் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். யோர்தானில் தமக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட வேண்டியதை அவர் அறிந்திருந்தார். தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே, சிறப்பான வழியில் தமக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதற்கு தேவ ஆவியானவர் தம்மேல் வந்தாக வேண்டியதன் அவசியத்தையும் அவர் உணர்ந்திருந்தார். எனவே பதினெட்டு ஆண்டுகளாக மீண்டும் மீண்டுமாக அனைத்துக் காரியங்களுக்காகவும் அவர் ஊக்கத்தோடு ஜெபித்திருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் குறித்து அணு அணுவாக அவர் கடவுளிடம் வேண்டுதல் செய்திருக்க வேண்டும். போதுமான அளவு ஜெபிக்காமல் விடப்பட்ட எதுவுமே அவருடைய வாழ்வில் இருந்ததில்லை என்று நாம் சொல்லலாம்.

இறுதியாக அந்த நாள் வந்தது. உலக இரட்சகர் அன்று யோர்தான் ஆற்றுக்கு வந்தார். மக்கள் பலர் திருமுழுக்குப் பெற்று நின்றனர். திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் யோர்தானில் இருந்து வெளியே வந்து மகிழ்ச்சியோடு சென்றனர். அதைத் தொடர்ந்து அடுத்தவரின் முறைவரும். திருமுழுக்கு பெற்றவர்கள் நீரிலிருந்து வெளியேறி மகிழ்ச்சியோடு சென்றோ; அல்லது அங்கே நின்று, முழுக்கு முனிவர் யோவான் கையினால் மற்றவர்கள் திருமுழுக்கு பெறுவதை கவனித்துக் கொண்டோ நின்றார்கள்.

அதன்பின்னர், ஆண்டவர் இயேசுவிற்கு திருமுழுக்கு கொடுக்கப்பட வேண்டிய முறை வந்தது. தமக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டதும், மற்றவர்களைப் போல் அவர் செல்லவுமில்லை. பிறர் திருமுழுக்கு பெறுவதை பார்ப்பதற்கு அங்கு நிற்கவுமில்லை. மாறாக, திருமுழுக்கு பெற்றுக் கொண்டதும், யோர்தான் நதிக்கரையில் அவர் தனிப்பட்ட முறையில் மிகுந்த வல்லமையோடு ஜெபித்தார். மற்றவர்களைப்போல் அல்லாமல், அவருடைய திருமுழுக்கு வல்லமையான ஜெபத்தால் பின்தொடரப்பட்டது.

இயேசு ஜெபம் பண்ணும்போது இவையெல்லாம் நிகழ்ந்தன:

☆ வானம் திறக்கப்பட்டது.

- பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.
- பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் வந்திறங்கினார்.
- வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானது.

இயேசு இறைமகனாக இருந்ததாலும், ஜெபத்துடன் திருமுழுக்கு பெற்று, தொடர்ந்து ஜெபித்ததாலும் அவை நிகழ்ந்தன. திருமுழுக்கு பெற்று தண்ணீரிலிருந்து வெளியே வந்ததும் அவர் ஜெபிக்கத் தொடங்கினார் என்று நாம் சொல்லக்கூடும். தேவ ஆவியானவர் தம்மீது வந்திறங்குமட்டும் அவர் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் பிதாவின் குமாரனாக இருந்த போதிலும், பரிசுத்த ஆவியானவர் தம்மேல் வருவதற்குரிய தகுதியுடையவராக இருந்த போதிலும், இயேசு திருமுழுக்குப் பெற்று யோர்தானிலிருந்து வெளியே வந்ததும் ஜெபிக்காமல் இருந்திருந்தால் அநேகமாக பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வந்திருக்க மாட்டார். எனவே பரிசுத்த ஆவியானவர் தம்மேல் இறங்கி வரும்வரை ஆண்டவர் இயேசு ஜெபித்துக் கொண்டிருந்தார்.

## கடவுள்தானே என்ற அலட்சியப்போக்கு

பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்கி வர வேண்டுமென்று பிதாவானவர் நியமித்திருந்தார் என்பதை ஆண்டவர் இயேசு அறிவார். இதைக்குறித்து மிக முன்னதாகவே ஜெபித்து பிதாவிடம் ஒழுங்குபடுத்தியிருந்தார். பிதா யோவானிடம், 'ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்' (யோவான் 1:33) என்று சொல்லியிருந்தார். எனவே பிதாவினுடைய நோக்கிலிருந்து பார்க்கும்போது, ஆண்டவர் இயேசுவின் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்குவதற்கு எல்லா காரியமும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தம்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்க வேண்டுமென்று பிதாவானவர் நியமித்திருந்ததை அறிந்தபோது ஆண்டவர் இயேசுவின் பிரதிச்செயல் எப்படி இருந்தது? இரண்டு பாதை வழிகள் அவருக்குத் திறக்கப்பட்டிருந்தன.

'என்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்க வேண்டுமென்று பிதா நியமித்து யோவானிடம் அதைக்குறித்துச் சொல்லிவிட்டார். மேலும், இதனை பல ஆண்டுகளாக நான் ஜெபத்தில் கேட்டிருக்கின்றேன். எனவே நிச்சயமாக என்னில் நிகழப்போகின்ற ஒன்றைப்பற்றி நான் அதிகம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை' என்பது முதல் பாதை வழியாகும். அந்த பாதை வழியை அவர் தேர்ந்தெடுத்திருப்பாராயின் பரிசுத்த ஆவியானவர், தம்மேல் இறங்குவதற்காக தாம் வீணாகக் காத்திருந்திருக்கும் நிலை ஏற்பட்டு அவர் அதிர்ச்சியடைந்திருக்கக்கூடும்.

'என்மேல் பரிசுத்த ஆவியானவர் வந்திறங்குவதற்குப் பிதா நியமித்திருக்கின்றார். இதைக் குறித்து யோவானிடம் பேசிவிட்டார். நானும் பல ஆண்டுகளாக ஊக்கமான ஜெபத்தில் இந்தக் காரியத்தை வைத்திருக்கின்றேன். இப்போது அந்தக் காரியம் நிகழ இருக்கின்றது. இந்நேரத்தில் நான் என் முழு ஆற்றலையும் பயன்படுத்தி என் பிதாவினிடத்தில் மன்றாட வேண்டும். அப்படியானால்தான் அவருடைய நோக்கம் இங்கே நிஜமானதாகும். நான் ஜெபம் பண்ணியாக வேண்டும். ஏனெனில், யோவானிடம் என் பிதா சொன்ன வார்த்தை இங்கே நிகழவில்லையென்றால், அவர் பொய் சொல்பவராகக் காணப்படுவார். மேலும், பல்லாண்டு கால என்னுடைய ஜெபம் வீணாய்ப் போகாதபடி நான் ஜெபித்தாக வேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்மேல் வந்திறங்குவது எனக்கு மிக முக்கியமான தேவை என்பதால் நான் கண்டிப்பாக ஜெபிக்க வேண்டும்' என்பது இரண்டாவது பாதை வழியாகும். ஆண்டவர் இயேசு இந்த இரண்டாம் பாதை வழியைத் தெரிந்தெடுத்து ஜெபித்தார். அவ்வண்ணமே அவர் ஜெபிக்கும்போது வானம் திறக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் வந்திறங்கினார்.

எண்ணற்ற விசுவாசிகளின் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் ஜெபிக்காததால் ஆண்டவரின் வாக்குத்தத்தங்களை நடைமுறையில் பெற்று அனுபவிக்க அவர்கள் தவறிவிடுகின்றனர். அவர்கள் தங்களுக்குள்ளாக இப்படிச் சொல்லிக் கொள்கின்றனர். ' ஆண்டவர் இந்தந்த காரியங்களை எனக்குத் தருவதாக வாக்கருளியிருக்கின்றார். எனவே அவை என்னுடையது ஏனெனில் அவர் வாக்கு கொடுத்திருக்கின்றார்'.

ஆம், ஆண்டவரின் வாக்குத்தத்தத்தின்படியே அனைத்துக் காரியங்களும் உள்ளன என்பது உண்மைதான். ஆனால், யார்யார் தங்கள் ஜெபங்களின் மூலமாக ஆண்டவரின் வாக்குத் தத்தங்களை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களே ஆண்டவரால் வாக்கருளப்பட்டவைகளைப் பெற்றுக் கொள்வார்கள். உரிமைப்பொருள் வாக்களிக்கப்படுவது ஒரு காரியம். வாக்களிப்பட்ட உரிமைப் பொருளைப் பெற்றுக் கொள்வது முற்றிலுமாக அடுத்த காரியம்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு இதனை இப்படி எழுதுகின்றார்: 'இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்.

எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில்,

அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே.

அப்படியிருந்தும் அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள் (I கொரி 10:1-5).

இன்றைய நாட்களில் சபையைக் குறித்தும் இப்படிச் சொல்லக்கூடும். கர்த்தர் ஏராளமான காரியத்தை சபைக்காகச் செய்திருக்கின்றார்; சபையை ஆசீர்வதிக்க எண்ணற்ற வாக்குத்தத்தங்களை அருளியிருக் கின்றார். ஆனால் ஜெபமின்மையால் பல சபைகளுக்கு ஆண்டவரின் வாக்குத்தத்தங்கள் பலனளிக்கவில்லை.

ஆண்டவரால் அருளப்பட்ட எந்த ஒரு வாக்குத்தத்தமாயினும், தன்னுடைய வாழ்க்கையிலோ அல்லது சபையின் வாழ்விலோ நிறைவேற்றப்பட எதிர்பார்க்கின்ற எந்த ஒருவரும் ஜெபத்தில் ஆண்டவரோடு தொடர்ந்து நிலைத்திராவிட்டால் அந்த எதிர்பார்ப்பு தவறானதாகும். கடந்த காலத்தில் ஜெபம் பண்ணிவிட்டதால், தற்போது ஜெபிக்காமல் ஓய்வெடுத்துக் கொண்டு ஆண்டவரிடமிருந்து எப்படியும் முழுப்பயனை பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணுகின்ற எந்த ஒருவரும், தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்வார்.

ஆண்டவரையும், ஜெபத்தின் விதிமுறைகளையும் அறிந்திருக்கிறவர், ஒரு காரியம் செய்யப்படுவதற்கு முன்னும், அந்தக் காரியம் நிறைவேறுகின்ற நேரத்திலும் தொடர்ந்து ஊக்கமாக ஜெபம் பண்ணுவார். காரியம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில், கடந்த காலத்தில் பண்ணிய ஜெபம் எவ்வித முக்கியத்துவமும், அதனால் எவ்வித பயனும் இல்லாததாக, தற்போது செய்யப்படுகின்ற ஜெபத்தில்தான் எல்லா காரியங்களும் சார்ந்திருக்கின்றன என்பதாக எண்ணிக் கொண்டுமிகத் தீவிரமாக தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இதுவே ஆண்டவரின் மாதிரியைப் பின்பற்றக்கூடிய வழி. அவர் கடந்த காலத்தில் ஜெபித்தார்; அவ்வண்ணமே நிகழ்காலத்திலும் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

ஒரு காரியம் வாக்களிப்பட்ட பின்னும் அதற்காக ஜெபித்துக் கொண்டிருப்பது விசுவாசமின்மை இல்லையா?' என்று சிலர் கேட்கலாம். வாக்குத்தத்தம் என்பது அது நிறைவேற்றப்படுவதற்காக ஜெபத்தில் ஆண்டவரோடு ஒத்துழைப்பதற்குக் கொடுக்கப்படுகின்ற அழைப்பு என்று நாம் அதற்குப் பதில் சொல்லலாம். ஆண்டவரோடு கூடிய அந்த ஒத்துழைப்பு ஜெபத்தின் மூலமாகவே அதிகமாகக் கொடுக்கப்பட முடியும். இடைவிடாமல் கேட்கின்ற யாரையும் ஆண்டவர் குற்றம் கூறுவதில்லை. ஆண்டவரின் வாக்குத் தத்தம் நிறைவேறுமளவும் ஜெபிக்க வேண்டியது மிக அவசியம். ஏனென்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு.

முதலாவதாக, ஜெபம் ஒருவருடைய குணத்தையும், விசுவாசத்தையும் பலப்படுத்துவதன் மூலம், ஆசீர்வாதங்கள் வந்து சேரும் போது அவற்றை கவனமாகக் கையாள அவரை ஆயத்தப்படுத்துகின்றது.

இரண்டாவதாக, ஆண்டவருக்கு ஓர் எதிரி உண்டு. அவன்தான் சாத்தான். ஆண்டவர் ஒரு வாக்குத்தத்தத்தை அருளின உடனே அதனை நிறைவேற்றவிடாமல் தடுப்பதற்கு தன்னால் இயன்றவளரையில் வேலை செய்யத் தொடங்குவான்.

இந்த சூழ்நிலையில், இடைவிடாமல் ஜெபிப்பதன் மூலம் ஆண்டவரோடு ஒத்துழைக்கும்போது சாத்தானுடைய திட்டங்களும் முயற்சிகளும் நிர்மூலமாக்கப்பட்டு ஆண்டவரின் நோக்கம் நிறைவேற்றப்படும்.

ஓர் ஆரோக்கியமான குழந்தை பிறப்பதற்கு கர்ப்பம் தரித்த நிலை மட்டுமே காரணம் என்று எளிதாக நாம் சொல்லி விடக்கூடுமோ? நிச்சயமாக இல்லை. குழந்தை உருக்குலைந்து பிறப்பதற்கோ, ஊனமுற்று பிறப்பதற்கோ, அல்லது கருக்கலைந்து போவதற்கோ ஏற்ற விதத்தில் பல காரியங்கள் தவறாக போகக்கூடும். கர்ப்பத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான எல்லா காரியங்களையும் ஞானமுள்ளவன் செய்கின்றான்.

தேவனுடைய வாக்குத்தத்தம் என்பது கருவுற்றிருக்கும் நிலையை போன்றதாகும். ஆரோக்கியமான குழந்தையின் பிறப்பு கருவுறுவதற்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை மட்டுமே சார்ந்திருப்பதல்ல. கருவுற்ற பின்பும் ஏறெடுக்கப்படும் ஜெபம் குழந்தையின் முறையான வளர்ச்சிக்கும், நோயிலிருந்தும் - வளர்ச்சியடையாத குறை பிரசவத்திற்கு விலக்கிப் பாதுகாக்கப்படுவதற்குமே. கருப்பையில் ஒன்பது மாதங்கள் ஆரோக்கியமாக வளர்ந்திருக்கும் குழந்தைகூட, பிரசவ நேரத்தில் இறந்து போவதுண்டு. அத்தகைய இறப்பு பேரிழப்பாகும். எனவே, அதிகப்படியான அக்கறையும், சாமர்த்தியமான வைத்திய முறைகளும் பிரசவ நேரத்தில் தேவைப்படுகின்றன. ஆண்டவர் இயேசு இவை அனைத்தையும் அறிந்திருந்தார். ஆகையினால்தான் அவர் யோர்தானை விட்டு வெளியே வந்ததும், தேவ ஆவி தம்மீது இறங்குமட்டும், தம் பிதா பேசும் வரையிலும் தீவிரமான ஜெபத்தில் அவர் தம்மைத்தாமே ஈடுபடுத்திக் கொண்டார். நாமும் அவ்வண்ணமே விசுவாசத்தின் பலன் காணப்படும்வரை ஜெபத்தில் ஈடுபட வேண்டும்.

## ஜெபமும் பரிசுத்த ஆவியானவர் வந்திறங்குதலும்

ஜெபித்துக் கொண்டிருந்த கிறிஸ்துவின் மீது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார் என்று பார்த்தோம். வீட்டின் மேலறையில் ஜெபித்துக் கொண்டிருந்த 120 பேர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கியதையும் நாம் அறிவோம்.

'அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்... பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல், வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்தமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்' (அப் 1:14,2:1-4) என்று வேதம் கூறுகிறது.

ஆகவே, ஜெபத்தில் தங்களை முற்றிலுமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த அந்த சீடர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்தமர்ந்தார். 'அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்' (அப் 4:31). என்று வேதம் மேலும் கூறுகின்றது.

'அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத்தேடு; அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான் என்றார். அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்'(அப் 9:11,17). இந்த பகுதியினையும் திருமறையில் நாம் காண்கின்றோம்.

ஆண்டவர் இயேசு தம் சொந்த வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் தம்மேல் இறங்கி வந்ததற்கும், ஜெபத்திற்கும் இடையிலான தொடர்பை மெய்ப்பித்துக் காட்டியதோடு மட்டுமல்லாமல், அதைப்போதிக்கவும் செய்தார். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதா தம்மிடத்தில் கேட்போர்க்கு பரிசுத்த ஆவியை அருள்வது அதிக நிச்சயமல்லவா என்றார் இயேசு. ஆம்!. முதல் முறை தம்மிடத்தில் கேட்போர்க்கு பரிசுத்த ஆவியை பிதா அருள்வார். தம்மிடத்தில் மீண்டும் கேட்போர்க்கு பரிசுத்த ஆவியை இரண்டாம் முறை அவர் ஊற்றுவார். தொடர்ந்து ஜெபத்தின் மூலம் கேட்பதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தம் பிள்ளைகள் மீது பரிசுத்த ஆவியானவரை முழு அளவில் தொடர்ந்து பொழிந்தருள்வார்.

# 7. ஆண்டவரே, வானத்தைத் திறந்தருளும்!

ஆண்டவர் இயேசு திருமுழுக்குப் பெற்று யோர்தானிலிருந்து வெளியேறி ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது என்று நாம் பார்த்தோம். அவர் ஜெபிக்கும்வரை வானம் மூடப்பட்டிருந்தது. வானம் திறக்கப்பட்டபோது பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் அவர் மேல் வந்திறங்கினார். அப்போது வானத்திலிருந்து பிதாவின் சத்தம் உண்டானது.

"ஆ! உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும், தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப்பொங்கப்பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படிச் செய்யும்" (ஏசாயா 64:1,2) என்று ஏசாயா தீர்க்கதரிசி அழுகிறதை வேதத்தில் பார்க்கின்றோம்.

"கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத்தொடும். மின்னல்களை வரவிட்டுச் சத்துருக்களைச் சிதறடியும், உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும். உயரத்தில் இருந்து உமது கரத்தை நீட்டி, ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும், மாயையைப்பேசும் வாயும், கள்ளத்தனமான வலது கையையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்" (சங்கீதம் 144:5-8) என்று சங்கீதக்காரன் அழுகின்றான்.

ஜெபம் ஏறெக்கப்படும்போது அதற்குப் பதிலளிக்கும் வகையில், வானங்களைத் திறந்து கொண்டு ஆண்டவர் கீழிறங்கி வருகின்றார் அல்லது வானத்திலிருந்து ஆசீர்வாத மழையை தம் மக்கள்மேல் பொழியப்பண்ணி, தம் மக்களுக்கு எதிரானவர்களை அழிக்கிறார் என்ற கருத்து அதில் அடங்கியிருக்கின்றது.

ஆண்டவர் இயேசுவின் ஜெபம், வானங்களைத் திறந்து பரிசுத்த ஆவியானவரைத் தம்மேல் வந்திறங்கப் பண்ணுவதாய் இருந்தது. பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதற்குப் பிதா ஆயத்தமாயிருந்தார். ஆனால் மூடப்பட்டிருந்த வானத்தின் வழியாக அவரால் எப்படி வர முடிந்தது? இயேசுவின் ஜெபம் மேலேறிய போது, அது அங்கிருந்த தடைகளைத் தகர்த்தெறிந்து, வானத்தைத் திறந்தது; இடையூறுகள் அகற்றப்பட்டன; அப்போது பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் வந்திறங்கினார். வானம் திறக்கப்பட்டு கீழிறங்கிய பரிசுத்த ஆவியானவர் மூலம் அனுகூலம் பெற்ற முதல் மனிதர் இயேசுதான்.

ஆண்டவரின் வல்லமை தன் மேல் வந்திறங்குவதற்கு வானத்தைத் திறக்கச் செய்ய ஒரு தனிப்பட்ட விசுவாசியினால் கூடும். நீங்களும் நானும் அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

வானத்தைத் திறக்கப்பண்ணி ஆண்டவரின் வல்லமையை தன் மேல் இறங்கப்பண்ணுவதன் மூலம் தனக்கெதிராக படையெடுத்து நிற்கும் சாத்தானை முறியடிக்கவும், நிர்மூலமாக்கவும் ஒரு தனிப்பட்ட விசுவாசியினால் கூடும். அவ்வண்ணமாய் நம்முடைய இடைவிடாத ஜெபத்தின்மூலம் வானத்தைத் திறக்கச் செய்து, ஆண்டவரின் வல்லமையை இறங்கிவரப் பண்ணுவதன்மூலம், இன்று பரிசுத்தவான்களுக்கு எதிராக படையெடுத்திருக்கின்ற சிற்றின்ப ஆசை, பேராசை, இச்சை போன்ற தீய ஆவிகளைச் சூனியமாக்க நீங்களும் நானும் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

ஒரு தனிப்பட்ட விசுவாசி தன்னுடைய ஜெபத்தினால் வானத்தைத் திறக்க முடியும். அதனால் ஆண்டவர் இறங்கி வந்து அவருடைய சபையையும் ஊழியத்தையும் நகரத்தையும் தேசத்தையும் கண்டத்தையும் கிரகத்தையும் ஆசீர்வதிப்பார். விசுவாசியினால் வானம் திறக்கப்படுமாயின் பெறப்படும் ஆசீர்வாதத்தின் எல்லைக்கு வரையறை கிடையாது.

ஜெபத்தின்மூலம் வானங்களைத் திறப்பதால் ஆண்டவர் இறங்கி வந்து, தன்னுடைய குடும்பத்திலும், சபையிலும் நகரத்திலும் தேசத்திலும் கண்டத்திலும் கிரகத்திலுமுள்ள சாத்தானின் செயல்களை நிர்மூலமாக்கப்பண்ணவும் ஒரு தனிப்பட்ட விசுவாசியினால் முடியும். இந்த வழியில், சாத்தானின் கோட்டையைத் தகர்த்தெறிவதற்குத் தேவையான எல்லையற்ற வல்லமையையும் அதிகாரத்தையும் உபயோகப்படுத்துவதற்கு ஒரு தனி விசுவாசியினால் கூடும்.

தனிப்பட்டவர்கள் தங்கள் ஜெபங்களின் மூலமாக வானங்களைத் திறந்து, அதன் பலனாக கடவுளின் பிள்ளைகள் மேல் அதிக ஆசீர்வாதத்தையும் சாத்தானின் நோக்கங்களுக்கு அழிவையும் வரப்பண்ண முடியும். என்ற போதிலும், திருச்சபையின் நலனுக்காகவும் சாத்தானை அழிப்பதற்காகவும் வானங்களைத் திறக்கச் செய்யும் பணியை சபை செய்ய வேண்டும் என்பதே ஆண்டவரின் முடிவான நோக்கமாகும்.

இதில் மற்றொரு பிரச்சினையும் சம்பந்தப்பட்டுள்ளது. அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளின் கூட்டம் அதைச் செய்வதைக் காட்டிலும், தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒரு தனி விசுவாசி வானத்தைத் திறப்பது மிகவும் சிரமமான காரியம். தனிப்பட்டோரின் இச்செயலை மதித்து ஆசீர்வதிக்கும் பொழுதே ஆண்டவரின் கண்கள் ஒரு குழுவான சபையின் மீது திரும்பியிருக்கின்றன. இந்தக் காரணத்தினால்தான் அவர்தம் வார்த்தையில், 'உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள்

முன்பாக பட்டயத்தால் விழுவார்கள். உங்களில் ஐந்து பேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள். உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாக பட்டயத்தால் விழுவார்கள்' (லேவி 26:7,8).

ஐந்து பேர் எதிரிகளுக்கு எதிர்பட்டு நூறு பேரை துரத்தும்போது ஒவ்வொருவனும் இருபதுபேரை துரத்துவான். ஆனால் நூறுபேர் பதினாயிரம்பேரை துரத்தும்போது ஒவ்வொருவனும் நூறுபேரை துரத்துவான். இதன்மூலம் ஒன்றுபட்ட ஜெப வாழ்க்கை ஐந்து மடங்குக்கும் அதிகமான பலனைத்தரும் என்பதையே நாம் கற்றுக் கொள்கிறோம்.

அர்ப்பணமுள்ள ஒரு விசுவாசி பலமுறை ஜெபித்தும் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற முடியாதபடி வியர்த்தமாகும் சூழ்நிலைகள் ஏற்படுவதும் உண்டு.

உதாரணமாக தன்னை வெகுவாகக் கடினப்படுத்திக் கொண்டு, பில்லி சூனியம் மந்திர தந்திரம் போன்ற தேவன் அருவருக்கும் கொடிய பாவங்களில் மூழ்கி ஆண்டவருக்கு விரோதமாக நிற்கும் ஒரு தேசத்திற்கு எதிராக அடைக்கப்பட்டிருக்கும் வானத்தை, ஒரு தனிப்பட்ட விசுவாசி தன்னுடைய ஜெபத்தின்மூலம் திறந்து பரிசுத்த ஆவியானவரை அந்த நாட்டு மக்கள் மீது வந்திறங்கப்பண்ணி, அவர்களின் கடினப்பட்ட இருதயங்களை ஆண்டவர் மூலம் மிருதுவாக்குவது கூடாத காரியமாக இருக்கலாம்.

ஆனால் ஒன்றிணைந்து ஜெபிப்போர்கள் மூலம் அதனை சாதிக்க முடியும். எனவே ஒருங்கிணைந்த ஆவிக்குரிய ஜெபப்போருக்கு உங்களை ஈடுபடுத்திக்கொள்ள நாங்கள் சிபாரிசு செய்கிறோம். தனித்து நிற்கும் தன்மையினாலோ, அல்லது பெருமையினாலோ, ஜெப யுத்தத்தில் கலந்துக்கொள்ள ஒரு விசுவாசி மறுப்பாராகில், அவர் முழு வெற்றியையும் காண்பதில்லை. ஜெப யுத்தத்தில் இணைந்து செயல்பட ஒருவரையும் சேர்த்துக் கொள்ள முடியவில்லையென்றால், தன் முழு இருதயத்தோடும் ஆண்டவருக்காக போராடுகின்ற ஒரு விசுவாசியை பலப்படுத்தி, மிகப்பெரிய காரியங்களை அவர்மூலம் சாதிக்கப்படுவதற்கு ஆண்டவரால் கூடும். உண்மையில், ஐந்து வீரர்கள் நிறைவேற்ற முடியாத காரியத்தையும்,தனித்து நின்றே நிறைவேற்றவும் அவரால் முடியலாம். ஆண்டவர் இஸ்ரவேலரைப் பார்த்து ' உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான்'; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்' என்றார். (யோசுவா 23:10)

## வானத்தை கிழிக்கும் மனிதன்

மூடப்பட்டு முத்திரையிடப்பட்ட வானத்தைத் கிழித்து ஆண்டவரின்

ஆசீர்வாத மழையை தம்மீதோ அல்லது தேவைப்பட்ட மற்றவர்கள் மீதோ பொழியப்பண்ணுவதற்கு தனியொருவர் ஜெபத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலைகள் உண்டு. ஆண்டவர் ஒரு வாக்குத் தத்தத்தை ஏற்படுத்தியிருப்பார்ரானால், அதற்குத் தடையாக மூடப்பட்டிருக்கும் வானங்களிடம் ஜெபத்தின் மூலமாகப் பேசி அவைகள் திறக்கப்படுவதற்குக் கட்டளையிடுவதே நியாயமானதாகும். சில காரியங்களில் அவற்றிற்கு குறுக்கே நிற்கும் தடைகள் விலகிப் போவதற்கு அவரிடம் நாம் நேரடியாக பேச வேண்டும். ஆண்டவர் ஏற்கனவே திறந்திருக்கின்ற வானத்தை, தொடர்ந்து மூடி வைத்துக் கொண்டிருப்பது சாத்தானின் சக்தியாக இருக்கக்கூடும். அந்த சக்தி அகன்றுபோவதற்குக் கட்டளையிடப்பட வேண்டும்.

மனிதன் வானத்தைத் திறப்பது என்பது சிறுபிள்ளை விளையாட்டைப் போன்றதல்ல என்பதை உணர்ந்துக்கொள்ள வேண்டும். மூடப்பட்டிருக்கும் வானம் திறக்கப்படுவதற்கு, தங்களை அர்ப்பணித்திருக்கும் விசுவாசிகளின் மணிக்கணக்கான, நாட்கணக்கான, வாரக்கணக்கான, ஒருவேளை வருடக்கணக்கான இடையறாத ஜெபத்தை அது எடுத்துக் கொள்ளலாம். ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் அல்லது பத்து லட்சம் ஜெப அடிகளுக்கு அந்த சாத்தானின் சக்தி கீழ்ப்படிந்துவிடாது. அவற்றிற்கும் மேற்பட்ட கோடானுகோடி அடிகளால் அது தளர்ச்சியடைய ஆரம்பிக்கலாம். ஜெபம் தவிர்க்கப்பட முடியாத ஒன்று என்பதை ஜெபவீரர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். ஜெபத்தின் மூலமாக போதுமான அளவிற்கு பலவந்தம் செய்து நெருக்கும் போது தடைகள் அகலும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குறிப்பிட்ட நபர், குடும்பம், நகரம், தேசம், கண்டம் அல்லது கிரகத்தின்மீது தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் வானம் உங்களால் திறக்கப்பட முடியும். ஒரு நாட்டின் மீதோ அல்லது ஏதோ ஒரு இனத்தவரின் மீதோ மூடப்பட்டிருக்கும் வானத்தை உங்களால் திறக்க முடியும். அப்படி அந்த வானம் உங்கள் ஜெபங்களால் திறக்கப்படும்போது கடவுள் அங்கே பிரத்தியேக வழியில் செயலாற்றி, அந்த மக்களை ஆண்டவர் பக்கமாகத் திரும்பச் செய்வார். நீங்கள் அதைச் செய்யக்கூடும். எனவே அதனை நீங்களும் செய்யுங்கள். பொதுவாக ஏனோதானோவென்ற விதத்தில் ஜெபிக்காதீர்கள். ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்காகவோ அல்லது மக்களுக்காகவோ உங்கள் ஜெபங்களைத் தத்தம் செய்யுங்கள். மூடப்பட்டிருக்கும் வானம் ஒரு நாள் கிழிக்கப்படும். அப்போது ஆசீர்வாத மழைபோல் பொழியும். அந்த நாளில் பத்து வருடங்களில் நடைபெறுவதைக் காட்டிலும் ஒரே நாளில் ஏராளமர்ன மக்கள் இரட்சிக்கப்படுவார்கள். அது ஆண்டவரின் விசேஷித்த நாளாயிருக்கும். அது உங்கள் மூலம் நிறைவேறுவதற்கு ஆண்டவர் விரும்புகின்றார். அதற்காக எதையாகிலும் செய்யுங்கள்.

## கடவுள் திறக்கும் வானம்

ஆண்டவர் தாம் விரும்பும் எந்த நேரத்திலும் வானத்தைத் திறந்து ஆசீர்வாதங்களைப் பொழிய அவரால் கூடும். ஆனால் தம்முடைய பிள்ளைகள் தம்மிடத்தில் கேட்கும்வரை அதனைச் செய்வதில்லை என்று அவர் தீர்மானித்திருக்கிறார். அவர்கள் ஜெபத்தில் வற்புறுத்துவார்களாயின் அவர் அதனைச் செய்கிறார். மற்ற நேரங்களிலும் சில சமயங்களில் அவர் அதனைச் செய்கிறார். மற்ற நேரங்களிலும் குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளிலும், தம்முடைய பிள்ளைகள் தம்மை மீண்டும் மீண்டுமாக இடையறாமல் தொடர்ந்து ஜெபத்தில் கேட்கும்வரை வானத்தைத் திறப்பதில்லை என்று அவர் நியமித்திருக்கிறார். உலகத்தின் ஆட்சியில், தம்முடைய பிள்ளைகள் ஜெபத்தின் வாயிலாக தம்மோடு இணைந்து பங்குபெற்றிருப்பதில் ஆண்டவர் மகிழ்ச்சியடைகிறார். ஏனெனில் அந்த காரியங்கள் நடைபெறுவதற்கு ஆண்டவர் தேர்ந்தெடுத்திருக்கும் வழி அதுதான். அதன்பின் தொடரும் நிகழ்ச்சியாக நாம் நம் பகுத்தறிவில் எழுப்புகின்ற 'ஏன், எதற்கு' என்ற கேள்விகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவருக்குச் கீழ்ப்படிவதே அந்த வழியாகும்.

அர்ப்பணமுள்ள விசுவாசி தம்மிடம் ஒருமுறையாவது ஜெபத்தில் கேட்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்ப்பார் என்றால் அப்படி வானம் திறக்கும்படியாக விண்ணப்பிப்பதே நமது கடமை. ஒரு அர்ப்பணமுள்ள விசுவாசி நாள்தோறும் இரவு பகலாக பத்து ஆண்டுகள் கேட்க வேண்டும் என்று கடவுள் விரும்புவாரானால் அதையும் செய்ய வேண்டும். அவ்விதமே தங்களையே முற்றிலுமாய் அர்ப்பணித்த நூறு விசுவாசிகள் இரவும் பகலுமாக பத்து ஆண்டுகள், வானம் திறக்கப்படுவதற்காக ஜெபிக்க வேண்டுமென்று அவர் விரும்புவாரானால் அதையும் செய்ய வேண்டும். அப்பொழுது அவர் செயல்படுவார். வானம் முழுமையாக திறக்கப்படுவதற்குமுன் செலுத்தப்பட வேண்டிய முழு கிரயமும் செலுத்தப்பட்டாக வேண்டும்.

இடையீட்டு மன்றாட்டு செய்கின்ற அதாவது, பரிந்து பேசுதலின் ஊழியத்தை செய்யும் விசுவாசி ஆண்டவர் இயேசு வானத்தைத் திறக்க வேண்டுமென்று வேண்டுதல் செய்ய வேண்டும். வானம் திறக்கப்படும் மட்டும் வேண்டிக்கொண்டே இருக்க வேண்டும். அது கூடிய விரைவில் திறக்கப்படும். கடவுளிடத்தில் வானம் திறக்கப்பட வேண்டுமென்று கேட்பது மட்டுமன்று அதற்கிருக்கின்ற எதிர்ப்புகளைக் கடந்து ஆண்டவர் வானத்தைத் திறக்க வேண்டியதிருக்கின்றது என்பதையும் அறிய வேண்டும். ஜெபிக்கும் மனிதர் இப்போராட்டச் சூழலில் தம்மையும் உடன் விசுவாசிகளையும் ஒப்புக் கொடுத்திட வேண்டும்.

## பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வானம் திறக்கப்படுதல்

உங்களுக்காகவோ, ஒரு குடும்பத்திற்காகவோ, நகரத்திற்காகவோ, தேசத்திற்காகவோ அல்லது கண்டத்திற்காகவோ ஆண்டவர் வைத்திருக்கும் ஆசீர்வாதத்தின் முழு அளவையும் பெற்றுக் கொள்வதற்கு வானத்தை முழுமையாக திறப்பதோ, அல்லது உங்கள் குடும்பத்திற்கென்றோ, நாட்டிற்கென்றோ, கண்டத்திற்கென்றோ ஆண்டவர் நியமித்திருக்கும் ஆசீர்வாதங்களில் ஒரு சிறு பகுதியைப் பெற்றுக் கொள்வதற்கேற்ப வானத்தின் ஒரு பகுதியைத் திறப்பதோ கூடுமான காரியமே.

"பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள், அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி வயல்வெளியில் அவரவர்க்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" (சகரியா 10:1) என்று ஆண்டவரின் வார்த்தை கூறுகிறது.

அந்த வார்த்தை தொடர்ந்து, "உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி: நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நீ உன் தானியத்தையும், உன் திராட்சை ரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்ற காலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருக ஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல்முளைக்கும்படி செய்வேன், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய்" (உபா 11:13-15) என்று கூறுகிறது.

மேலும், "சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களி கூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு, முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கெனவே வருஷிக்கப்பண்ணுவார்" (யோவேல் 2:23) என்று வேதம் உரைக்கிறது.

எனவே முன்மாரி, பின்மாரி என்ற இருவிதமான மழைகள் இருக்கின்றன. தங்கள் ஜெபங்களின் மூலமாக ஆண்டவரோடு அழுத்தமான உறவு கொண்டு, தற்போதைய ஆசீர்வாதங்களால் அவரைவிட்டுச் சிதறிப்போகாமல் இருக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் இன்றைக்குரிய ஆசீர்வாதங்களையும், வரவிருக்கும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வார்கள்.

தங்கள் ஜெபங்களின் மூலம் வானத்தை திறக்க ஆரம்பித்திருக்கும் போதோ அல்லது அவர்கள் ஆண்டவரிடம் மன்றாடி அவர் வானத்தை திறக்க ஆரம்பித்திருக்கும்போதோ ஆசீர்வாத மழையின் முதல் துளி விழத்தொடங்கும்போது பலர் தாங்கள் ஜெபம் செய்வதை நிறுத்திவிட்டு, ஆண்டவரிடத்திலிருந்து கண்களை விலக்கி ஆசீர்வாதத்தின்மேல் கண்களை

வைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அதன் விளைவாக, ஆண்டவர் தம் உள்ளத்தில் நியமித்திருந்ததை விடவும் குறைவான ஆசீர்வாதத்தையே பெற்றுக் கொள்வார்கள். இது மிகவும் வருத்தத்திற்குரிய காரியம்.

எழுப்புதலுக்குப்பின்னும் முழு மாற்றம் பெறாமலே தங்கிப்போகின்ற சில காரியங்கள் உண்டு. அவை: முந்தைய அமைப்புகள், திருச்சபை நிறுவனங்கள், பிரிவுகள், சமயச் சொல்லாட்சிமுறை முதலானவைகள். அவைகளை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது. இவையே தேவன் தம் முழு நோக்கத்தையும் நிறைவேற்றவிடாமல் தடுக்கும் பெரும் தடையாகவும் அமைகின்றன. இவ்விதத்தில் ஆண்டவரையும், மீட்பையும் இலக்காக வைத்துச் செல்லும் மக்கள் வெற்றி பெறாமல் இருக்க எதிராளியாக பிசாசு தலையிட்டு வெற்றி பெறுகின்றான். எழுப்புதலுக்குப்பின்பு புறம்பான சிற்சில விளைவுகளை நீடிக்கச் செய்து எழுப்புதல் தொடர்வதுபோல தோற்றமளித்து தேவனுடைய கிரியை நின்றுபோன பின்பு அது இருப்பதாக அவன் பொய்தோற்றமளிக்கவும் பண்ணுகிறான்.

அத்தகைய ஏமாற்றத்தை தவிர்ப்பதற்கு, நாம் ஆண்டவர் மீது ஆழ்ந்த அன்பு கொண்டவர்களாய் அவரில் நாம் திருப்தி அடைய வேண்டும். அவருடைய ஆசீர்வாதங்களின் முன்மாரிக்காக நாம் ஜெபிக்க வேண்டும். மேலும், இணையற்ற விதத்தில் செயலாற்றும்படி நாம் அவரை வற்புறுத்த வேண்டும். அவர் செயல்படத் தொடங்கும்வரை நாம் வரை வற்புறுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அவர் செயலாற்ற தொடங்கும்போது, துணிவோடும் விடாப்பிடியான உறுதியோடும் போராட்டம் நிறைந்த வானத்திற்குள் நுழைய வேண்டும். அப்போது அவர் தொடர்ந்து செயல்படுவார். அதனால், பின் நாட்களுக்காக அவர் நிறுத்தி வைத்திருக்கும் மிகப் பெரியதும், நிலையானதுமான ஆசீர்வாதங்கள் கீழே கொண்டு வரப்படும். நாம் அவரையே நோக்கிப் பார்த்து அவரோடு செல்ல வேண்டும். பெற்றுக் கொள்ளவிருக்கின்ற மிகச்சிறந்த ஆசீர்வாதங்களுக்காக ஜெபத்தில் ஆண்டவரை வற்புறுத்திக் கேட்கும்போது, ஏற்கனவே அவரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். அப்போது நாம் வேண்டுகின்ற ஆசீர்வாதம் வந்த சேரும்.

## விளைவுகள் பிறக்கும்வரை விடாது ஜெபியுங்கள்.

விடாமுயற்சியோடு தொடர்ந்து செயல்படுவதற்கான தேவையைக் குறித்து என் அன்புத்தந்தை ஒரு கதை சொன்னார்.

விரித்து வைக்கப்பட்டிருந்த கண்ணியில் ஒரு மிருகம் சிக்கிக் கொண்டது. தன்னை அந்தக் கண்ணியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக

இரவு முழுவதும் அது போராடியது. அதனால் கண்ணி இறுகப்பட்டிருந்த மிருகத்தின் கால் அறுபட்டு. அறுபட்டு அதனால் ஏற்பட்ட காயம் மிக ஆழமாகியிருந்தது. இருந்தாலும் அந்த மிருகம் அக்கொடிய வேதனையை அமைதியாகத் தாங்கிக் கொண்டது. அதிகாலை நான்கு மணியளவில், அது தன் நம்பிக்கையை இழந்து சத்தமாக அழ ஆரம்பித்தது. கண்ணியை விரித்து வைத்திருந்த வேடன், மிருகத்தின் அழுகைச் சத்தம் கேட்டு, தான் கண்ணியை விரித்து வைத்திருந்த இடத்திற்கு விரைந்து வந்து அந்த மிருகத்தை கொன்றான். அதனை வீட்டிற்குக் கொண்டு சென்று பார்த்தபோதுதான், அந்த மிருகத்தின் கால் அநேகமாக முழுவதுமாக அறுபட்டு, தசை நாரில் ஓரிரு நூல் இழை மட்டுமே எஞ்சியிருப்பதைக் கண்டான். தான் சற்று தாமதமாக எழுந்து சென்றிருந்தால், அந்த மிருகம் தப்பித்திருக்க, அதனுடைய அறுபட்ட காலின் சிறுதுண்டு மட்டுமே தனக்குக் கிடைத்திருக்கும் என்று அவன் எண்ணினான். இறுதி வரையிலும் தொடர்ந்து முயற்சி செய்யாததால் அந்த மிருகம் வேடனின் கையில் சிக்கி மடிந்தது. நம்பிக்கை இழந்து பொறுமை இழந்து கூச்சலிடத் தொடங்கியதால் அது மரணத்தைச் சந்திக்க நேர்ந்தது. அநேக விசுவாசிகள் இதைப் போன்றுதான் இருக்கிறார்கள். வெற்றியின் விளிம்பில் இருக்கும்போது அவர்கள் நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள்.

மணிக்கணக்காக, வாரக்கணக்காக, வருடக்கணக்காக ஜெபித்தும் வானம் திறக்கப்படுவதை நீங்கள் இன்னும் காணாமலிருக்கின்றீர்களா? உங்கள் நம்பிக்கையை இழந்து போகாதிருங்கள். நீங்கள் வெற்றியின் விளிம்பில் இருக்கலாம். இன்னும் கூட ஒரு மணி நேரத்தின் ஜெபமோ, ஒருவார அல்லது ஒருமாத அல்லது ஒரு வருடத்தின் ஜெபமோ எல்லா தடைகளையும் நீக்கி ஆசீர்வாதத்தைப் பொழியப் பண்ணலாம். அப்போது எல்லா காரியங்களும் முற்றிலுமாக மாறும். எனவே தொடர்ந்து பற்றிக் கொள்ளுங்கள். உங்கள் நம்பிக்கையை நீங்கள் ஒரு போதும் இழந்துவிட வேண்டாம்.

தேவையான ஆசீர்வாதங்கள் வரப்போகிறதற்குரிய அறிகுறி எதுவும் தொடுவானத்தில் இல்லாமல் இருக்கலாம். அதற்காக நீங்கள் சோர்ந்து போக வேண்டாம். மனிதர்களின் இருதயங்களில் ஆவிக்குரிய தொடுவானத்தின் மாறுதல்கள் மெதுவாக நிகழலாம். ஆண்டவர் அநேக நேரங்களில் உட்புறத்திலிருந்து செயல்படுகின்றார். உட்புறமாக அவரின் செயற்பாடுகள் முழுமை பெற்றதாக இருக்கலாம். வெளிப்புற ஓட்டில் சீக்கிரமே கீறல் ஏற்பட்டு விடலாம். எனவே ஆண்டவரை தொடர்ந்து ஜெபத்தில் வற்புறுத்துங்கள். அவரையே இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். ஜெபத்தில்

உங்களை முழுமையாக ஈடுபடுத்துங்கள். ஜெபிப்பதற்காக மற்ற மக்களை ஒன்று திரட்டுங்கள். கூடுதலாக முழு இரவு ஜெபத்தை ஒழுங்கு செய்து தொடர்ந்து ஜெபியுங்கள். விடாப்பிடியாக ஆண்டவரை வற்புறுத்திக் கேளுங்கள். விரைவில் வெற்றி உங்களுடையதாகும். அப்போது ஆண்டவரின் திருநாமம் மகிமைப்படும்.

வான மண்டலத்தின் பொல்லா ஆவிகளோடு போராடுகின்ற மற்றொரு ஜெப வீரனின் அனுபவத்திலிருந்து தைரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். "பின்பு எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜன பானம் பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான். ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்." பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன்முகம் தன் முழங்காலில் படக்குனிந்து, தன் ஊழியக்காரனை நோக்கி, நீ போய்ச் சமுத்திர முகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய் பார் என்றான். ஏழாந்தரம் இவன், இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனை சிறிய மேகம் எழும்புகிறது என்றான்; அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி, மழை உம்மைத் தடை செய்யாதபடிக்கு இரதத்தைப்பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான். அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்துப் பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான்" (1 இராஜா 18:41-45) என்று வேதம் கூறுகிறது.

நீங்கள் எலியாவைப் போலிருங்கள். கர்ப்ப வேதனையிலிருக்கின்ற பெண்ணின் நிலையை ஒத்த சூழ்நிலையில் எலியா தொடர்ந்து ஜெபித்ததுபோல நீங்களும் ஜெபத்தில் தொடர்ந்து தரித்திருங்கள். நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக உங்கள் ஜெபங்களுக்குத் தெளிவான பதில் கிடைக்காமலிருக்கலாம். அதற்காக சோர்ந்து போகாதிருங்கள். தொடர்ந்து ஜெபியுங்கள். இருள் நிறைந்த உங்கள் வாழ்வில் விடியற்காலம் தோன்றும் அப்போது எல்லா காரியங்களும் வெளிப்படையாகத் தெளிவாகும். ஒரு மனிதன் உள்ளங்கை அத்தனை சிறிய மேகம் விரைவில் தோன்றும். அப்போது மாமழை பொழியும் ஆண்டவரைத் துதியுங்கள்.

# 8. தேவனோடு தனிமையிலே

"சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளர்களையும் பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். பட்டணத்தார் எல்லாரும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள். பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்த பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை. அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார். சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்து போய், அவரைக் கண்ட போது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி; கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக் கொண்டும், பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தார்" (மாற்கு 1:32-39).

சாயங்கால நேரமாகி சூரியன் அஸ்தமித்தபோது, ஆண்டவர் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்த பிணியாளிகளைக் குணப்படுத்தி, ஏராளமான பிசாசுகளையும் துரத்திவிட்டார். தம்முடைய வெளிப்படையான வல்லமையோடும், மகிமையோடும் அவர் தூங்கச் சென்றிருக்க முடியும். "என்னிடத்தில் அக்கறை கொண்டுள்ளோரின் அக்கறையை நிலை நிறுத்துவதற்காக, நாளைய தினத்தில் அந்த மக்கள் கூட்டத்தில் எத்தனை பெரிய அற்புதங்கள் நிறைவேற்றப்பட போகின்றன என்பதை நான் பார்த்தாக வேண்டும். நான் அதிகாலையில் எழுந்து, மக்கள் கூட்டமுள்ள இடத்தில் இருந்ததாக வேண்டும். அப்படியானால்தான் அவர்கள் என் மீது கொண்டுள்ள அக்கறை குறைவுடாமலும், என்னுடைய மகிமையையும், கெளரவத்தையும் ஒருவனும் திருடிக் கொள்ளாமலும் இருக்க முடியும்" என்று அவரால் சொல்லியிருந்திருக்க முடியும்.

ஆனால் ஆண்டவர் அப்படிச் சொல்லவில்லை. மனிதர்களின் புகழ்ச்சிகளை அவர் அறியாதவராய் இருந்தார். தங்களின் தேவைகள் ஆண்டவர் மூலம் சந்திக்கப்பட வேண்டும் என்பதே அந்த மக்கள் கூட்டத்தின் ஆவலாயிருந்தது. அந்த வகையில் தாம் உபயோகப்படுத்தப்படுவதை ஆண்டவர் விரும்பினார். என்றாலும் ஆண்டவர் இயேசுவுக்கு அவருக்கும் அவர் தந்தைக்கும் இடையில் உள்ள உறவே எல்லாவற்றிக்கும் எல்லாமுமாய் தெரிந்தது.

## விலையுயர்ந்த ஐக்கியம்

இயேசு, அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார் என்று வாசிக்கிறோம். தம்முடைய பிதாவோடு விசேஷித்த ஜெப ஐக்கியத்தை விரும்பி, அதற்கான விலையை அவர் செலுத்தினார். தாம் புதிய உற்சாகத்தோடு இருக்கக் கூடிய காலை நேரத்தை அவர் தேர்ந்தெடுத்தார். இரவைக் கழித்த இடத்தில் தாம் தொடர்ந்து தங்கியிருந்திருப்பாரானால் அவருக்கும், பிதாவுக்கும் இடையிலிருந்த ஜெப உறவு துண்டிக்கப் பட்டிருக்கலாம். ஆகவே, தமக்கும், தம் உதவி நாடிவந்த மக்களுக்கும் இடையே சில இடைவெளியை அவர் வைத்துக் கொண்டார். ஆகையினால்தான், பிதாவோடு கூடிய அவருடைய ஜெப வேளை இடையூறில்லாத அமைதியான நிலையில் இருந்தது. இன்றிருக்கும் சாலை வசதிகள் அன்று கிடையாது. தனியானதோர் இடத்தில் ஓய்வு பெறுவதற்குச் சுகமான சூழ்நிலையும் கிடையாது.

இருள் விலகாத அதிகாலை நேரத்தை அவர் தேர்ந்தெடுத்தார். பெரும்பாலான மக்கள் தூக்கத்தை ரசனையோடு அனுபவிப்பது அந்த நேரம்தான். அதிகாலைத் தூக்கம்தான் மிகச்சிறந்த தூக்கம். அது அதிகாலை 4.00 மணியிலிருந்து 6.00 மணிக்கு இடையிலான தூக்கம். தூங்குவதற்கு மிகச்சிறந்த நேரமாகிய அந்த அதிகாலை நேரத்தில் தூக்கத்திலிருந்து தம்மைப் பிரித்தெடுத்துக் கொள்ள அவர் தீர்மானித்தார். தம் பிதாவோடு பேசுவதற்கேற்ற இனிமையான நேரமாக அதனைக் கண்டார்.

ஆம், ஆண்டவர் இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபம் பண்ணினார். பொழுது விடிவதற்கு முன்னால் ஜெபிப்பதற்கு போதுமான நேரம் கிடைக்கும் என்பதால் தான் அவர் அந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்தார். பொழுது விடிந்ததும் தம்மைத் தேடி மக்கள் வரத் தொடங்கிவிடுவார்கள் என்று அவருக்குத் தெரியும். மனிதர் தங்கள் தேவைகளோடு தம்மை தேடி, நாடி, ஓடி வருவதற்குமுன் தம் தந்தையோடுள்ள உறவைத் தேட வேண்டும் என்று அவர் ஜெபிக்கத் தொடங்கினார்.

அதனால், அதிகாலையில் இருட்டோடே எழுகின்ற ஒழுங்கு முறையை தம் வாழ்வின் அனுதின கடமையாக அவர் காத்துக் கொண்டார். அதுதான் தம்முடைய பிதாவோடும், மக்களோடும் தமக்கிருந்த உறவில் எல்லா வேறுபாடுகளையும் ஏற்படுத்தியது. அதுவே அவருடைய திருப்பணியில் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது.

## மனிதனுக்கு முன்பாக நிற்கும் கர்த்தர்

அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபிக்கச் சென்ற ஆண்டவர் இயேசு, எல்லா காரியங்களையும் சரியான விதத்தில் ஒழுங்குபடுத்திக் கொண்டார். தம் பிதாவினுடைய திருமுகத்தைப் பார்ப்பதற்குமுன் மனிதரின் முகத்தைப் பார்ப்பதில்லை என்று அவர் தீர்மானித்தார். மனிதனைப்பற்றி கடவுளிடத்தில் பேசுவதற்கு முன்பாக, கடவுளைப் பற்றி மனிதனிடத்தில் பேசுவதில்லை என்று அவர் தீர்மானித்தார். கடவுளைப்பற்றிய மனிதரின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளாமல், மனிதருக்கான கடவுளின் விருப்பத்தை மனிதனிடத்தில் திணிக்க அவர் தீர்மானித்தார். தாம் பிதாவைத் தேடிச் சென்று, அவருடைய விருப்பத்தை அறிந்து, பின்னர் மக்களிடையே வந்து பிதாவின் விருப்பத்தை வெளிப்படுத்த அவர் தீர்மானித்தார். ஒவ்வொரு நாளுக்குரிய திட்டத்தையும் பிதாவிடமிருந்து பெற்று, தம் பிதா விரும்புகின்ற விதத்தில் அனைத்தையும் செய்ய அவர் தீர்மானம் செய்தார்.

அந்த சுகமான அதிகாலை ஜெப வேளைகளில், ஆண்டவர் இயேசு தம் பிதாவுக்காக காத்திருந்து அவர் வார்த்தைகளைக் கேட்டார். பிதா பரலோகத்தில் செய்கின்றவைகள் எவைகளோ அவைகளை இயேசுவும் பூமியில் செய்வதற்காக, பரலோகத்தில் செய்யப்படுகின்ற பிதாவின் செயல்கள் ஆண்டவர் இயேசுவுக்குக் காட்டப்பட்டன.

"மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக்குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளை குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்" (யோவான் 5:19,20) என்று இயேசு மொழிந்த வார்த்தைகளை திருமறையில் காண்கின்றோம்.

அவர் நிகழ் காலத்தில் பேசிக்கொண்டிருந்ததை நீங்கள் கவனிக்கிறீர்களா? உதாரணமாக, "அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்"

"பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்" என்று இயேசு கூறினார். எனவே குமாரனானவர் பரலோகத்தில் இருந்தபோது என்ன பார்த்தார் என்பது காரியமல்ல; அதில் பிதாவுக்கும் அவருக்கும் இடையேயான அனுதின தொடர்பே அதில் முக்கியமாகும்.

ஆண்டவர் இயேசுவிற்கும் அவருடைய பிதாவிற்கும் இடையேயான தொடர்பினைக்குறித்து மகிழ்ச்சிமிக்க உணர்வோடு நான் சிந்திக்கின்றேன். அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் இடையறாத தொடர்பு கொண்டிருந்தனர். இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு நாளிலும் இயேசு பிற மனிதர்களிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தி தம் தந்தையின் மடியில் தம்மை முற்றிலுமாக ஒப்படைத்தார். இக்குறிப்பிட்ட நேரத்தில் மைந்தன் மற்றெல்லாரைப் பற்றியும் மறந்து அன்புத் தந்தையின் அரவணைப்பிற்குள் அமர்ந்திருந்தார். ஒவ்வொரு நாளின் ஆரம்பமும் அப்படித்தான் இருந்தது. புதுப்பிக்கப்பட்ட பெலத்தை தம் பிதாவிடமிருந்து அனுதினமும் அவர் பெற்றார். தமக்கு முன்னாலிருக்கும் தினத்தைக் குறித்த போதனைகளையும், புதிய உற்சாகத்தையும் பிதாவிடமிருந்து அவர் பெற்றார். அந்தந்த நாளுக்குரிய காரியங்களைத் திட்டமும் தெளிவுமாகப் பிதா அவருக்குப் போதித்தார்.

உதாரணமாக, " அவர்கள் பார்வையில்லாத ஒருவனை உன்னிடத்தில் கொண்டு வருவார்கள். அவனை பார்வையடைச் செய்வதற்கு நீ செய்ய வேண்டியது இது. செவிட்டு, ஊமை ஆவிகளால் பிடிக்கப்பட்டிருக்கும் ஒருவனை நீ எதிர்ப்படுவாய். இந்தந்தக் காரியங்களைச் செய்வதன்மூலம் செவிட்டுமை ஆவிகளிடமிருந்து அந்த மனிதனை நீ விடுவிப்பாய். பின்வரும் கேள்விகளை உன்னிடத்தில் கேட்பதன் மூலம் உன்னைச் சோதிக்க சிலர் வரபபோகிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கு நீ பதிலளிக்க வேண்டிய விதம் இதுதான். ..." என்று பிதாவானவர் ஒவ்வொன்றையும் இயேசுவுக்குத் திட்டமாக வெளிப்படுத்தியிருப்பார்.

அவ்வண்ணமே பிதாவினுடைய சித்தத்தைத் தெளிவாகவும், விளக்கமாகவும் அறிந்து கொண்டு, அதிகாரத்தோடும் நம்பிக்கையோடும் ஒவ்வொரு நாளுக்குள் அவர் பிரவேசித்தார். தாம் சந்திக்கப்போகின்ற காரியங்களைக் குறித்த அறிவோடும் ஒவ்வொரு காரியத்திலும் பிதாவின் சித்தம் என்ன என்பது பற்றிய பரீட்சயத்தோடும் ஒவ்வொரு நாளையும் அவர் எதிர் கொண்டார். அப்படியிருக்க, அவர் எப்படி தோற்றிருக்க முடியும்? எங்ஙனம் அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் தவறியிருக்கக் கூடும்? தேவைப்பட்ட துணிச்சலிலும் பலத்திலும் அவர் எப்படி குறைவுப்பட்டிருக்க முடியும்? அவர் முற்றிலும் வெற்றியுள்ள வாழ்க்கையினையே வாழ்ந்தார் அல்லவோ!

பிதாவோடு உரையாடுவதற்குத் தனிமையான சூழலே மிக முக்கியமானதென்று அவர் உணர்ந்தார். அதனால்தான், அமைதியுடன் கூடிய தனிமையான இடத்திற்குச் சென்று அங்கே ஜெபித்தார். அங்குதான் பிதாவுடனிருந்து அனைத்துக் காரியங்களையும் வகைப்படுத்தினார். அது அற்புதமான - ஆச்சரியமான நேரமாயிருந்தது. காலம் எத்தனை

விரைவாகப் போகிறது என்பதைக்கூட அவர் அறியாதபடி பல நேரங்களில் அவர் பிதாவுக்குள் தம்மை இழந்திருந்தார். உதாரணமாக, அவர்கள் இருவரும் சேர்ந்திருந்த தெய்வீகத் தனிமையில், பேதுரு அழைக்கப்படாமல் சென்று தலையிடுமட்டும், பிதாவோடுகூடிய ஐக்கியத்தில் ஆண்டவர் இயேசு தம்மையே மறந்திருந்தார். பிதாவோடு ஐக்கியப்பட்டிருப்பது அவருக்குப் பாரமானதாகவோ, சிரமமானதாகவோ இல்லை. ஒவ்வொரு மணித்துளி நேரமும் ஆசிபெற்ற நேரமாகவே அவருக்கு அமைந்தது. ஆனால், எல்லா திசைகளிலுமிருந்து மக்கள் தங்கள் தேவைகளுக்காக தம்மைத் தேடி வந்து நெருக்கும்போது பிதாவோடு தொடர்பு கொள்வதற்கு அதிகாலையில் இருட்டோடே எழுந்து அந்த அமைதியான வேளையில் பிதாவோடு தொடர்பு கொள்வதிலும் இருக்கின்ற வேறுபாட்டை அவர் அறிந்திருந்தார். ஆகவேதான், அதிகாலையில் இருட்டோடே எழுந்து பிதாவோடு ஐக்கியப்படும் அனுதின ஒழுங்குமுறையை, இந்த உலகத்தில் தம் ஊழிய காலம் முழுவதிலும் அவர் கடை பிடித்தார். ஆண்டவரின் அந்தப் பழக்கத்தை பேதுரு அறிவார். மக்கள் ஆண்டவரைத் தேடிவந்த போது அவர் அங்கே இல்லை. ஆண்டவர் நிச்சயமாக வழக்கம்போல் தனிமையான இடத்திற்குச் சென்றிருக்க வேண்டுமென்று பேதுரு அறிந்திருந்தபடியால் அங்கே சென்று பார்த்தார்; அங்கு ஆண்டவர் இருந்தார்.

## அவருடைய சீடர்களின் இன்றைய தேவை

ஆண்டவர் இயேசு பிதா மீது அன்புடையவராகவும், அவருடைய சத்தத்தைக் கேட்பதில் ஆவலுடையவராகவும் இருந்தார். எனவே ஒவ்வொரு நாளும் பிதாவைச் சந்தித்தார்; அவரில் மகிழ்ந்தார்; அவர் வார்த்தைகளைக் கேட்டார்; தாமும் அவரோடு பேசினார். ஒவ்வொரு நாளின் ஆரம்பச் செயலாக முதல் காரியமாக ஆண்டவர் இயேசு அதனைச் செய்தார். எந்த ஒரு நாள் காலையிலாவது அவர் பிதாவை சந்திக்காவிட்டால் எல்லாம் விழுந்துவிடுவதைப்போல எண்ணினார். அந்த விதமாகவே இன்றைய சீடர்களும், தங்கள் பரலோக பிதா மீதான விருப்பத்தையும், நெருங்கிய நட்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர். ஏனென்றால் குமாரனின் வாழ்வில் உண்மையானது சுவிகாரபுத்திரரின் வாழ்விலும் அவ்விதமே இருக்கும்.

சங்கீதக்காரன் இப்படிப் பாடுகின்றானே:

"தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உமது

வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ள நாள் மட்டும் உம்மைத் துதித்து உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன், (சங்கீதம் 63:1-4).

என்று தாவீதைப் போல் அழுது மன்றாடுகிறவர்கள் இன்று மிகக்குறைவு. எப்படியாயினும், அந்தச் சிலரின் அழுகை, தங்களின் இந்த அறிக்கையை உள்ளடக்கி இருக்கின்றன. "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக்கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? (சங்கீதம் 42:1,2).

இன்றைய சீடர்களின் அழுகையும் இதுவாகத்தான் இருக்க வேண்டும். தேவனைச் சார்ந்தவர்கள் என்று அழைக்கப்படும் தேவனுடைய சீடர்கள் மத்தியில் இயல்பாகக்காணப்பட வேண்டிய இவ்வித தேட்டமும், தேவசமூக நாட்டமும் இல்லாதிருக்கும்போது அவ்வித வாஞ்சை கொண்ட ஒருவரை அபூர்வமாக சந்திக்கும்போது அவரும் ஒரு அபூர்வப்பிரவியாகவே தென்படுகிறார்.

ஆண்டவராகிய இயேசு தம் பிதாவை அளவு கடந்து நேசித்திருக்க, அவருடைய சீடர்கள் ஏன் பிதாவின்மேல் குறைந்த அளவே அன்பு செலுத்துகின்றனர் என்ற கேள்வி கண்டிப்பாக எழும். மேலும், ஒவ்வொரு நாள் காலையிலும் பிதாவோடு ஜெபத்தில் ஐக்கியப்படுவதற்குரிய நேரத்தைக் கண்டுபிடித்து, பிதாவோடு ஐக்கியப்படுவதன் இன்றியமையாமையை உணர்ந்தவராய், அந்த ஒழுங்கு முறையை தம் வாழ்க்கை முழுவதிலும் ஆண்டவர் இயேசு கடைபிடித்திருக்கையில், இன்று அவருடைய சீடர்களில் பலர், ஜெபத்தைக் குறித்த அக்கறை கொண்டவர்களாகவோ, அதற்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவோ தெரியவில்லையே என்ற கேள்வியும் நிச்சயமாக எழும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இருதயத்தின் - ஆன்மாவின் - சரீரத்தின் உன்னத அன்பிற்குரிய ஒரே பொருளாக, தனித்த ஒருவராக பிதா மட்டுமே இருந்தபடியால், இன்றைய சீடர்களிலிருந்து அவர் பெரிதும் மாறுபட்டிருந்தார் என்ற உண்மையில் தான் மேற்காணும் கேள்விகளுக்குப் பதிலாக அமைந்துள்ளது. அவர் தம் பிதாவுடன் அன்புடையவராயிருந்தார் **ஆனால் இன்றைய சீடர்கள் தங்கள் மீதும், உலக காரியங்களோடும், உலகின் மனிதர்களோடும் அன்புள்ளவர்களாய் இருக்கிறார்கள்.**

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்;

ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவான் 2:15-17) என்ற திருமறையின் தெளிவான போதனையில் இன்றைய சீடர்கள் கவனம் செலுத்துவதில்லை.

உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் என்ற எச்சரிப்பை இன்று அநேக விசுவாசிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், உலகின்மீதும், உலகக் காரியங்கள் மீதும் அன்பு கொண்டு, உலக வழியிலேயே தொடர்ந்து சென்றதன் விளைவாக பிதாவின்மேல் தங்கள் இருதயத்தில் அன்பில்லாமல் போனார்கள். உலகின்மீதும், உலகப் பொருட்களின் மீதும் அவர்கள் கொண்ட இச்சை, மெதுவாக ஆனால் நிலையாக அவர்களுடைய இருதயத்தின் உணர்ச்சிகளை அழித்தபடியால், ஆண்டவர்மேல் ஊற்றப்படுவதற்கு அங்கு ஒன்றுமில்லாமல் போனது. உலகமும், உலகிலுள்ளவைகளும் விசுவாசிகளின் இருதயங்களை முற்றிலுமாக ஆக்கிரமித்துக் கொண்டு, அந்த இருதயங்களை ஆண்டவருக்கு நேரான பாதையிலிருந்து விலக்கின. அத்தகைய அன்பிழந்த இருதயங்கள், ஆண்டவரைத் தேடும் பொருட்டுத் தங்கள் தூக்க தேவதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, தனிமையான இடத்தைத் தேடிச் செல்லும் அளவிற்கு ஆண்டவர்மீது போதுமான அன்பு செலுத்துவதில்லை.

ஏராளமான விசுவாசிகளின் இருதயங்கள், பல மனிதர்களின் மீதான அன்பிற்கோ அல்லது ஒரு மனிதனிடத்தில் கொண்டுள்ள ஆழமான அன்பிற்கோ முற்றிலுமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய இருதயத்தை வேறொருவரும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கவில்லை. ஆதலால் அவர்தம் முழு இருதயத்தையும் தம் பிதாவிற்கென்றே கொடுத்திருந்தார். இன்றோ, பரிசுத்தவான்கள் பலவற்றின்மீது பற்றுடையவர்களாகவும், மனிதர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவும், நட்புடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் பல பிரிவுகளாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன. "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" என்று ஆண்டவரிடத்தில் சொல்லக்கூடியவர்கள் அவர்களில் மிகச்சிலரே (சங் 73:25).

எனக்கு அன்பானவர்களே, நீங்காணும் அறிக்கையை உண்மையான மனதுடன் உங்களால் சொல்ல முடியுமா?

☆ ஆண்டவரே, உம்மைத்தவிர பூலோகத்தில் எனக்கு வேறே விருப்பமில்லை.

☆ ஆண்டவரே, உம்மையல்லாமல் பூலோகத்தில் வேறு யார்மீதும் எனக்கு விருப்பமில்லை.

உங்களால் அப்படிச் சொல்லக்கூடுமானால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மனிதர்களிடமிருந்தும், மற்ற காரியங்களிலிருந்தும் உங்கள் இருதயம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. உங்கள் இருதயத்தை ஆண்டவரிடம் ஊற்றுங்கள். அப்போது அவர் மீதுள்ள அன்பில் நீங்கள் வளரக்கூடும். ஆண்டவரை அல்லாமல், அல்லது ஆண்டவரோடு கூட வேறு எந்தப் பொருளையாகிலும் அல்லது எவரையேனும் நீங்கள் விரும்புவீர்களாயின், ஆண்டவர் மீது வைக்கப்பட வேண்டிய விருப்பத்தை நீங்கள் குறைத்திருக்கிறீர்கள் என்று தான் பொருள். ஆண்டவர் மாத்திரமே உங்களுடைய ஒரே விருப்பமாய் இல்லையெனில், அவரில் பிரதான அன்பு செலுத்த உங்களால் கூடாது. அவர்மீது கொண்டுள்ள அன்பிலும், விருப்பத்திலும் முன்னேறிச் செல்ல முனைவீர்களாயின், ஆண்டவரின் சிங்காசனமாகிய உங்கள் இருதயத்தில் இருந்து மற்ற மனிதர்களையும், மற்றெல்லா காரியங்களையும் நீங்கள் அகற்ற வேண்டும்.




ஆண்டவர் மீதான அன்பில் சிறிதும் பிறழாமல் வளர்ந்து வருகின்ற இருதயம், மனிதர்களோடும் உலக காரியங்களோடும் கூடிய அனுபோகத்தை நீக்குவதில் வளர்ந்து வருகின்றது. மனிதர்களாலும், உலக காரியங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டதாய் இருந்த இடம் ஆண்டவருக்கென்று முற்றிலுமாகக் கொடுக்கப்படும்போது, ஆண்டவர் மீதான அன்பிலும், விருப்பத்திலும் இருதயம் வளர்கின்றது.

ஆண்டவரின் பிள்ளைகள் அறிந்துக்கொள்ள வேண்டிய, இருதயத்திற்கான அடிப்படை விதி ஒன்று உண்டு. எல்லைக்குட்பட்ட ஓரளவு இடத்தினை இருதயம் கொண்டிருக்கின்றது. அந்த இடம் நிரப்பப்பட்டாக வேண்டும். இயல்பான ஓர் இருதயம், ஆண்டவரைத் தவிர மற்ற அனைத்துக் காரியங்களாலும் நிரப்பப்பட்டிருக்கின்றது. மாற்றம் ஏற்படும்போது, அந்த இருதயத்திற்குள் ஆண்டவர் புகுந்து இருதயத்தை முற்றிலுமாக ஆட்கொள்ள ஆரம்பிக்கிறார். அப்போது அங்கிருக்கின்ற பிற ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. எங்கே பிற காரியங்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றதோ, அங்கிருந்து ஆண்டவர் நிச்சயமாக விலகிப் போய்விடுவார். தன்னை ஆக்கிரமித்துக் கொள்வதெதுவோ, அதனால் இருதயம் சந்தோஷப்பட்டு அதனை நெருங்கி ஆகர்ஷித்துக் கொள்கிறது. அது ஆண்டவரின் ஆக்கிரமிப்பாக இருக்குமானால் அந்த மனிதர் ஆண்டவரின் மீதான விருப்பத்தில் தீவிரமாவார். ஆண்டவரைத் தவிர மற்ற காரியங்களால் இருதயம் நிரப்பப்பட்டிருக்குமெனில், அந்தக் காரியங்கள் தங்களுக்கு நேராய் அந்த மனிதரை இழுக்கும். இருதயத்திற்குள் பிற காரியங்கள் நுழைவதற்கு அனுமதித்துக் கொண்டு, ஆண்டவருக்குள் வளர்வதாய் ஒருவர் நம்பினால், அது தம்மைத்தாமே அவர் வஞ்சித்துக் கொள்வதாகும்.

## இதற்கும் ஜெபத்திற்கும் என்ன தொடர்பு?

இந்தக் கேள்வியை சிலர் எழுப்பலாம். ஜெபம் என்பது ஆண்டவரோடு கொள்கின்ற ஐக்கியம் அல்லது நெருக்கம் என்பதாகும். அது ஆண்டவரோடு கூடிய ஆழமான உறவு. அது கேட்பதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் மேலானது. மனிதர்களோடும், உலகிலுள்ள மற்ற பொருட்களோடும் ஒன்று கலந்திருக்கின்ற மனிதனின் இருதயம், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அப்பால் நிச்சயமாக ஜெபிக்க முடியாது. ஏனெனில், ஜெபிப்பதற்கு அவனிடம் இருதயம் கிடையாது. ஆண்டவரை உடையதாய் இருக்கின்ற மனிதனின் இருதயம் ஆண்டவரோடு கூடிய தொடர்பில் பெருகி வளரும். அந்த மனிதரால் ஆழமாக ஜெபிக்க முடியும். ஜெபம் என்பது ஆண்டவரோடு உருகிக் கலத்தலாகும்.

நாம் பார்த்தபடி, ஆண்டவர் இயேசு தம் பிதாவை அதிகமாக விரும்பினார். எனவே, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இருட்டோடே எழுந்து, ஜெபத்தில் தம் பிதாவை சந்திக்கச் சென்றார். ஆயினும் அவர் மக்களை நேசித்தார்; மக்களுக்குச் சேவை புரிந்தார். பிதாவே அவருடைய ஒரே விருப்பம்; அந்த விருப்பமே அவருடைய வாழ்க்கையை வழி நடத்தியது என்பதே அதிலிருக்கும் உண்மையாகும். இயேசுவின் உள்ளத்தில் வேறெதுவும் இருந்திருக்குமாயின், அவர் எதைச் செய்தாரோ அதை அவரால் செய்திருக்க முடியாது.

இன்றைய நாட்களில், கடவுளின் பிள்ளைகள் உலகத்தோடு நெருங்கிய நட்பும், பற்றும் கொண்டுள்ளனர். அவர்கள் உலகோடும், உலகிலுள்ள மக்களோடும் ஆழமான ஐக்கியமும் நெருக்கமான தொடர்பும் உடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் லௌகீகத்தில் விருப்பம் கொண்டுள்ளதால், தெய்வீக விதியின்படி பிதாவினுடைய அன்பு அவர்களுக்குள் இருப்பதில்லை. அப்படியிருக்கையில், அவர்கள் ஆண்டவருடைய பிரசன்னத்தில் மிகச் சிறிதளவு மாத்திரமே விருப்பம் வைத்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை! மனிதர்களோடு மணிக்கணக்காக அவர்களால் பேசிக்கொண்டே இருக்க முடியும்போது, ஆண்டவருடைய பிரசன்னத்தில் சில நிமிடங்களுக்கு மேல் என்ன பேசுவதென்று தெரியாமல் அவர்கள் திணறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இருபது நிமிடங்கள் ஜெபிப்பது சிலருக்கு இரண்டுமணி நேரம் ஜெபிப்பதுபோல் தோன்றுவதிலும் வியப்பொன்றும் இல்லை. உண்மையில், ஜெபம் ஏராளமான இருதயங்களின் விருப்பமல்ல என்பது ஆச்சரியத்துக்குரியதும் அல்ல. தாங்கள் விரும்பாத ஒருவரோடும் தனிமையில் நேரத்தை செலவிட ஜெபத்திற்காக செல்லும் கிரயத்தை செலுத்துபவர் இல்லை என்பதில் வியப்பில்லை.

ஒரு மனிதன் எந்த அளவிற்கு தனிமையில் ஜெபிக்க விரும்புகிறானோ, அதுதான் அவன் ஆண்டவர் மீது தான் கொண்டிருக்கும் அன்பிற்கும், உறவிற்கும் உரிய அடையாளமாகும்.

ஜெப வாழ்க்கையில் நீங்கள் வளர்வீர்களாயின் உங்கள் இருதயத்தைப் பற்றிப் பிடித்திருக்கின்ற மனிதர்கள் மற்றும் அனைத்துக் காரியங்களில் இருந்தும் உங்களை நீங்கள் பிரித்தெடுத்துக் கொண்டு, மகிமையின் ராஜாவை ஆட்சி செலுத்தவிட வேண்டும்.

மனிதர்களையும், பொருட்களையும் விக்கிரகங்களாக இருதயத்தில் வைத்துக் கொண்டு, பின்னும் ஜெபத்திட்டத்தை நிர்மாணித்து, ஜெபக் குறிப்புக்களைத் திரட்டிக் கொண்டு எங்கோ சென்று தான் மட்டுமே பேசிக் கொண்டிருப்பதை "ஜெபம்" என்று அழைக்கின்ற மக்களின் அபாயகரமான செயல்முறையைக் குறித்து நான் கவலைப்படுகின்றேன். சிலர் தாங்கள் ஜெபத்தில் வளராமலிருக்கையில், வளர்ந்து விட்டதாய் கருதுவதை எண்ணி நான் அச்சமுறுகின்றேன். ஏனெனில், மாமிச இச்சைகளிலிருந்தும், உலக ஆசைகளிலிருந்தும், வாழ்வின் பெருமைகளில் இருந்தும் தன்னைப் பிரித்தெடுத்துக் கொள்ளாத எந்த ஒருவனும் ஜெபத்தில் வளர முடியாது. உலகின் மீதும், உலகிலுள்ளவைகளின் மீதும் கொண்டுள்ள அன்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாத எந்த ஒருவனும் ஜெபத்தில் முன்னேறிச் செல்ல முடியாது. உலகின் காரியங்கள் அனைத்தையும் இருதயத்திலிருந்து வெளியேற்றிவிட்டு ஜெபிக்கின்ற

ஒருவன், தனது வெறுமையான இருதயத்திற்குள் ஆண்டவர் முறையாக வந்து முழுவதையும், ஆட்கொள்வதைக் காண்பான். இவ்வகையில் அங்கே ஆண்டவர் மீதான அன்பும், விருப்பமும் பெருகும்; அத்தோடு ஜெபத்தின் மீதான விருப்பமும், தனிமையில் ஆண்டவரோடு இருப்பதில் உள்ள மகிழ்ச்சியும் பெருகும்.

இப்பொழுது சற்று நின்று, உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் பொருட்கள் அல்லது ஆட்களை பட்டியலிட முடியுமா?

அவைகளை முறையாகக் கீழே எழுதுங்கள்.

1. __________ 7. __________

2. __________ 8. __________

3. __________ 9. __________

4. __________ 10. __________

5. __________ 11. __________

6. __________ 12. __________

பின் இயேசுவை உங்கள் இதய சிம்மாசனத்திலேற்றுங்கள். அதன் பின் உங்களுக்குள்ளிருக்கின்ற ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு பொருளும் விலகி போகும்படி இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினால் கட்டளையிடுங்கள். அவை அனைத்தும் உங்களுக்குள்ளிலிருந்து வெளியேறும்படி கட்டாயப்படுத்துங்கள். அனைத்தும் வெளியேற்றப்பட்ட அந்தப் புதிய இருதயத்திற்குள் ஆண்டவர் வந்து நிரப்பும்படி அவரிடம் மன்றாடுங்கள். அதன்பின் தொடர்ந்து ஜெபியுங்கள்; நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

இந்தச் செய்முறையை திரும்பத் திரும்பச் செய்யப்படுவது தேவைப்படலாம். ஏனெனில், மேலும் உங்கள் இருதயத்தில் இடம்பிடித்துக்கொண்டுள்ள சில காரியங்கள் அகற்றப்பட அவைகளை உங்களுக்கு ஆண்டவர் காண்பிக்கலாம். நீங்களே அவைகளைக் காணலாம்;

ஏனெனில், நீங்கள் வெளியேறும்படிச் சொல்லியிருந்தும் சில காரியங்கள் உங்கள் இருதயத்தைவிட்டு விலகியிருக்காது. அதற்குக் காரணம், அவைகள் வெளியேறும்படி உங்கள் உதடுகளால் நீங்கள் சொல்லியிருந்தாலும், உங்கள் இருதயத்திலிருந்து அவைகளை நீங்கள் வெளியேற்றியிருக்க மாட்டீர்கள். அவைகளையெல்லாம் பட்டியலிட்டு ஆண்டவரிடத்தில் வையுங்கள்

1. ______________________ 4. ______________________

2. ______________________ 5. ______________________

3. ______________________ 6. ______________________

அவையனைத்தும் தேவ ஒத்தாசையைக்கொண்டு உங்கள் இருதயத்திலிருந்து வெளியேறினால் மட்டுமே, ஆண்டவர் உங்களுக்குள் வந்து பூரணமாக உங்களை ஆளுகை செய்வார்.

அப்படி ஆண்டவர் உங்களுக்குள் முழுமையாக நிறைந்து ஆளுகை செய்ய அவருக்கு அழைப்புக் கொடுங்கள் இடைவிடாத ஜெபத்தின் மூலம், புதிதாக்கப்பட்ட உங்கள் இருதயத்தை ஆண்டவருக்கென்று நிர்மாணியுங்கள். அதனால், உங்கள் இருதயம் உண்மையாகவே ஆண்டவருக்காகப் பண்படுத்தப்படும்.

## இயல்பின் சக்தி

நாம் சுயமாக சிந்திக்கக் கூடியவர்கள். ஆதலால் இயல்பாக நம்மில் நிகழக்கூடிய செயல்களால், நாம் அடக்கியாளப்படுவதில்லை என்ற கருத்தை வலியுறுத்தவே நாம் அனைவரும் விரும்புகின்றோம். ஆனால் உண்மையில் பிரச்சினை அது அல்ல. மனிதன் வழக்கமான அல்லது இயல்பான செயல்முறைகளுக்கு உட்பட்டவன். அவன் சாப்பிடுகிறான்; வேலை செய்கிறான்; உறங்குகிறான். மேலும் பலப்பல கடமைகளை காரியக்கிரமமாகச் செய்கின்றான். உடம்புகூட வழக்கமான இயல்புகளுக்கு உட்பட்டு இயங்குகின்றது. நுரையீரலின் இயல்பான இயக்கத்தால் சுவாசம் நிகழ்கின்றது; காரியக்கிரமப்படியே இருதயம் இயங்குகின்றது. இந்த செயல்முறை இயக்கங்களில் ஏதாவது ஒன்று நிறுத்தப்படுமானால் அது உடனடியாக பேராபத்தை மனிதனுக்கு ஏற்படுத்தும். மனிதனின் வாழ்க்கை சரியான விதத்தில் இயங்குவதோ அல்லது தவறான விதத்தில் இயங்குவதோ மட்டுமே அதனைத் தீர்மானிக்கின்ற காரியமாகும். ஞானமுள்ள மனிதன் தன் வாழ்க்கையில் சரியான இயல்புகளை நிர்மானித்து அவைகளைக் காத்துக்கொள்கின்றான்.

ஆண்டவர் இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து, தனிமையான இடத்திற்குச் சென்று ஜெபிப்பதை தம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்திய அனுபவம்தான், அனைத்துச் செயல்முறைகளிலும் மிகச்சிறந்த செயல்முறையாகும். நீங்களும் அதிகாலையில் நான்கு மணிக்கோ, அதற்கு முன்னதாகவோ எழுந்து, தனிமையில் ஆண்டவரோடு ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுவீர்களாயின், கேள்விக்கே இடமில்லாமல் ஆண்டவரின் முன்னிலையில் நீங்கள் உயர்வைப் பெறுவீர்கள். அந்தச் செயல்முறையினை நீங்கள் தொடர்ந்து அனுதின வாழ்வில் நடைமுறைப்படுத்தும்போது ஆண்டவர் நிச்சயமாகவே உங்களை உயர்த்துவார்

உங்கள் வயதோ, அல்லது வாழ்வின் பின்னணியோ ஒரு பொருட்டல்ல. வெற்றி பெறுவதற்கான மிகச்சிறந்த சூத்திரங்களில் ஒன்றை நான் சொல்கின்றேன். ஆண்டவருடைய வாழ்வில் அது வெற்றிக்கு வழி வகுத்தது. அவ்வண்ணமே உங்களுடைய வாழ்விலும் அது செயல்படும். எப்படியாயினும்,'' நேர்மையிலும் உண்மையிலும் அந்தச் சூத்திரத்தை நீங்கள் பின்பற்றவும், அதற்கான எந்தக் கிரயத்தையும் செலுத்தவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் இயேசுவைப்போல் கடவுளை மனிதனுக்கு முன் நிறுத்துவீர்கள். நீங்கள் முழு அன்பையும் கடவுள் மீதே செலுத்துவீர்கள்; அதுவே வெற்றிக்கு வழி. ஆமென்!

# 9. தடுமாற்றமின்மை

"பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனிதன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக்கொண்டான். அவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று. அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல் போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். அப்படியிருந்தும் அவருடைய கீர்த்தி அதிகமாய் பரவிற்று. திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும் அவராலே தங்கள் பிணிகள் நீங்கி சவுக்கியமடைவதற்கும் கூடி வந்தார்கள். அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்" (லூக்கா 5:12-16).

ஆண்டவர் அதிகாலையில் எழுந்து ஜெபித்தார் என்று இதற்கு முந்தின அத்தியாயத்தில் பார்த்தோம். அவரைத் தேடிவந்த மக்கள் கூட்டம் அவரால் குணப்படுத்தப்பட்ட நேரத்திலும்கூட அவர் ஜெபிக்க தனியே சென்றார். மிகப்பெரிய அற்புதமொன்றை அவர் நிகழ்த்தியதை மேற்காணும் திருமறை வசனங்கள் வாயிலாக அறிந்தோம். குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனிதனை அவர் சுகப்படுத்தினார். ஆயினும் அதன்மூலம் தமக்குப் புகழைத் தேடிக்கொள்ள அவர் விரும்பவில்லை. குஷ்டரோகம் நீங்கி அந்த மனிதன் சுகம் பெற்றதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கக்கூடிய பொறுப்பில் இருந்த ஆசாரியனைத் தவிர வேறு ஒருவருக்கும் அதனை அறிவிக்க வேண்டாம் என்று ஆண்டவர் சொல்லி அனுப்பினார். அந்த அற்புதத்தை யார் செய்தார் என்பதைக்கூட ஆசாரியனிடம் சொல்லும்படி அவர் சொல்லவில்லை. தான் முன்பு குஷ்டரோகம் நிறைந்தவனாய் இருந்ததையும் தற்போது குஷ்டரோகம் நீங்கி சுத்தமானதையும் மட்டுமே சொல்லுமாறு அந்த மனிதனிடம் ஆண்டவர் கூறினார்.

ஆண்டவரின் உயர்வினைக் குறித்து நான் வியப்படைகின்றேன். குறிப்பிடத்தக்க ஓர் அற்புதத்தை அங்கே அவர் நிகழ்த்தியிருக்கின்றார். அவருக்கு முன்பாகவும், அநேக மக்களுக்கு முன்னிலையிலும் அந்த அற்புதத்திற்கான சாட்சி இருந்தது. ஆண்டவர் தற்புகழ்ச்சியை நாடியிருந்திருப்பாரானால், தான்செய்த அந்த அற்புதத்தை ஆசாரியனிடம் தெரிவிக்கும்படி அந்த மனிதனிடம் சொல்லியிருந்திருக்கக்கூடும். எனினும்,

சுய விளம்பரத்தை அவர் விரும்பாததால் அத்தகைய ஆலோசனை எதையும் அந்த மனிதனிடம் ஆண்டவர் சொல்லவில்லை. வெளியரங்கமான அற்புதங்களினால் ஏற்படும் புகழை அவர் விரும்பவில்லை. மாறாக உள்ளார்ந்த அற்புதத்தைப் பெற்ற கூட்டத்தினரையே அவர் விரும்பினார். அந்த வெளிப்பாடு தாம் பிதாவினால் அனுப்பப்பட்ட கிறிஸ்து என்று தம்மை வெளிப்படுத்தவே அவர் விரும்பினார்.

இன்றைய நாட்களில் ஆண்டவர் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் விளம்பரப்படுத்தப்பட்டு, அதன்மூலம் ஆன்மீக வாதிகள் ஆதாயம் தேடுகின்றனர். உண்மையில் அற்புதத்தைப்பெற்ற மனிதனிடம், "இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்" என்று சொல்லக்கூடிய ஆன்மீக வாதிகள் இன்று மிகச்சிலரே. இதனால்தான் நம்முடைய காலகட்டத்தில் ஆண்டவர் அன்று செய்தது போன்று அரும்பெரும் செயல்களை பேரளவில் இன்று செய்ய முடியவில்லை.

அற்புதங்கள் தேவைப்படுகின்ற மக்கள் மிகச்சிலர் என்பதன்று அது. ஆனால், ஆண்டவரின் வல்லமையை பிரத்யேகமாகக் கடவுளின் மகிமைக்காகப் பயன்படுத்தக் கூடியவர்கள் மிகச் கொஞ்சம் என்பதுதான் பிரச்சினை. பலர் தங்களின் சுய நலனுக்காகவே ஆண்டவரின் வல்லமையை உபயோகப்படுத்துகிறார்கள். தற்புகழ்ச்சியின் மீது விருப்பம் கொண்டுள்ள எத்தனையோ ஆன்மீகவாதிகள் தங்கள் சுயநலனையே மனதில்கொண்டு, "ஆண்டவரே, இன்று இதைச்செய்யும்; ஆண்டவரே, என் மூலம் இதைத் தொடங்கும்", என்று வேண்டுகின்றனர்.

தம் பிதாவின்மீது மட்டுமே ஆண்டவர் இயேசு கருத்தைச் செலுத்தினார். மிகப்பெரிய கவர்ச்சி - மிகப்பெரிய செயல்திறன் ஆகியவற்றின் மையமாக பிதா இருந்தார். ஆனால் இயேசுவைப் பொறுத்தவரையில் அவருக்கு இருந்த ஒரே ஒரு கவர்ச்சி அவருடைய பிதா மட்டுமே. இயேசு சுகப்படுத்தினார், அடிமைப்பட்டவர்களை விடுவித்தார், போதித்தார். மேலும் எத்தனையோ அற்புதங்களைச் செய்தார். ஆயினும், தம் பிதாவோடு தாம் இருக்க வேண்டும் என்பதே அவருடைய இருதயத்தில் எப்போதும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த உணர்ச்சியாகும். பொழுது விடிவதற்கு வெகு முன்னதாகவே எழுந்து, தம் பிதாவோடு அதிகாலை நேரத்தை செலவிட்ட பின்னரே, குஷ்டரோகம் நிறைந்த அந்த மனிதனுக்கு ஊழியம் செய்தார். தம் பிதாவின்மீது அத்தனை அதிகமான விருப்பத்தைத் தம் இருதயத்தில் அவர் கொண்டிருந்தார். அதனால் தான் சில சூழ்நிலைகளில், பிதாவினிடம் ஜெபிப்பதற்காக வனாந்தரமான இடத்திற்குச் சென்றார்.

## சோர்பின் சூழலிலும் ஜெபித்தல்

குஷ்டரோகம் நிறைந்த அந்த மனிதனைச் சுகப்படுத்திய நேரத்தில்

விரும்பிய மனிதர்களை விட்டு அவர் விலகிச் சென்றார். தம் பிதாவினுடைய சமூகத்திலிருந்து அவருடைய வார்த்தைகளைக் கேட்க விரும்பியதால், தம்மிடத்தில் பேச விரும்பிய மனிதர்களை விட்டு அவர் பிரிந்து சென்றார்.

நோய்களின் மீது தமக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்த பிதாவிற்குப் போற்றுதலையும், புகழ்ச்சியையும் தாம் செலுத்தக் கூடிய அந்த பிதாவினுடைய சந்நிதானத்திற்காக, மக்கள் தமக்கு கொடுக்க விரும்பிய மரியாதைகளுக்கும் புகழ்ச்சிக்கும் அவர் முகம் கொடுக்கவில்லை.

அவர் தனிமையான இடத்திற்குச் சென்று ஜெபித்தார். தம்முடைய கவனம் சிதறடிக்கப்படாத தனிமையான இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே சென்று தம் பிதாவினிடத்தில் தம்முடைய இருதயத்தை ஊற்றினார். ஆண்டவரின் வார்த்தையும், அற்புதமும் தங்களுக்குத் தேவையானவை களாய் விரும்பிக் கூடிவந்த மக்கள் கூட்டத்திலிருந்து விலகிச் சென்ற இயேசுவினுடைய ஜெபத்தின் சாரம் என்னவாக இருந்திருக்கக்கூடும் என்று சிலருடைய இருதயங்களில் கேள்வி எழும்பலாம்.

பிதாவின் வல்லமையைத் தம்மூலம் அற்புதமாகப் பாய்ந்தோட அனுமதித்தமைக்காக பிதாவிற்கு நன்றி செலுத்தியதே அவருடைய ஜெபத்தின் முதல் காரியமாக இருந்தது என்று நான் கருதுகின்றேன். எல்லா வல்லமையும் தம் பிதாவைச் சார்ந்தது என்பதை அவர் முற்றிலுமாக அறிந்திருந்தார். பிதா தம் வல்லமையை ஆண்டவர் இயேசுவின் மூலமாகப் பாய்ந்தோடச் செய்வதால் அவரால் அற்புதங்களைச் செய்ய முடிகிறது. அதனால் அவர் பிதாவிற்க நிச்சயமாக நன்றி செலுத்தியிருக்க வேண்டும். அவர் மிகவும் நன்றியுடையவராய் இருந்தார். எனவே, அவரால் குணமாக்கப்பட்ட பத்து குஷ்டரோகிகளில் ஒருவன் மட்டும் அவருக்கு நன்றி செலுத்தத் திரும்பி வந்தபோது அவர் சஞ்சலப்பட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

**உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?**

☆ நன்றி செலுத்துவதற்காக உடனடியாக நீங்கள் சென்றிருக்கிறீர்களா? கடவுளுக்குச் செலுத்த வேண்டிய நன்றியை அவருக்கு மட்டுமே தெரிவிக்க வேண்டுமென்று நீங்கள் முடிவெடுத்ததுண்டா?

☆ மனிதனின் காதுகளுக்கு எட்டாமல் கடவுளுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும் என்று கருதிய நல்ல செய்திகள் ஏதேனும் உண்டா?

☆ நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காய் உங்கள் உள்ளத்தில் முதலில் வெளிப்படுவது நன்றியுணர்வுதானா?

ம்- நீங்கள் நன்றி செலுத்த யாருக்குக் கடன் பட்டிருக்கின்றீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

சுகத்தை அருளிய கிறிஸ்துவை மனிதனுக்கு வெளிப்படுத்துமாறு பிதாவிடம் கேட்டுக் கொண்டதே அவருடைய ஜெபத்தின் இரண்டாவது காரியம் என்று நான் கருதுகிறேன். சுகம்பெற்ற மனிதன் நிச்சயமாக சுகமாக்கியவரை சந்தித்திருப்பான். ஆனால் அவன் இரட்சகரை சந்தித்திருப்பானா? எனவே அம்மனிதனை இரட்சிக்கும்படி பிதாவிடம் ஆண்டவர் பரிந்துரைத்திருக்க வேண்டும்.

தம்மை சோதனையிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்ள பிதாவிடம் மன்றாடியதே அவருடைய ஜெபத்தின் மூன்றாம் காரியம் என்று நான் கருதுகின்றேன். அவர் மிகப்பெரிய காரியங்களைச் செய்பவராகவும் வெற்றி வீரராகவும் வாழ்ந்தார். அதிகமதிகமான வெற்றிகளுடன் வாழ்கின்ற அனைவருக்கும் மிதமிஞ்சிய சோதனைகளும் வரும். உச்சக்கட்ட வெற்றியின் போது தான் அத்தகைய சோதனைகள் வருவதுண்டு.

சிலுவையின் பாதையைக் கைவிட்டு அதிலிருந்து தம்மை விலகச் செய்வதற்காகச் சாத்தானிடமிருந்து வரும் சோதனைகளை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே, "பிதாவே, உம்முடைய அன்பால் என்னை அரவணைத்துக்கொள்ளும். தீய சக்தியிடமிருந்து என்னைக் காத்துக்கொள்ளும். சிங்காசனத்தை அடைவதற்குரிய தவிர்க்க முடியாத வழியாகிய சிலுவையை விட்டு விலகாமல் அதனையே என் கண்கள் நோக்கிப் பார்க்கும்படி நீர் என்னைக் காப்பாற்றும்" என்று ஆண்டவர் ஜெபித்திருக்கலாம். ஆண்டவர் இயேசு பிதாவோடு நெருங்கியிருந்தபடியால், இந்த உலகத்தின் அதிபதியாகிய பிசாசானவனுக்கு அவரிடத்தில் ஒன்றுமில்லாமற்போன்து. அதுபோலவே உங்களையும் என்னையும் சாத்தானின் தந்திர வலையிலிருந்து ஆண்டவர் விலக்கிக் காப்பாராக!

இறுதியாக, நிகழ்ந்தவைகளைக் குறித்து பிதாவினிடத்தில் கணக்கு ஒப்புவித்ததே அவருடைய ஜெபத்தின் நான்காவது காரியம் என்பது என் கருத்து. ஆண்டவர் இயேசு அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தார்.

## கலகக்காரர்கள்?

ஒரு காரியம் என்னுடைய மனதில் தெளிவுபடத் தொடங்கியதுபோல் தெரிகிறது. அது ஒரு சராசரி விசுவாசி ஜெபத்தின் மதிப்பை அறிந்திருக்க வேண்டிய அளவு அறிவதில்லை என்பதுதான் அந்தக் காரியம். ஆண்டவர் இயேசு அதிகமாக ஜெபித்தார். அவரால் நேரத்தை வீணடிக்க முடியவில்லை. ஜெபம் அவருடைய வாழ்வின் மையமாகவும் ஆற்றல் நிறைந்ததாகவும் எந்த விசுவாசியும் அறிந்திருக்கும் தெளிவைக் காட்டிலும் செயலூக்கம் கொண்டதாகவும் அமைந்தது.

எல்லா காரியங்களிலும் பிதாவினுடைய சித்தத்தைக் குறித்து சரியாக அறிந்துகொள்வதற்கு அவர் அதிகமாக ஜெபிக்க வேண்டியதிருந்தது. மிகக் கொஞ்சநேரம் மட்டுமே ஜெபித்து ஆண்டவரையும் அவருடைய சித்தத்தையும் மிகக்கொஞ்சமாக அறிந்துகொள்கிறவர்கள் தங்களுடைய சொந்த காரியங்களை, தங்களுடைய சொந்த வழியில், தங்களுக்கு விருப்பமான நேரத்தில் செய்கின்ற கலகக்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

யார் எப்படி? எப்போது? யாரோடு? என்ன நோக்கத்திற்காக? அதைச் செய்யவேண்டும் என்று ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவர் அக்கறை கொண்டுள்ளார். ஒரு விசுவாசியினுடைய ஒவ்வொரு நாளின் 24 மணிநேரமும், வாழ்வின் எல்லா மணிப்பொழுதும் ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட வேண்டும். ஒரு விசுவாசி தானே திட்டமிட்டு, தன்னுடைய காரியங்களை நிறைவேற்றுவதற்கு இடமே கிடையாது. ஏனெனில், அனைத்துக் காரியங்களும் ஆண்டவரால் திட்டமிடப்பட்டிருக்கின்றன. மனிதன் தன் சுயதிட்டத்தின்படி காரியங்களைச் செய்வானாயின், ஆண்டவருடைய திட்டங்களை பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ ஒதுக்கி வைத்து விட்டதாகவே பொருள்கொள்ள முடியும்.

இப்படி இருக்கையில், ஜெபத்தில் சில வாக்கியங்களை மட்டும்கூறி மிகக்குறுகிய நேரத்தை மட்டுமே செலவிடுகின்ற ஒருவன் ஆண்டவருடைய முழுச் சித்தத்தின்படி எப்படி நடக்க முடியும்? நிச்சயமாக அது சாத்தியமில்லாத காரியம்.

ஆண்டவர் திரும்பி வரும்போது, ஒவ்வொரு விசுவாசியும் தான் செய்த ஒவ்வொரு செயலைக் குறித்தும், ஒவ்வொரு மணித்துளியும் எப்படி உபயோகப்படுத்தப்பட்டது என்பதைப் பற்றியும் அவரிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளாமல், அதே நேரத்தில் ஆண்டவருடைய சித்தமென்று தங்களுக்குள் நினைத்துக் கொண்டு ஏராளமான காரியங்களைச் செய்தவர்களின் செயல்கள் அனைத்தையும் அந்த நாளில் ஆண்டவர் கண்டறிவார். அவர்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதற்குப் பதிலாக தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை ஆண்டவரை எதிர்ப்பதிலேயே செலவிட்டிருப்பார்கள். எப்படியெனில், அவருடைய சித்தத்திற்கு முரணாக செய்யப்படுகின்ற எந்தக் காரியமும் அவருக்கு எதிராகவே நிற்கிறது.

ஆண்டவர் இயேசு அதைப் புரிந்திருந்தார். எனவேதான் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் அறிந்துக்கொள்ள அவர் தமது பிதாவைத் தேடினார். என்ன செய்யப்பட வேண்டும் என்று பிதா விரும்புகிறார் என்பதை மட்டும் அறிந்துகொள்ள வேண்டியவராக அல்லாமல், செய்யப்படும் செயலுக்கான வழியையும் நேரத்தையும் நோக்கத்தையும் அறிந்து கொள்வதற்கும் அவர் பிதாவை நோக்கினார். அவரைப்போல் வளர்வதற்கு

நாம் விரும்புவோமெனில், ஜெபத்திற்கு அவர் நம்மை அர்ப்பணித்திருந்தது போல நாமும் ஜெபத்தில் தஞ்சமடைவதைத் தவிர வேறு வழி கிடையாது.

இன்னொரு உண்மை என்னவென்றால், ஜெபத்தில் நமக்கு முன்பாக எப்போதாவது தோன்றுகின்ற மக்களுக்கு ஆண்டவர் சொல்கின்ற சில காரியங்கள் உண்டு. தம்முடைய சந்நிதானத்தில் அடிக்கடி வந்து நிற்போர்க்கு அவர் சொல்கின்ற மற்ற காரியங்களும் உண்டு. அவருடைய திருமுன்னிலையையே தங்களுடைய வாழ்விடமாகக்கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும், தங்களுடைய வாழ்விடத்தைவிட்டு அவர் விருப்பம் நிறைவேற்ற செல்வோர்க்கும், செயல்முடித்து அவரிடமே திரும்புவோர்க்கும் அவர்கூறும் வேறு செய்திகளும் உண்டு.

## ஆண்டவரே நமது 'வாழ்விடம்'

"ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்" (சங்கீதம் 90:1).

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" (சங் 91:1,2) என்று சங்கீதக்காரன் பாடுகிறான்.

விசுவாசிகள் ஆண்டவர்மேல் அன்பு செலுத்துவதிலும், அவரை மிக நெருக்கமாக அறிவதிலும் வளரும்போது, அவர்கள் சர்வ வல்லவராகிய தேவனுடைய நிழலில் தங்குவார்கள். ஆண்டவரின் பிரசன்னத்தை அதிகமதிகமாய் அவர்கள் அனுபவிப்பார்கள். அவருடைய சித்தமே, அவர்கள் கேட்க விரும்புகின்ற ஒரே குரலாகவும், அவருடைய திருமுகமே அவர்கள் பார்க்க விரும்புகின்ற ஒரே முகமாகவும், அவருடைய பிரசன்னமே பூரணஅறிவை உண்டாக்கும் இடமாகவும் இருக்கும் அவர்கள் மற்றெல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, ஆண்டவருடைய பிரசன்னத்தில் அவரோடு கூடிய ஐக்கியத்தில் பலப்படுவார்கள். அவருடைய பிரசன்னம் இனிமைமிக்கதாகும்போது, அவருடைய திருச்சந்நிதானத்தை தேடி அவர்கள் மீண்டும் மீண்டும் வருவார்கள். அந்த நிலை மென்மேலும் வளரும்போது, ஆண்டவரின் பிரசன்னத்தை விட்டு விலகுவது முடியாத காரியமாகும். ஆண்டவருடைய சித்தம் நியமித்திருக்கின்ற பணியைச் செய்வதற்காக அவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, மகிழ்ச்சியுடன் அல்லாமல் கீழ்ப்படிதலின்படி அவர்கள் வெளியேசென்று, அந்தக் காரியம் முடிந்ததும் உடனடியாக ஆண்டவரின் பிரசன்னத்திற்குத் திரும்ப ஓடி வருவார்கள். ஏனென்றால் தேவபிரசன்னமே அவர்கள் வாழும் 'இல்லம்'

விசுவாசியிடமிருந்து இந்த அளவு முதிர்ச்சியை ஆண்டவர் எதிர்பார்க்கிறார். வருந்தத்தக்கவிதமாக இன்று சபையில் அந்த முதிர்ச்சி அநேகமாக முற்றிலும் குறைவுபட்டுள்ளது.

ஜெபம், ஜெபம், ஜெபம் - ஜெபித்து முடித்த பிறகு மீண்டும் ஜெபம் - இதுதான் ஆண்டவரை உயிருக்கு உயிராக நேசிப்பவர்களின் முதிர்ச்சி. அந்த முதிர்ச்சியையே நான் நாடுகின்றேன். நீங்கள் நாடவேண்டிய முதிர்ச்சியும் அதுதான். அப்பொழுது தான், எவ்வளவு காலம் ஜெபத்தில் இருந்தீர்கள் என்பதைக் காட்டிலும், எவ்வளவு காலம் ஜெபத்தில் இல்லாமல் இருந்தீர்கள் என்பதைக் காட்டமுடியும்.

தேவனை தொழுவதும் தேவ சத்தத்தைக் கேட்பதும் செவி கொடுப்பதும் தேவனை அறிவதும் தேவனோடுள்ள இந்த ஜெப ஐக்கியத்தில் இடம்பெற்றவைகள். ஆண்டவருடைய வாழ்க்கை முழுவதிலும் அந்த முதிர்ச்சியே தெளிவாகக்காட்டப்பட்டது. அவரை நெருங்கிச் சேர்வோம். கெஞ்சுதலுடன் அவருடைய உதவி நாடுவோம். எப்போதும் நம் உள்ளத்தாலும் செயலாலும் ஆண்டவருக்குத் திருப்பணி செய்யும் தனிச்சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுக்கொள்வோம்.

## விசுவாச வாழ்வில் 'திடீர் உயர்வு' இல்லை

ஆண்டவர் வித்தை காட்டும் தொழில் செய்பவர் அல்ல. தம்முடைய பிரசன்னத்தை விரும்பாத விசுவாசிகளின் தன்மைகளை அவர் தாமாக மாற்றுவதில்லை. ஏனெனில், உலகத்தாலும் உலகத்திலுள்ளவைகளாலும் நிறைந்திருப்பவர்கள் உலகத்தோடும் அதில் உள்ளவைகளோடும் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கின்றார்கள். எந்த ஒரு கிரயமும் செலுத்தாத அவர்களை ஓரிரவுப் பொழுதிலே, அல்லது இமைப்பொழுதிலே முதிர்ந்த புனிதராக அவர் மாற்றுவதில்லை.

இருதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் உலகத்தையும் உலக காரியங்களையும் ஜெபத்தின்மூலம் அகற்ற வேண்டும். அது வேதனையாக இருக்கும். ஏனெனில், அநேகரது இதயங்களில் உலகக் காரியங்கள் மரங்களைப்போல பலமாகவும் ஆழமாகவும் வேரூன்றியிருக்கின்றன. அத்தகைய காரியங்களை வேரோடு தோண்டியெடுக்கும்போது வலியும் இரத்தக்கசிவும் காயங்களும் ஏற்படுவதுண்டு.

அது ஒருவேளை உங்கள் இதயத்தில் தேவனுக்கு இடமளிக்க விடாதபடி எதிர்த்து நின்று தேவனைவிட்டு உங்களை பிரிக்கும் ஒரு நபராகவோ அல்லது நீங்கள் விரும்பும் பட்டமாகவோ, பதவியாகவோ இருக்கலாம். அல்லது மதரீதியாக அல்லது சபை சம்பந்தமாக நீங்கள் பெரிதும் வாஞ்சித்த பொறுப்புக்களை அடைவதற்கான உங்கள் தீவிர

முயற்சியை கைவிடுவதாகவும் இருக்கலாம். இல்லையென்றால் ஒருவேளை உங்கள் திருமணம் பற்றிய உங்கள் எதிர்கால நம்பிக்கையை கைவிடவேண்டியதாகவும் இருக்கலாம். பொருளாதார தாழ்ச்சியில் நிரந்தரமாக வாழ்வதற்கான அழைப்பாகவும் இருக்கலாம்.

இப்படி நியாயமற்ற முறையில் தவறாக உங்கள் இதயத்தில் இடம்பிடித்துள்ள யாவையும் பிடுங்கி எறிந்துவிட்டு, அவைகளினின்று உங்களை நீங்கள் விலக்கிக்கொள்ளும்போது, தேவனே உங்கள் இதய சிம்மாசனத்தில் ஆட்சிபுரிவார். அதுதான் உங்களுக்கு ஏற்ற ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கமுடியும்.

அதன்பின், உங்கள் நேரத்தை நீங்கள் ஆண்டவரின் முன்னிலையில் செலவிடத் தொடங்க வேண்டும். ஆரம்பத்தில் அது கொஞ்சம் சிரமமாக இருக்கும். சில சமயங்களில் ஆண்டவரிடம் என்ன கேட்பது என்று தெரியாமல் குழம்புவீர்கள். அவரோடு பேசும் விதத்தை உங்களுக்குப் போதிக்கும்படி அவரைக் கேளுங்கள். அவர் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தி, தம்முடைய மகிமையை உங்களுக்குக் காண்பிக்க 'நீங்கள் அவரிடம் மன்றாடுங்கள். அவரிடமிருந்து உங்களைக் பிரிக்கின்ற இடைவெளியை அவருடைய அன்பினால் இணைக்கும்படி அவரிடம் ஜெபியுங்கள். உங்கள் தேவைகளை அவரிடத்தில் சமர்ப்பித்து, அவற்றைக் குறித்த அவருடைய கருத்துக்களைக் கேளுங்கள். இரட்சிக்கப்படாத மக்களின் பெயர்களை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர்கள் இரட்சிக்கப்படும்படி அவரிடத்தில் மன்றாடத் தொடங்குங்கள். பின்மாற்றம் அடைந்தவர்களை திரும்பவும் கொண்டுவர ஜெபியுங்கள். விசுவாசிகளின் பெயர்களை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர்களுக்குள் பாவத்தின் மீதான வெறுப்பை ஏற்படுத்தவும் சுயத்திலிருந்து அவர்களை விடுவித்துப் பணிவிலும் பிற பண்புகளிலும் ஆண்டவர் இயேசுவின் குணங்களில் விசேஷமான தாழ்மையில் அவர்கள் வளரவும் செய்யும்படி ஆண்டவரிடம் ஜெபிக்க ஆரம்பியுங்கள். இவ்வழியாக நீங்கள் செல்லும்போது அவர் முன்னிலையில் உங்களுக்குள் பிறக்கும் அயன்மை உணர்வு, அதாவது அன்னியன் என்ற மனநிலை மறைந்து, அங்கேயே தங்கி நிலைத்திருக்கும் ஆர்வத்தை உங்களுக்குக் கொடுக்கும்.

ஜெபவாழ்வில் மிக வேகமான முன்னேற்றத்தைக்காண நீங்கள் விரும்பலாம். அப்படி விரும்புவீர்களாயின், கீழ்காணும் வண்ணம் ஒரு கால அட்டவணையைத் தயாரித்து அதனைப் பின்பற்றலாம். அவருடைய பிரசன்னத்தில் இருப்பதற்கும் அவரை அறிவதற்கும் அவரோடு பேசுவதற்கும் நீங்கள் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அடித்தளமாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**முதல் வாரம்**

| | | |
|---|---|---|
| திங்கள் | 30 | நிமிடங்கள் |
| செவ்வாய் | 30 | நிமிடங்கள் |
| புதன் | 45 | நிமிடங்கள் |
| வியாழன் | 45 | நிமிடங்கள் |
| வெள்ளி | 45 | நிமிடங்கள் |
| சனி | 60 | நிமிடங்கள் |
| ஞாயிறு | 60 | நிமிடங்கள் |

**இரண்டாம் வாரம்**

| | |
|---|---|
| திங்கள் | 60 நிமிடங்கள் |
| செவ்வாய் | 90 நிமிடங்கள் |
| புதன் | 90 நிமிடங்கள் |
| வியாழன் | 90 நிமிடங்கள் |
| வெள்ளி | 90 நிமிடங்கள் |
| சனி | 90 நிமிடங்கள் |
| ஞாயிறு | 2 மணி நேரம். |

**மூன்றாம் வாரம்**

| | |
|---|---|
| திங்கள் | 2 மணி நேரம் |
| செவ்வாய் | 2 மணி நேரம் |
| புதன் | 2 மணி நேரம் |
| வியாழன் | 2 மணி நேரம் |
| வெள்ளி | இரண்டரை மணி நேரம் |
| சனி | இரண்டரை மணி நேரம் |
| ஞாயிறு | இரண்டரை மணி நேரம் |

**நான்காம் வாரம்**

ஆண்டவர் மீதான அன்பும் ஆர்வமும் உங்களுக்குள் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றதோ அதனைச் சார்ந்து உங்களுக்குரிய திட்டத்தை நீங்கள் வகுத்துக்கொள்ளுங்கள். மேலே வகுக்கப்பட்டுள்ள கால அட்டவணையின் வேகம் உங்களுக்குச் சற்று அதிகமானதாகக் காண்பீர்களாயின் ஆண்டவரிடம் மன்றாடுங்கள். அதிவேகமான வளர்ச்சியை நீங்கள் ஏற்படுத்த ஆண்டவர் உங்களை பலப்படுத்துவார். அவர் உங்களுக்குப் பதிலளிப்பார்.

# 10. முழு இரவு ஜெபம்

"அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே. பின்பு அவர் அவர்களுடனே கூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்கள் இருந்தார்கள். அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" (லூக்கா 6:12-19).

## ஐக்கியம்

நமது தேவைகளுக்காக தேவனிடத்தில் நாம் கேட்பது, பெற்றுக் கொள்வது இவைகளைக் காட்டிலும் ஜெபம் மேலானது. அது அவரோடு நெருக்கிய தோழமை கொள்வதாகும். அந்த ஐக்கியத்தின்போது ஆண்டவர் அறியப்படுகின்றார், துதிக்கப் படுகின்றார், மேலும் தேடப்படுகின்றார். ஜெபிப்பவரிடம் தம் தேவை இன்னதென்பதை எடுத்துரைக்கின்றார். ஆண்டவரின் தேவை சந்திக்கப்படுகின்றதா என்று காணும் பாரத்தைத் தருகின்றார். ஆண்டவரின் தேவையைக் காணும் ஒருவர் அதை சந்திக்கத் தம்மையே ஒப்படைக்கின்றார். தம்முடைய தேவைகளையே ஆண்டவரிடம் கொண்டு வந்து பழக்கப்பட்ட ஒருவர் பின் ஆண்டவரின் தேவையைச் சந்திக்க முற்படுகின்றார்.

ஆண்டவர் இயேசு ஜெபிப்பதற்காக மலையின்மேல் ஏறிச் சென்றார். அவர் தமது பிதாவை நாடினார். பிதா தமது குமாரனை நாடினார். ஒருவருக்கொருவர் தேவையாயினர். எனவே ஆண்டவர் தம் பிதாவோடு தனித்திருக்கச் சென்றார். ஆண்டவருக்கும் ஒரு பிரச்சினை இருந்தது. தம்முடைய ஏராளமான சீஷர்களில் பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து

அவர்களை அப்போஸ்தலராக்குவதில்தான் பிரச்சினை. ஒரு திரளான கூட்ட மக்கள் அவருடைய சீஷர்களாயிருந்தனர். அவர்களில் யார் யாரை அவர் தேர்ந்தெடுப்பது?

அந்தப் பிரச்சினையில் தம்முடைய தீர்மானத்தை அவர் சார்ந்திருக்கவில்லை. தம்மால் கவரப்பட்டவர்கள் மீதும் அவர் சார்ந்திருக்கவில்லை. எதிர்காலத்திலும் தம்மோடிருப்பதாக வாக்களித்திருந்தவர்களையும் அவர் சாந்திருக்கவில்லை. தம்முடைய கருத்துக்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப் பிரச்சினையில் பிதாவினுடைய சித்தத்தை அறிவதற்காக ஜெபம்பண்ணும்படி அவர் மலைக்குச் சென்றார். எந்த மணிப்பொழுதில் அவர் மலைக்குச் சென்றார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவர் ஜெபிக்கத் தொடங்கி, தொடர்ந்து ஜெபித்தபடியே இரவு முழுவதையும் ஜெபத்தில் கழித்தார் என்பதை அறிவோம். பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய மிகச் சிக்கலான அந்தப் பிரச்சினையை ஒரு தேவ ஆலோசனை சபை அந்த மலையின்மேல் சந்தித்தது-அந்த ஆலோசனை சபை ஒவ்வொரு சீஷரையும்நன்கு பரீட்சித்தபின், மனித ஞானமல்லாத தெய்வீக ஞானத்தின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அந்த சபையின் தலைவரான பிதா, அப்போஸ்தலர்களின் பட்டியலை நிர்மானித்தார்; குமாரன் அதைப் பெற்றுக் கொண்டார். பிதா மாத்திரமே அந்தப் பட்டியலை தேர்ந்தெடுத்திருக்கக்கூடும் என்பது பல வழிகளில் தெளிவாகின்றது. ஏனெனில், மனித நோக்குநிலை அதில் முன்றிலுமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மண்டலப் பங்கீடு அல்லது பிரதிநிதித்துவம் பற்றிய எண்ணம் அங்கில்லை. அப்போஸ்தலர்களாககத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் நிலைத்து நிற்கக்கூடிய மன உறுதியுடையவர்களாகத் தோன்றவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு குணக்கேடு உடையவர்களாயிருந்தனர். பேதுரு துணிகரம் கொண்டவனும், உணர்ச்சி வசப்பட்டு எழிதில் மறக்கூடியவனாகவும் இருந்தான். யாக்கோபும், யோவானும் அழித்துவிடக்கூடிய - உருப்படியில்லாத கோப சுபாவம் கொண்டவர்களாய் இருந்தனர். அந்தப் பன்னிருவரில் ஒருவன் இயேசுவினிடத்தில் தன்னை ஒப்புக் கொடுக்கவும்கூட இல்லை. மற்றவர்கள் கோழைகளாகவும் தைரியமில்லாதவர்களாகவும் இருந்தனர். அந்தப் பட்டியல் வாசிக்கப்பட்டபோது, அதில் இருஜோடி சகோதரர்கள் இருந்தனர்; அந்திரேயா ஆண்டவரிடத்தில் முதலாவதாக வந்திருந்த போதும், பேதுருவின் பெயர் அவனுடைய பெயருக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. இருவர் யாக்கோபு என்றும் இருவர் யூதா என்றும் அழைக்கப்பட்டனர்.

பிதா அவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து அவர்கள் ஒவ்வொருவரின் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால வாழ்க்கையினை

அறிந்தபோதிலும் அவர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களைப் பழக்குவிப்பது, அவர்களுக்குக் கற்பிப்பது சிரமமான காரியமே. இருப்பினும் பிதா அவர்களைக் குமாரனிடத்தில் கொடுத்தார். குமாரன் அவர்களை ஏற்றுக் கொண்டு தம்மைத்தாமே அவர்களுக்கு ஒப்புவித்தார்.

அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமான காரியமாக இருந்தபடியால், அவர்களுடைய பெயர்களை வகைப்படுத்திப் பிரித்தெடுப்பதற்கு ஒரு முழு இரவு செலவானது. முழு இரவையும் ஜெபத்தில் கழிப்பதற்கு ஆண்டவர் தீர்மானித்திருக்கவில்லை. ஆனால் அவர் ஜெபிக்கச் சென்ற பின்னர்தான், தம் பிதாவோடு சேர்ந்து தாம் ஒழுங்கு பண்ண வேண்டிய காரியத்திற்கு அந்த இரவு முழுவதும் தேவை என்பதைக் கண்டறிந்தார். எனவே அதிலிருந்து அவர் சற்றும் விலகவில்லை. அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி முடியும்வரை அவர் பிதாவினுடைய திருச்சந்நிதியில் தரித்திருந்தார்.

## ஜெப நேரத்தின் திட்டமிடப்பட்ட நீளம்

"நான் நான்கு மணி நேரம் ஜெபிப்பதற்கு மலைக்குச் செல்கிறேன்" என்று ஆண்டவர் சொல்லியிருந்திருப்பாரானால் அவர் பிரச்சினைகளுக்குள் சிக்கியிருப்பார். ஏனெனில், பிதாவுடன் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய அந்தக் காரியம், அந்த குறிப்பிட்ட நேர வரையறைக்குள் ஒழுங்குபடுத்தப்படாமல் இருப்பதை நான்கு மணிநேரத்திற்குப் பின்னர் அவர் அறிந்திருப்பார். எனவே தன்னிச்சையான ஒரு நேர வரையறையை தாமே ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அவர் தீர்மானித்தார். "ஒன்று, இரண்டு அல்லது மூன்று மணிநேரம் என்னிடம் வா" என்று கடவுள் ஒருபோதும் சொல்வதில்லை. தம்மிடத்தில் வரும்படி அவர் மக்களை அழைக்கிறார். அவர்களுடைய காரியம் ஒழுங்குபடுத்தப்படுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தைப் பொறுத்தே, அவர்கள் பிதாவின் முன்னிலையில் தரித்திருக்கும் கால அளவும் முடிவு செய்யப்படுகின்றது. அவர் மோசேயை மலைக்கு வரும்படி அழைத்தார். மோசே சென்று கடவுளின் முன்னிலையை அடைந்தார். அவரின் பிரசன்னத்தைவிட்டு மோசே வெளிவருவதற்கு முன்னால், நாற்பது நாட்கள் கடந்திருந்தன. கடவுள் தன்னோடு பேசி முடிக்கும்வரை அவருடைய சந்நிதானத்தில் மோசே தரித்திருந்தார். நாமும் கூட அவ்வண்ணமே ஆயத்தமாய் இருக்க வேண்டும். அவருடைய பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பதற்கும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படியானால், ஒருமணி நேரமோ, பத்து மணி நேரமோ, இரண்டு நாட்களோ, ஏழு நாட்களோ, அல்லது நாற்பது நாட்களோ அவருடைய சந்நிதியில் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின் அவருடைய பிரசன்னத்தில் அத்தனை நீண்டபொழுது நாம் தரித்திருக்க முடியும் என்பதைக் கண்டுக்கொள்வோம்

பிதாவின் முன்னிலையில் அவர் பேசி முடிக்கும் மட்டும் நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அப்படியானால் மற்ற குரல்களினின்று அவர் குரலை பிரித்தறிய வேண்டும். அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தெளிவாக அறிந்திட வேண்டும். அவருடைய திருமுன்னிலையில் குதித்து ஏதோ ஓரிரு சொற்களை சொல்ல மட்டும் தெரிந்திருப்போர் ஜெப வாழ்வில் வளர வேண்டிய அளவு வளர்ந்திட மாட்டார்கள்.

ஆண்டவரின் பிரசன்னத்தில் இரவு முழுவதும் பாரத்தோடு ஜெபிப்பதில் தொடர்ந்திருக்கும் ஒருவர் ஜெப வாழ்க்கையில் வளர்ச்சியைக் காண முடியும்.

## இரவு முழுவதும் ஜெபம்

வாரத்திற்கு 8 மணி நேரம் முதல் 10 மணி நேரம் கொண்ட இரண்டு முழு இரவு ஜெபக் கூட்டங்களை ஏற்படுத்திக் கொள்வது முதிர்ச்சியடைந்து வருகின்ற விசுவாசிகளுக்கு மிகவும் நல்லது. ஒரு இரவு ஜெபம் ஆண்டவரைத் தனிமையில் சந்திக்கும் கூடுதல் நேரம் கொண்ட தனி இரவு ஜெபமாக இருக்கலாம். ஆரம்பத்தில் அதிகரித்து வருகின்ற விடாமுயற்சியுள்ள விசுவாசிகள், பின்னர் முழு இரவு ஜெபத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத் தொடங்குவார்கள். அவர்கள் மாதத்திற்கு ஒரே ஒரு முழு இரவு ஜெபம் என்று ஆரம்பித்து அதன்பின் படிப்படியாக மாதத்திற்கு இருமுறை என்றும், இறுதியாக வாரத்திற்கு ஒருமுறை என்றும் முழு இரவு ஜெபக் கூட்டத்தை அமைத்துக் கொள்ளலாம்.

கூடுமானவரையில் மாலையில் வெகு சீக்கிரமாக இரவு ஜெபத்தை ஆரம்பித்துவிட வேண்டும். காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை வேலை பார்க்கின்ற ஒருவர், மறுநாள் தாம் வேலைக்கும்போகும் முன்பாக சிறிது ஓய்வெடுத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு, மாலை 6 மணிமுதல் இரவு 2 மணி வரையிலான நேரத்தை ஜெபத்திற்கென்று தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

முழு இரவு ஜெபத்தைக் கீழ்க்கண்டவாறு திட்டமிட்டுக்கொள்ளலாம்:

| | |
|---|---|
| 18.00 - 19.00 | நன்றி மற்றும் துதி செலுத்துதல் |
| 19.00 - 20.00 | தங்கள் ஆவிக்குரிய மற்றும் பொருளாதார தேவைகளுக்காக ஜெபித்தல் |
| 20.00 - 20.30 | ஆண்டவருக்கு முன் காத்திருத்தல் |
| 20.30 - 21.30 | காத்திருக்கும்போது பெறப்பட்ட காரியங்களுக்காக ஜெபித்தல் |

| | |
|---|---|
| 21.30 - 22.30 | ஒருவருடைய குடும்பத்திற்காக ஜெபித்தல் (இரட்சிக்கப்பட்ட அல்லது இரட்சிக்கப் படாதவர்களுக்காக) |
| 22.30 - 23.30 | தாங்கள் ஈடுபாடு கொண்டுள்ள சபைக்காக ஜெபித்தல். |
| 23.30 - 24.00 | மௌனமாக துதித்து நன்றி செலுத்துதல் |
| 24.00 - 01.00 | நற்செய்தி அறிவிக்கப்படாத ஒரு தேசத்திற்காக ஜெபித்தல் அல்லது உலகளவில் செயல்படும் ஒரு மிஷனெரி இயக்கத்திற்காக |
| 01.00 - 01.30 | உலக முழுவதிலும் பரிசுத்தவான்களின் உயிர்மீட்சிக்காக ஜெபித்தல் |
| 01.30 - 02.00 | நன்றி செலுத்துதல் - எதிர்கால செயல்திட்டங்களை எழுதுதல் |

முழு இரவு ஜெப நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு நிச்சயமாக வேறு வழிகள் இருக்கும். ஆனால் ஒவ்வொரு மனிதரும் ஆண்டவரிடத்தில் காத்திருந்து, அவர் என்னென்ன காரியம், எப்படி எப்படி செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறாரோ அவைகளை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். என்ன காரியம் செய்யப்பட வேண்டும் என்பதை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டதும், ஜெபிக்கின்ற பரிசுத்தவான் சாத்தானாலும், உலகத்தாலும், மாமிசத்தாலும் ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு சிறிதும் இடம் கொடுக்காமல், எல்லா ஜாக்கிரதையோடும் தம்மைத்தாமே ஜெபத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு தீவிரமான மனப்போங்குள்ள விசுவாசி வருடத்தின் ஆரம்பத்திலேயே, ஜெபத்திற்கான இரவுகளை ஆண்டவரோடு அமர்ந்து வகைப்படுத்திக் கொண்டு, அவைகளை ஜெபத்துடன் பாதுகாத்துக்கொள்வார். அதனால் பிசாசானவன் அதில் தலையிடுவதில்லை. அந்த வழியில் தெய்வீக ஞானத்திலும், ஆண்டவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக ஆன்மீக வல்லமையை வெளியிடுவதிலும் அவர்கள் மிக வேகமான முன்னேற்றத்தை உண்டாக்குவார்கள்.

எந்தவொரு தடங்கலுமின்றி அனைத்து அங்கத்தினர்களாலும் கலந்து கொள்ளப்படுகின்ற முழு இரவு இரவு ஜெபத்தை ஒவ்வொரு சபையும் வாரத்திற்கு ஒருமுறை கொண்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு சபை, ஜெபக்கூட்டங்களில் ஒழுங்காக பங்கெடுப்பவர்களையே அங்கத்தினர்களாகக் கணக்கெடுக்கும். மற்ற அனைவரையும்

பார்வையாளர்களாகவே கருதும். பெரிதும் சபைகள் இல்லங்களில் ஜெபக்கூட்டங்களை வைக்கும்போது ஒவ்வொரு கூட்டத்திலும் இருபது முதல் முப்பது பேர்கள் மட்டும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அப்பொழுது பார்வையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

நான் பங்கு கொள்கின்ற சபை வாரத்திற்கு ஒரு முழு இரவு ஜெபக் கூட்டத்தை நடத்துகின்றது. நாங்கள் முப்பது விசுவாசிகள் வாரத்திற்கு ஒருமுறை மாலை 7.00 மணி முதல் காலை 5.00 மணிவரை கூடி கடந்த பத்து ஆண்டுகளாக ஜெபிக்கின்றோம்.

நான் எதிர்காலத்தைப் பார்க்கும்போது சிறு குழுக்களாக இவ்வித இரவு ஜெபக்குழுக்கள் கூடுவது ஆண்டவர் சீக்கிரமாக அவருடைய சபைகளிலும் சபைகள் மூலமாகவும் சில பெரிய காரியங்களைச் செய்வதற்கு அடையாளம் என்று எண்ணுகிறேன். இவ்விதம் இரவு முழுவதும் இயேசுக் கிறிஸ்துவோடு ஒழுங்காக முறையாக, கிரமமாக கூடி ஜெபிப்பது சபைகள் தோறும் நடைபெற வேண்டும். சபைகளில் மீட்கப்பட்ட சகோதர சகோதரிகள் துரிதமாக தங்களை' ஜெபத்திற்கும் இவ்வித முழு இரவு ஜெப கூடுகைகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டுமென்பதுமே என் ஜெபமாயிருக்கிறது.

## இரவு ஜெபத்திற்கான ஒரு நேரம்

பிசாசு மிகத் தீவிரமாக செயல்படுகின்ற நேரம் இரவு என்பதை நாம் அறிவோம். அவன் அந்தகாரத்தின் அதிபதியாக இருப்பதால், அவனுடைய பெரும்பாலான செயல்கள் இரவில்தான் நடைபெறுகின்றன. அதனால், பிசாசுக்கு எதிராக நிற்கும் அனைவரும், அவனை செயலாற்றவிடாமல் தடுப்பதற்கு இரவில் ஜெபிப்பதை மிகவும் இன்றியமையாததாகக் கொள்ள வேண்டும். பிசாசை இரவில் அழிவை செய்யவிட்டுவிட்டு பகலில் பிதாவை நோக்கி பிசாசு இரவில் செய்தவைகளை சரி செய்ய கேட்பது சரியானதல்ல என்று நான் எண்ணுகிறேன். நாம் இரவு முழுவதும் விழித்திருந்து ஜெபிக்கும் கிரயத்தை செலுத்தி அவன் செயல்களைத் தடுக்க வேண்டும். நாம் ஓய்வெடுக்காமலும், பிசாசானவனுக்கு சந்தர்ப்பம் கொடுக்காமலும் நாம் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். அப்போது பரலோகத்தில் நம்முடைய பலன் மிகுதியாயிருக்கும்.

## ஜெபமும் ஆன்மீக வல்லமையும்

ஆண்டவர் இயேசு இரவு முழுவதும் ஜெபித்த பின்னால், பன்னிருவர் அடங்கிய குழுவில் யார் யாரைத் தீர்மானிப்பது என்பதை சரியான முறையில் நிர்மாணிப்பதற்குரிய வல்லமையைப் பிதாவிடமிருந்து அவர் பெற்றார். "அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து,

ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகை தேடினார்கள் (லூக்கா 6:18,19) என்று வேதம் கூறுகின்றது. அந்த அற்புதங்களைச் செய்வதற்கு ஆண்டவர் இயேசுவும் தமது பிதாவிடத்திலிருந்து ஒரு புதிய அபிஷேகத்தைப் பெற்றார் என்று தெரிகிறது.

அவர் பிதாவினுடைய பிரசன்னத்தில் இருந்து கொண்டிருந்த காரணத்தால், அங்கே அதிக அளவிலான வல்லமை இருந்தது. அதிகப்படியான நேரத்தை ஜெபத்தில் கழிப்பவர்கள் ஆன்மீக வல்லமையில் வளர்வார்கள்.

ஏனெனில், ஜெபத்தில் வல்லமை பூட்டி வைக்கப்பட்டிருப்பதால் திருச்சபை அதிகமாக ஜெபித்து ஆண்டவரது வல்லமையை வெளிப்படுத்தாமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் முன் வலி மை இழந்து இருப்பதற்கான காரணத்தை அறிந்திட கடினமாக உள்ளது.

ஆண்டவரே, அதிகமாக ஜெபிப்பதற்கு எனக்கு உதவி செய்யும். ஊக்கமான ஜெபத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எனக்கு உதவியருளும். ஆண்டவரே, பரிசுத்தவான்களை ஜெபிப்பதற்கு ஒன்று திரட்ட எனக்கு உதவி செய்யும். நான் ஜெபிப்பதற்கும், உம்முடைய பிள்ளைகளை ஜெபத்திற்கு வழி நடத்தவும் எனக்கு உதவி புரியும். இந்த நேரத்தில் மிகப்பெரிய தேவை இதுதான். ஆண்டவரே எனக்கு உதவும். ஆண்டவரே, எங்களுக்கு உதவும்.

# 11. தனிமையும் ஜெபமும்

"பின்பு அவர் தமது சீஷரோடுகூடத் தனித்து ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், அவர்களை நோக்கி: ஜனங்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான் ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிகளில் ஒருவர் உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்திரமாக நீர் தேவனுடைய கிறிஸ்து என்றான் (லூக்கா 9:18-20)

"இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளவில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத்தேயு 16:17-19).

ஆண்டவர் இயேசு ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்தவராய், அதற்குத் தம்மைத் தாமே கொடுத்தார். தம்மைச் சுற்றி இருந்தவர்கள் செய்த காரியங்களால் அவர் மனம் வசீகரிக்கப்படவில்லை. தமக்கு சித்தமானதை அறிந்த அவர் அதனையே செய்தார். அவருடைய சீஷர்கள் அவரோடிருந்தனர். ஆனால் அவர் தனியே ஜெபித்துக்கொண்டிருந்தார். அவர் தமது சீஷர்களுடன் இருந்தார். ஆனால் அவரும் அவருடைய சிந்தனைகளும் பிதாவினுடன் ஒன்று கலந்திருந்தன. அவர் அடிக்கடி ஜெபிப்பதற்கு ஒரு மலைக்குச் சென்றார். என்றாலும் மக்களுக்கு மத்தியில் இருக்கும்போதும் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதையும் அவர் அறிவார். அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் இருந்தபோதிலும், தம்முடைய பிதாவின் பிரசன்னத்தில் அவர் எப்போதும் இருந்தார்.

## தனித்து ஜெபித்தல்

மற்றொருவரோடு சேர்ந்தோ, ஒரு குழுவோடு சேர்ந்தோ, அல்லது திரளான மக்களோடு சேர்ந்தோ ஒருவர் ஜெபிக்க முடியும். கிறிஸ்தவர்களின் ஜெபத்திற்கு அவை ஒவ்வொன்றிலும் இடம் உண்டு. அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். எனினும், ஒரு மனிதனின் ஆன்மீகத்

தன்மை, அவன் பொது இடங்களில் எவ்வளவு ஜெபித்தான் என்பதன் மூலம் அறியப்படுவதில்லை; ஆனால் எவ்வளவு அதிகமாக தனிமையில் அவன் ஜெபிக்கிறான் என்பதன் மூலமே அவனுடைய ஆன்மீகத் தன்மையை அறிந்து கொள்ளமுடியும். சிந்தனையில் ஆண்டவரிடமிருந்து விலகி வெகுதூரத்தில் நடந்துகொண்டு அதே நேரத்தில் அநேகர் கூடியிருக்கின்ற பொது இடத்தில் நீண்ட நேரமாக ஜெபித்துக்கொண்டிருப்பது சாத்தியமே. எனினும், ஆண்டவருக்கு முன்பாக ஒருவர் தனித்திருக்கும்போது இருதயத்தின் நிலை மிக எளிதாக வெளிப்படுத்தப்படுகின்றது. தனிமையில் ஜெபிப்பதற்கு அதிக நேரத்தை எடுத்துக்கொள்பவர்கள், ஆண்டவரிடத்தில் மிக நெருங்கிய உறவு கொண்டு, அவரோடு இணைபிரியாமல் நடக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையில் பாவத்திற்கு அடிமையாகிப் போனவர்களோ ஆண்டவரின் பிரசன்னத்தை வெறுக்கிறார்கள்.

மற்றவர்களுக்கு மத்தியில் ஜெபிக்கக் கூடிய ஒவ்வொரு விசுவாசியும், தனிமையில் ஜெபிப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவருடைய முன்னிலையில் தனிமையாக இருக்கும் அந்த நேரங்களில், நம் தனிப்பட்ட வாழ்வைக் குறித்த ஆண்டவரின் வெளிப்பாடுகளை அங்கே நிச்சயமாக அறியக்கூடும். மேலும், ஆண்டவருக்கு முன்பாக தனித்திருக்கும் அந்த வேளைகளில் நம் இருதயத்தின் சீர்கேடுகள் மிக எளிதாக நமக்கு வெளிப்படுத்தப்படும். ஆண்டவர் தம்பிள்ளைகளை அதிகமாக மதிக்கிறார், நேசிக்கிறார், அவர்களை தனிப்பட்ட முறையில் சீர்படுத்த அவர் விரும்புகிறார். மேலும், அவர்களுடைய தவறுகளை மற்றவர்களுக்கு அவர் வெளிப்படுத்துவதில்லை. ஆனால், தனிப்பட்ட முறையில் ஒருவருடைய தவறுகள் சுட்டிக் காட்டப்பட்ட பின்னும் அவரிடமிருந்து பதில் எதுவும் இல்லையெனில் அவருடைய தவறுகளைப் பொது இடங்களில் அவர் பகிரங்கப்படுத்துகிறார்.

உள்ளன்போடு ஆண்டவரை நேசிப்பவர்கள் அவரோடு தனித்திருக்கும் அந்த இனிமையான கூட்டுறவின் நேரத்தை அதிகரித்துக்கொண்டே போவார்கள். மற்றவர்களுடன் நேரத்தைச் செலவிடுவதைக் காட்டிலும், தனிமையில் ஆண்டவரோடு நேரத்தைச் செலவிடுவதன் முக்கியத்துவத்தையும், அதன் பெருமதிப்பையும் அவர்கள் அறிவார்கள். ஒருவர் ஆண்டவருக்கு முன்பாக தனிமையில் அதிக நேரத்தைச் செலவிடும்போது மட்டுமே மிகப்பெரிய அளவில் ஆன்மீக வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்படும் என்பதுதான் உண்மை. எனவே, ஆண்டவரை அறிகிற அறிவிலும், அவருடைய ஐக்கியத்திலும் மென்மேலும் வளர விரும்புகிறவர்கள் குறைந்தபட்சம் பாதி நேரத்தையாவது தனிமையாக ஜெபிப்பதில் செலவிட வேண்டும்.

## அவருடைய ஜெபங்களின் தாக்கம்

பிதாவினிடத்தில் ஆண்டவர் என்ன கேட்டார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியாது. என்றாலும், அவர் தனிமையாக பிதாவினிடம் ஜெபித்தார் என்பதை நாம் அறிவோம். அதற்குப் பின்வரும் நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, தம்முடைய அப்போஸ்தலர்களில் ஒருவருக்குக் குமாரனை வெளிப்படுத்தும்படி பிதாவிடம் ஜெபித்தார் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும். அதன்பின்னர் இயேசு இப்படி ஜெபித்தார்:

"பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஆம் பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான் (மத்தேயு 11:25-27).

"நீரே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு அறிக்கையிட்டது அத்தகைய வெளிப்பாடுதான். பரலோகத்திலிருக்கின்ற பிதாவின் மூலமே பேதுருவுக்கு அது வெளிப்படுத்தப்பட்டது என்பதை ஆண்டவர் இயேசு அறிவித்தார். தம்முடைய பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவருக்கு, தாம் தேவனுடைய குமாரன் என்பதை வெளிப்படுத்தும்படி ஆண்டவர் பிதாவிடம் ஜெபித்தார். அவருடைய ஜெபத்தை பிதா கேட்டு, உடனடியாக அந்த வெளிப்பாட்டை அருளினார். "ஆண்டவர் ஜெபித்திருக்காவிட்டால் என்ன?" என்று நாம் கேட்கலாம். ஆண்டவர் ஜெபித்திருக்காவிட்டால், பிதா நிச்சயமாக பேதுருவுக்கு அந்த வெளிப்பாட்டை கொடுத்திருக்க மாட்டார். மக்கள் என்ன சொன்னார்களோ அதையே பேதுருவும் சொல்லியிருந்திருக்கலாம் அல்லது ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்திருப்பார். ஆனால் அந்த நிலை ஏற்படாததற்கு ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். ஆண்டவர் இயேசு ஜெபித்தார்; அவருடைய ஜெபத்தைக் கேட்டு பிதா செயல்பட்டார். தம்முடைய பிள்ளைகள் ஜெபிக்க மட்டும் செய்வார்களாயின், அவர்களுக்காக செயல்பட கடவுள் காத்துக்கொண்டிருக்கிறார்.

உலகில் இன்று ஆன்மீக நிலையில் அடர்த்தியான இருள் படர்ந்திருக்கின்றது. ஆண்டவரின் நற்செய்தி ஒழுங்காக பிரசங்கிக்கப்படுகின்ற ஆலயங்களில்கூட, ஆண்டவர் இயேசுவை அறிவதிலிருந்து மனிதர்களைத் தடைசெய்கின்ற திரை ஏராளமானோரின் இருதயங்களை மூடியிருப்பதைக் காண முடிகின்றது. நற்செய்திக் கூட்டங்களில் கலந்துகொள்ளும்போது பல தீர்மானங்களை அவர்கள் எடுக்கிறார்கள். ஆனால் அவை,

பிதாவினிடமிருந்து வெளிப்பாடின்றி கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது மனதைச் சார்ந்த ஒப்புதல்களாகும். பிதாவிடமிருந்து வெளிப்பாடு இல்லாத காரணத்தால் புதிய தீர்மானங்களை எடுக்கின்ற அவர்கள் தங்கள் தீர்மானங்களில் நிலைத் 'திருப்பதில்லை. பிதா அவர்களை குமாரனுக்கு வெளிப்படுத்தாதலால் அவர்கள் ஒருபோதும் மாற்றப்படவில்லை என்பதே உண்மை. அநேக விசுவாசிகள் வேத வசனங்களை வாசித்தபோதிலும் தங்கள் வாழ்க்கை மாற்றப்படும் அளவுக்கு அதன் சத்தியங்களை காணவோ, உணரவோ இல்லை என்ற உண்மை, பிதா தனது குமாரனையும் வேத வசனங்களின் சத்தியத்தையும் வெளிப்படுத்த வேண்டியதின் தேவையையே தெரிவிக்கிறது.

ஒரு மாற்றம் நிகழப்போகுமெனில், அங்கே வெளிப்பாட்டிற்காக ஜெபத்தின் தரமும், அளவும் நிச்சயமாகக் கூடியிருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவரிடம் ஒருமணி நேரம் நற்செய்தி கூற வேண்டுமானால் அவருக்காக ஜெபிப்பதற்கு ஒருநாளில் ஐந்துமணி நேரத்தைச் செலவிடுவது நல்லது. திட்டமிடப்பட்ட ஒருவார நற்செய்திக் கூட்டத்திற்காக ஐந்து வாரங்களை ஜெபத்தில் செலவிடுவது ஒரு ஞானமுள்ள ஊழியருக்குத் தேவையாகும். ஒவ்வொரு மணிநேர கற்பித்தலுக்கும் ஐந்துமணி நேர ஜெபம் ஆசிரியருக்குத் தேவை. அப்படிச் செய்யப்படுமெனில் அங்கே மாற்றம் நிகழும். ஜெபங்களுக்கெல்லாம் பிதாவானவர் பதிலளித்து, இரட்சிக்கப்படாதவர்களுக்குத் தமது குமாரனை வெளிப்படுத்துவார். விசுவாசிகளுக்கு சத்தியத்தை வெளிப்படுத்துவார். அப்போது அவர்கள் கேட்கிறவர்களாய் மாத்திரம் இருக்கமாட்டார்கள். அவர்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளுவார்கள். அது அவர்களை விடுதலையாக்கும்.

கிறிஸ்துவை மக்களுக்கு வெளிப்படுத்தும்படியும், உண்மையை விசுவாசிகளுக்கு உணர்த்தும்படியும் நாம் ஆண்டவரிடம் மன்றாடுவோம். அவருடைய வெளிப்பாட்டின் செயல்களின்றி அனைத்துப் போதனைகளும், உபதேசங்களும், ஊழியங்களும், புத்தக வாசித்தலும், ஒலி நாடா கேட்டலும், மேலும் இவைபோன்ற எல்லாமும் வீணானவைகளே. மாம்சசிந்தையுள்ள மனம் ஆண்டவரின் காரியங்களை பெற்றுக்கொள்ள முடியாது அவைகள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும். உறுதியான ஜெப வாழ்க்கையோடு ஆலயம் செல்பவர்கள் சத்தியத்திற்கு உடனடியாக செவிசாய்க்கிறார்கள் என்பதனை இது விளக்குகிறது.

"கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" 2 இரா. 6:17) என்று எலிசா தீர்க்கதரிசி தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரிடம் விண்ணப்பம் பண்ணினார். அவருடைய விண்ணப்பத்திற்கு ஆண்டவர் உடனடியாக பதிலளித்தார். "உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்: இதோ எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான

குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்" (2 இரா 6:17) என்று வேதம் கூறுகிறது. சீரியர்களுக்காகவும் எலிசா தீர்க்கதரிசி ஆண்டவரிடம், "கர்த்தாவே, இவர்கள் பார்க்கும்படிக்கு இவர்கள் கண்களைத் திறந்தருளும்" என்றான் (2 இரா 6:20). கர்த்தர் மீண்டும் எலிசாவின் விண்ணப்பத்திற்குப் பதிலளித்தார். "பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கும்போது, இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவே இருந்தார்கள்" (2 இரா 6:20) என்று திருமறையில் காண்கின்றோம். ஆன்மீகப் பார்வையையும், புரிந்து கொள்ளுதலையும் ஆண்டவர் மட்டுமே கொடுக்க முடியும் என்ற உண்மையை பவுலடியார் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் அவர் இப்படி ஜெபிக்கின்றார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் தம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், நாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" (எபேசியர் 1:17-19).

நற்செய்திகளைக் கேட்டிருந்தும் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்கள், அவரைக் காணும்படியாக அவர்களுடைய கண்களைத் திறப்பதற்கு ஆண்டவரிடம் நீங்கள் என்றாவது ஜெபித்திருக்கின்றீர்களா? அப்படி நீங்கள் ஒருபோதும் ஜெபித்திருக்கவில்லையெனில், இப்பொழுது நீங்கள் ஏன் ஆரம்பிக்கக் கூடாது? உங்கள் குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள், அண்டையிலுள்ளோர், உடன்பணியாளர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிட்டு அவர்களுக்காக ஆண்டவரிடத்தில் ஜெபியுங்கள்; அவர்கள் மனக்கண்களைத் திறக்கும்படி மன்றாடுங்கள். அவர்கள் பார்க்கும்படி ஆண்டவர் அவர்கள் கண்களைத் திறப்பார். அவர்கள் கிறிஸ்துவின் முகமாய்த் திரும்பி இரட்சிக்கப்படுவார்கள். தவறான நோக்கிலும் சிந்தனையிலும் இருக்கும் விசுவாசிகளுக்காகவும் இதே காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும். ஆண்டவர் நிச்சயமாக உங்கள் ஜெபத்தைக் கேட்டு அவர்களுடைய வாழ்கையில் ஓர் புதிய பொழுதை விடியச்செய்வார். ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்!

## தலைமைத்துவம்

ஆண்டவர் இயேசு தமது சீஷர்களுடன் இருந்தார்; ஆனால் தனிமையில் ஜெபித்தார் என்று ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். ஜெபத்தில் அவரோடு இணைந்துகொள்ள சீஷர்கள் விரும்பவில்லை; அல்லது அவருடன் சேர்ந்து ஜெபிக்க அவர்களால் முடியவில்லை. இருப்பினும் அவர் தொடர்ந்து ஜெபித்தார். ஜெபத்திற்கான பலன்களை பெற்றுக்கொண்டார். மற்றவர்கள் ஜெபிக்காதபோதும் ஜெபித்துக் கொண்டிருக்கின்ற மனிதனே தலைவன். ஜெபத்தில் மற்றவர்கள் சேர்ந்து கொள்வதற்கு பலமணி நேரத்திற்கு முன்பே ஜெபிக்கத் தொடங்கி, மற்றவர்கள் ஜெபத்தை முடித்தபின்னும் அவன் ஜெபத்தில் தொடர்ந்திருப்பான்.

ஜெபிப்பதில் அதிக விருப்பத்தைக் கொண்டிருக்கின்ற மனிதனே தலைவன். அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிடுகின்ற மனிதனே தலைவன். ஜெபத்தின் அளவிலும், தரத்திலும் எல்லோரிலும் முதல்வனாக விளங்குகின்ற மனிதனே தலைவன். எனவேதான் ஆதி அப்போஸ்தலர்கள் ஜெபிப்பதை தங்கள் முதன்மைப் பணியாகவும், வேத வசனத்தைப் போதிப்பதை அதற்கு அடுத்த பணியாகவும் கொண்டிருந்தனர்.

ஒரு தலைவன் தான் ஜெபிக்கும் பழக்கத்தைக் கைவிட்டிருக்கும் சூழ்நிலையில், தலைமைத்துவத்தையும் அவன் கைவிட்டிருக்கிறான் என்ற உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தன்னுடன் இருக்கும் மக்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு, அவன் தன் திறமைகளையும், சாமர்த்தியங்களையும் பயன்படுத்தலாம். ஆனால் அவன் அளவிலும் தரத்திலும் குறைவான தன் ஜெபத்தினால் தலைமைத்துவத்தை இழந்திருக்கிறான் என்பது தான் உண்மை.

ஆண்டவர் இயேசு இதற்கு முற்றிலும் மாறுபட்டிருந்தார். உண்மையில் அவர்தான் தலைவர். ஜெபப் பள்ளியிலும், ஜெப ஊழியத்திலும் நாம் அவரை முன்மாதிரியாகக் கொண்டு, அவரைப் பின்பற்றுவோம். நாம் அவரைப் பின்தொடர்வோம், அவரைப் போல் ஜெபிப்போம்; ஆண்டவர் தம்மை பலருக்கு வெளிப்படுத்துவதை ஆண்டவரின் கிருபையால் காண்போம். அவருக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.

# 12. ஜெபமும் மறுரூபமடைதலும்

"இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளான பின்பு, அவர் பேதுருவையும் யாக்கோபையும் யோவனையும் கூட்டிக்கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். அவர் ஜெபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே, எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷனைப்பண்ணி, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடையமரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேதுருவும், அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும், அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்.அவ்விருவரும் அவரைவிட்டுப் பிரிந்து போகையில், பேதுரு இயேசுவை நோக்கி ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். இப்படி அவன் பேசுகையில், ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். அப்பொழுது இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கி வைத்திருந்தார்கள்" (லூக்கா 9:28-36).

## உள்வட்டம்

இயேசு கிறிஸ்து ஓர் மிகச் சிறந்த அற்புதமான தலைவராக விளங்கினார். ஒவ்வொரு வழியிலும் அவரே நமக்கு மிகச் சிறந்த முன்மாதிரி. சீஷர்கள் அவரோடு கூட இருந்த போதிலும், அவர் தனிமையில் ஜெபித்தார் என்று கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். ஆனால் சீஷர்கள் அந்நிலையிலே தொடர்ந்திருக்க ஆண்டவர் அனுமதிக்கவில்லை. சீஷர்களும் ஜெபிக்க வேண்டும் என்பதில் அதிக ஆவல் கொண்டிருந்தார். எனவே, பன்னிரு சீஷர்கள் முக்கியமான பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு மலையின்மேல் ஜெபிக்கச் சென்றார். பன்னிரு சீஷர்களுடன் ஜெபிப்பதற்கு முன்பாக அந்த மூவருடனும் முதலில் தாம் ஜெபிக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

மற்ற சீஷர்களைக் காட்டிலும் அதிக பயிற்சி அளிக்கப்பட்டிருந்த அந்த மூன்று சீஷர்கள் என்னும் உள்வட்டத்தை ஆண்டவர் கொண்டிருந்தார். இயல்பான கவர்ச்சி, நெருக்கமான உறவு ஆகியவற்றின் காரணமாக அவர்கள் மூவரையும் ஆண்டவர் தேர்ந்தெடுக்கவில்லை. அதனைப் பார்க்கிலும், மனதிலுள்ள ஊழியத்தின் எதிர்கால நோக்கோடு அவர்களை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார். குழுவின் தலைவனாக பேதுரு இருந்ததால் மற்றவர்களைப் பார்க்கிலும் பேதுருவுக்கு அதிக பயிற்சி தேவைப்பட்டது. யோவான் மற்ற அனைவரிலும் அதிக காலம் வாழ்ந்து, முதல் நூற்றாண்டின் இறுதியில் தவறான போதனைகளாலும் மிகுந்த பின்னடைவினாலும் காரியங்கள் ஒருபுறமாக விழத்தொடங்கும்போது அவைகளைப் புதுப்பிக்கின்ற முடிவான பணியில் ஈடுபடுத்தப்பட தீர்மானிக்கப்பட்டான். தன்னுடைய இரத்தத்தில் தன் சாட்சியினை முத்திரையிடுவதற்கு அப்போஸ்தவர்களின் முதல்வனான யாக்கோபு நியமிக்கப்பட்டிருந்தான். எனவே, அவர்கள் மூவரும் முக்கியமானவர்களாக இருந்தனர்.

அந்த மூவரும் எதிர்காலத்தில் நடப்பிக்கப் போகின்ற முக்கியமான காரியங்களுக்காக அவர்கள் ஆயத்தம் பண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த ஆண்டவர் விரும்பினார். அந்த மூவரையும் அவர் ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதை மற்றவர்களுக்கு ஆண்டவர் விளக்கவில்லை. அந்த மூவரில் இருவர் சகோதரர்கள். ஆன்மீகத் தலைவராயிருக்கும் ஒருவர் தாம் கண்டிப்பாக செய்தாக வேண்டிய காரியங்கள் சில உண்டு. அந்தக் காரியங்களுக்கான காரியங்களை தாம் வழி நடத்திச் செல்கின்ற மக்களுக்கு விளக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தங்களுக்கு விளக்கம் எதுவும் கொடுக்காமல் தலைவர் சில காரியங்களை நடப்பிப்பதற்கு மற்றவர்கள் அவரை விடவேண்டும். அவர் உண்மையான தலைவரெனில், மற்றவர்கள் காணாத சில காரியங்களைத் தாம் கண்டு, தாம் பார்த்தவைகளின்படி பொருத்தமான நடவடிக்கைகளை அவர் எடுப்பார். வழிநடத்தப்படுகின்றவர்கள் சரியான நேரத்திற்கு முன்பாக, சில காரியங்களை அறிவதற்கு அனுமதிக்கப் படுவார்களாயின், அவை அவர்களிடத்தில் அமைதியைக் குலைத்துப் போடுவதுமுண்டு.

ஆண்டவர் இயேசுவுக்கு ஜெபமே அனைத்துக் காரியங்களிலும் முதலும் முக்கியமானதாகவும் இருந்ததென்று நாம் பார்த்தோம். எனவே, அந்த மூவரையும் தம்மோடு அழைத்துக் கொண்டு ஒரு பிரத்தியேகமான நோக்கத்துடன் அதாவது ஜெபத்தை பயிற்சி வழியாகப் பாடம் புகட்டுவதற்கென்று மலைக்குச் சென்றார். ஜெபமே அந்த நோக்கம் என்பதனை ஆண்டவரும், அந்த மூவரும் நன்று அறிவார்கள்.

தலைவர்களாய் இருப்பவர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். ஊழியத்தில் நிகழ்கால எதிர்காலத்

தேவைகளைச் சார்ந்த அவர்களும் ஓர் உள்வட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். உள்வட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை தனியே அழைத்துக் கொண்டுபோய் ஜெபிப்பதற்கு தலைவர் தீர்மானிக்க வேண்டும். எல்லோரையும் சமமாக பயிற்றுவிக்காமல் இயேசுவைப் போல அவர்களும் ஒருசிலர் மீது பிரத்தியேக கவனமும் முக்கியத்துவமும் தந்து கூடுதலான பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அதன் மூலம் அவர்களுக்குள் வேண்டுமென்றே முறுமுறுப்பு, பொறாமை, பெருமை கொள்வதற்கான வாய்ப்பை தேவன் கட்டளையிடுகின்றார். அதன் மூலம் சுயத்துக்காக மரிக்காத ஏனைய தமது சீடர்களை உள்ளேயும் சரி, வெளியேயும் சரி தேவனே கையாளும்படி தலைவன் தேவனைச் சார்ந்து வாழவும் செயலாற்றவும் அழைக்கப்படுகிறார். எதிர்காலத்தின் தலைமைத்துவத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு இது ஓர் சிறந்த பயிற்சியாகும். அவர்களை ஜெபிப்பதற்கு பழக்குவிக்க வேண்டும். ஜெபத்தைத் தவிர மற்ற அனைத்திலும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பாரெனில், அவர் தம்முடைய கடமையில் தவறிப் போனதாகவே கருதப்படும். ஜெபத்தில் பின்னடைகின்ற தலைவர்களும் தோற்றுப்போவது தவிர்க்கக் கூடாத காரியமாகும்.

## ஜெபித்தலும், மறுரூபமாக்கப்படுதலும்

"அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷணைப் பண்ணி, அவர் எருசலேமிலே, நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்" (லூக்கா 9:29-31) என்று வேதம் கூறுகிறது.

ஆண்டவர் இயேசு ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டு, பரிசுத்தாவி அவர்மேல் வந்திறங்கினார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அந்த மகிமையான நிகழ்ச்சி அங்கே நடைபெறுவதற்கு அவருடைய ஜெபங்கள் காரணமாயின. இங்கேயும், அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறி, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது என்று பார்க்கின்றோம். அவர் ஜெபிக்கும் முன்பு அவருடைய முகரூபம் மாறவில்லை, வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசிக்கவில்லை. அவர் ஜெபித்துக் கொண்டிருந்த போதுதான் அவை அனைத்தும் நிகழ்ந்தன. பிதாவினிடத்தில் ஏறெடுக்கப்பட்ட இயேசுவின் ஜெபங்களே, அவருடைய முகரூபத்தை மாற்றமடையச் செய்தன. அவர் ஜெபித்திருக்கவில்லையென்றால் ஒன்றும் நிகழ்ந்திருக்காது.

மாற்றப்பட்டது அவருடைய முகரூபம் மட்டுமல்ல அவருடைய ஆடையும் வெண்மையாகிப் பிரகாசித்தது. மோசே, எலியா என்னும்

இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்து அவரோடு பேசிக் கொண்டிருந்தார்கள். இயேசுவினுடைய ஜெபம்தான், அவர் உயிர்த்தெழுதலுக்கு முன்பான அந்த மகிமையான அனுபவத்தைப் பெறும்படி பிதாவை அனுமதிக்கச் செய்தது. அவருடைய ஜெபம் தான் மோசேயையும் எலியாவையும் பிதா அவரிடத்தில் அனுப்பும்படிச் செய்தது. ஒருவேளை, ஆண்டவரை ஆறுதல்படுத்த தொலைதூரத்தில் நிகழவிருக்கும் காரியங்களை தெரிவிக்க அவர்கள் இருவரும் வந்திருக்கலாம். ஆண்டவர் ஜெபித்திருக்கவில்லையென்றால், மோசேயையும், எலியாவையும் அவர் சந்திருக்கக் கூடுமோ?

மறுரூபமலையில் ஆண்டவர் மறுரூபமாகவும், அங்கே மோசேயும், எலியாவும் மாட்சிமையிலே தோன்றவும் கேட்டுக் கொள்ளப்பட்டனரா என்ற வினாவை நாம் எழுப்பலாம்.

நாம் எதையும் நிச்சயமாகக் கூற முடியாது. தாம் மறுரூபமாக்கப்படுவதற்கு ஆண்டவர் பிதாவிடம் கேட்டிருந்திருக்கலாம். அவருடைய ஜெபத்திற்குச் செவிமடுத்து பிதா இவ்விதமாக செயல்பட்டிருந்திருக்கலாம். இன்னொரு புறத்தில், பிதாவிடம் ஆண்டவர் அப்படி கேட்டிருக்க மாட்டார் என்பதும் சாத்தியமே. ஆனால் அதனைப் பார்க்கிலும் தம்முடைய வாழ்விலும், ஊழியத்திலும் பிதாவினுடைய சித்தம் நிறைவேற்றப்படுவதற்காக ஜெபித்துக் கொண்டிருந்திருப்பார். அதனால் அவர் அந்த மகிமையான அனுபவத்தைப் பெறுவதற்கும், மோசே, எலியா ஆகியோரோடு பேசுவதற்கும் பிதா வழிசெய்தார்.

ஜெபத்திற்கான பதிலாக ஆண்டவர் சில காரியங்களையும் செய்வதுண்டு. ஜெபிக்கின்ற பரிசுத்தவான்கள், தாங்கள் ஜெபத்தில் கேட்டிராத அநேக ஆசீர்வாதங்களை ஆண்டவர் அருள்வதுமுண்டு. ஆண்டவருடைய தேவைகள் நம்மால் சந்திக்கப்படும்போது, நம்முடைய தேவைகளை அவர் நிச்சயமாக சந்திப்பார். ஆண்டவர் ஒருவருக்கும் கடனாளியாய் இருப்பதில்லை. ஜெப ஊழித்தில் அவருக்குச்சேவை செய்பவர்களின் தேவைகள் அனைத்தும் அவரால் சந்திக்கப்படுகின்றன. ஜெபத்தைத் தங்களின் அன்றாட முக்கியப் பணியாக கொண்டிருக்கின்ற மக்கள் பூமியின்மேல் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆண்டவரிடமிருந்து மேலானவைகளைப் பெறுகின்றார்கள்.

ஆண்டவரின் மகிமையைக் காணவிரும்பும் விசுவாசி அதற்காக ஜெபிக்க வேண்டும். அப்போது ஆண்டவரின் மகிமை அவருக்குக் காண்பிக்கப்படும். மோசே ஆண்டவரிடம், "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத் 33:18) என்று ஜெபித்தான். அதற்கு

அவர்: "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்" (யாத் 33:19) என கடவுள் மகிழ்ச்சியுடன் மோசேயின் ஜெபத்திற்குப் பதிலளித்தார்.

மோசேயின் ஜெபம் கேட்கப்பட்டதுபோலவே, ஆண்டவரின் மகிமையைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டுகின்ற அனைவர்க்கும் ஆண்டவரின் மகிமை காண்பிக்கப்படும். இன்றைய சபைகள் ஆன்மீக அனுபவத்தில் குறைவுள்ளதாய் இருக்கின்றன என்று பொதுவாக பேசப்படுகின்றன. முற்காலத்தில் சபையின் நிலை வித்தியாசமாயிருந்தது ஆண்டவர் அவர்களுக்கு அறிவால் உணரும் மன உருவாக எண்ணமாக அல்லாமல், அவர்களுடைய வாழ்க்கையில் மிகவும் வெளிப்படையாக இருந்தார். பவுலடியார் ஏராளமான வெளிப்பாடுகளைப் பேசினார். இன்று ஏன் அந்தக் காரியங்கள் மிகவும் அரிதாகிப்போயின? அதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு. ஆனால் ஆலயத்தின் ஜெபமின்மையே அதற்காக முக்கிய காரணங்களில் ஒன்றாகும். முற்காலத்திய சபையின் நிலை வேறு. "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப் 2:42) என்று வேதம் கூறுகின்றது. தனிப்பட்ட ஜெபம், இருவர் சேர்ந்து ஜெபித்தல், சிறு குழுக்களாக ஜெபித்தல், முழு இரவு ஜெபம், சங்கிலித் தொடர் ஜெபம் - இப்படி ஜெபங்களுக்கு அவர்கள் தங்களை பக்தி வினயத்தோடு அர்ப்பணித்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக ஜெபித்த காரணத்தால், அவர்கள் மத்தியில் ஆண்டவரின் பிரசன்னம் எளிதாகப் வெளிப்பட்டது.

ஒரு சமயம் அவர்களெல்லாரும் ஜெபித்தபோது, அவர்கள் இருந்த வீடு அசைந்தது. அவர்கள் பரிசுத்த ஆவியானவராலேயே நிரப்பப்பட்டார்கள் என்று திருமறையில் வாசிக்கின்றோம். இடம் அசைவதைப் பற்றி நாம் அக்கறைப்படவில்லை. என்றாலும், மக்கள் ஜெபிக்க கூடிவரும்போது அவர்கள் கூடிவந்த இடம் அசைந்தது. அதைத் தொடர்ந்து கூடி வந்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டுக் கொண்டே இருந்தார்கள் என்றால் நமக்குள்ளும் இந்த அசைவு தேவை ஆவியானவரின் நிறைவு தேவை. அந்தோ! நம்முடைய நாட்களில் அப்படி ஒரு அசைவும் இல்லை நிரப்புதலும் இல்லை. அதற்கு மாறாக குளிர்ந்துபோன அறிவு மட்டும் பெருத்த கிறிஸ்தவமே மலிந்திருக்கிறது. அது எவரையும் கவரப்போவதில்லை. சில வேளைகளில் மேற்போக்கான கூச்சலை மட்டுமே எழுப்பும் மாம்சக்

கிறிஸ்தவர்களை மட்டுமே பார்க்க முடிகிறது. மனமூன்றிய ஜெபம் அரிதாகிப் போனதால், ஆண்டவரின் வெளிப்படையான பிரசன்னமும் அரிதாகிப்போனது. ஏன் இல்லாமற் போனது. எனவே, எண்ணிறந்த ஆன்மீக அனுபவங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் நாம் ஜெபிக்க வேண்டும். நீங்கள் ஜெபிப்பீர்களா? நான் ஜெபிப்பேன்.

ஆண்டவர் இயேசு ஜெபித்ததால், மோசே எலியா என்னும் இருவரை பிதாவானவர் குமாரனிடத்தில் அனுப்பினார். ஜெபிக்கின்ற தம்முடைய பிள்ளைகளுக்கு கடவுள் எப்போதும் விசேஷித்த தூதுவர்களை அனுப்புகின்றார். தானியேல் ஜெபிக்கின்ற ஒரு மனிதனாய் இருந்தான். எனவே, அவன் சிங்கக் கெபியினுள் தூக்கி எறியப்பட்டபோது, கடவுள் தம் தூதனை அனுப்பி சிங்கத்தின் வாய்களைக் கட்டினார். ஜெப வீரர்களாகிய அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோர் நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவின் கட்டளையின்படி அக்கினிச் சூளையில் போடப்பட்டபோதும் கூட, ஆண்டவர் மனித குமாரனைப் போன்ற ஒருவரை அக்கினிச் சூளையில் அவர்கள் தோழராக அனுப்பி அவர்களுக்கு ஒரு சிறு தீக்காயமுமின்றி மரணத்தினின்று அவர்களை அற்புதமாகக் காப்பாற்றினாரே!

நீங்கள் உங்களை அதிகமாக ஜெபத்திற்கு அர்ப்பணம் செய்வீர்களாயின், உங்கள் அனைத்து காரியங்களிலும் உங்களுக்கு நன்மை உண்டாக இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகத் தலையீட்டை அறிவீர்கள்.

## தூங்குகின்ற சீஷர்கள்

விசுவாசிகள் ஜெபிப்பதற்குப் பதிலாகத் தூங்குவதுதான் மிக மிக துக்ககரமான செயல்களில் ஒன்றாகும். ஆண்டவர் பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக் கொண்டு, ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். அங்கு இயேசு ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். அவர்கள் ஆண்டவரோடு சேர்ந்து ஜெபிப்பதற்கு பதிலாக தூக்கம் என்ற வலையில் தாங்கள் பிடிக்கப்படுவதற்கு சாத்தானை அனுமதித்தார்கள். ஆண்டவர் ஜெபத்தில் போராடிக் கொண்டிருந்தபோது, அவர்கள் தூக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அதன்விளைவாக, அவருடைய ஆடை வெண்மையாகப் பிரகாசித்தது. ஆனால் அம்மூவருமோ தூக்கத்தை அணிந்திருந்தார்கள். அவர் பிதாவினுடைய மகிமையினால் நிறைந்திருந்தார். அவர்களோ தூக்கத்தால் நிறைந்திருந்தார்கள். அவர் மறுரூபமாக்கப்பட்டார். ஆனால் அம்மூவருமோ இருந்தபடியே இருந்தார்கள். மேலும் மோசே, எலியா என்னும் இருவரும் மகிமையோடே காணப்பட்டு

இயேசுவோடு பேசிக் கொண்டிருந்தார்கள். பின்னர் தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் பேதுரு இயேசுவினிடத்தில் முட்டாள்தனமாக பேசியபோது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. ஜெபத்தின் மூலம் இயேசு அனைத்தையும் ஆதாயப்படுத்திக் கொண்டார். அந்த மூவருமோ தூக்கத்தால் அனைத்தையும் இழந்தார்கள்.

மறுரூபமடைந்து மாட்சிமையின் முன்சுவையை தம்முடன் சென்ற மூன்று சீஷர்களும் தனிப்பட்ட விதத்தில் அனுபவிக்க வேண்டுமென்று கடவுள் விரும்பினாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இயேசு சிறைப்படும்போது சீடர்கள் என்ன செய்யவேண்டும் என்று ஆலோசனை கூற மோசேயும், எலியாவும் அனுப்பப்பட்டனரோ? அதுவும்நமக்குத் தெரியாது. அப்படி இருக்குமானால் அம்மூவரும் தங்கள் தூக்கத்தால் யாவற்றையும் இழந்தனர்.

## தூங்குகின்ற நீ

ஜெபிப்பதற்குப் பதிலாக எத்தனை நேரங்களில் நீங்கள் தூங்கியிருக்கின்றீர்கள்? ஜெபிப்பதற்காக முழங்கால்படியிட்டு, எத்தனைமுறை அந்நிலையிலேயே நித்திரையாகி இருக்கின்றீர்கள்? எத்தனை முறை உங்கள் ஜெப வேளைகள் தூங்கும் வேளைகளாய் மாறியிருக்கின்றன? தூங்குவதற்காகவா நீங்கள் நல்ல ஆடையணிந்து ஜெபக்கூட்டத்திற்குச் செல்கின்றீர்கள்? தூங்குவதற்கு உகந்த மனநிலையைக் கொடுக்கின்ற வசதியான இருக்கையை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்களா? ஜெபவேளையில் அடிக்கடி நீங்கள் தூங்குகின்றீர்களா? பின்னர், ஜெபவேளை முடியும்போது, உங்கள் நித்திரைவேளையும் முடிந்து பிற வேலைகளைச் செய்வதற்கு விழிக்கின்றீர்களோ?

ஜெபிக்கும்போது தூங்குவது ஆன்மீக வியாதிக்கு ஏற்ற சான்றாகும். ஆண்டவரோடு கூடிய உறவுமுறையில் ஏதோ தவறு இருக்கின்றது என்பதைத்தான் அது குறிப்பிடுகின்றது. அது சரீர பலவீனம் என்று கருதப்படாமல் ஆன்மீக நிலையில் சரிபடுத்தப்பட வேண்டும். அநேக வேளைகளில் அது பாரமில்லாமையின் அறிகுறி. சோம்பல் ஆவியினுடைய வெளிப்பாடுதான் தூக்கம். ஜெபக்கூட்டங்களுக்குச் சென்று, ஜெபத்தில் தங்களை ஆவி ஆத்துமா சரீரம் - முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்குப் பதிலாக, சாய்ந்து ஓய்வெடுக்கும்படியாக - வசதியாக அமர்ந்துகொண்டு அமைதியாக இருப்பவர்கள் தூக்கத்தைக் கொண்டுவரும் சாத்தானைக் குறைகூற முடியாது. ஜெபிப்பதற்குப் பதிலாக, தூங்குவதையே அவர்கள் விரும்புகின்றார்கள். இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஜெபக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிற நான், அத்தகைய மக்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் தூங்குவதைக் கவனித்திருக்கின்றேன். ஜெபக்

கூட்டங்களில் எப்போதும் தங்களுக்கு வசதியான இடத்தைத் தேடுகின்ற 'சுயநலமான' மக்களையும் நான் கவனித்திருக்கிறேன்.

ஜெபம் என்பது ஒரு போர். போர்முனையில் தூங்குகின்ற எந்த போர்வீரனும் எதிரிகளால் நிச்சயமாக பிடிக்கப்படுவான். அதுபோலவே, ஜெபத்தில் தூங்குகின்ற 'சோம்பேறிப் போர்வீரர்கள்' எதிரியான சாத்தானால் கைப்பற்றப்படுவது அதிக நிச்சயமல்லவா!

தூக்கம், ஜெபம் ஆகியவற்றுடன் தொடர்புடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கிறது என்பதையும் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். தங்கள் வாழ்க்கையில் எல்லா காரியங்களிலும் ஒழுங்கைக் கடைபிடிக்கின்ற மனிதர்களை நாம் அறிவோம். எனினும், பிற காரியங்களை இரவு முழுவதும் செய்வதாயிருந்தாலும் தூக்கத்தால் இடறலடையாத அவர்கள், ஜெபிக்கின்ற வேளைகளில் மட்டும் ஜெபத்தில் தங்களை ஈடுபடுத்த முடியாமல் நித்திரைவயப்படுகிறார்கள். காரணமென்ன? ஜெபிக்கின்ற நேரத்தில் தூக்கத்தைக் கொடுப்பதற்கென்றே சாத்தானால் அசுத்த ஆவிகள் அங்கே அனுப்பி வைக்கப்படுகின்றன. மிகப்பெரிய அழிவை ஏற்படுத்துவதற்கும், தளர்ச்சியைக் கொடுத்து மக்களை ஜெபத்திலி ருந்து பிரித்தெடுப்பதற்கும் அவன் கொண்டுள்ள ஆயுதம் அதுதான். பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கும் விசுவாசிகள் ஜெபக்கூட்டங்களில் தலையிட்டு ஜெபநிலையை சீர்குலைப்பதற்கு சாத்தான் தனிப்பட்ட முறையில் அவனே வருவானெனில் நான் ஆச்சரியப்படமாட்டேன். அவன் தீங்கிழைப்பதற்கு இதைவிட அவனுக்கு வேறு நல்ல இடம் உண்டோ?

சாத்தானையும், அவனுடைய சகாக்களையும் ஜெபத்தின் மூலமாகக் கட்டி, ஒவ்வொரு ஜெபக்கூட்டத்திற்கும் அப்பால் அவனை தூக்கியெறிவது மிகவும் அவசியம். அவ்விதம் அவனை தூக்கி எறிவது மூடநம்பிக்கையல்ல. யோபுவினுடைய நாளில், ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும், அவர்கள் நடுவிலே வந்து நின்றான். கர்த்தரால் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் அவன் அஞ்சவில்லை. அப்படியிருக்க, இன்று உங்களால் அல்லது என்னால் நடத்தப்படுகின்ற ஜெபக்கூட்டத்தில் வந்து நிற்பதற்கு அவன் அஞ்சுவானோ! சீர்குலைவை ஏற்படுத்த துணிச்சலுடன் வருகின்ற அவனும், அவனுடைய சகாக்களும் வெளியேற்றப்பட வேண்டும். அதைச் செய்வதற்கான உத்தரவை நாம் கொண்டுள்ளோம். அதனை நாம் செய்வோம்; பின்னர் எவ்வித இடையூறுமின்றி நாம் ஜெபிக்கலாம்.

விழித்திருப்பதற்குச் செய்யப்பட வேண்டிய பிற காரியங்கள் உண்டு. சிலர் காபி, டீ போன்ற பானங்களைக் குடிக்கிறார்கள்; சிலர்

வைட்டமின் சி மாத்திரையை உட்கொள்கிறார்கள். இன்னும் சிலர் ஜெபக்கூட்டத்திற்கு முன்பு பலமணி நேரம் கொஞ்சமாகவோ அல்லது ஒன்றும் சாப்பிடாமலோ இருக்கிறார்கள். இவைகள் போர் செய்ய உதவுவதால் இவைகளைச் செய்யலாம் என்று ஆலோசனையாகச் சொல்லுகிறோம். ஜெபிக்கும் நிலையை மாற்றி ஓர் அறையைச் சுற்றி சுற்றி வந்து ஜெபிக்கலாம். நீண்ட ஜெபத்திற்கு இரண்டு அல்லது இருபது கிலோமீட்டர் நடந்துகொண்டே ஜெபிக்கலாம். ஜெபிக்கின்ற பாவனையை அவ்வப்போது மாற்றியும் ஜெபிக்கலாம். ஆண்டவருடன் கூடிய ஆழமான, நெருங்கிய உறவே, ஜெபநேரத்தில் தூங்குவதிலிருந்து விடுபவடுதற்குரிய முடிவான பதிலாகும்.

## வானங்கள் திறக்கின்றன

இயேசு மலையின்மேல் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது, பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். சரியான நேரத்தில் அந்த மூவரும் தூக்கத்திலி ருந்து விழித்து அவருடைய மகிமையைக் கண்டார்கள். ஆண்டவரின் மகிமையைப் பார்த்தபோது அவர்கள் அமைதியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பேதுரு அமைதியாக இருக்கவில்லை. ஜெபிக்கின்ற நேரத்தில் தூங்கிய தன்னுடைய பாவத்திற்காக வருத்தப்படுவதற்குப் பதிலாக, தன் மனதில் உதித்த அடுத்த எண்ணத்தை அவன் கூறினான். அந்த எண்ணம் ஆண்டவரிடமிருந்து வரவில்லை. அவன் இயேசுவை நோக்கி, "ஐயரே நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம்" என்று, தான் சொல்கிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். ஜெபிப்பதற்குப் பதிலாக தூங்குகின்ற பரிசுத்தவான்கள், மிகுந்த வெட்கத்துடன் அமைதியாக இருக்க வேண்டும். தூங்கியதற்காக வருந்தி, அப்பொழுதிலிருந்து தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும். அதை அவர்கள் செய்யாவிட்டால் அவர்கள் சொல்லத் தேவையில்லாததைச் சொல்லுவார்கள். ஜெபித்தவர்கள் பேசினால் ஆண்டவரிடம் கேட்டதைச் சொல்லுவார்கள் என்பதே இயல்பானதாகும். ஒரு ஜெபக் கூட்டத்தில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த ஒரு சகோதரன் எனக்கு நினைவுண்டு. அவர் திடீரென தூக்கத்தில் இருந்து விழித்தபோது, தான் ஒரு தரிசனம் கண்டதாகவும், அதனை அங்கிருந்த மற்ற அனைவருக்கும் சொல்ல விரும்புவதாகவும் கூறினான். ஆனால், அந்த தரிசனத்தை அவன் தன்னோடு வைத்துக் கொள்ளும்படியும் தூக்கத்தின் போது அவனுக்கு வெளிப்படுத்திய அந்த ஆவிகளிடமே அதை ஒப்புவிக்கும்படியும் நான் கூறினேன்.

ஆண்டவருக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும்,

எலியாவுக்கு ஒருகூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று பேதுரு சொன்னது பல காரணங்களில் மிகவும் தவறான யோசனையாக இருந்தது. முதலாவதாக, எலியா தீர்க்கதரிசியையும், மோசேயையும் ஆண்டவர் இயேசுவுடன் சமதளத்தில் வைக்க அவன் முயற்சித்தான். அது கடவுளை மிகவும் கோபமூட்டுவதாக இருந்தது. அப்போதுதான் வானம் திறக்கப்பட்டு, "இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்ற பிதாவின் வார்த்தை உண்டாயிற்று. அது இயேசுவிற்கே உரிய இடமன்றி, மற்றவர்களுக்காக உரிய இடமல்ல. அங்கு பேச வேண்டியவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துதானே ஒழிய மோசேயோ, எலியாவோ அல்லது பேதுருவோ அல்ல. ஆண்டவருக்கு முன்பாக நாம் இருக்கும்போது, அமைதியுடன் இருந்து அவர் சொல்வதைக் கேட்கவேண்டும் என்பதை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக் 1:19) என்று யாக்கோபு அறிவுறுத்துகின்றதை நாம் பின்பற்றினால் நலமாயிருக்கும். இரண்டாவதாக, பேதுரு செய்ய உத்தேசித்த தவறு, ஆண்டவர் இயேசு தற்காலிகமானதாக நினைத்த ஓரிடத்தில் அவன் நிரந்தரமாகத் தங்க விரும்பினான். நிரந்தரமாக இருக்கக் கூடிய காரியங்கள் சில உண்டு. நிரந்தரமாக அல்லாமல் கடந்து செல்லும்படியாக நியமிக்கப்பட்டிருக்கின்ற காரியங்களும் உண்டு.

ஆண்டவர் இயேசு சிறிது நேரம் மட்டுமே மறுரூபமாக்கப்பட்ட நிலையில் இருந்தார். மோசேயும், எலியாவும் சிறிது நேரம் மட்டுமே அங்கிருந்தனர். ஆண்டவரின் நோக்கம் முடிவுற்றதும் அந்த காட்சிகள் மறைந்தன. ஒருவேளை அந்த மூன்று சீஷர்களும் தூங்காமல் இருந்திருப்பார்கள் என்றால் ஆண்டவரின் திட்டத்தைஅவர்கள் இழந்திருக்க மாட்டார்கள். அவர்களுடைய முட்டாள்தனமான சிந்தனைக்கு ஒரு முடிவைக் கொண்டுவருவதற்காக வானத்திலிருந்து பிதாவானவர் பேசினார்.

ஆதிகாலத்திய சபையோடு இன்றிருக்கும் சபையை ஒப்பிட்டு, இன்று சபையில் ஆன்மீக அனுபவங்கள் மிகவும் குறைந்து போயிருப்பதைக் குறித்து இதற்குமுன் எழுதியிருந்தோம். இப்போதும், விசுவாசிகள் ஜெபத்தின் மூலமாகக் கேட்டு ஆவிக்குரிய வெளிப்பாட்டை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காகவே ஊக்குவிக்கின்றோம். என்றபோதிலும் அவைகளை ஒருவரும் நிரந்தரமானதாக ஆக்கிக் கொள்ளக்கூடாது. அவைகள் கொஞ்சகாலம் வந்து போகக்கூடும். ஆனால் அவைகளை விசுவாசத்திற்கு நிரந்தர பலனையும் பலத்தையும் கொடுக்கும்.

"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக

அல்ல. அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடுகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம்" (II பேதுரு 1:16:19) என்று பல வருடங்களுக்குப் பின்னர் பேதுரு எழுத முடிந்தது.

சரீரப் பிரகாரமான வெளிப்பாடுகள் நிலையானவைகள் அல்ல. நிலையில்லாமல் கடந்து செல்லும்படி ஆண்டவர் குறித்திருப்பவைகளை நிரந்தரமாக்கிக் கொள்ளும் முயற்சியிலிருந்து ஆண்டவர் நம்மை விடுவிப்பாராக. அவர் சொல்வதைக் கேட்பதற்கும் அவர் சொல்லுகிறபடி செய்வதற்கும் உதவிசெய்வாராக. அதன்பின் நாம் பிழையினின்று காக்கப்படுவோம்.

ஆண்டவரை மகிமைப்படுத்துவதற்கும் சீஷர்களைக் கண்டிப்பதற்கும் வானம் திறக்கப்பட்டது. சீஷர்கள் நித்திரை செய்தபோது அவர் ஜெபித்தார். இதுவும் அவர் ஜெபத்தின் பலனே. ஜெபிக்கும் மக்கள் வானத்தைத் திறக்க கேட்கும்போது வானம் திறக்கப்படும். ஜெபிக்கிற மக்களை ஆசீர்வதிக்க பிதா தாமாகவே வானங்களைத் திறப்பார். ஜெபிக்கும் மக்களின் அதிகாரத்தையும், மகிமையையும் அற்பமாக எண்ணும் மக்களை அடக்குவதற்காவும் அது நடக்கும்.

ஜெபிக்கின்ற எந்த மனிதனும் தன் கௌரவத்தையும், தகுதியையும் காப்பாற்றிக் கொள்வதற்குக் கவலைப்படவேண்டாம். ஆண்டவரால் அதைச் சிறந்த முறையில் செய்யமுடியும்; அதை எப்போதும் அவர் செய்கிறார்.

## குறுகிய ஜெபங்கள்

ஒவ்வொரு செயலுக்கும், ஐந்து மடங்கு ஜெபம் முன்செல்ல வேண்டியதன் அவசியத்தைக் குறித்து ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். இரண்டு நிமிடங்களுக்கும் குறைவான குறுகிய ஜெபங்கள் உடனடியான பதிலைப் பெற்றுக் கொள்வதுமுண்டு. நாம் கூப்பிடுவதற்குமுன்பே பதிலளிப்பதாக ஆண்டவர் வாக்கருளியிருக்கின்றார். ஜெப ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்திருப்போர், காலவரையறையின்றி ஆண்டவரின் பிரசன்னத்தில் தங்கியிருப்பதற்குத் தங்கள் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எப்போதும் ஆண்டவரிடத்தில் ஜெபிக்க நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்வோம். ஒரு நிமிடம் கழித்தோ அல்லது பத்து வருடகால ஜெபத்திற்குப் பின்னரோ, ஆண்டவரின் இருதயம் திருப்தியடையும்போது நம் விண்ணப்பங்கள் அவரால் அங்கீகரிக்கப்படும். அப்போது நம்முடைய ஜெபத்தின் பலனை நாம் பெற்றுக் கொள்வோம். ஆண்டவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!

# 13. நன்றி செலுத்துதலும் தொழுகையும்

"அந்த நேரத்தில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான்; குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார்". (லூக்கா 10:21,22).

## மனிதனின் மகிழ்ச்சி

மனிதன் மகிழ்ச்சியடைவதற்குக் காரணமாக ஏராளமான காரியங்கள் உண்டு. சுவையான உணவினாலோ, சம்பளத்தின் உயர்வினாலோ, எதிரியின் வீழ்ச்சியினாலோ அல்லது இன்னும் பல காரணங்களினாலோ மனிதன் மகிழ்ச்சியுறுகின்றான். ஆனால் சந்தோஷப்படுவதைக் குறித்து ஆண்டவர் சொல்கின்றதை பின்வரும் நிகழ்ச்சியில் காண்கின்றோம்.

"பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பி வந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல் வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்கா 10:17-20).

சாதாரண மனிதர்களின் சந்தோஷத்தைப் போலவே சீஷர்களின் சந்தோஷம் இருந்தது. "உம்முடைய நாமத்தினாலே பிசாசுகள் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்று அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னார்கள். அசுத்தாவிகள் மீது தாங்கள் அதிகாரம் செலுத்த முடிந்ததினால் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். அவர்களின் மகிழ்ச்சியை கீழ்க்காணும் வண்ணம் விளக்க முடியும்.




அவர்கள் நடப்பித்த காரியத்தைச் சார்ந்தே அவர்களின் மகிழ்ச்சி இருந்தது. மீண்டும் பிசாசுகளைத் துரத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் மட்டுமே அவர்களின் மகிழ்ச்சி தொடர்ந்திருக்க முடியும். மேலும் துரத்தப்படுவதற்கு பிசாசுகள் இல்லாமற்போகுமெனில் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஆண்டவரில் நிலைத்திருந்தாலும் அவர்களின் மகிழ்ச்சியும் முடிந்துபோகும். எனவே அத்தகைய மகிழ்ச்சி உத்திரவாதமற்றது.

ஏனென்றால் அதிக எண்ணிக்கையிலான பிசாசுகளும் அவைகளை விரட்ட வல்லமையும் அதற்கு தேவையாயிருக்கிறது. வெளியரங்கமான ஏதோ ஒன்றைச் சார்ந்தே அவர்களின் மகிழ்ச்சி இருக்க வேண்டுமென்று ஆண்டவர் ஒருபோதும் கருதியதில்லை.

ஆவிகள் தங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக அவர்கள் சந்தோஷப்படாமல், தங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதற்காகச் சந்தோஷப்பட வேண்டும் என்று ஆண்டவர் அவர்களிடம் கூறினார். அந்த வகையில் அவர்களின் மகிழ்ச்சியை கீழ்க்காணும் வண்ணம் விளக்க முடியும்.




இந்த அடிப்படையிலான மகிழ்ச்சி என்றென்றும் நிரந்தரமானது. அது எக்காலத்திலும் நிலைத்திருக்கும். அவ்விதமான மகிழ்ச்சியைக் கொண்டிருப்போர் ஒருபோதும் துக்கப்பட வேண்டிய அவசியமில்லை இன்றிருக்கும் அதிகப்படியான உணர்வுப்பெருக்கும். அளவிறந்த வருத்தமும் நாளை ஒன்றுமில்லாமல் போகும்

பிதாவை மாத்திரமே உயர்த்தும் மகிழ்ச்சிக்காகவே ஆண்டவர்

தமது சீஷர்களை அழைத்தார். பிசாசுகளைத் துரத்துவதற்குத் தங்களால் முடிந்தது என்பதிலேயே அவர்கள் மகிழ்ச்சியடைந்து, "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன" என்று அவர்கள் ஆண்டவரிடம் சொன்னார்கள். 'எங்களுக்கு' என்ற சொல் அங்கே குறிப்பிடத்தக்கது. ஆண்டவர் கொடுக்கும் சந்தோஷம் சுயத்தை சிங்காசனத்திலிருந்து தள்ளி மீண்டும் பிதாவை சிங்காசனத்தில் வைப்பதால் வரும் சந்தோஷமே. எனவேதான் ஆண்டவர் அவர்களைப்பார்த்து, "உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்" என்று சொன்னார். பரலோகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதினிமித்தம் உண்டாகும் சந்தோஷத்தில் தற்புகழ்ச்சிக்கு இடமில்லை. ஏனெனில், பரலோகத்தில் அவர்கள் பெயர்களை ஆண்டவர் எழுதியிருக்கும் போது, அதைக்குறித்து யார் தற்பெருமை கொள்ளமுடியும்!

எல்லா மகிமையையும் ஆண்டவர் பெறுகின்ற நிலையில் நாம் அடைகின்ற சந்தோஷமே மெய்யான சந்தோஷம். "இதில் ஆண்டவரின் மகிமை எங்கே இருக்கிறது?" என்ற கேள்வியை ஒவ்வொரு நிலையிலும் நாம் கேட்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். அங்கே ஆண்டவரின் மகிமைக்கென எதுவும் இல்லையெனில், அது நமக்காக ஆண்டவர் நியமித்திருக்கின்ற சந்தோஷமாக இருக்க முடியாது. ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவரின் நாமமே மகிமைப்பட வேண்டும். அதில்தான் நிலையான-நிறைவான சந்தோஷம் இருக்கின்றது.

## ஆண்டவரின் மகிழ்ச்சி

ஆண்டவர் இயேசு மாம்சத்தில் மகிழ்ச்சி அடையவில்லை. அவர் பரிசுத்த ஆவியில் மகிழ்ந்தார். பிதாவைப் போற்றுவதில் அந்த மகிழ்ச்சி உண்டானது. பிதாவிற்கு நன்றி செலுத்தியதன் விளைவாக அந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. பிதா நடப்பித்திருந்த காரியத்தின் பலனாக அந்த மகிழ்ச்சி உருவானது. அது குமாரன் செய்ததன் விளைவு அல்ல. பிதாவே, பிதாவே, பிதாவே என்று ஆரம்பமுதல் முடிவு வரை ஆண்டவர் இயேசுவின் உள்ளம் மகிழ்ந்து, அதனால் "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று கூறினார்.

இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தி அநேகர் கோபம்கொள்ள காரணமாயிருந்த, பிதாவின் செயலுக்காக பிதாவுக்கு நன்றி கூறினார். அது பிதாவினுடைய இரக்கமுள்ள சித்தமாயும் அவருக்கு பிரியமுமாயும் இருந்தபடியால் அவர் மகிழ்ந்தார். இந்த பிதாவின் இரக்கமுள்ள சித்தத்தின்மூலம் ஞானிகளும் கல்விமான்களும் குமாரனை விசுவாசியாமல் எதிர்த்து

நின்றார்கள் என்று தெரிகிறது. பிதா அதை அவ்விதமாக நியமித்தார். குமாரன் முழுவதுமாக அதில் திருப்தியடைந்தார். குழந்தைகள் மாத்திரமே அவரை விசுவாசித்து அவரைப்பின்பற்றுவார்கள் என்று அவரது இரக்கமுள்ள சித்தத்தில் அவர் மகிழ்ந்தார்.

மனிதனுக்கு அது எவ்வித மாறுபட்ட நிலை? நம்மில் அநேகருக்கும் அது எவ்வித மாறுபட்டநிலை? பிதாவையும் குமாரனையும் அறிவதில் திட்டமின்மை இருக்க முடியாதென்ற உண்மையில் அவர் மகிழ்ந்தார். மக்கள் தாங்களாகவே பிதாவை அறிந்து அவரிடம் வரமுடியாதென்பதிலே மகிழ்ந்தார். ஆண்டவரே அதைச்செய்ய வேண்டியதிருந்தது. யார் அவரை அறியக்கூடும் என்பதில் பூரண அதிகாரம் படைத்தவர் ஆண்டவர் ஒருவரே என்ற நிலையில் அவர் மகிழ்ந்தார்.

"கோராசீன் பட்டணமே, உனக்கு ஐயோ! பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ! உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்" என்று ஆண்டவர் இயேசு முன்னர் சொல்லியிருந்தார். (லூக்கா 10:13-15).

அவர் எடுத்துரைத்த காரியம் அநேக மக்களை அதைரியப்படுத்தி, அவர்களை நம்பிக்கை இழக்க செய்திருக்கும். அவர்கள், ஆண்டவர் இயேசுவையும் அவருடைய போதனைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்பதற்கு அதுவே அடையாளமாக இருந்தது. எனினும், அவர் நம்பிக்கை இழக்கவில்லை அவர் அதைரியப்படவில்லை. விட்டுவிட விரும்பவில்லை. அந்த வேளையில் அவர் ஆவியில் களிகூர்ந்து அவரது இரக்கமுள்ள சித்தத்திற்கு நன்றிகூறி பிதாவை ஸ்தோத்தரித்தார். அதில் அவரது கைவிடப்படுதலும் அடங்கியிருந்தது.

ஆண்டவர் இயேசுவின் மகிழ்ச்சியை இவ்வாறு விளக்க முடியும் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிதா தமது திருவுளச் சித்தத்தை நிர்மாணித்தார் → | பிதாவின் சித்தம் குமாரனுக்கு தெரிந்திருந்தது → | பிதாவின் சித்தம் நிறைவேற்றப் பட்டது → | பிதாவின் சித்தம் நிறைவேற்றப் பட்டதை இயேசு அறிந்திருந்தார் → | ஆண்டவர் இயேசு ஆவியில் களி கூர்ந்தார் → | பிதாவை துதித்து அவருக்கு நன்றி செலுத்துவதாய் அவர்தம் மகிழ்ச்சி வெளிப்பட்டது |

ஆண்டவர் இயேசுவின் மகிழ்ச்சி பிதாவின் சித்தத்தை நிபந்தனையின்றிச் சார்ந்திருந்தது. பிதாவினுடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டதும் ஆண்டவர் ஆவியில் மகிழ்ந்து பிதாவை ஸ்தோத்தரித்தார். மக்கள் அவரை விட்டு விலகி மனிதர் முன்னிலையில் அவருடைய ஊழியம் தோல்வியுற்றது போலிருப்பினும் அவரோ தந்தைக்கு நன்றி செலுத்தினார்.

யோவான் ஸ்நானகன் அத்தகைய ஓர் அனுபவத்தை தன் வாழ்வில் அறிந்தான். வேதத்தில் இப்படியொரு நிகழ்ச்சியை வாசிக்கின்றோம்.

"அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதம் உண்டாயிற்று. அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக்குறித்து நீரும் சாட்சி கொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள். யோவான் பிரதியுத்திரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான். நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்த சந்தோஷம் இப்பொழுது எனக்கு சம்பூரணமாயிற்று. அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (யோவான் 3:25-30), என்று யோவான்ஸ்நானகன் அவர்களிடத்தில் கூறியதாக வேதம் விளம்புகிறது.

மக்கள் யோவானிடமிருந்து திரும்பி இயேசுவிடம் சென்றார்கள். அது ஆண்டவரின் திருவுளச்சித்தமாயிருந்தது. அதில் யோவான் பெரிதும் களிகூர்ந்தான். தன்னிடமிருந்து திரும்பி மக்கள் ஆண்டவர் இயேசுவிடம் சென்றபோது யோவானின் மகிழ்ச்சி பூரண நிலைக்கு வந்தது. அவர்கள் இயேசுவின் பக்கமாய் திரும்பும்போது, மனிதருக்கு முன்பாக ஆண்டவர் பெருகவும், யோவான் சிறுகவும் வழி கிடைத்தது. அதன்மூலம் யோவானிடத்தில் உண்டான மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியாக இருந்தது. யாரும் அல்லது எதுவும் அவனிடமிருந்து அந்த மகிழ்ச்சியை எடுத்துக்கொள்ள முடியுமோ? தான் சிறுகக்கூடிய சந்தர்ப்பத்தில் அவன் களிகூர்ந்தான்; அவனுடைய மகிழ்ச்சியை யார் எடுத்துப்போடுவார்?

## விசுவாசிகளின் மகிழ்ச்சி

விசுவாசிகள் எப்போதும் மகிழ்ந்திருக்கும்படி ஆண்டவர் அழைத்திருக்கின்றார். ஆண்டவருக்குள் களிகூர்வதற்கு அவர்கள்

அழைக்கப்பட்டிருக்கின்றனர். நடைமுறையில் இது எப்படி எளிதில் கடைபிடிக்கப்பட முடியும்? கீழே காண்போம்.

**முதலாவது இயேசு**

**அடுத்தது மற்றவர்கள்**

**இறுதியாக நீங்கள்.**

தன்னுடைய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் இயேசுவை முதலாவதாகவும், மற்றவர்களை அடுத்தபடியாகவும், தன்னை இறுதியாகவும் வைக்கின்ற மனிதன் நிலையான சந்தோஷத்தைக் காத்துக்கொள்வான். அதைத்தான் யோவான்ஸ்நானகன் செய்தான். அவன் ஆண்டவர் இயேசுவை முதலாவதாக வைத்தான். அவன் தான் சிறுகவும் ஆண்டவர் பெருகவும் வேண்டுமென்று விரும்பினான். அதனை நிறைவேற்றுவதற்கு அவன் செயல்பட்டான். இரண்டாவதாக, அவன் தன்னோடிருந்த சீஷர்களையும் மக்கள் கூட்டத்தையும் ஆண்டவருக்கு அடுத்தபடியாக வைத்தான். அவர்களை இயேசுவினிடத்தில் அவன் வழிநடத்தினான். அதன் பின்னர், அவன் தன்னைப்பற்றி இறுதியாக சிந்தித்தான். அவனுக்கென்று ஓர் இடம் இருந்தது; மணவாளனுடைய தோழனாக அவர் அருகில் நிற்பதுவே அந்த இடமாகும். அதனை அவன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டான். அப்பொழுது அவனுடைய சந்தோஷம் சம்பூரணமாயிற்று.

**சிலர் தங்களுடைய வாழ்க்கையில்,**

**முதலாவது தங்களையும்**

**அடுத்தபடியாக மற்றவர்களையும்**

**இறுதியாக இயேசுவையும் வைத்துவிடுகிறார்கள்.**

உலகிலுள்ள அனைத்துப் பாவங்களும் இந்த "தலைகீழ் வாழ்க்கை" முறையின் விளைவே ஆகும். பரிசுத்த ஆவியானவரே மகிழ்ச்சியை உருவாக்குகிறார். ஆனால் அதற்கு முன்னர் மனிதன், இயேசுவை முதலாவதாகவும், மற்றவர்களை அடுத்தபடியாகவும், தன்னை இறுதியாகவும் வைத்துக்கொண்டால் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் அந்த நிலையான மகிழ்ச்சியை ஏற்படுத்துவார். இந்த சுலபமான முறையை செயல்படுத்தும்போது உலகத்திலும் தனி நபர் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் சமுதாயத்திலும் புரட்சிகரமான மாறுதல் உண்டாகும். முயற்சி செய்வீர்களா?

## ஜெபத்திற்கும் இவற்றிற்கும் என்ன சம்பந்தம்?

இக்கருத்து ஜெபத்தை கருவாகக்கொண்ட இப்புஸ்தகத்திற்குள் எவ்வாறு அடங்கும் என்று கேட்கலாம். கண்டிப்பாய் இது அடங்கும்.

ஏனெனில், இயேசு தம் தந்தையை நோக்கி: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்; ஆம் பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான். குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனுந்தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார்" (லூக்கா 10:21,22).

நன்றி செலுத்துதல் ஜெபமாகும். நன்றி செலுத்துதல் என்பது ஜெபத்தின் உன்னத நிலையாகும். எல்லா சூழ்நிலைகளிலும், ஆண்டவருக்கு நன்றி செலுத்தக் கூடியவர்கள், ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி பெற்றவர்கள். தங்கள் சுய வாழ்க்கையை முன்னேற்றக்கூடிய காரியங்களை ஆண்டவர் செய்வாரெனில் சிலர் நன்றி செலுத்துவார்கள். ஆயினும் சுய வாழ்க்கை சூனியமாக்கப்படும் துன்பமிகு வேளையிலும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதே நம் கடமை.

"நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன், கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21) என்று தான் அனைத்தையும் இழந்து நின்ற வேதனை மிகுந்த வேளையில் யோபு கூறினான். அது விலையுயர்ந்த துதி, அது தியாகத்தின் துதி. அத்தகைய துதியினை ஆண்டவருக்குச் செலுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக் கடவோம்" (எபி 13:15) என்று வேதம் கூறுகிறது.

விசுவாசி எல்லா காரியத்திற்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று திருமறை எதிர்பார்க்கின்றது. உதாரணமாக, "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெசலோ 5:18), "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" (எபேசியர்5:20). "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச்செய்தாலும் அதையெல்லாம், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையில் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ 3:17). இதில் நமக்கு ஒரு முன்மாதிரியை ஆண்டவர் இயேசு விட்டுச் சென்றிருக்கின்றார். அந்த முன்மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். அனைத்தும் ஆண்டவரின் பூரண ஆளுகைக்குட்பட்டது. எனவே எதையும் வெளித்தோற்றத்தின்படி தீர்மானிக்கக்கூடாது. நாம்

அவர்மீது இவ்விதம் நம்பிக்கை வைத்து, எல்லா சூழ்நிலைகளிலும் அவர் மூலமாக பிதாவுக்கு நன்றிகளைச் செலுத்த வேண்டும். அப்போது எந்த ஒரு கேடும் நம்மை ஒருபோதும் அணுகாது. ஏனென்றால் பிசாசு அல்ல, ஆண்டவரே முடிவான அதிகாரம் உள்ளவர்.

"அன்றியும் அவருடைய தீர்மானித்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28) என்று வேதம் கூறுகிறது. ஆண்டவர் தம் வார்த்தையை நிறைவேற்றுவார்.

ஆம்! அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட யாவருக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடைபெற வேண்டும். அந்தத் தீர்மானம் என்ன? எவர்கள் முன்குறிக்கப்பட்டவர்களோ அவர்கள் தமது தெய்வத்திருமகனின் சாயலுக்கு ஒப்பாயிருக்கவேண்டும். ஏனெனில், அவர் சகோதரர் அநேகருக்குள் முதற்பேரானவராய் இருக்கவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு அவர் செய்யும் எல்லா காரியங்களுக்கும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தவேண்டும்.

எல்லா சூழ்நிலையிலும் நாம் எவ்விதம் அதை பார்த்தாலும் ஆண்டவர் முடிவுவரை செயலாற்றுகின்றார். எனவே, நாம் புரிந்துகொள்ள முடியாத போதும்கூட, ஆண்டவருடைய வார்த்தையை நம்பி, வருகின்ற நன்மைக்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஆண்டவருடைய செயலையும், நம்மையும் அழிப்பதற்கென்று குறிபார்த்திருக்கின்ற சாத்தானுடைய திட்டங்களையும் செயல்களையும் பற்றி சிலர் கேட்கலாம். சாத்தான் இறுதியானவன் அல்ல என்பதே அவர்களின் அந்தக் கேள்விக்குப் பதிலாகும். ஆண்டவரே இறுதியானவர். நமக்கு எதிராக தீட்டப்படுகின்ற சாத்தானுடைய திட்டங்கள், அநேக வேளைகளில் கடவுளின் நாமமகிமைக்காக, நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாறி விடுகின்றன. நம்முடைய நன்மைக்கேதுவாகவும், நம்முடைய நாம மகிமைக்காகவும் திருப்பப்படாத சாத்தானுடைய திட்டங்களை ஆண்டவர் முறியடித்து அவைகளை வாய்க்காமல் போகப்பண்ணுகிறார். ஏனெனில், சாத்தான் அடிக்கடி மனித வாழ்க்கையில் தலையிடுகின்றான். "மனிதனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சும்கோபத்தை நீர் அடக்குவீர்" (சங். 76:10) என்ற திருமறை வசனம் அந்த உண்மையைத் தெரிவிக்கின்றது. எனவே, மனிதனுடைய கோபம் ஆண்டவரைத் துதிப்பதற்கு ஒரு மூலாதாரமாக மாறுகிறது. அதன்பின்னர், சாத்தான் எதையும் நமக்கு எதிராகக் கொண்டுவர அனுமதிக்கப்படுவதில்லை என்பதில் நாம் நிச்சயமாக இருக்க முடியும்.

எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவருக்கு நாம் துதியையும், நன்றியையும் செலுத்துவோம். அதன்மூலம் கிறிஸ்துவிடமிருந்து நாம் கற்றிருக்கின்றோம் என்பதை நிரூபிப்போம். ஆமென்!

# 14. நற்செய்திப்பணியும் போராட்டமும்

"இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து தாம் போகும் சகலபட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்கா 10:1,2).

## அறுவடை மிகுந்திருக்கிறது

அறுப்பு மிகுதி என்று ஆண்டவர் சொன்னார். அந்த மிகுதியான அறுவடை என்ன? **முதலாவதாக**, உங்களுடைய ஆவி, ஆன்மா, சரீரம் முழுவதையும் ஆண்டவருக்காக அறுவடை செய்தல். ஆண்டவர் விரும்புகின்ற-எதிர்ப்பார்க்கின்ற முதல் அறுவடை அதுதான். அவருக்காக நாம் செயலாற்றுவதற்கு அவர் நம்மை வழிநடத்துமுன், முதல் அறுவடையாக நம்மை அவருடைய களஞ்சியத்தில் சேர்ப்பதற்கு, நம் முழு ஒத்துழைப்பையும் அவர் விரும்புகின்றார்.

**இரண்டாவதாக**, உங்கள் குடும்பத்தின் அறுவடை உங்கள் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரிடத்தில் வரவேண்டும் என்றும், எல்லா காரியங்களிலும் அவருக்கு முழுமையாக கீழ்ப்படிய வேண்டும் என்றும் ஆண்டவர் எதிர்பார்க்கின்றார். அப்போது உங்கள் குடும்பத்தில் மிகுதியான அறுவடை இருக்கும்.

**மூன்றாவதாக**, உங்கள் அண்டையிலுள்ளவர்களின் அறுவடை உங்கள் அருகிலுள்ளோர், உங்களுக்கு மிகவும் நெருங்கியவர்கள், உங்களோடு இணைந்து பணிபுரிபவர்கள், உங்களோடு நெருங்கிப்பயணம் செய்பவர்கள் - ஆகிய அனைவரும் தம்மிடத்தில் வரவேண்டும் என்றும், எல்லா காரியங்களிலும் தமக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் ஆண்டவர் விரும்புகின்றார்.

**நான்காவதாக**, உங்களுடைய நகரம், பட்டணம் அல்லது கிராமத்தின் அறுவடை அங்கிருக்கும் அனைத்து மக்களும் ஆண்டவரின் நற்செய்தியைக் கேட்டு ஆண்டவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, எல்லா காரியங்களிலும் அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகின்றார்.

**ஐந்தாவதாக**, உங்கள் தேசத்தின் அறுவடை. அந்த அறுவடையும் மிகுதியாக இருக்கின்றது. உங்கள் நாட்டின் மக்கள் அனைவரும்

மீட்பளிக்கும் ஆண்டவரின் அன்பைக் கேள்வியுற்று ஆண்டவர் இயேசுவின் முகமாய்த் திரும்பி, எல்லா காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.

ஆறாவதாக, உங்களுடைய கண்டத்தின் அறுவடை ஆண்டவர் இந்த உலகத்தைக் கண்டங்களாகப் பிரித்திருக்கின்றார். உங்களுடைய கண்டத்தில் மிகுதியான அறுவடையை ஆண்டவர் விரும்புகின்றார்.

நிறைவாக, நீங்கள் மானிடராயிருக்கின்றீர்கள். இந்த உலகம் முழுவதிலும் மனிதர்கள் இருக்கிறார்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கைக்கு உரியவர்கள். அது உலகம் முழுவதிலும் அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் பார்க்கும்போது, பூமியின்மேல் 500 கோடிக்கும் அதிகமான மக்களின் அறுவடை காத்துக்கொண்டிருக்கின்றது. பல இடங்களில் கதிர்முற்றி இருக்கின்றது. வேலையாட்களின் குறைவினால் அவை விரைவில் அழிந்துபோகலாம். ஆம்! அறுவடை மிகுதியாயிருக்கின்றது.

## அறுவடை கர்த்தருடையது

இந்த அத்தியாயத்தின் முன்பகுதியில் நாம் பார்த்த ஏழு வகையான அறுவடையும் கர்த்தருடைய அறுவடையே. அதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அறுவடை ஏதோ ஒரு தனி நபரையோ, ஊழியத்தையோ, நிறுவனத்தையோ, சபைப்பிரிவையோ, சேர்ந்ததல்ல. அறுவடை கர்த்தருடையது. பிதாவே அறுவடையின் நாயகர். அது அவருடைய அறுவடை.

தன்னைச் சேர்ந்ததென்று எதையாகிலும் ஒருவன் உரிமை கொண்டாடினால் அது மதியற்ற செயலாகும். அறுவடையின் எந்தப் பகுதியும் மனிதனைச் சேருமெனில், அது ஆண்டவருடையதாய் இருக்க முடியாது. அறுவடையின் ஒரு பகுதியினை தனக்குரியதென்று உரிமை கொண்டாடும் எந்த ஒருவனும், அறுவடையின் அந்தப் பகுதி ஆண்டவருடையதல்ல என்றே கூறுகின்றான். அறுவடையின் ஒரு பகுதியை என்னுடையதென்று ஒதுக்கி வைத்துக்கொள்வேனாயின், ஆண்டவரிடமிருந்து அதை நான் பிரித்தெடுக்கின்றேன் என்றுதானே பொருள்.

இன்று பூமியிலிருக்கும் 500 கோடி மக்களும் ஆண்டவரைச் சேர்ந்தவர்கள் என்று நாம் மீண்டும் சொல்வோம். ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களின் ஊழியத் தளங்கள் அனைத்தும் ஆண்டவருக்குரியவை. அவை ஆண்டவருக்கு மட்டுமே உரியவையாகும். எந்த சபைப்பிரிவுகளையோ,

ஊழிய நிறுவனங்களையோ, தனி நபரையோ அவை சார்ந்தவை அல்ல அவை அனைத்தும் ஆண்டவருக்கு உரியவைகள்; அவை ஆண்டவருடையவை.

ஆண்டவரைச் சேர்ந்த அனைவரும், ஆண்டவருக்குத் தங்களை முற்றிலுமாக ஒப்புவித்து, தங்களுக்கென சொந்தமாக்க முயன்று அவருடைய அறுவடையை அவரிடத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். உங்களுடையவை என்று நீங்கள் நினைத்து ஒதுக்கிய அனைத்தையும், ஆண்டவருக்கு முன்பாகக் கொண்டுசென்று, அவருடைய திருக்கரங்களில் ஒப்படைத்து, "ஆண்டவரே, அனைத்தையும் எடுத்துக்கொள்ளும். அறுவடை உம்முடையது. அவை ஒருபோதும் என்னுடையவை அல்ல, ஆனால் அவைகளை என்னுடையவையென்று நான் எடுத்துக்கொண்டதன் மூலம் நான் மிகப்பெரிய தீங்கிழைத்திருக்கின்றேன். ஆண்டவரே, இன்று முதல் இனி எக்காலத்திலும் அறுவடை உம்முடையதே. ஒருபோதும் உம்முடையதை நான் உரிமையாக்கிக் கொள்ளமாட்டேன். நீர் என்னை உமது உரிமையாக்கிக்கொள்ளும்" என்று அவரிடத்தில் சொல்வதற்கு இதுவே தக்க தருணமாக இருக்கலாம்.

## வேலையாட்களோ கொஞ்சம்

"இவைகளுக்குப்பின்பு கர்த்தர் வேறே எழுபது பேரை நியமித்து, தாம் போகும் சகலப்பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" என்றார். வேலையாட்களின் குறைவினை ஆண்டவர் அங்கே முறையிடுவது ஆச்சரியகரமானது. இன்றும் அதே குற்றச்சாட்டினை ஆண்டவர் நிச்சயமாக சொல்லக்கூடும் என்பது அதைவிட ஆச்சரியகரமானதாகும். மதம் மாற்றப்பட்ட ஏராளமான மக்கள் ஓரிடத்தில் இருக்கக்கூடும். இருந்தபோதிலும் வேலையாட்களோ இல்லை. வேலையாள் என்பவன்,

- ☆ முற்றிலும் மாற்றப்பட்டவனாக இருக்க வேண்டும்.
- ☆ பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.
- ☆ எல்லா பாவங்களிலிருந்தும், அது எந்த வகையிலிருந்தாலும் அவைகளிலிருந்தும் முழுமையாக விடுபட்டிருக்க வேண்டும்.
- ☆ உலகத்தின் மீதும், உலகத்திலுள்ளவைகள் மீதும் கொண்டிருந்த அன்பை அறவே ஒழித்து, ஆண்டவர் மீதான அன்பை அனுதினமும் புதுப்பிப்பவராக இருக்கவேண்டும்.
- ☆ அறுவடை ஆண்டவருடையது, அது ஆண்டவருக்கு மட்டுமே

உரியது என்ற சத்தியத்தை மனதில் ஆழப்பதித்தவராக இருக்க வேண்டும்.

☆ தனக்குண்டான யாவற்றையும் விட்டுவிட்டு, அறுவடைக்குத்தன்னை ஆண்டவர் அனுப்ப தேர்ந்தெடுத்திருக்கும் இடம் எதுவாயினும் அங்கே செல்ல ஆயத்தமுடையவராய் இருக்க வேண்டும்.

☆ தனக்கென எதையும் செய்யாமல், அறுவடைப்பணியில் ஆண்டவருக்கென கடினமாக உழைப்பதற்கு ஆயத்தமுடைய வராகவும், விருப்பமுடையவராகவும் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டிருக்கும் தேவையான தகுதிகளைக் கொண்டிருக்கும் மக்கள் மிகக்கொஞ்சம். வேலையாட்களின் எண்ணிக்கைக் குறைவிற்குக் காரணம் அதுதான். அன்று அந்த எழுபது பேருக்குக் கொடுக்கப்பட்ட கீழ்க்காணும் உத்தரவுகளின் அடிப்படையில், இன்று எத்தனை பேர் செல்ல ஆயத்தம் என்று கேட்டுப்பாருங்கள்.

❒ பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம்.

❒ ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது; இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள்.

❒ அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப்புசித்துக் குடியுங்கள்.

❒ பிணியாளிகளை சொஸ்தமாக்குங்கள்.

அனுப்பப்படக்கூடிய மூன்று வகையான வேலையாட்கள் உண்டு.

❒ தாமே செல்வோர்

❒ தங்கள் ஜெபங்களின் மூலமாகச் செல்வோர்

❒ கொடுப்பதின் மூலமாகச் செல்வோர்.

ஒவ்வொரு வகையான வேலையாளும் சீஷத்துவத்தின் அடிப்படை நியதிகளைக் கடைபிடித்தாக வேண்டும். "ஒருவன் என்பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23). "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை யெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான் (லூக்கா 14:33) என்று ஆண்டவர் இயேசு அறிவித்தவைகளும் சீஷத்துவத்திற்கான அடிப்படை நியதிகளில் அடங்கும்.

சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரின் அருட்செய்தியை பிரசங்கிக்கச் செல்கின்ற வேலையாளும் சிலுவையில் அறையப்பட்ட மனிதனாக - தன்சுயத்துக்கு மறுப்புச்சொல்லும் மனிதனாக இருக்க வேண்டும். ஜெபிக்கின்ற வேலையாள் தானும் அவ்வண்ணமே தன் சுயத்தை சிலுவையில் அறைந்த ஒரு மனிதனாக இருக்க வேண்டும். அப்படியானால்தான், சிலுவையில் அறையப்பட்டோரின் ஊழியத்திற்காக அந்த வேலையாள் ஜெபிக்க முடியும். தனக்குண்டானவைகளைக் கொடுக்கின்ற வேலையாள் தானும், சிலுவையில் அறையப்பட்டவனாயும் தன்னை வெறுத்து கொடுக்கிறவனாயும் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் உண்மையிலேயே சிலுவையில் அறையப்பட்டு போர்க்களத்தில் நிற்போரின் தேவையை அவன் சந்திக்க முடியாது.

## ஆண்டவரே வேலையாட்களை அனுப்பமுடியும்

வேலையாட்களை அனுப்புகின்ற முழுப்பொறுப்பையும், முழு உரிமையையும் ஆண்டவரே கொண்டுள்ளார். மனிதர்கள், அமைப்புகள், இயக்கங்கள் வேலையாட்களை அனுப்புகிறார்கள். அது அவர்களுடைய அறுவடைக்கே. ஆண்டவருடைய அறுவடைக்கல்ல. ஆண்டவருடைய அறுவடைக்கு மனிதர்களை மனிதன் அனுப்ப முடியாது.

தம்முடைய அறுவடைக்குள் வேலையாட்களை ஆண்டவர் அனுப்புகின்றார். தகுதியான மக்களை அவர் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார். இருதயங்களை ஆராய்ந்து அவைகளுக்கேற்றபடி ஆண்டவர் வேலையாட்களைத் தேர்ந்தெடுக்கின்றார். சீஷத்துவத்தின் அடிப்படை நியதிகளுக்கு உட்படாத எந்த ஒருவனையும் ஆண்டவர் அனுப்புவதில்லை. அவசர நிலை காரணத்தால் தகுதியற்ற மக்களை அவர் அனுப்பமாட்டார். தகுதி வாய்ந்த மக்களைத் தாம் காணும்வரை, அவர்களுக்காக காத்திருக்க அவர் ஆயத்தமாயிருக்கிறார். அதற்கு பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமெனில், அத்தனை ஆண்டுகள் அவர் காத்திருப்பார். நூறு ஆண்டுகள் காத்திருக்கத் தேவையெனில் அத்தனை நீண்ட காலமும் அவர் காத்திருப்பார். ஒரு நாட்டில் முக்கியமாக ஏதோ ஒன்றை அவர் செய்வதற்கு முன்னால், ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகள் அவர் காத்திருந்ததுண்டு என்பதை சரித்திரம் நமக்குக் காட்டுகின்றது. அவர் அனுப்பக்கூடிய தகுந்த வேலையாள் கிடைக்கும்வரை காத்திருப்பார்.

'வேலையாட்கள்' என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்கின்ற ஏராளமான மனிதர்கள் உண்டு. அவர்கள் ஏதோ ஒரு அமைப்பின்மூலம் அனுப்பப்பட்டவர்கள். ஆனால் "அவர்களை அனுப்பியவர் ஆண்டவரா?" என்பதுதான் கேள்வி.

## வேலையாட்கள் குறைவிற்கு ஜெபமே பதில்

வேலையாட்களின் குறைவிற்கு ஆண்டவரின் தீர்வு, இன்று நடைபெறுகின்ற காரியத்திலிருந்து பெரிதும் வேறுபட்டது. மனிதன் பல்வேறு விதங்களில் அதிவேகமாக திருமறைத் தகவல்களை மனிதர்களின் தலைகளில் நிறைத்து, பின்னர் அவர்களை அறுவடைப் பணிக்கென அனுப்புகின்றான். அவர்களோ தங்களை அனுப்பிய மனிதர்களுக்காக உழைக்கச் செல்கிறார்கள்.

வேலையாட்களின் குறைவிற்கு ஆண்டவர் ஒரே ஒரு தீர்வினை வைத்திருக்கின்றார். அறுவடையின் ஆண்டவரிடத்தில் ஜெபிப்பதே அந்தத் தீர்வு.

**யாரிடம் ஜெபிப்பது? என்ன ஜெபிப்பது? யார் ஜெபிப்பது?**

- பிதாவாகிய கடவுளிடத்தில் ஜெபிக்க வேண்டும். அவரே அறுவடையின் ஆண்டவர்.
- அவருடைய அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி ஜெபிக்க வேண்டும்.
- சீஷர்கள் மூலம் இந்த ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும்.

போவதெற்கென்று ஆயத்தம் செய்யப்பட்ட எழுபதுபேர் தங்களுக்காகவே ஜெபிக்க வேண்டும். திரளான மக்கள் கூட்டத்திடம் ஜெபிக்கும்படி அவர் கேட்கவில்லை. வேலையாளுக்குரிய தகுதிகளைப் பெற்றவர்களையே, மற்ற வேலையாட்களுக்காக ஜெபிக்கும்படி அவர் கேட்டார்.

தன்னைத்தான் வெறுக்காமலும், தன்னுடைய சிலுவையை அனுதினமும் தான் சுமக்காமலும், தனக்குண்டான யாவற்றையும் விட்டுக்கொடுக்காமல் இருக்கின்ற ஒருவன் ஜெபிக்கத் தீர்மானிப்பானெனில், அவன் மிகப்பெரிய தீங்கைச் செய்கிறான் என்று அர்த்தம். தன்னைப்போன்ற தகுதியற்ற மக்களை எழுப்பி அவர்களை ஆண்டவர் தம் ஊழியத்திற்கு அனுப்ப வேண்டும் என்றுதானே அவன் ஜெபிக்கின்றான். அந்த ஜெபத்தை ஆண்டவர் கேட்பாராகில், சீஷத்துவத்தின் அடிப்படைத் தகுதிகளற்ற மக்களையல்லவா ஊழியத்திற்கு அனுப்ப வேண்டியதிருக்கும். எனவே அத்தகைய ஜெபம் ஒரு பாவம்.

வேலையாட்களின் குறைவினையும், அதற்குரிய தீர்வாக, வேலையாட்களுக்காக தமது சீஷர்களை ஜெபிக்கும்படி ஆண்டவர் சொன்னதையும் ஒருவன் அறிவானாகில், முதற்கண் அவன் தன்னைத்தான், "நான் ஒரு வேலையாளோ? ஆண்டவர் என்னை அனுப்பக்கூடுமா? என்னைப்போன்ற இருதயமுள்ளவர்களை ஆண்டவர் அனுப்பினால்,

அது ஆண்டவருக்கு முன்பாக ஊழியத்தை முன்னேற்றுவதாக இருக்குமா? அல்லது முன்னேற்றத்தைத் தடைசெய்வதாக இருக்குமா?" என்று கேட்க வேண்டும். அந்த கவனமான சுய ஆய்விற்குப் பின்னர், ஒருவேளை தான் ஊழியத்திற்கு அனுப்பப்படுவதற்குத் தகுதியற்றவன் என்பதையும், அதன் தொடர்ச்சியாக வேலையாட்களுக்காக ஜெபிப்பதற்கும் தகுதியில்லாதவன் என்பதையும் அவன் கண்டுகொள்ளலாம். இருந்தபோதிலும், தான் ஆண்டவரால் உபயோகிக்கப்பட அவன் விரும்புவானெனில், ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்கேற்ற வேலையாளாய் தன்னை தகுதிப்படுத்தும்படி அவன் ஜெபிக்க வேண்டும். தன் முழு வாழ்க்கையையும் ஆண்டவருக்கு முன்பாகக் கொண்டுவந்து, தன் வாழ்க்கையைக் குறித்த ஆண்டவரின் தீர்ப்பை ஏற்று, ஆண்டவரோடு அமர்ந்து தன் வாழ்வின் குறைகளையெல்லாம் களைந்தெறிய வேண்டும். தன்னுடைய வாழ்க்கை சரிசெய்யப்பட்ட பின்னர் "வேலையாள்" என்ற தகுதியை அவன் பெறுவான். அப்பொழுதுதான் வேலையாட்களுக்காக ஜெபிக்கும் தகுதியையும் அவன் அடைவான்.

ஊழியத்திற்காக செல்வோருக்கும் - ஜெபிப்போருக்கும் கொடுப்போருக்கும் ஆன்மீகத்தேவைகளாக தூய்மை, பரிசுத்தம், அர்ப்பணம் ஆகியவை ஒரே விதமாகவே தேவைப்படுகின்றன. அர்ப்பணமில்லாமல் கொடுப்போர் சுவிசேஷ ஊழியத்திற்கு துணிகரமாகத் தீங்கிழைக்கின்றனர். அவர்களுடைய பணம் ஆண்டவர் அனுமதித்திராத திட்டங்களை நிறைவேற்றவும், ஆண்டவர் அனுப்பாத ஆட்களை அனுப்பவும் வழிநடத்தி ஆண்டவரது வழியில் குறுக்கே நிற்கும்.

## வேலையாட்களுக்காக ஜெபித்தல்

அர்ப்பணமுள்ள வேலையாட்களை எழுப்பி அனுப்பவேண்டுமென்று ஜெபிக்கும் ஒரு அர்ப்பணமில்லாதவனின் ஜெபம் பொய்மை. என்னுடைய வாழ்க்கையில் செய்யப்படுவதற்கு ஆண்டவரை நான் அனுமதித்திராத ஒரு காரியத்தை, மற்றொருவனுடைய வாழ்க்கையில் செய்வதற்கு ஆண்டவர் என்னுடைய ஜெபங்களை பயன்படுத்த முடியாது. ஒருவருடைய அர்ப்பணிப்பின் எல்லைக்கு அப்பால் ஆண்டவர் அவனை உபயோகிக்க இயலாது.

அர்ப்பணிக்கப்பட்ட தூய்மையான இருதயமுள்ளவர்கள் சபையில் மிகச்சிலராக மட்டுமே இருக்கின்ற காரணத்தால், வேலையாட்களுக்காக ஜெபிக்கின்ற கடமையும் மிகச்சிலருக்குரிய பணியாகவே இருக்க வேண்டும். அந்த மிகச்சிலரில் நீங்கள் ஒருவராயின், பின் சொல்லப்பட்டிருப்பது உங்களுக்காக உரியது.

நீங்கள் ஆண்டவருக்கு முன் முக்கியமானவர்கள்; நீங்கள் அவருக்குத்

தேவையானவர்கள்; நீங்கள் அரிதானவர்கள். சாத்தான் உங்களை வெறுக்கிறான். பாவத்திற்குள்ளும் உலக ஆசைகளுக்குள்ளும் உங்களை மூழ்கடித்து, "ஆண்டவரின் வேலையாள்" என்ற தகுதியினை இழக்கச்செய்வதற்கு அவன் வகைதேடி சுற்றித் திரிகிறான். எனவே அவனுக்குச் சிறிதும் இடம் கொடுக்காமல் ஆண்டவரோடு நீங்கள் நெருங்கி நடக்கவேண்டும். உங்கள் முழு இருதயத்தோடும் பாவத்தை வெறுக்க வேண்டும். உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் ஆண்டவரை நேசிக்க வேண்டும். பொய்மையும் நேர்மையின்மையையும் முற்றிலுமாக வெறுத்து, முழு மனதோடும் உண்மையில் அவரை நேசிக்க வேண்டும்.

உங்களை ஆண்டவருக்குரியவர்களாய் அவருடைய உபயோகத்திற் குரியவர்களாய் ஆக்கிக் கொள்ளுங்கள். "ஆண்டவரே, இதோ நான் இங்கே இருக்கிறேன். உம்முடைய வேலையாளாய் செல்ல நான் ஆயத்தமாயிருக்கின்றேன். செல்வதற்கோ, ஜெபிப்பதற்கோ, கொடுப்பதற்கோ - எதுவாயினும் நான் தயாராயிருக்கின்றேன். நீர் என்னைக் குறித்து என்ன தீர்மானித்திருக்கின்றீர் என்பதை எனக்குக் காண்பியும்" என்று ஆண்டவரிடம் கேளுங்கள். அவர் உங்களுக்குக் காண்பிப்பார். உங்கள் ஜெபத்திற்கு அவர் பதிலளிப்பார்.

அவர் உங்களை களத்திற்குச் செல்கின்ற வேலையாளாய் ஆக்குவாரெனில், நீங்கள் அதை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, செல்வதற்கு ஆயத்தமாக நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை அவரிடம் கேளுங்கள். மேலும் நீங்கள் எங்கு செல்வதற்கு அவர் விரும்புகின்றாரா என்பதையும் அவரிடம் கேளுங்கள். நீங்கள் ஆயத்தமாகும்போதும் போகும்போதும் நீங்கள் உங்களுக்காகவும் அவர் உங்களை அனுப்புகின்ற களத்திற்காகவும் மட்டுமன்றி, பிற பணியாளர்களுக்காகவும் ஜெபிக்கும் பொறுப்பை நீங்கள் பெற்றுள்ளீர்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். நீங்கள் உங்கள் பணித்தளத்திற்குச் சென்றபின்னும், ஆண்டவர் தமது அறுவடைக்கு ஏராளமான வேலையாட்களை அனுப்பும்படி தொடர்ந்து ஜெபியுங்கள்.

இவ்விதமாக நீங்கள் ஒரு கையிலே பணித்தளத்தின் பணியையும், மறு கையினாலே ஆண்டவர் தமது அறுவடைக்கு ஆட்களை அனுப்புவதற்கு ஜெபிக்கும் பணியையும் செய்வீர்கள்.

☆ ஆண்டவர் உங்களை "ஜெபிக்கின்ற" வேலையாளாய் ஆக்குவாரெனில், அதிகப்படியான வேலையாட்களுக்காகவும், ஏற்கெனவே களத்திலிருக்கும் பணியாட்களுக்காகவும் ஜெபிப்பதற்கு நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

☆ ஆண்டவருடைய திருப்பாதங்களில் காத்திருந்து, எவ்விதம் நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்பதற்கான போதனைகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☆ சந்திக்கப்படாத மக்கள் கூட்டத்திற்காக ஜெபிப்பதில் உங்கள் முழு வாழ்க்கையும் அர்ப்பணிக்கப்பட அவர் விரும்பலாம். அதன்மேல் முக்கிய கவனம் செலுத்துங்கள்.

☆ "அறுவடையை நாசம் செய்கின்ற, மனிதர்களால் நியமிக்கப்பட்ட வேலையாட்களை அல்லது சுயமாய் நியமனம் செய்துகொண்ட வேலையாட்களை தடுத்து நிறுத்துங்கள்.

☆ ஆண்டவர் தீவிரமாக செயல்பட்டு தமது சொந்த வேலையாட்களை களத்திற்கு அனுப்பும்படி மன்றாடுங்கள். சமுதாய முறைமைகளினாலும் உறவினர்களினாலும், பெற்றோர்களாலும் தடைசெய்யப்பட்டிருக்கின்ற வேலையாட்களை விடுவித்து தம்முடைய திருப்பணியில் ஈடுபடுத்த ஆண்டவரை இறைஞ்சுங்கள்.

☆ ஊழியம் செய்வதை தடைசெய்யும் அரசுகளை தேவன் அசைக்க ஜெபியுங்கள். பணியாளர்கள் யார் மத்தியில் பணியாற்றுகிறார்களோ அல்லது பணியாற்ற விருக்கிறார்களோ அவர்களுடைய இருதயத்தை ஆண்டவர் தொடுமாறு அவரிடத்தில் ஜெபியுங்கள்.

☆ கிறிஸ்துவின் வெளிப்பாடு அங்கே தேவ வசன வெளிச்சமும் கிறிஸ்துவின் வெளிப்பாடும் அம்மக்களுக்குக் கிடைக்க ஜெபியுங்கள்.

☆ மாற்றப்பட்டவர்கள் திருவசனபாலை உண்டு வாழ்வில் விரைவாக வளர்ந்து, முதிர்ச்சிபெற்று போதிக்கின்றவர்களாக மாற ஜெபியுங்கள்.

☆ எதிர்காலத்தில் ஊழியம் செய்யக் கூடியவர்கள் ஆனால் தற்போது பாவத்தின் கட்டுகளுக்குள்ளோ அல்லது உலக நாட்டத்துடனோ இருப்பவர்களை கட்டவிழ்க்கப்படவும் தேவனால் பணியமர்த்தப் படவும் ஜெபியுங்கள்.

☆ கொடுக்கின்ற வேலையாட்களின் எண்ணிக்கை பெருகுவதற்காகவும் மன்றாடுங்கள்.

☆ கொடுப்போரை பண ஆசையிலிருந்து பாதுகாக்கும்படி ஜெபியுங்கள்.

☆ அவர்கள் அதிகமதிகமாகக் கொடுப்பதற்கு ஏதுவாக அவர்களுடைய செல்வங்களை ஆண்டவர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

☆ சாத்தானுடைய தாக்குதலிலிருந்து அவர்களுடைய செல்வங்களை ஆண்டவர் காக்கும்படி வேண்டுங்கள். ஆண்டவரின் திட்டமல்லாத பிற திட்டங்களுக்குள் அவர்கள் கடத்திச் செல்லப்படாமல் -

...ாக்கப்படாமல் அவர்களைப் பாதுகாக்க ஆண்டவரிடம் ஜெபியுங்கள்.

அவர்கள் தங்கள் அருகிலுள்ள தேவனால் அனுப்பப்படாமல் சுய லாபங்களுக்காக வாழ்கின்ற மனிதர்களால் அனுப்பப்பட்ட பணியாளர்களின் வாழ்க்கைமுறை, வழிகள், லட்சியங்கள் ஆகியவைகளின்படி நடக்க முயற்சிக்காமல் இருக்க வேண்டும். நீங்கள் ஜெபிக்கும் ஒரு நாளின் 24 மணி நேரங்களும் ஜெபித்தால்கூட எல்லா தேவைகளுக்கும் ஜெபிக்க இயலாத அளவு தேவைகள் நிரம்ப உள்ளன.

நீங்கள் ஜெபிக்கும் வேலையாளாக இருந்தால் உங்களை இழந்து ...லியாகக் கொடுக்கவும் போகவும் உங்களுக்குத் தடைவிதிக்கப்படவில்லை. கடவுள் விரும்பும் எல்லைக்குள் நீங்கள் வேலையாட்களாகப் பணியாற்றலாம்.

## கட்டாயத்தேவை

ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் முந்திய காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் செய்யப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. ஆண்டவருடைய மக்கள் தங்கள் பாவங்கள் அனைத்திலுமிருந்து விடுபட்டவர்களாய் எழுந்து, தங்களை முற்றிலுமாக ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். ஆண்டவரின் வேலையாட்களாய் எண்ணற்ற மக்கள் எழும்பும்போது, செய்து முடிக்கப்பட வேண்டிய காரியங்கள் விரைவில் முற்றுப்பெறும்; ஆண்டவர் இயேசு வருவார். ஆமென்!

# 15. மன்றாட்டில் நான்கு நாட்கள்

"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான்.

கர்த்தருக்குப் பரிமள தைலம் பூசி, தன் தலை மயிரினால் அவருடைய பாதங்களைத்துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான். அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார். இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட பொழுது தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார்.

அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார். அதற்கு சீஷர்கள்: ரபி, இப்பொழுதுதான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார். இவைகளை அவர் சொல்லிய பின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார்.

அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரை செய்து இளைப்பாறுகிறதைக் குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப் போனான் என்று வெளிப்படையாகச் சொல்லி; நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார். அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்ற சீஷர்களை நோக்கி: அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்" (யோவான் 11:1-16).

லாசரு சுகவீனமடைந்த செய்தி ஆண்டவர் இயேசுவுக்குத்

தெரிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட போதிலும் அவனைக் குணப்படுத்த அவர் வேகப்பட்டுச் செல்லவில்லை. அந்தோ! சுகவீனமாயிருந்த லாசருவோ இறந்து போனான். அவன் இறந்துபோன செய்தி ஆண்டவருக்கு அறிவிக்கப்படாதிருந்த போதிலும், லாசருவின் மரணத்தை அவர் அறிந்தார். லாசரு இருந்த இடத்திற்கு வேகமாகச் சென்று, உடனடியாக அவனை உயிர்த்தெழச் செய்திருக்க அவரால் கூடும். எனினும், ஆண்டவர் அப்படிச் செய்யவில்லை. அவர் பல நாட்கள் தாமதித்தார். ஆதலால், அவர் பெத்தானியா ஊருக்குள் வந்தபோதோ, லாசரு இறந்து அடக்கம்பண்ணப்பட்டு நான்கு நாட்கள் ஆகியிருந்தன.

லாசரு வியாதியாயிருந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் ஆண்டவர் ஏன் உடனடியாகச் செல்லவில்லை? லாசரு இறந்து போனதை அறிந்தபின்னும் அவர் ஏன் பெத்தானியாவிற்குத் தீவிரிக்கவில்லை? அவன் இறந்து நான்கு நாட்களுக்குப் பின்னர் அங்கு சென்றால்தான் மக்களிடையே ஆர்வக் கிளர்ச்சியை உருவாக்க முடியும் என்பதால் அவர் தாமதித்தாரா? கல்லறைக்குள் வைக்கப்பட்டு நான்கு நாட்களுக்குப் பின்னர் மரணத்திலிருந்து லாசருவை உயிர்த்தெழச் செய்யும்போது அந்த அற்புதம் பிதாவிற்கு மிகப்பெரிய மகிமையைக் கொண்டுவரும் என்பதால் அவர் காத்திருந்தாரா? பெத்தானியா ஊருக்கு வருவதற்குமுன் நான்கு நாட்கள் அவர் தாமதித்ததற்கு மேற்கூறியயாதொன்றும் காரணமாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

ஆண்டவர் பெத்தானியாவிற்குள் வந்தபோது மகத்தான அற்புதத்தை நிகழ்த்தினார்; அடக்கம்பண்ணப்படிருந்த லாசரு உயிர்த்தெழுந்து கல்லறையை விட்டு வெளியே வந்தான். லாசரு சுகவீனமாயிருந்த செய்தியைக் கேள்வியுற்ற நேரத்திலிருந்து அவன் இறந்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் வரையிலும் ஆண்டவர் என்ன செய்துக்கொண்டிருந்தார்?

## பிதாவின் சித்தமறிய காத்திருந்தார்

லாசரு வியாதியாயிருக்கிறதாக ஆண்டவர் கேள்விப்பட்ட பொழுது, தாம் இருந்த இடத்திலேயே பின்னும் இரண்டு நாட்கள் தமது சீஷர்களோடு தங்கினார். அதன்பின்பு அவர், "நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்று தம்முடைய சீஷர்களைப் பார்த்துச் சொன்னார். அந்த இரண்டு நாட்களும் தம் தந்தையினுடைய சித்தத்தை அறிவதற்கு அவர் காத்திருந்த நாட்களாகும். லாசரு சுகவீனமாயிருந்த செய்தியைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலே "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" என்றார்.

அதனை அவர் அறிந்திருந்த போதிலும், பெத்தானியாவிற்குச் செல்வதற்கு முன்னால் அவர் அறியவேண்டிய காரியங்கள் ஏராளம்

இருந்தன. தம்முடைய பிதாவின் சித்தத்தை அறிந்து கொள்வதற்காக அவர் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டியதிருந்தது. எப்போதும் அவர் தம் தந்தையினுடைய விருப்பதை மட்டுமே செய்ததை நாம் அறிவோம். பிதா தம்மை அனுப்பிய இடத்திற்கு மட்டுமே அவர் சென்றார் என்பதையும் நாம் அறிவோம். அதனால் அவர் உடனடியாகக் கிளம்பி வராமல் அங்கே இருந்தார். அவருக்கு அன்பான நண்பன் நோய்வாய்ப்பட்டு இறந்தான் என்ற அந்தச் செய்தியை அவரிடத்தில் தெரிவிக்க ஆள் அனுப்பப்பட்டது. இறந்தவன் மீண்டும், உயிர்பெற்றெழ அங்கே ஓர் அற்புதத்தைச் செய்ய வேண்டியது அவசியமானது. அத்தகைய அரியதோர் அற்புதம் பிதாவிற்கு மகிமையைக் கொண்டுவரும். அப்படியிருக்க, ஆண்டவர் அந்த இடத்திற்கு உடனடியாகச் செல்ல வேண்டாமா?

சூழ்நிலையின் தேவைக்கேற்ப ஆண்டவர் செயல்படவில்லை. லாசருவை நேசித்ததன் காரணமாக அவர் உடனடியாகச் சென்றுவிடவில்லை. தாம் அன்பாயிருந்த மார்த்தாளும், மரியாளும் தம்மிடத்தில் ஆள் அனுப்பியிருந்ததன் காரணமாகவும் அவர் அங்கே செல்லவில்லை. பிதாவிற்கு மகிமையைக் கொண்டுவரும்படியாக ஓர் அற்புதத்தைச் செய்வதற்கான அரிய சந்தர்ப்பம் கிடைத்ததின் காரணமாகவும் அவர் பெத்தானியாவுக்குச் செல்லவில்லை. மேற்கூறிய எந்தவொரு காரணத்தினாலும் இயேசு அங்கே செல்லவில்லை. அவர் அப்படிச் செய்திருந்தால், தம் சுய விருப்பத்தின்படி அங்கே சென்றிருந்திருக்கலாம். அவர் சுதந்திரமாக செயல்பட்டிருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. தம் பிதாவின் சித்தத்தை அறிவதற்கு இயேசு கிறிஸ்து காத்திருந்தார்.

"என் பிதாவே, லாசரு சுகவீனமாயிருந்து இறந்து போனான். நான் அவனை அதிகமாக நேசிக்கின்றேன். அவன் சகோதரிகளான மார்த்தாளையும், மரியாளையும் நேசிக்கிறேன். அவர்கள் என்னிடத்தில் ஆள் அனுப்பி இருக்கிறார்கள். ஆண்டவரே, நீர் என்ன சொல்கிறீர்? உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றவே நான் விரும்புகின்றேன். ஆம்! பிதாவே, உமது சித்தத்தை மட்டுமே நான் செய்ய விரும்புகின்றேன். நான் என்னென்ன செய்ய வேண்டுமென்று நீர் நியமித்திருப்பவைகளை எனக்குக் காண்பியும். நான் அவைகளை மட்டுமே செய்வேன். என் பிதாவே, உம்முடைய சித்தத்தை நான் நிறைவேற்ற அவைகளை எனக்குக் காண்பித்தருளும். உம்முடைய சித்தமல்லாத யாதொன்றையும் நான் செய்யமாட்டேன்" என்று அவர் தமது தந்தையை நோக்கி வேண்டுதல் செய்திருக்க வேண்டும்.

இவ்விதமாய் ஆண்டவர் ஜெபித்தபோது அவர் பெத்தானியாவிற்குப் போக வேண்டுமென்பது தம்முடைய பூரண சித்தம் என்பதை பிதா வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதன் பின்னரே இயேசு

பெத்தானியாவிற்குச் சென்று, கல்லறையில் வைக்கப்பட்டிருந்த லாசருவை உயிரோடெழுப்பினார்.

இயற்கையான அன்பு, உறவு, நண்பர்களின் கோரிக்கை, ஆண்டவருக்காக பெரிய காரியங்களைச் செய்ய வாய்ப்பு, இவைகளை ஒதுக்கி தள்ளிவிட்டு ஆண்டவருடைய சித்தத்திற்கு தங்களை முற்றிலுமாக ஒப்புவிப்பவர்கள் மாத்திரமே ஆண்டவரின் முழு மகிமையைக் காண்பார்கள்.

ஆண்டவரின் திருவுளச் சித்தத்தை அறிந்து அதன்படி அவர்கள் செய்வார்கள். அந்தச் சித்தம் அவர்களை உயர்ந்த நிலைக்கு வழிநடத்திச் செல்லுமாயின் அதை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள். அது மற்ற மனிதர்களுக்கு முன்பாகத் தோல்வியைத்தருமாயின், ஆண்டவரின் அந்தச் சித்தத்தையும், வெளிப்படையான தோல்வியையும் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஆண்டவரின் சித்தம், அவர்களுக்கு அன்பான ஒருவருடன் அவர்களுடைய உறவினை பலப்படுத்துமெனில் அதை அவர்கள் பேருவகையுடன் ஏற்றுக்கொள்வார்கள். அந்த உறவு அறுந்து போவது ஆண்டவரின் சித்தமெனில், அதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆண்டவரின் சித்தத்தைச் செய்வதில் அவர்கள் மகிழ்ச்சியைக் காண்பார்கள். ஆண்டவர் தம் சித்தத்திற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களின் வாழ்வில், ஆண்டவரின் சித்தமல்லாத வேறெதுவும் தலையிட அனுமதிப்பதில்லை.

ஆண்டவருக்கு முன்பாக இருக்கும் உயர்வின் பாதை அதுதான். தம்முடைய பிள்ளைகள் அனைவரையும் அந்த பாதைக்கு ஆண்டவர் அழைக்கிறார். மற்றெல்லா முடிச்சுகளிலிருந்தும், பந்தங்களிலிருந்தும் நம்மை நாம் பிரித்தெடுத்து, ஆண்டவரோடும் அவருடைய சித்தத்தோடும் ஒன்றிணைத்துக் கொள்வோம். அப்போது ஆண்டவரின் இருதயத்தை நாம் முழுமையாக திருப்தி செய்வோம்.

## தேவையான அபிஷேகம் பெற காத்திருந்தார்

ஆண்டவரின் மகிமைக்காக நாம் ஏதோ ஒன்றைச் செய்ய அவர் நம்மை அழைத்திருக்கின்றார் அந்தக் காரியம் நிகழ வேண்டிய இடத்திற்கு எப்படியாயினும் - எவ்வாறாயினும் நாம் போகக்கூடும். அங்கே அந்தக் காரியமும் நிறைவேற்றப்படும். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஆண்டவரை நோக்கிப் பார்க்கவேண்டும். அவ்வளவுதான்.

அவருடைய சித்தத்தை அறிந்து, அவர்தம் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் போது காரியங்கள் அனைத்தும் அற்புதவிதமாக நடந்தேறும். ஞானமற்ற மனிதன் மாத்திரமே, ஆண்டவரிடமிருந்து தான் செய்ய வேண்டிய கடமையைப் பெற்றுக்கொண்டு, அதனை நிறைவேற்றுவதற்குத்

தேவையான வல்லமையைப் பெற்றுக்கொள்ளாமல் அந்த இடத்திற்குத் தீவிரித்துச் செல்வான்.

"எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" (லூக் 24:46-48) என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் கூறினார். இவற்றையெல்லாம் சொல்லி முடித்த பின்பு, தாங்கள் ஆற்றல் குன்றியவர்கள்போல், ஒரு எதிர் மறான செயலுக்குப் போவதுபோல் அவர்களுக்குத் தோன்றியிருக்கும். மேலும் அப்போஸ்தலர்களை நோக்கி, "என்பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றார் (லூக் 24:49). ஆண்டவரின் வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்து, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தாங்கள் தரிப்பிக்கப்படும்வரை அந்த நகரத்தில் தங்கியிருந்தார்கள்.

"கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள். அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்" (சங். 105:4) என்று கர்த்தரின் வார்த்தை கூறுகிறது. அந்த அழைப்பு கர்த்தரை நாடுவதற்கு மட்டும் கொடுக்கப்பட்ட அழைப்பல்ல. கர்த்தரையும், கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய சமுகத்தையும் அனுதினமும் நாடுவதற்குரிய அழைப்பே அது. கீழ்ப்படிகின்றவர்கள் கர்த்தரைத்தேடி அவரைக் கண்டுகொள்வார்கள். அவர்கள் ஆண்டவரின் வல்லமையை நாடி அதனைப் பெற்றுக்கொள்வார்கள்; அவருடைய சமுகத்தை நாடி என்றென்றும் அதில் நிலைத்திருப்பார்கள்.

ஸ்தேவானைக் குறித்து இப்படிச் சொல்லப்பட்டது. அவன் பரிசுத்த ஆவியும் ஞானமும் (அப். 6:3), விசுவாசமும் (அப். 6:5), வல்லமையும் (அப். 6:8) நிறைந்தவனாயிருந்தான். அவன் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். அவன் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது.

இயேசு கிறிஸ்து ஒவ்வொரு முறை ஊழியம் செய்தபோதும் வல்லமை அவரைவிட்டு நீங்கிக்கொண்டிருந்தது. அந்த வல்லமை அவரில் இடைவிடாமல் நிரப்பப்படவேண்டியதிருந்தது. லாசருவினுடைய மரணத்தை அவர் அறிந்த நேரத்திலிருந்து, அவர் பெத்தானியாவிற்குச் சென்ற நேரம் வரையிலும் பிதாவினிடமிருந்து ஓர் புதிய அபிஷேகத்திற்காக அவர் காத்திருந்தார் என்பது நம்பக்கூடியதாகும்.

இறுதியாக, அவர் பரிந்துரை மன்றாட்டில் நேரத்தைச் செலவிட்டிருப்பார் என்று கருதுகிறேன். மரணமடைந்த லாசருவை உயிரோடெழுப்பி

பிதாவினுடைய விருப்பத்தை தாம் கேட்காமலேயே பிதா நிறைவேற்றுவார் என அதை தமக்குரிய உரிமைப்பேறாக அவர் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, பிதாவினிடத்தில் அவர் மன்றாடினார். பின்னர் லாசரு அடக்கம் பண்ணப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு நின்று இவ்விதமாய் பிதாவிற்கு நன்றிசெலுத்தினார். "பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்திருக்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்" (யோவான் 11:41,42). அது மிக எளிய ஜெபம். உண்மையில் அந்த ஜெபம் சாட்சிக்காக ஏறெடுக்கப்பட்டது. அங்கு கூடியிருந்த ஏராளமான மக்கள் அந்த ஜெபத்தைக் கேட்டனர்.

ஒருவேளை, அங்கு நடக்கவிருக்கும் அற்புதத்திற்கு அதுவே மொத்த ஜெபம் என்று அவர்கள் நினைத்திருந்திருக்கலாம். பிதா அந்த ஜெபத்தைக் கேட்டார் - அது நான்கு நாட்களாக ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டு ஜெபத்தின் "முத்திரை ஜெபம்" என்பதையும், நான்கு நாட்கள் அவர் ஜெபித்ததன் பயனாக காரியங்கள் ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டதைச் சூழ்ந்து நின்ற மக்கள் முன்பாக ஆண்டவர் அறிக்கை செய்கிறார் என்பதையும் பிதா அறிந்திருந்தார். குமாரனின் ஜெபத்தைக் கேட்டுத் தந்தை மகிழ்ச்சியடைந்தார். எனவே தான், "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய் அவர் கூப்பிட்டபோது மரித்தவன் கல்லறையை விட்டெழுந்து வெளியே வந்தான். அந்த "உரத்த சத்தம்" பிதாவினுடைய வல்லமையினால் நிறைந்திருந்தது. பிதாவினுடைய வல்லமையினால் நிறைந்திருந்த அந்த "உரத்த சத்தம்" கல்லறையை ஊடுருவி உட்சென்றது - அது லாசருவினுடைய சடலத்திற்குள் ஊடுருவிப் பாய்ந்து மரணத்திலிருந்து அவனுக்கு மறுவாழ்வை அளித்தது. ஆண்டவரின் உரத்த சத்தம் சுகமளிக்கும் வல்லமையோடு மின்னல்போல் விரைந்து சென்று லாசருவை குணப்படுத்தியது. அவன் கல்லறையைவிட்டு வெளியே வரும்போது, உயிர்பெற்று புதியவாழ்வோடும், பூரண சுகத்தோடும் வந்தான்.

இந்த அவருடைய முன்மாதிரியை நாமும் பின்பற்றுவோம். பரிசுத்த ஆவியோடு மட்டுமன்றி, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு அவருடைய சித்தத்தை நாம் அறிந்து நிறைவேற்ற, அவரிடத்தில் மன்றாடி அவர்தம் வல்லமையை உலகுக்கு வெளிப்படுத்தும் ஊழியத்தை மேற்கொள்வோம். ஆண்டவருக்கு முன்னிலையில் ஜெபித்து வெற்றி பெற்றபின் அந்த வெற்றியை மனிதர் முன்பாகக், கொண்டு செல்வோம். அப்போது நாம் முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறுவோம். ஆண்டவருக்கே மகிமை உண்டாகட்டும்!

# 16. எப்போதும் செவிமடுக்கின்ற பிதா

"இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: 'பிதாவே, நீர் எனக்குச் செவிக்கொடுத்த படியினால், உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிக்கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன். ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்" (யோவான் 11:41,42).

லாசரு அடக்கம்பண்ணப்பட்டிருந்த கல்லறைக்கு முன்பாக ஆண்டவர் இயேசு நின்றுகொண்டிருந்தார். லாசரு இறந்து நான்கு நாட்கள் ஆகியிருந்தன. அந்தக் கல்லறையை மூடி வைத்திருந்த கல்லை எடுத்துப் போடும்படி இயேசு கட்டளையிட்டார். உடனே அந்தக் கல்லை அங்கிருந்தவர்கள் எடுத்துப்போட்டனர். கல்லறையை விட்டு வெளியே வரும்படி லாசருவுக்குக் கட்டளை கொடுக்கும் தருணத்தில் இயேசு இருந்தார்.

அது பரபரப்புடன்கூடிய ஒரு நேரமாக இருந்திருக்க வேண்டும். "லாசருவுக்கு நான் கொடுக்கப்போகின்ற கட்டளை அவனை உயிர்ப்பிக்காமல் வெறுமையாகத் திரும்பிவருமெனில் என்ன நேரும்?" என்று அவர் மனதிற்குள் அச்சம்கொள்ளாமல் அவர் தமது கண்களை ஏறெடுத்து, "பிதாவே, நீர் எனக்குச் செவிக்கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்றார். தம்மைச் சூழ்ந்து நின்றவர்கள் அனைவரும் கேட்கும்படியாக ஆண்டவர் அப்படி ஜெபித்தார்.

## "செவிக்கொடுத்தபடியினால் நன்றி செலுத்துகிறேன்"

அந்தச் சந்தர்ப்பத்தில் முதல்முதலாக ஆண்டவர் இயேசு வெளிப்படையாக ஜெபித்தார். தமக்குச் செவிக்கொடுத்ததற்காக அவர் ஏன் பிதாவிற்கு நன்றி செலுத்தினார்? அவர் எப்போது பிதாவினிடத்தில் ஜெபித்தார்? அந்த ஜெபம் எப்போது கேட்கப்பட்டது? தனிப்பட்ட முறையில் பிதாவினிடத்தில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது நிகழ்ந்ததன் அறிக்கையாகத்தான் அது இருக்க வேண்டும். கடந்த அத்தியாயத்தில் நாம் பார்த்தது போல், அவர் தனிப்பட்ட முறையில் பிதாவோடு அதிகமாக ஜெபத்தின் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். தனிமையில் பிதாவோடு கூடிய ஐக்கியத்தால் ஜெபத்தின் மூலமாகவே அந்த வெற்றியை அவர் பெற்றிருக்க வேண்டும். பிதாவுடன் இரகசியமாக ஒழுங்கு செய்யப்பட்ட அந்தக் காரியம் தற்போது, மக்கள் மத்தியில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது.

பொதுவாக கடவுளுடன் தாங்கள் கொள்கின்ற உறவுமுறை வெளிப்படையானதாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற மக்களும் இருக்கின்றனர். ஆண்டவரோடு இரகசியமாக காரியங்களைக் கையாள அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை. ஒருமணி நேரமோ, ஒரு வாரமோ அல்லது ஒரு மாதமோ ஆண்டவரோடு தனித்திருக்கும் அனுபவத்தையும் அவர்கள் அறியார்கள். ஆண்டவருக்கும் தங்களுக்கும் இடையே இரகசிய விவகாரங்கள் இல்லாத எந்த ஒருவரும் தங்கள் ஆன்மீக வாழ்வில் ஆரம்ப நிலைக்கு அப்பால் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது மிகப்பெரிய அனுதாபத்திற்குரியதாகும்.

உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே மட்டும், தெரிந்திருக்கின்ற மறைவான செய்தி ஏதேனும் உண்டா? நீங்களும் கடவுளும் மட்டும் தனிப்பட்ட முறையில் உயர்வாகச் கருதும் செய்தி எதுவும் உண்டா? கடவுள் உங்களோடு தனிப்பட்ட முறையில் பேசி, "இதை எந்த மனிதருக்கும் சொல்ல வேண்டாம்" என்று சொல்லிய செய்திகள் உண்டா? அப்படி இல்லையென்றால் உங்களுக்கும் அவருக்கும் இடையிலுள்ள உறவு மேற்போங்கானதே.

ஆண்டவரின் பிரசன்னத்தில் தரித்திருப்பதற்கு அதிக நேரத்தை அர்ப்பணியுங்கள். அவருடைய திருப்பாதங்களில் காத்திருங்கள். ஒருநாள் உங்கள் செவிகளில் மிகவும் தனிப்பட்ட இரகசியத்தை அவர் சொல்வார். அன்றிலிருந்து, அவரோடு கூடிய உங்கள் உறவு சாதாரண நிலையிலிருந்து ஓர் சிறப்பான நிலையை அடையும்.

உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையே இருக்கின்ற ஜெப உறவு எவ்வளவுக்கெவ்வளவு தனித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அவரோடு பேசலாம். "தந்தையே, என் மன்றாட்டைக்கேட்டதற்காய் நன்றி" எனலாம். ஆண்டவரோடு முதலில் தனிப்பட்ட முறையில் காரியங்களைப் பேசி ஒழுங்குபடுத்துவதற்கு நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின்னர் பொது இடங்களில் அவைகளை நீங்கள் பேசும்போது, உங்கள் வார்த்தை வெறுமையாய்த் திரும்பி தரையில் விழாது. ஏனெனில், அது ஆண்டவருக்குள் ஆழமாக வேரூன்றப்பட்டிருக்கும். ஆண்டவரோடு தனிமையில் பேசி நீங்கள் ஒழங்குப்படுத்தியிராத காரியங்களைப் பொது இடங்களில் பேசுவதில்லை என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆண்டவருடைய திருப்பாதங்களில் காத்திருந்து, அவரிடத்தில் ஜெபித்து காரியங்களை வகைப்படுத்தியபின், மக்கள் மத்தியில் நீங்கள் சொல்கின்ற வார்த்தை ஒவ்வொன்றும் நிஜங்களின் தரிசனங்களாய் மாறும். மனிதர்களிடம் பேசுவதற்கு முன்பாக ஆண்டவரிடம் தனிமையாகப் பேசி காரியங்களை ஒழுங்குபடுத்துபவர்கள், அவைகளை மக்கள் மத்தியில் அசாதாரண அதிகாரத்துடன் அறிவிப்பார்கள்.

ஒரு காரியத்தை மக்கள் மத்தியில் அறிவிப்பதற்கு முன், அதனைக் குறித்து ஆண்டவரோடு பேசி அது ஒழுங்குபடுத்தப்படும்வரையில் நம்மில் அநேகர் பொறுமையுடன் இருப்பதில்லை. அதுதான் நம் அநேகருக்குரிய பிரச்சனை. அதன் விளைவாக நாம் இன்று ஒன்றும், நாளை வேறொன்றுமாக சொல்லக்கூடும். நாளுக்கு நாள் நம்மில் நாமே முரண்படக்கூடும். அதற்கெல்லாம் நம்முடைய பொறுமையின்மையே மூல காரணமாகும். ஆண்டவரே, இந்தக் குற்றத்திற்காக என்னை மன்னியும்.

உங்களுக்கும் மன்னிப்பு தேவையா? தேவையாயின், ஆண்டவரிடம் கேளுங்கள், அவர் உங்களை மன்னித்து, நீங்கள் ஆண்டவருடைய சமுகத்தில் பொறுமையுடன் காத்திருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பாக்கியத்தை உங்களுக்கு அருள்வார்.

**"நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்"**

இந்த வார்த்தையை ஆண்டவர் இயேசு மிகப்பெரிய துணிச்சலோடு சொன்னார் - நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கின்றேன்". கல்லறையை விட்டு வெளியே வரும்படி லாசருவுக்கு இன்னும் சில நிமிடங்களில் கட்டளையிடப் போகின்றார். பிதாவானவர் ஏற்கனவே அவருடைய ஜெபத்தைக் கேட்டிருப்பாராயின் அது வெகு விரைவில் வெளிப்படையாகத் தெரிந்துவிடும். ஆண்டவர் இயேசு பொய் சொல்லியிருப்பாராயின், அந்த உண்மையும் அக்கணமே வெளியாக்கப்பட்டுவிடும். ஆனால் அங்கே பாருங்கள்! " நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று தமது கண்களை ஏறெடுத்து பிதாவை நோக்கிச் சொன்னபின்பு, கால தாமதமில்லாமல் உடனடியாக, "லாசருவே வெளியே வா" என்று அவனுக்குக் கட்டளையிட்டார். அவர் வாயிலிருந்து கட்டளை புறப்பட்ட மாத்திரத்திலேயே மரித்தவன் உயிரோடெழுந்து வெளியே வந்தான். குமாரனுக்குப் பிதா எப்போதும் செவி கொடுக்கிறார் என்ற பேருண்மையை, அந்தச் சம்பவம் மக்கள் மனதில் சந்தேகத்திற்கிடமின்றி ஆழப் பதியவைத்தது.

**"நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்"**

என்ற வார்த்தையை அவர் அனுமானித்துச் சொல்லவில்லை. ஏதோ ஊகத்தில் சொல்லப்பட்ட வார்த்தையல்ல அது. மாறாக, அது தெளிவாகச் சொல்லப்பட்ட உண்மை - ஆணித்தரமாக அறிவிக்கப்பட்ட சத்தியம். அவர் அதனை அறிந்திருந்தார். பிதா அறிந்திருந்தார்.

அங்குச் சூழநின்ற மக்களும் அந்த உண்மையை வெகு விரைவில் அறிந்து கொண்டனர்.

### பிதா எப்பொழுதும் உங்களுக்குச் செவிகொடுக்கிறாரா?

"பிதாவே, நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன். என்று உங்களாலும் சொல்லக்கூடுமா?" என்ற கேள்வியை நீங்கள் இப்போது கேட்டாக வேண்டும். அந்த வாக்குமூலத்தை உங்களால் கொடுக்க முடியுமா? சிந்தித்துப் பாருங்கள். "பிதாவே, பல வேளைகளில் நீர் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று மட்டுமே 'என்னால் சொல்லக்கூடுமானால் நான் உம்மை மட்டுப்படுத்துகின்றவனாக, அவமதிக்கின்றவனாகவே இருக்க முடியும். ஆண்டவரே, நீர் எப்போதும் எனக்குச் செவிக் கொடுக்கிறீர்" என்று அறிக்கையிடுவதன் மூலம் உமக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வர முடியாத குமாரனாயிருக்கின்ற என்னை மன்னியும். ஆண்டவரே, என்னுடைய குற்றத்திற்காக நான் வருந்துகின்றேன். அதற்காக நான் ஏதாகிலும் செய்வேன். ஏனெனில், தங்களுக்கு ஆண்டவர் சில வேளைகளில் செவி கொடுக்கிறார் என்று மட்டுமே ஏராளமான விசுவாசிகளால் சொல்லக்கூடும். "பிதா எனக்கு எப்போதும் செவி கொடுக்கிறார் என்பதை நான் அறிந்திருக்கின்றேன்" என்று முரண்பாட்டின் பயமின்றிச் சொல்லக்கூடிய ஒரு மனிதனின் தகுதிகள் எவை எவை என்பவற்றை நாம் அறிய வேண்டும்.

அவை கீழே வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

1. அந்த மனிதன் இருதயத்தில் சுத்தமுள்ளவனாய் இருக்க வேண்டும். அவன் வாழ்க்கையும் தூய்மையுடன் திகழ வேண்டும். பாவம் செய்கின்ற எந்த ஒருவனுடைய வார்த்தைகளையும் ஆண்டவர் ஒரு போதும் கேட்பதில்லை.

2. உலகத்தின்மீதும், உலகத்திலுள்ள பொருட்களின் மீதுமுள்ள ஆசைகளினின்று அவன் விடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஒருவன் உலகத்தின்மீது அன்பு கொண்டிருந்தால், அவனுக்குள் ஆண்டவர் மீது அன்பிருக்காது. எங்கே ஆண்டவர் மீதான அன்பில்லையோ, அங்கே ஆண்டவரின் வல்லமையான வெளிப்பாடுகளோ 'இருக்க முடியாது.

3. உள்ளார்ந்த, நிலையில் சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்விலிருந்தும் அவன் "நான்" என்கின்ற நிலையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். அப்படி உள்ளார்ந்த சுயத்தின் பிடியிலிருந்து முற்றிலும் அவன் விடுபட்டிருக்கவில்லையென்றால் அந்த "நான்" என்னும் பண்பால் கடவுளின் விருப்பம் சிதறடிக்கப்படும். கடவுளின் விருப்பதனை அறிந்து கொள்ளாமல் சரியான முறையில் ஜெபிக்க முடியாது.

4. மற்றெந்த விருப்பங்களுக்கும் அல்லாமல், ஆண்டவருடைய திருவுளச் சித்தத்திற்கு மட்டுமே அவன் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். ஆண்டவர் தமது சித்தத்தை நிறைவேற்றுவார். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமேயானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கின்றோம்" (1 யோவான் 5:14,15) என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதினார். எதைக்குறித்தாகிலும் ஜெபத்தில் கேட்கும்போது, அது ஆண்டவருடைய சித்தத்தின்படி கேட்கப்படுகிறதா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆண்டவரின் சித்தத்திற்கு முரண்பட்ட வேண்டுதல்கள் எதுவும் செவிமடுக்கப்படுவதில்லை. ஒரு மனிதன் சுயமாக ஏதோ ஒன்றைத் தீர்மானித்துக் கொண்டு அதற்காக நாற்பது வருடங்களாக நாளொன்றிற்கு ஆறுமணி நேரம் ஜெபிக்கலாம். ஆனால் அந்தக்காரியம் ஆண்டவருடைய சித்தத்திற்கு உட்பட்டது இல்லையென்றால், அந்த மனிதனின் ஜெபங்கள் அனைத்தும் பயனற்றதாகவே போகும். ஆண்டவருடைய சித்தத்தின்படி கேட்பது தான், ஜெபத்தின் முதல்முக்கியத் தேவையாகும்.

5. ஆண்டவர் பதிலளிக்கும்வரை இடைவிடாமல் ஜெபிக்கும் இரகசியத்தை அவன் அறிந்திருக்க வேண்டும். ஆண்டவரிடமிருந்து பதில் கிட்டும்வரையிலும் மேலும் மேலும் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்; கதவைக் தட்டுவதை நிறுத்தாமல் திறக்கப்படும்வரை தொடர்ந்து தட்டிக்கொண்டே இருக்க வேண்டும். திட்டமிட்டு ஜெபிப்பதற்கு ஆயத்தப்பட்டு, பின்னர் அதனைக் கைவிட்டவர்கள், "ஆண்டவர் எப்போதும் எனக்குச் செவிக்கொடுக்கிறார்" என்று சொல்லக்கூடியவர்களாக இருக்க முடியாது. எல்லா விதத்திலும் முழு கிரயமும் செலுத்தப்பட வேண்டும்.

6. விசுவாசத்தில் வேர் ஊன்றப்பெற்றவர்களாய் ஜெபிக்கவேண்டும். விசுவாசமின்றி ஒரே காரியத்தை மேலும் மேலும் ஜெபித்துக்கொண்டிருப்பது சாத்தியமே. ஆனால் விசுவாசமின்றி ஏறெடுக்கப்படுகின்ற ஜெபம் ஆண்டவரைப் பிரியப்படுத்துவது சாத்தியமில்லை. ஆண்டவரைப் பிரியப்படுத்த முடியாதவனாகவும், அதே நேரத்தில் "பிதா எனக்கு எப்போதும் செவிகொடுக்கிறார்" என்று சொல்பவனாகவும் ஒருவனால் எப்படி இருக்க முடியும்? அப்படி இருக்க முடியாதல்லவா!

7. முற்றிலுமாக அர்ப்பணிக்கப்பட்ட - புனிதமாக்கப்பட்ட மனிதனாக இருக்க வேண்டும். அவனுக்குண்டான யாவையும் உறுதியான முடிவுடன் ஆண்டவரிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆண்டவருக்குள்ளாக அவனுடைய ஒப்படைப்பு ஒவ்வொரு நாளும்

புதுப்பிக்கப்பட வேண்டும். அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் ஆட்சி செய்கின்றவராக - அதிகாரம் செலுத்துபவராக ஆண்டவரே இருக்க வேண்டும்.

"பிதா எப்போதும் எனக்குச் செவிக்கொடுக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று சொல்லக்கூடிய நிலையில் நிற்க விரும்புகின்ற எந்த ஒருவனும் மேற்கூறிய ஏழு நிபந்தனைகளுக்கும் உட்பட்டவனாக இருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு அவ்வாறே நின்றார். அதனால்தான் அவரால் அப்படிச் சொல்ல முடிந்தது. இந்த பூமியில் தாம் வாழ்ந்த வாழ்க்கை முழுவதிலும் அந்த நிலையை அவர் காத்துக்கொண்டார். எனவேதான் பிதா அவரை எல்லாரிலும் மேலாய் உயர்த்தி கௌரவித்தார்.

ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போரை பிதா கனப்படுத்துவார். ஆண்டவர் இயேசு செய்த காரியங்களை அவர்களும் செய்யும்படி அனுமதிப்பார். மேலும், இயேசு செய்ததைக் காட்டிலும் மிகப்பெரிய காரியங்களைச் செய்ய அவர்களை அனுமதிப்பார். இன்றே அதைச் செய்ய பிதா விரும்புகின்றார். அதனைச் செய்வதற்கு நீங்கள் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பீர்களா? உங்கள் மூலமாய் அரிய பெரிய காரியங்கள் செய்யப்பட நீங்கள் அவரை அனுமதியுங்கள்.

# 17. இயேசுவின் கண்ணீர் ஜெபம்

"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" (எபி 5:7-10).

ஆண்டவர் இயேசு, தம்மை மரணத்திலிருந்து விடுவிக்க வல்லமை பொருந்திய கடவுளை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார்.

## இலகுவான ஜெபம்

ஒருவர் மிகச் சாதாரணமாக ஜெபிக்கக்கூடிய நேரங்கள் உண்டு. உதாரணமாக சாப்பிடுவதற்கு முன்னரோ அல்லது சாப்பிட்ட பின்னரோ அந்த உணவிற்காக ஆண்டவருக்கு ஒருவர் இவ்விதம் சாதாரணமாக நன்றியை ஏறெடுக்கக்கூடும். "பிதாவே, இந்த உணவை நீர் கொடுத்ததற்காக உமக்கு நன்றி, நீர் எனக்கு அருளிவருகின்ற உம்முடைய இடையறாத நன்மைகளுக்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்முடைய இரக்கங்களுக்காகவும், ஈவுகளுக்காகவும் நான் எப்போதும் உமக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்".

பிரத்தியேகமான பாரமோ, பிரச்சினைகளோ இல்லாமல் எந்த ஒரு அழுத்தமுமின்றி ஜெபிக்கக்கூடிய நேரங்கள் உண்டு. ஏராளமான விசுவாசிகள் சாதாரண நிலையில் இவ்விதம் இலகுவான ஜெபங்களை ஏறெடுக்க மாத்திரமே தெரிந்திருக்கிறார்கள் என்பதுதான் இப்போதிருக்கின்ற ஒரே பிரச்சனை. ஆன்ம பாரத்தோடு கூடிய ஜெபத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை.

## பலவந்தமான ஜெபம்

பிரச்சனைகளின் கீழ் அழுந்துகின்ற மக்களால் மட்டுமே பலவந்தமான ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. பாரத்தோடு இருக்கின்ற மக்கள் ஜெபிக்கின்ற விதம் அதுதான் பிரத்தியேகமான அழுத்தத்தின் கீழிருக்கும் மக்களின் ஜெபம் அதுதான் - தாங்கள் ஜெபித்தாக வேண்டும் அல்லது அழிய வேண்டும் என்று அறிகின்ற மக்களின் ஜெபம் அதுதான் - பலவந்தமான ஜெபம்.

ஆண்டவர் இயேசு மாம்சத்திலிருந்து நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார் என்று வேதம் தெளிவாகக் கூறுகின்றது. அவர் ஜெபித்த விதத்தை இவ்வாறு கூற முடியும் .

- இயல்பாக ஜெபித்தார்
- அமைதியான அழுகையுடன் ஜெபித்தார்
- பலத்த சத்தமாய் அழுகையோடு ஜெபித்தார்
- பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்
- பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வேண்டுதல் செய்தார்.

ஒவ்வொரு படிநிலையும் இன்றியமையாதது. ஆழமானது அவையனைத்தும் அவருடைய வேண்டுதலையும், விண்ணப்பங்களையும் சார்ந்திருந்தன. அவர் பெரிய அழுத்தத்தின் கீழிருந்தார்.

அந்த அழுத்தத்திற்கு - பாரத்திற்குக் காரணமென்ன?

அது தம்முடைய மரணத்தைக் குறித்த பயமாயிருந்தது - அது சரீர மரணத்தைக் குறித்தல்ல - ஆனால் ஆன்மீக மரணத்தைக் குறித்த பயமே. அவர் பாவத்தை வெறுத்தார்; பரிசுத்தத்தோடு வாழ்ந்தார். ஆயினும் அவர் பாவத்தைச் சுமக்கின்றவராக மரிக்க வேண்டியதிருந்தது. அதுதான் மிகவும் வேதனையானது. இதுபோதாதென்று அவரை அழிப்பதற்கு சாத்தானிடமிருந்து கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் வேறு அவரைத் தொடர்ந்து வந்தது.

ஆண்டவர் இயேசு சுய அனுதாபத்தின் காரணமாக அழவில்லை. தாம் மரணத்தினின்று இரட்சிக்கப்பட அவர் ஏன் விரும்பினார்? அவர் தாம் மரணத்தினின்று மீட்கப்பட விரும்பியதற்கான காரணம் என்னவெனில், ஆண்டவர் இயேசு இந்த உலகில் மனிதனாக எல்லா சோதனைகளையும் எதிர்கொண்டார் என்பதை முதலில் நாம் மனதில் கொள்ள வேண்டும். அவர் இவ்வுலகில் மனிதராகவே வாழ்ந்தார். எனவேதான், எபிரேய நிருப ஆக்கியோன், ஆண்டவர் மாம்சத்திலிருந்த நாட்களைக் குறித்துப் பேசுகின்றார். இவ்வுலகிற்குப் பிதாவினால் அனுப்பப்பட்ட இயேசு, தாம் மனிதராக அல்லாமல் ஆண்டவராக அனைத்து சோதனைகளையும் எதிர்கொண்டிருந்திருப்பாரெனில், அவருக்கு நேரிட்ட சோதனைகளும் அவைகளை அவர் மேற்கொண்டதும் அர்த்தமற்றதாகியிருக்கும். ஆனால் அவரோ தம்முடைய அதிகாரம் முழுவதையும் விட்டு தம்மைத்தாமே வெறுமையாக்கி, பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு பாடுகளின் மூலமாக பூரணரானார்.

அவர் பாவம் செய்வதற்கு சோதிக்கப்பட்டார், அழுத்தப்பட்டார். அவரைப் பாவம் செய்ய வைப்பதற்கு நரகம் முழுவதும் ஒன்று திரண்டு அவருக்கு எதிராக நின்ற நேரங்கள் உண்டு. ஆனால் சோதிக்கப்பட்டும் அவர் பாவம் செய்யவில்லை. அத்தகைய நேரங்களில் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஏறெடுக்கப்பட்ட வேண்டுதல்களும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்டு பிதாவிடமிருந்து அவருக்கு விடுதலை வந்தது. தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார் என்று வேதம் சொல்கிறது. பாவத்தைக் குறித்த தெய்வபயம், பிதாவினிடத்தில் அவரைச் சத்தமிட்டு அழவைத்தது. எனவே, தம்மை மரணத்தினின்று விடுவிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, உரத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார்.

அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்ததினால் கேட்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவர் கேட்கப்பட்டு விடுவிக்கப்பட்டதினால், நாம் இன்று அவருக்குள் பத்திரமாகவும், பாதுகாப்போடும் இருக்கின்றோம்.

## பலவந்தமான ஜெபமும் தேவன் பேரில் பரிசுத்த பயமும்

இன்றைய நாட்களில் ஜெபத்தின் தீவிரம் மிகக் குறைந்த அளவில் இருப்பதற்கான காரணம் என்ன? பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்து விண்ணப்பம் பண்ணுகிறவர்கள் இன்று மிகக்குறைவாய் இருப்பதன் காரணம்தான் என்ன? ஆண்டவருடைய மக்களிடமிருந்து தெய்வ பயம் மறைந்து போயிருப்பதே அதற்குரிய காரணம். மனித மனங்களை விட்டு தெய்வ பயம் இன்று விலகிப்போனது. அநேக இடங்களில் அந்த நிலையை நாம் காண முடிகின்றது.

ஆண்டவருடைய சித்தத்தைக் குறித்து உண்மையில் அக்கறை கொள்பவர்கள் வெகு சிலரே. தங்களுடைய வாழ்க்கையில் ஆண்டவருடைய சித்தம் நிறைவேற்றப்படுவது மட்டுமே தவிர்க்கப்படக்கூடாத முக்கியமானதாகும் என்றிருப்போர் மிகச்சிலரே. ஆண்டவரின் பரிசுத்தத்திற்குத் தங்களை அர்ப்பணித்திருப்பவர்களை இன்று காண்பது அரிது.

தேவனுடைய இராஜியத்தின் வளர்ச்சிக்காக தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தவர் மிகச்சிலரே. அப்படி தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தலோடு வாழ்பவர்கள் தேவசித்தத்துக்காக அழிவையும் ஏற்று இறையாட்சியின் வழியில் நிற்பர். அவர்கள் இறையாட்சி வளர்ச்சியுறுவதற்கு எந்த கிரயத்தையும் செய்ய முனைவார்கள். இவ்விதம் தேவ சித்தத்துக்குட்பட்டு வாழ்வதற்காகவே தங்களை விற்றுப்

போட்டவர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது. தேவனுக்கு ஏற்காத எந்த ஒரு காரியத்தை செய்வதானால் அதைவிட சாவதே மேல் என எண்ணுபவர்களைக் காணமுடியவில்லை. எதையும் செய்யக்கூடிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது வருத்தத்திற்குரியது. எந்தக் கட்டுப்பாடும் இல்லை; எதுவும் இங்கே செய்யபடக்கூடும். ஏனெனில், இன்றைய நாட்களில் தேவ பயம் இல்லை. ஆண்டவருடைய பரிசுத்தத்திற்கும், ஆளுகைக்கும், சித்தத்திற்கும் மக்கள் தங்களை பூரணமாக அர்ப்பணிக்கவில்லை தாங்கள் எப்போதாவது பாவம் செய்வார்களெனில், அதை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. தங்கள் சபைகளில் பாவம் மலிந்திருப்பதைப் பற்றியும் அவர்கள் கவலை கொள்வதில்லை.

மேலும், "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோவான் 17:19) என்று சொல்லக்கூடிய உண்மையான மேய்ப்பர்கள் இன்று மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கிறார்கள்.

ஓர் உண்மையான மேய்ப்பன் தேவ பயம் கொண்டவனாகவே இருப்பான். பாவம் தன்னையும் பரிசுத்த ஆவியானவர் தன்னிடத்தில் ஒப்படைத்திருக்கின்ற மந்தையினையும் அழித்துவிடும் என்று அவன் அறிந்திருக்கிறபடியால், எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் அவன் விலகி ஓடுவான். தன்னுடைய பொறுப்பின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற மந்தையின் மேல் கொண்டிருக்கின்ற உள்ளார்ந்த அன்பு இரத்தம் சிந்தும்வரை கூட பாவத்தை எதிர்த்து அவனைப் போரிடச் செய்யும்.

எந்த ஒரு பாவத்தைச் செய்வதைக் காட்டிலும் அவன் மரணத்தை ஏற்றுக் கொள்வதையே சிறந்ததெனக் கொள்வான். சோதனை மிகுந்த நேரங்களில் பாவத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற, ஆண்டவரை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் மன்றாடுவான். அவனுடைய வேண்டுதலையும் விண்ணப்பங்களையும் ஆண்டவர் கேட்டு, அவனை விடுவிப்பார். இவ்விதமாய் அவன் தன்னுடைய ஆன்மாவையும், தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற மந்தையினையும் அழிவில் இருந்து காத்துக் கொள்வான். ஓர் உண்மையான மேய்ப்பன் செய்வது அதுதான்.

- ☆ நான் ஒரு உண்மையா்ன மேய்ப்பன்தானா?
- ☆ மெய்யான பயம் என்னிடத்தில் உண்டா?
- ☆ பாவத்தின் மீதான அதே பொறுப்புணர்வை நான் கொண்டிருக்கிறேனா?
- ☆ விடுவிக்கப்படுவதற்கான கண்ணீரோடு கூடிய அதே வேண்டுதல் என்னிடத்தில் உண்டா? என்று உங்களை நீங்களே கேட்டுப்பார்ப்பது நல்லது.

சிலருடைய சிக்கல் பாவமாக இராது. தேவனை இழந்து போனவர்கள் நரகில் நீடூழி வாழ்ந்திடுவார்களே என்ற உணர்வுடன் மக்களுக்காக கடவுளோடு போராடுவர். அழிந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான பாவிகள் மரணத்திலிருந்து மீட்கப்படுவதற்கு ஆண்டவர் வல்லமையோடு எழுந்து, இணையற்ற விதத்தில் பரிசுத்தாவியினை ஊற்றுமாறு அவர்கள் இரவு பகலாக அழுது புலம்பி ஜெபத்தில் ஆண்டவரோடு போராடுவர். அத்தகைய மக்கள் அழிந்து போகிற ஆத்துமாக்கள் விடுவிக்கப்படுவதற்கு ஏதோ ஒன்றை ஆண்டவர் சிறப்பான விதத்தில் செய்யும் வரை தாங்கள் ஓய்வெடுப்பதுமில்லை, ஆண்டவருக்கு ஓய்வு கொடுப்பதும் இல்லை. ஆண்டவரிடமிருந்து பதில் கிடைக்கும் வரையில், பல நாட்கள் ஆயினும் இரவு பகலாக ஆண்டவருடைய பாதத்தில் தங்களை ஊற்றி, அழுகையோடும் கண்ணீரோடும் வேண்டுதல் செய்வார்கள். தாங்கள் கேட்பதை நிறுத்தாமல் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். தாங்கள் தட்டுவதின் மூலம் வானம் திறக்கும்வரை, தாங்கள் தட்டுவதை நிறுத்தாமல் தொடர்ந்து தட்டிக்கொண்டே இருப்பார்கள்.

ஆண்டவர் என் இருதயத்திற்குச் செய்யுமாறு நான் ஜெபிப்பது இதுதான்.

"ஆண்டவரே, இழந்துபோனவர்களோடு என் இருதயத்தைப் பிரித்தெடுக்க முடியாத வகையில் இணைத்தருளும். அவர்களுடைய மீட்பிற்காக இரவு பகலாக கண்ணீரோடும், பலத்த சத்தத்தோடும் வேண்டுதல் செய்து விண்ணப்பம் பண்ணும்போது நான் மகிழ்ச்சியடைவேன்.

ஆண்டவரே, அவர்களோடு என் இருதயத்தை ஒன்றிணைத்தருளும். அதை நீர் செய்யும் வரையில் ஒரு நிமிட சந்தோஷத்தைக்கூட நான் காண்பதில்லை.

ஆண்டவரே, இப்பொழுதே நீர் அதைச் செய்யும். இழந்து போனவர்களின் மீட்பிற்காக ஜெபிக்கும்படி என் இருதயத்தை அவர்களோடு இணைப்பீராக. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன்".

இயேசு கிறிஸ்து தேவ பயம் உடையவராய் இருந்தார். அதனால் அவருடைய ஜெபம் பிதாவினால் கேட்கப்பட்டது.

"ஆண்டவரே, நான் இப்போது உம்முடன் மன்றாடுகிறேன். உம்முடைய பணியாளாக நான் முறைப்படி செயலாற்றுவதற்கு எனக்குத் தேவையான தேவ பயத்தை நீர் எனக்குத் தாரும். நீர் எனக்குத் தரும் வரையில் நான் உம்மோடு ஜெபத்தில் போராடவிருக்கிறேன். ஆண்டவரே அந்த நாள் வந்திருக்கின்றது. இன்றே அந்த நாள். உம்முடைய பாதத்தைவிட்டு ஒருநாளும் விலகிப் போகாமலிருக்க, ஜெபத்தின் பலி பீடத்தில் என்னைக் கட்டும். உம் மீதான புதிய அன்பினால் என்னை நிரப்பியருளும். உமக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக ஆமென்

# 18. கெத்சமனே மன்றாட்டு

"பின்பு அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள். அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி, நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டு கல்லெறி தூரம் அப்புறம் போய், முழங்கால்படியிட்டு, பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. அவர் ஜெபம் பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, நீங்கள் , நித்திரை பண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெப பண்ணுங்கள், என்றார்" (லூக்கா 22:39-46).

அன்றிரவிலே தாம் கைது செய்யப்படக்கூடும் என்பதை இயேசு அறிவார். எனினும் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமே என்கின்ற நினைவு அவர் உள்ளத்தில் இருந்தது. மனுக்குலத்தை மீட்டாக வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனாலும் வேளை வந்தபோதோ மனுக்குலத்தை மீட்க வேறுவழி உள்ளதோ எனப் பார்க்கிறார். ஏனெனில், சிலுவையின் வேதனையை அல்ல உலகத்தோற்றமுதல் நீடூழி காலமாக இருக்கும் - இருக்கப்போகும் மாந்தர்தம் பாவங்கள் முழுவதையும் சுமக்க வேண்டியதிருக்குமே என்றவர் எண்ணியிருப்பார். தம் தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டுவிடுவோமே என்பதில் எழுந்த வேதனை, அச்சம் நித்தியகாலமாய் தமக்கும் பிதாவுக்கும் இடையறாது இருந்துவரும் உறவு துண்டிக்கப்பட்டு போகுமே - தந்தை தம் முகத்தைத் திருப்பிக் கொள்வாரே என்பதிலிருந்த கவலை ஆண்டவரை வாட்டின. தாம் இப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சிலுவை மரத்தில் தொங்கும்போது உதவி கேட்டால், பாவம் என் மீது இருப்பதால் பிதாவிடம் விடை கிடைக்காதே என்ற வருத்தமும் அவரை மேலிட்டது. கடவுளின் மௌனமாகியப் பேரமைதி தமக்குத் தரும்வேதனையை எதிர்கொள்ளத் தயங்கினார். தம் வேதனைக்குரல் கேட்டும் அமைதியாக இருக்கும் தம் தந்தையின் நெஞ்சமும் எவ்வளவு அதிகமாய் வருந்தும் என்பதும் அவருக்கு தெரியும். சிலுவை திருக்குமாரனுக்கு எத்தகு இழப்பைத் தந்ததென்பதைச் சிலர் அறிவர். அது பிதாவுக்கு எத்துணை வேதனை

தந்தது என்பதை மிகச்சிலரே அறிவர். உண்மையில் பிதாவின் துன்பம் குமாரனின் துன்பத்திற்கு இணையாக இருந்தது!

தம் தந்தையிடமிருந்து பிரிந்திடும் நிலை, தூய்மை மிக்கவர் பாவம் சுமப்பதால் ஏற்பட்ட வேதனை, மைந்தனைவிட்டு தந்தை பிரிந்திருந்ததால் தந்தைக்கு ஏற்பட்ட வருத்தம் - இவையெல்லாம் கெத்சமனே மன்றாட்டை இன்றியமையாததாக்கியது. மேலும் அம்மன்றாட்டு அதிக ஆற்றல் வாய்ந்ததாகவும் இருந்தது. இவை எல்லாவற்றிலும் இரண்டு செயல்கள் இருந்தன. ஒன்று செயல்முறை; அடுத்தது கடவுளின் விருப்பம். அந்நேரத்தில் இரண்டும் வேறு வேறு போல் தோன்றுகிறது. ஏனெனில், பாத்திரமும் விருப்பமும் ஒன்றேபோல் தோன்றவில்லை. பாத்திரம் மிகக் கொடுமையாக இருந்தது. தந்தையே, இப்பொறுப்பை என்னைவிட்டு நீக்கும் என்றும் ஆண்டவர் மன்றாடுகின்றார்.

பாத்திரங்கள் எடுக்கப்படலாம். பாத்திரங்கள் எடுக்கப்பட்டாக வேண்டும். ஆகினும் உடனே கடவுளின் விருப்பம் இன்னது என்பதைப் அறியும் மெய் அறிவு வேண்டும். அறிந்து உடனே ஒப்படைக்க வேண்டும். ஆண்டவரும் பாத்திரத்தை எடுத்துவிட முடியுமா என்று தான் கேட்டாரேயன்றி, தேவன் தமது சித்தத்தை மாற்றியமைக்க முடியுமா என்றோ, தம்மிடமிருந்து நீக்கிவிட முடியுமா என்றோ அவர் வினவவில்லை. மாறாக, "என் விருப்பத்தின்படியன்று உம் விருப்பத்தின்படியே ஆகட்டும்" என்று மன்றாட்டில் உறுதிபடக் கூறுகிறார்.

தாம் இதை நிறைவேற்ற வேண்டுமென்பது கடவுளின் விருப்பம் என்பதை அறிந்தவுடன் மன்றாடுவதை நிறுத்துகிறார். எழுந்து தீயோரிடத்தில் மனுக்குமாரன் காட்டிக் கொடுக்கப்படும் வேளை வந்தது. எழுந்திருங்கள் நாம் போவோம். என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ வந்துவிட்டான் என்கிறார். தாம் சிலுவை ஏற்பது பிதாவின் விருப்பம் என்பதை அறிந்தவுடன் "எழுந்திருங்கள் போவோம்" என்கிறார். இப்பாத்திரம் என் தந்தையின் விருப்பம். அது நிறைவேறிடச் செல்வோம் வாருங்கள், எழுந்திருங்கள், அவர் விருப்பம் செயல்பட நாம் ஒத்துழைப்போம் என்கிறார்.

## ஆண்டவர் இயேசுவுக்கு கெத்சமனே செய்தது என்ன?

ஆண்டவர் இயேசு, அங்கே கடவுளின் சித்தம் நிறைவேற உள்ளது என்பதை அறிந்து, தம்மீது பொறுப்பொன்று ஏற்பட உள்ளது என்பதை உணர்ந்து கெத்சமனே செல்கிறார். தோட்டத்தில் அது கடவுளின் விருப்பம் என்பதை உணர்கிறார். அங்கே புதிய முறையில் சிலுவையையும் பாவத்தையும் உலகத்தின் பாவங்களையும் தந்தையிடமிருந்து பிரிவதையும் தந்தையின் பெருந்துயரத்தையும் தழுவிக் கொள்கிறார். மரணத்தையும் ஆர்வமுடன் ஏற்கும் உறுதியுடன் கெத்சமனே விட்டு

வெளியேறுகிறார். ஆண்டவர் அங்கே பாவத்தின் திகிலோடு நுழைந்தார். வெளியேறியபோதோ அகில உலகத்தின் பாவத்தை சுமப்பவராக பாவமாக்கப்பட்டவராக வெளியேறினார்.

## மாற்றம் தந்த மன்றாட்டு

சீஷரை விட்டுத் தனித்துச் சென்று ஆண்டவர் மன்றாடினார் என்று அறிகிறோம். அவர்களோடு சேர்ந்து ஜெபிக்கவே சென்றார். ஆனால் அவராலோ அவ்வாறு ஜெபிக்க இயலவில்லை. சீஷர் எதனையும் அறிந்து கொள்ளவில்லையே என்கின்ற துயரம் அவருக்கு இருந்தது. "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள்" (மாற்கு 14:34) என்று சொன்னார்.

அவருடைய ஆன்மா துயரத்தால் நிறைந்திருந்தது. ஆனால் அவர்கள் அவ்வாறு இல்லை. அவர் விழித்திருந்தார். அவர்களோ உறங்கிவிட்டனர். பாரத்தோடு இருக்கும் போது ஒருவரும் தூங்க முடியாது. பாரம் வெளியேறும் மட்டும் தொடர்ந்து ஜெபிக்கத் தூண்டும்.

இதைக் காட்டிலும் அதிக பாரத்தோடு ஆண்டவர் ஜெபித்த இடம் வேறு இல்லை எனலாம். அவர் மிக அதிக பாரத்தோடு ஜெபித்தார். வேதனையோடும் ஜெபித்தார். கடவுளின் விருப்பம் இன்னது என அறிய தம்மையே முற்றிலுமாக ஊற்றிவிட்டார். பலப்படுத்த ஒரு தேவ தூதுவனையே பிதா அனுப்ப வேண்டிய அளவு ஆண்டவர் தம்மை ஊற்றிவிட்டார். அவர் மன்றாட்டு அத்தனை ஆழமாக, ஆற்றல் மிக்கதாக அமைந்து, வியர்வை இரத்தமாக மாறும் அளவுக்குச் சென்றது.

ஆண்டவரின் இந்த மன்றாட்டு தம்மை முற்றிலுமாக கடவுளிடம் ஊற்றிவிடுவதாக அமைந்தது. அவ்வித ஜெபம் கேட்கப்படாமல் போவதில்லை. மன்றாட்டைக் கேட்ட தந்தை எல்லாவற்றையும் தெளிவுபடுத்துகிறார். எளிய முறையில் மன்றாடி இருந்திருப்பாரானால் அது வேறு வகையாக அமைந்திருக்கும். எளிய முறையில் ஜெபிக்கும் சூழலும் உண்டு. சில வேளைகளில் முற்றிலுமாக நம்மை ஊற்றிவிடுவதில்தான் சிறப்பிருக்கிறது. இத்தகு சூழலில் எளிமையாக ஜெபிப்போர் கடவுளின் இடையீட்டைப் பெற முடியாது. அவரது கரத்தை அசைக்கமுடியாது.

ஜெபிப்பவர் எதைப்பற்றி ஜெபிக்கிறோமோ அதை பற்றிய மெய் அறிவு வேண்டும். அழுது ஜெபித்தால், குரலெழுப்பி ஜெபித்தால் எத்தகு விளைவைத் தருகின்றன என்பதை அறிந்திருக்க வேண்டும். அறிந்திருக்கும்போது கடவுளை நிறைவு செய்யும் அளவில் ஜெபித்து அந்தந்த மட்டத்தில் கடவுளின் உதவியைப் பெறுவர்.




பல்வேறு ஜெபமட்டங்கள்

கெத்சமனேயில் ஆண்டவர் அவ்வாறு ஜெபத்திற்கு இடம் அளித்திருக்கவில்லையாயின் என்ன ஆகியிருக்கும் என்று எனக்கு நானே கேட்டதுண்டு. எனக்கு விடை தெரியவில்லை. ஆனால் ஒன்று, ஆண்டவருக்கு எதிராக எல்லாம் சென்றிருக்கும் என்பது மட்டும் உறுதி. உங்களுக்கும், எனக்கும் ஏன் உலகமனைத்திற்குமே எல்லாம் முரண்பட்டுப்போயிருக்கும். ஆண்டவர் ஜெபிக்க வேண்டிய நேரத்தில் ஜெபித்ததால் கடவுளுக்கு நன்றி. ஆண்டவருக்கு மகிமை உண்டாவதாக.

பாரமற்ற எளிய முறை வேண்டுதல்களின் விளைவு பற்றி நீங்கள் என்றேனும் நினைத்ததுண்டா? நினைத்துப் பாருங்கள், செயல்படுங்கள். எண்ணிப் பார்ருங்கள், ஆண்டவரின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். அவரது நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆமென்!

# 19. சிலுவையிலிருந்து செய்த ஜெபம்

பிரச்சினைகளுக்கும் வேதனைகளின் அழுத்தத்திற்கும் மத்தியில்தான் ஒரு மனிதனின் உண்மையான குணம் வெளிப்படும். அப்போதுதான் ஒருவனுக்குள் மறைந்திருக்கும் பலமோ அல்லது பலவீனமோ வெளி காட்டப்படுகின்றது. ஆண்டவர் ஏழு வார்த்தைகளை சிலுவையிலிருந்து சொன்னார். அவைகள்:

1. "அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்கா 23:34).
2. "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 23:43)
3. "..தம்முடைய தாயை நோக்கி ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்" (யோவான் 19:26,27)
4. "..என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத் 27:46)
5. ".. தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28)
6. "முடிந்தது" (யோவான் 19:30)
7. "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46).

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையிலும் கடவுளின் முழு சித்தத்துக்கும் உட்பட்டிருந்தார் என்பது இங்கே நோக்க வேண்டிய ஒன்றாகும். சிலுவை மரத்தில் தாம் தொங்கிக் கொண்டிருந்த போதும் கூட அவர் பிதாவை முதலாவதாகவும், மற்றவர்களை இரண்டாவதாகவும், தம்மை இறுதியாகவும் வைத்தார். சிலுவையில் இருந்து மொழிந்த முதல் வார்த்தையில், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்தவர்களை மன்னித்து இரட்சிக்கும் பிதாவின் சித்தம் செய்யப்படும்படி பிதாவிடம் பரிந்துரை செய்தார். மனந்திருந்திய கள்வனுக்கு விண்ணரசைக் குறித்த நிச்சயத்தை, நம்பிக்கையை இரண்டாம் வார்த்தையில் அருளினார். தம்முடைய சீஷனுக்குத் தாய் என்ற உறவையும், தம் தாயாருக்கு மகன் என்ற உரிமையையும் மூன்றாம் வார்த்தையில் ஏற்படுத்தினார். ஆண்டவர் இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த வார்த்தைகள், மற்றவர்களுக்காக தம்மை அவர் முற்றிலுமாக ஒப்புவித்ததை விளக்கிக் கூறுகின்றது. தாம் முற்றிலுமாக பிதாவினுடைய

சித்தத்திற்குக் கட்டுப்பட்டவர் என்ற உண்மையை சிலுவைப் பாடுகளில் மூலம் அவர் வெளிப்படுத்தினார். பரிசுத்தத்தில் அவர் தொடர்ந்திருந்தார். அவர் ஊனியல்பு உடையவராகி அதாவது மாயிசத்துக்குறியவராகி ஆன்மா, உடல், சுற்றுச்சூழல் ஆகியவற்றால் கட்டுப்படுத்தப் பட்டவராகவில்லை.

ஆண்டவரே, சுய கட்டுப்பாட்டின் அதே அளவை நான் பெறுவதற்கு நீர் கிருபையளிக்க மன்றாடுகின்றேன். என்னுடைய ஆன்மாவினாலோ, சரீரத்தினாலோ அல்லது சூழ்நிலையினாலோ நான் வழி நடத்தப்படாமல், உம்முடைய ஆவியினால் நான் வழி நடத்தப்படவும், ஆட்கொள்ளப்படவும் நீர் கிருபை புரிந்தருளும். ஆண்டவரே, ஜெப வாழ்க்கைக்கு அதனையே மிக முக்கியமானதாக, அத்தியாவசியமானதாகக் காண்கிறேன். ஏனென்றால் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு நடத்தப்படுகிறவர்களே சமுதாயத்தில் அழுத்தமான தாக்கத்தை நிகழ்த்த முடியுமே அன்றி சரீர, ஆன்ம, சூழ்நிலை இவைகளின் இயக்கத்தால் நடத்தப்படுபவர்களால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது.




ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து மூன்று முறை ஜெபித்தார். தமக்கு துரோகம் செய்தவர்களுக்காகவும், தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் பிதாவிடம் செய்யப்பட்ட பரிந்துரையாக முதல் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சிலுவையில் மிகக்கொடிய சரீர வேதனையை அவர் அனுபவித்தார். இருந்த போதிலும் தாம் வேதனையினால் ஆளப்படுவதற்கு அவர் உடன்படாதிருந்தார். அவருடைய தேவைக்கும் விருப்பத்திற்கும் உடன்படவில்லை. அவர் பிதாவினிடம் ஜெபித்தார். தம்முடைய கைகால்கள் ஆணிகளால் கடாவப்பட்டு, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேதனைமிகு அந்த நிலையிலும், தம்முடைய எதிரிகளுக்காக அவர் ஜெபித்தார். எத்தனை ஆச்சரியம்!

ஆணிகள் துளைக்கப்பட்ட கைகால்கள் - தலையிலோ முள்முடி - உடல் முழுவதும் இரத்தக் கால்வாய்கள் இப்படி வேதனையின் உச்சக்கட்டத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலும்,

எப்போதும்போல் ஜெபமே அப்போதும் அவர் வாழ்வில் முதன்மை பெற்றிருந்தது.

கோரச் சிலுவையில் அறையப்பட்டு கொடிய வேதனையில் தொங்கிக் கொண்டிருந்த போதும் அவர் ஜெபித்தார். எல்லா நேரமும் ஜெப நேரமே என்பதை அதன்மூலம் அவர் மெய்ப்பித்துக் காட்டினார்.

நானும் நீங்களும் ஜெபிக்க முடியாத நிலையில் இருந்தோம் என்று சொல்லும் நிலை நமக்கு வராமலிருப்பதாக! " நான் களைப்படைந்திருக்கின்றேன், எனவே ஜெபிக்கவில்லை" என்றும் சொல்லாதிருப்போமாக! "நான் மிகவும் நொந்து போயிருக்கிறேன் - வருத்தத்திலிருக்கிறேன். ஆகையினால் ஜெபிக்க முடியவில்லை" என்று சொல்லும் நிலை உங்களுக்கும் எனக்கும் வராமலிருப்பதாக. சிலுவையில் ஆண்டவர் மன்றாடியதன் மூலம், மனிதர் எக்காலமும் எச்சூழலிலும் என்ன விலை கொடுத்தேனும் மன்றாடியே ஆக வேண்டும் என்பதை நிறுவியுள்ளார். ஒவ்வொரு நொடிப் பொழுதும், ஒவ்வொரு நிலையிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதன் ஜெபிக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் நோக்கம்.

சிலுவையிலிருந்து தமது எதிரிகளின் மன்னிப்பிற்காக பிதாவினிடத்தில் பரிந்துரை செய்ததன் மூலம் ஆண்டவர் நமக்குக் கற்பித்திருக்கின்றதை நாம் கற்றிருக்கின்றோம் என்பதை நாம் காட்டுவதற்கு அது ஒன்றே வழி.

ஆண்டவருடைய கண்கள் எப்போதும் பிதாவையே நோக்கியிருந்தன. அவருடைய கண்கள் எப்போதும் பிறருடைய தேவைகளையே நோக்கிய வண்ணம் இருந்தன. மக்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்பதையே எப்போதும் அவர் கண்கள் தாகத்துடன் நோக்கியிருந்தன. அவை எப்போதும் அவரை ஜெபத்திற்கு வழி நடத்தின.

## சிலுவையிலிருந்து வந்த கடைசி வார்த்தை

ஆண்டவர் இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த கடைசி வார்த்தை ஒரு ஜெபமாக இருந்தது. சிலுவையில் தொங்கிய அருள்நாதர் முதல் வார்த்தையை ஜெபத்தில் ஆரம்பித்து கடைசி வார்த்தையை ஜெபத்தில் முடித்தார். நமது மீட்பர் எத்தனை பெரியவர்! ஜெபத்தின் முக்கியத்துவத்தை எத்துணையாய் அவர் புரிந்திருந்தார்! தாம் புரிந்து கொண்டதை எத்தனை நேர்த்தியாய் அவர் செயலாக மாற்றினார்! அவர் எப்படி ஜெபித்தார்!

"பிதாவே, உம்முடைய மேன்மைமிகு குமாரன் தம் வாழ்க்கை முழுவதும் ஜெபித்தார். அவர் தம்மைத்தாமே உம்மிடத்தில் இடைவிடாமல் ஜெபத்தில் ஊற்றினார். எங்களுடைய பாவங்களை அவர் சுமந்ததன் காரணமாக உம்மோடு ஏற்பட்ட பிரிவின் மிகக்கடுமையான வேதனையை

அவர் உணர்ந்த போதும் கூட, அவர் வேறெங்கும் நோக்காமல் உம்மையே நோக்கி, "பிதாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கேட்டார். ஆண்டவரே, என்னுடைய வாழ்க்கையை மாற்றும். ஆண்டவரே, என்னுடைய இருதயத்தை மாற்றும். என்னை அவரைப்போல் ஆக்கும். என்னை உம்மிடம் இழுத்துக் கொள்ளும். எனக்குரிய யாவற்றையும் உமக்கு நேராய் திசை திருப்பும். ஆண்டவரே, ஜெபம் பண்ண எங்களுக்குக் கற்பியும், உம்மோடு எங்கள் இருதயங்களை இணைத்தருளும். நீர் அதனைச் செய்யும்; அப்போது நாங்கள் முற்றிலும் வேறுபட்டவர் களாவோம். ஆண்டவரே, நீர் அதனை செய்தருளும்; அப்போது நாங்கள் ஆண்டவர் இயேசுவைப்போல் மாறுவோம். ஆண்டவரே, நீர் அதனைச் செய்யப்போகிறபடியால் உமக்கு நன்றி. ஆமென்!

# 20. மாட்சியின் அரியணையிலிருந்து மன்றாட்டு

"அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராய் இருக்கிறார்கள்.

இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி 7:23-25).

முதல் பன்னிரெண்டு ஆண்டுகளையும் ஜெபிப்பது எவ்வாறு என்பதில் ஆண்டவர் செலவிட்டார் என்று பார்த்தோம். அடுத்த பதினெட்டு ஆண்டுகள் தம் ஊழிய காலம் முழுவதையும் ஜெபத்தில் கழித்தார் என்று பார்த்தோம். சிலுவையிலிருந்தும் ஜெபித்தே தம் உயிரை விட்டார் என்று கண்டோம்.

"தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா" (லூக்கா 24:25,26) என்று சொல்லியவாறு உலக வாழ்வை நீத்து மாட்சிமையடைந்தார்

கடினமாக உழைத்துப் பாடுபட்டு மாட்சிமைக்குள் ஓய்வெடுக்கச்சென்றார் போலும் என்று எண்ணலாம். ஆனால் ஓய்வெடுக்க அவர் செல்லவில்லை. முற்றிலும் புதுமையான முறையில் யாவருக்காகவும் மன்றாடுவதற்காக மாட்சிக்குட் புகுந்தார். உலகில் இருந்தபோதும் பரிந்து மன்றாடினார்.

இப்போது அவர் மாட்சிமைக்குட் புகுந்து ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. நமக்காக அவர் மன்றாடியும் இத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன. நமக்காக அவர் எப்போதும் பரிந்து மன்றாடுகிறார் என்று திருமுறை கூறுகிறது. ஆக, அரியணையிலும் ஆண்டவரின் முழுப்பணியும் தம் புனிதர்களுக்காக பரிந்து மன்றாடுவதுதான் எல்லாவற்றையும் கீழ்க்கண்டவாறு சுருக்கலாம்:

1. பன்னிரு ஆண்டுகள் ஜெபிக்கக் கற்றார்
2. பதினெட்டு ஆண்டுகள் திருப்பணி முழுவதும் ஜெபித்தார்
3. மூன்றரை ஆண்டுகள் அதிகமதிகமாக ஜெபித்து பணி செய்தார்

4. ஈராயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து தம் பணி முழுமை செய்யப்பட மன்றாடுகின்றார்.

அவருடைய ஓராண்டு திருப்பணிக்கு ஐந்து ஆண்டுகள் வீதம் பதினெட்டு ஆண்டுகள் ஜெபித்தார் என்று முன்னர் சொன்னோம். அவரைப் போலவே நாமும் கற்றிட வேண்டும் என்றும் சொன்னோம். இப்போது வேறு ஒன்றைக் காண்கிறோம். அவருடைய மூன்றரை ஆண்டு திருப்பணித் தொடர்ச்சிக்காக அவரது ஒவ்வொரு ஆண்டு பணிக்கும் 559 ஆண்டுகள் ஏற்கெனவே ஜெபத்தில் செலவிட்டுவிட்டார் என்று தெரிகிறது.

இதினின்று நாம் ஒன்றைப் பெறுவதாயின், பன்னிரு ஆண்டு ஜெபக்கல்வியைத் தொடர்ந்து பதினெட்டு ஆண்டுகள் ஜெபத்திருப்பணியில் தொடர வேண்டும். அப்படியானால் ஒரு மனிதன் மூன்றரை ஆண்டுகள் ஜெபிக்கக் கற்கவும், ஐந்து ஆண்டுகள் திருப்பணிக்காக ஜெபிக்கவும் ஓராண்டு திருப்பணி செய்யவும், அதைத் தொடர்ந்து 559 ஆண்டுகள் திருப்பணி தொடர்ச்சிக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

## ஜெபமே தலையாயது

நமது ஆண்டவர் வாழ்வில் முன்மாதிரியாக இருந்த ஜெப வாழ்வை நாம் ஆய்ந்து பார்க்க வேண்டும். அந்த ஜெப வாழ்வை நாமும் முயன்று பின்பற்ற வேண்டும். வாழ்விற்கு ஜெபம் இன்றியமையாதது என்பதற்கு ஆண்டவர் வாழ்வே சிறந்த சான்று. அது ஜெபம் தேவை என்பதை மட்டுமன்று, அளவு அல்ல தரமே தலையாயது என்பதையும் காட்டுகிறது.

புனிதர்களுக்காக மன்றாடுவதே ஆண்டவர் இயேசுவின் பெரும்பணி என்பது உண்மை. மேலும் அவர் பல ஆண்டுகள் தொடர்ந்து ஜெபித்து வருகின்றார். நாம் மேலோட்டமாக ஜெபிப்போமாயின் அதுவே பாவமாகும். அரியணையிலிருந்து இடையறாது அவர் செய்யும் இறைவேண்டல், ஜெபிக்காத இன்றைய திருச்சபையைப் பார்த்து அவர் செய்யும் ஏளனமாகும். ஜெபிக்காத தனி விசுவாசியையும் அது தீண்டுகிறது. ஓரிரு மணிநேரம் ஜெபித்து விட்டு மிகவும் ஜெபிப்பதாக எண்ணிக் கொண்டிருக்கும் தனி விசுவாசியையும் அது தீண்டுகிறது. ஓரிரு மணிநேரம் ஜெபித்து மிகவும் ஜெபிப்பதாக எண்ணிக்கொள்வோர்க்கு அது அறைகூவலாகும். அவருடைய மன்றாட்டு எல்லோரையும் ஜெபிக்க அழைக்கும் அழைப்பாகும். மனிதர் கடவுளுக்குச் செய்யும் நற்செயல் ஜெபமே. . மனிதர் தங்கள் நேரத்தை ஜெபிப்பதற்குப் பயன்படுத்துவது மூலமே உண்மையாக காலத்தைப் பயன்படுத்துவோராகின்றனர். அவருடைய பரிந்துபேசும் ஜெபம்

வெளிப்படையாகக் கூறுவது யாதெனில், மனிதரின் மன்றாட்டின்றி கடவுள் தனித்து எதையும் செயல்படுத்துபவரல்லர் என்பதாம். மேலும், நாம் ' ஜெபிக்கவில்லையெனில், அவர் விரும்பும்செயல்கள் கூட செயல்படுத்தப்படாமலே இருக்கும் என்பதும் உறுதி.

ஜெபம் என்பது கடவுள் செயல்படுவதற்கான வழி என்றும், பரிசுத்தவான்கள் செய்யும் பல ஜெபங்கள், கடவுள் பலவழிகளில் செயல்பட உதவும் என்றும் முன்னர் பார்த்தோம். கடவுள் செயல்பட இடைவெளியின்றி ஆண்டவர் இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கிறார். திருச்சபை ஜெபிக்காமலிருந்தும் அவர் திருப்பணி தொடர்கிறது என்றால் அது ஆண்டவரின் ஜெபத்தால்தான். அரியணையிலிருந்து ஆண்டவர் செய்யும் ஜெபம் அதிகப்படியாக கடவுள் செயல்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஆண்டவர் அற்புதமானவர். அவர் நாமம் அருமையானது.

## அனைவருக்கும் உரிய பாடம்

ஒரு நிகழ்ச்சி நடக்கும் முன்பும் நடந்துகொண்டிருக்கும்போதும் ஜெபிக்க வேண்டும் என்று சிலர் எண்ணுவர். எடுத்துக்காட்டாக ஒரு நற்செய்தி விழாவுக்கு முன்பும், அது நடக்கும் போதும் ஊக்கமாக ஜெபிப்போம். இதில் அதிக வேதனையானது என்னவென்றால், விழா முடிந்ததும் ஜெபிக்க முற்றிலுமாக மறந்துவிடுவோம். புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோர் ஜெபமென்னும் நீருற்றாமல் தாங்களாகவே வளர வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர். அதன் விளைவாக பலர் பின்னடைந்து சாத்தானால் கவரப்பட்டு போகின்றனர். ஆன்மீக வாழ்வில் முன்னேற்றமின்மை ஏற்படுகின்றது. இயேசுவை ஏற்றபின் தான் ஒருவர் அதிகமாக ஆபத்தான சூழலுக்கு வருகிறார் என்பதை கடவுளின் பிள்ளைகள் அறிவதில்லை. இயேசுவை ஏற்ற பின்தான் அதிக ஜெப உதவி தேவை. அது இல்லாததால் இறையாட்சியின் பிள்ளைகள் குழந்தை நிலையிலேயே மடிந்து போகின்றனர்.

ஆன்மீகக் குழந்தைபேறு பற்றி நூலின் தொடக்கத்தில் பார்த்தோம். அதற்கே திரும்புவோம். அதிக ஜெபம் இருக்கும்போது அதிகமான நல்ல ஆன்மீகக் குழந்தைப் பிறப்பு நிகழும். பிறந்த குழந்தை வளரவும் வயது அடையவும் மிக அதிகமாக ஜெபம் தேவை. ஜெபமின்றேல் இளநிலையில் ஆன்மீக 'மரணமடையவும், நோய்ப்படவும், கனியற்ற வாழ்வைத் தொடரவும், கனி தந்தாலும் முழு நிறைவாக இல்லாமலும் போகலாம். அது கொடுமையானது. விதைப்பவன் பற்றிய உவமையில் வழியோரம் விழுந்ததும், 'கல்லுள்ள நிலத்தில் விழுந்த விதையும் மிகுந்த இழப்பைத் தந்தது. மற்ற இரண்டும்கூட அப்படியே மிகுந்த இழப்பைத்' தந்தன. பின்னவை இரண்டும் விதைப்பவனின் அதிக கவனத்தைப் பெற்றும் பயனற்றுப் போயின.

அது போலவே கருவுற ஒரு வேளை அதிக காலம் பிடிக்காது.

ஆனால் கருவுற்றபின் ஒன்பது மாதம் கருப்பையில் இருக்கும். குழந்தை பிறப்பும் பன்னிரெண்டு மணி நேரத்திற்குள் நடந்துவிடும். எனினும் வளர்ச்சியும் முழுமையும் பெற பல ஆண்டுகள் பிடிக்கும். ஜெபிக்க வேண்டியவற்றிற்கு ஜெபித்தாக வேண்டும்.

கருவுற வேண்டுமென்பதறகு சில மணித்துளி கரு வளர ஒன்பது மாதங்கள். குழந்தைப்பேறு நன்முறையிலிருக்க சில மணி நேரங்கள். குழந்தை வளர்ந்து, வலுவுடன் திகழ்ந்து பயனுள்ள பெரிய மனிதனாக மாற பல ஆண்டுகள் பிடிக்கும்.

இம்முறையில் நாம் ஜெபிக்க வேண்டும். ஆனால் அப்படி நாம் செய்யவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. அதன் விளைவும் அத்தகையதாகவே இருக்கின்றது.

## தெளிவான திட்டம் தேவை !

நற்செய்தியாளர் ஒருவர் நற்செய்திக் கூட்டத்துக்கு முன்னும், நிகழும்போதும், பின்னும் ஜெபிக்க வேண்டும். அதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். கூட்டத்திற்கு முன்னர் செய்கின்ற ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்க வேண்டும். கூட்டத்திற்குபின் தொடர்ந்து தளர்வின்று ஜெபிக்க வேண்டும். மீட்கப்பட்டார்களா? இல்லையா? என்று பாராமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இவ்வாறாகவே நற்செய்தியாளர் தம் திருப்பணியை நன்முறையில் ஆக்கிக்கொள்ள முடியும். ஆனால் அவ்வாறு இப்போது நிகழவில்லை என்பது வருத்தத்திற்குரியதுதான். கூட்டத்திற்குப்பின் ஜெபிக்க சோம்பல் கொண்டு வேறு ஓர் ஊழியரை அழைத்து மீண்டும் கூட்டம் நடத்துவது மிகுந்த பயனைத் தராது. கேட்பதற்குக் காதுள்ளோர் கேட்கட்டும். இவ்வாறாக இருப்போர் ஆண்டவர் இயேசுவின் ஊழியத்தையும் ஜெப வாழ்வையும் நோக்கி கற்றுக்கொள்ள வேண்டும்.

கூட்டத்திற்குப்பின் பல ஆண்டுகளுக்கு தொடர் ஜெபம் இருக்கப் போகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டு;ம. இல்லையாயின் ஏற்பாடு செய்து மக்களை ஜெபிக்கத் தூண்ட வேண்டும். மக்கள் ஆயத்தமில்லையெனில் கூட்டங்கள் நடத்தாமல் விடுவதே கடவுளுக்குரிய மதிப்பைச் செலுத்துவதாகும்.

வார்த்தையை எடுத்துரைப்பவருக்கும் இது பொருந்தும். மிகுந்த ஜெபத்துடனேயே செய்திகள் கொடுக்கப்பட வேண்டும். செய்தியைக் கொடுக்கும்போதே ஜெபிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட செய்தி மிகுந்த பலனைத்தர, செய்தியைக் கொடுத்தபின் வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் ஜெபித்துக்கொண்டே இருக்க வேண்டும். உண்மையான ஊழியர் ஜெபிப்பதைத்தான் தெரிந்து கொள்வாரேயொழிய வேறு ஒருவரை

அழைத்து வேறு ஒரு செய்தி அளிக்கும் அபாய முறையைக் கையாள மாட்டார்.

ஆண்டவரே, உம் முன்மாதிரி நிறைவாக இருப்பதற்காக நன்றி கூறுகிறோம். என்னையும் எங்களையும் அதன்வழி நடக்க உதவும் அரியணையிலிருந்து இடையறாது மன்றாடுவதற்காக நன்றி கூறுகிறோம். இவையே நான் உம்மிடம் அன்பு கூர்ந்து கூம்மை நெருங்கிச் சேர என்னை ஊக்கப்படுத்தியவை. உமக்கே என்றென்றும் மாட்சிமை உண்டாகட்டும். ஆம், ஆண்டவரே இவைதாம் உம் திருச்சபை உம்மீது அன்புகூர்ந்து உம்மை நெருங்கிடச் செய்தவை. உமது மாட்சிமிகு திருப்பெயருக்கு என்றென்றும் போற்றுதல் உண்டாகட்டும். ஆமென்!

ஆண்டவரே, எங்களுக்குக் கேட்கும் திறனையும் கீழ்ப்படியும் மனத்தையும் தருவீராக!

# வானத்தைத் திறந்தருளும் எங்கள் ஆண்டவரே!

எங்கள் ஆண்டவரே,
வானத்தைத் திறந்து இப்போதே கீழிறங்கி வாரும்!
மீண்டும் எங்களை சந்தியும் ஆண்டவரே!
எலியாவின் தேவனே,
வானத்தைத் திறந்து உமது ஆவியை எங்கள் மீது ஊற்றும்!
அக்கினியின் ஆவியை நீர் பொழிய வேண்டுமென்றே நாங்கள் வேண்டுகின்றோம்!
அப்போது,
உம்முடைய பிரசன்னத்தில் எங்கள் சபைகள் நடுங்கும்!
ஆம் ஆண்டவரே,
உமது பக்திபூர்வமான தூய பிரசன்னத்தில் அவைகள் நடுங்கும்!

உமது ஆவியை எங்கள்பேரில் ஊற்றும் கர்த்தாவே!
ஆவியை ஊற்றி எங்கள் சபையை வளைத்துக்கொள்ளும்!
உமது அக்கினி கொழுந்துவிட்டு எரியும்போது,
தேவையற்றவைகளை நீர் எரித்துப்போடும்!
எழுந்தருளும் ஆண்டவரே,
பரிசுத்தத்தில் எங்களைத் தூண்டிவிடும்!
செத்துப்போன எங்கள் மனசாட்சியை விழிப்படையச் செய்யும்
எங்கள் மத்தியில் உம்முடைய ஆவி அசைவாடட்டும்!
ஆம் ஆண்டவரே,
பரிசுத்தமும், சத்தியமும் எங்களை மேற்கொள்ளச் செய்யும்!

வானத்தை திறந்தருளும் ஆண்டவரே,
வானத்தை திறந்து இப்போதே இறங்கி வாரும்!
இந்த இறுதிக் காலத்தின் கடைசி மணித்துளிகளில் எங்கள் மத்தியில் வேகம் இறங்கி வாரும்!
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வல்லமையின் ஆவியை ஊற்றி,
உம்முடைய எதிரிகளுக்கு உம் திருநாமத்தின் மகத்துவத்தை மீண்டும் விளங்கப்பண்ணும்!
எங்கள் ஆண்டவரே,
எங்கள் சபைகளை வளைத்துக்கொள்ளும்.
இன்றே - இப்பொழுதே எங்களைச் சந்தியும்!
சபைதோறும் விழிப்புணர்வை அள்ளியே ஊற்றும்!
உம்முடைய பிரம்மிக்கவைக்கும் பரிசுத்தத்தின் பூரண வெளிப்பாட்டை காணச்செய்யும்!

எங்கள் ஆண்டவரே,
இப்போது எங்கள் தேவையெல்லாம், நீர் வானத்தைத் திறந்து
இப்போதே கீழிறங்கவேண்டும் என்பதுதான்!
உமது தூய அக்கினியினை புறப்படச் செய்யும்!
அப்போது தேசங்கள் உம்முடைய பிரசன்னத்தில் நடுங்கும்!
ஆண்டவரே,
உம்முடைய திருப்பணியை மறுபடியும் மலரச் செய்யும்!
ஆண்டவரே, எங்கள் நாட்டின் பாவச் சிறையிருப்பை திருப்பும்!
எங்கள் ஆண்டவரே,
வானத்தைத் திறந்தருளும்!
எங்கள் இருதயத்தையும் கூடவே திறந்தருளும்!
உம்முடைய பயங்கர செயல்களை எங்கள் தேசம் அறிந்திடச் செய்யும்!
எங்கள் தாய்த்திருநாடு உமது பிரசன்னத்தில் நடுங்கும் வண்ணம்
உம் செயல்களை எங்கள் மத்தியில் வெளிப்படுத்தும்!
இறங்கி வாரும்! இப்போதே வாரும்!
மலைகளும் உமக்கு முன்பாக மெழுகைப்போல் உருகுமாமே!
கல்லான எங்கள் இருதயங்களையும் அப்படியே உருக்கும்!
பூர்வ நாட்களில் அப்போஸ்தலர் காலத்தில் நடப்பித்த உமது மகத்துவச்
செயல்களை எங்கள் மத்தியில் நடப்பியும்.

வானத்தைத் திறந்தருளும் கர்த்தாவே!
காத்திருக்கும் எங்கள் இருதயங்களைத் திறந்தருளும்!
அதனைக் கண்டு
தேவாதி தேவன் என்று உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்!
ஆம் ஆண்டவரே!
உம்முடைய நாமத்தை நாங்கள் மகிமைப்படுத்துவோம்!
வாரும், எங்கள் இயேசுவே! ஆமென்!

என்னை வளையும் ஆண்டவரே!
வளையாத என் முதுகை வளையும்!
என் இருதயத்தை வளையும் ஆண்டவரே!
கடினமான - கருணையற்ற என் இருதயத்தை வளையும்!
கல்லான என் இருதயத்தை உருக்கும் ஆண்டவரே!
மலைகள் உமக்கு முன்பாக மெழுகைப்போல் உருகுவதுபோல
கடினமான என் இருதயத்தை உருக்கும்!
அக்கினி அபிஷேகத்தில்
எங்களுக்குள்ளிருக்கும் தேவையற்றவைகள் எரிந்துபோகட்டும்!
என்னை வளையும் ஆண்டவரே!

என் இருதயத்தை வளையும்!
உடைந்த உள்ளத்தைத் தொடர்ந்து தாரும்!
நொய்ந்த ஆவியை எனக்குத் தாரும்!
கண்ணீர்விடும் உள்ளத்தை எனக்குத் தாரும்!
பாவங்கள் நீங்கி எங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி பொங்க
நீர் எழுப்புதலுக்காக ஏங்கும் கண்ணீரைத் தாரும் ஆண்டவரே!
ஆன்ம வாஞ்சை தாரும்!
உம்முடைய வருகைக்கான தாகத்தை எனக்குத் தாரும்!
என் மீறுதல்களுக்காய் மென்மேலும் வருத்தமுறும் உள்ளம் தாரும்!
என் பாவங்களுக்காய் அழுது புலம்பும் உள்ளம் தாரும்!
தீமையை வெறுத்து உண்மையாய் அறிக்கை செய்யும் உள்ளம் தாரும்!
இடையீட்டு மன்றாட்டிற்காய் பரிந்துபேசும் விண்ணப்ப ஊழியம் செய்ய
எங்கள் உள்ளத்தில்
கரிசனை தாரும்! தாரும்!
கவலையில் தோய்ந்த கண்ணீரில் ஜெபிக்கக் கற்றுத் தாரும்!
வையகத்தில் வாழ்ந்துவரும் எண்ணற்ற மாந்தருக்காய்
மன்றாடும் உயர்ந்த மனம் எனக்குத் தாரும்!

என்னை வளையும் ஆண்டவரே!
என் இருதயத்தைத் திறந்தருள உம்மை வேண்டுகிறேன்!
கர்த்தரின் பாரத்தைப் பகிர்ந்திடும் உள்ளத்தை என்னில் தாரும்!

நான் பரிந்து பேசுகிறவனாய் இருக்கிறேனா?
போதுமான அளவிற்கு அவ்வாறு இல்லையே!
ஆண்டவரே, நான் உண்மையாக பரிந்து பேசுகிறவனாக மாற வேண்டும்!
என்னை வளையும் ஆண்டவரே!
பூர்வ நாட்களில் இருந்ததுபோல
நான் பரிந்து பேசுகின்றவனாக மாறுவதற்கு

என்னை வளையும் ஆண்டவரே!
எங்களை வளையும் ஆண்டவரே!
பரிந்து பேசுகின்றவர்களை எங்களுக்குத் தாரும்!
எங்களை வளைத்து உலகத்தை மீட்டருளும்!
எங்களை வளைத்து.
அப்போஸ்தல நாட்களை மீண்டும் கொண்டு வாரும்!
ஆண்டவரே, வானத்தைத் திறந்து
வையத்தில் இறங்கி வாரும்
இப்போதே வாரும் ஆண்டவரே! ஆமென்!

அன்பு நெஞ்சங்களே!

இந்திய கிறிஸ்தவர்கள் மத்தியில் சிறந்த எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் எழும்ப வேண்டும்.

கிறிஸ்தவ இலக்கியங்கள் ஏனைய இலக்கியங்களுக்குச் சவாலாக வெளிவர வேண்டும்.

வேற்று நாட்டு சிறந்த கிறிஸ்தவ இலக்கியங்கள் இந்திய கிறிஸ்தவர்களுக்கு முன் பரிமாறப்பட வேண்டும்.

இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் மேலை நாட்டவருக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

.என்பன போன்ற பல உயர்ந்த இலக்குகளுடன் இந்த நன்நூல் இலக்கியச் சேவை துவங்கப்பட்டுள்ளது.

அனைத்து திருச்சபை மக்களையும் சத்திய வேதத்திலே வேர் ஊன்றச் செய்து கிறிஸ்துவின் அன்பிலே ஒன்றாக வாழச் செய்து ஜெப ஊழியத்திலும், சுவிசேஷ ஊழியத்திலும் சமுதாய மறுமலர்ச்சிப்பணியிலும் தூண்டியெழுப்பக்கூடிய; தரமான, பயனுள்ள, கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிடும் பணியை; நன்நூல் இலக்கியச் சேவை நிறைவேற்ற முன் வந்துள்ளது.

கிறிஸ்தவ மிஷனெரிகள் எங்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். கம்யூனிஸ்டுகள் எடுத்துப்படிக்க இலக்கியம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டை ஈடுசெய்ய இந்த இலக்கிய சேவைப்பணி நின்று நிலவ ஜெபியுங்கள்! வாழ்த்துங்கள்!

- ☆ உங்கள் கருத்துக்களை ஆலோசனைகளை எழுதுங்கள்!
- ☆ உங்கள் ஜெபங்களில் இவ்வூழியத்தையும் நினைவு கூறுங்கள்!
- ☆ இலக்கிய விநியோகத்தில் எங்களுக்கு வலதுகரம் கொடுங்கள்!
- ☆ ஆதரவு நன்கொடையாளராக உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்!

நல்ல இலக்கியங்களால் இந்தியரின் அறியாமையெனும் இருள் விரட்டி கிறிஸ்துவை ஒளி தீபமாக அவர்கள் இதயங்களில் நாம் ஒருமித்து ஏற்றி வைப்போம்.

**நன்நூல் இலக்கியசேவை**

கீழ்ப்பாக்கம், சென்னை-600 010, தமிழ்நாடு, இந்தியா.

ஆப்பிரிக்காவின் காமரோன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் **சகரியாஸ் டேனி ஃபோமம்** அந்நாட்டின் யவுண்டே பல்கலைக் கழகத்தின் இரசாயனத் துறையின் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். 1966 ஆம் ஆண்டு இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட இவர் அன்று துவக்கம் மாணவர் மத்தியில் மலர்ச்சிதரும் திருப்பணியை ஆற்றி வருகிறார் உலகின் பல பாகங்களில் ஊழியம் செய்யச் சென்று வரும் 'இவர் தன் தாயநாட்டையும் ஆப்பிரிக்கக் கண்டத்தையும் ஜெபஅலை அதாவது விண்ணப்பத்தின்ஆவி பற்றிப்பிடிக்க தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து வருகிறார். இவருக்கும் இவரது மனைவி **பிரிஸ்காவுக்கும்** ஆறு குழந்தைகள் உண்டு. இவர்கள் குடும்பமாக கர்த்தரை சேவித்து வருகிறார்கள்.

கிறிஸ்தவ வாழ்வுக்கும் ஊழியத்துக்கும் ஜெபம் அடித்தளமானது. இயேசுவுக்கே அது அத்தியாவசியமாக இருந்திருக்குமானால் எனக்கும் உங்களுக்கும் எத்தனை அத்தியாவசியமானது என்று இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் **சகரியாஸ் டேனி ஃபோமம்** நம்மைக் கேட்கிறார். இயேசுவின் ஜெபவாழ்க்கை எப்படிப்பட்டதாக அமைந்திருந்தது என்பது வேத வெளிச்சத்தில் இப்புத்தகத்தில் அலசப்பட்டுள்ளது. இதை வாசிக்கும் ஒவ்வொருவருடைய ஜெப வாழ்விலும் புரட்சிகரமாக மாற்றங்கள் நிகழும் என்பது ஆசிரியரின் அசைக்கமுடியாத நம்பிக்கை!



படியுங்கள்!

பயனடையுங்கள்!

ஜெபஊழியத்தைத் துவக்குங்கள்!

**நன்நூல் இலக்கியசேவை**
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.